www.padippakam.com



புதிய
# கோடாங்கி

பிப்ரவரி
2005
ரூ.15

படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பகுதி

குடிசைகளில் வசித்துவரும் எங்களுக்கு அரசு வழங்கும் தொகுப்பு வீடுகளை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*S. ரமேஷ், A. பாண்டியன், K. ராஜீ, செல்வம், ப்ரியா, நதியா, அம்பிகா - தென்றல் நகர், சுக்குவாடன் பட்டி, ஊஞ்சாம்பட்டி கிராமம், தேனி மாவட்டம்.*

நலிந்து வரும் தோற்பாவைக் கூத்துக் கலைஞர்களாகிய எங்களுக்கு தேனி மாவட்டத்தில் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்குவதாக தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கப் பட்டது. ஆனால் மாவட்ட ஆட்சியர் மாற்றம் காரணமாக இதன் மேல் மேல்நடவடிக்கை எடுப்பது தாமதிக்கப்படுகிறது. எனவே தாங்கள் தலையிட்டு துரிதமாக இலவசப்பட்டாக்களை பெற்றுத் தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*ஏ. முத்துலட்சுமணராவ், தோற்பாவை கூத்துக் கலைஞர், P.C. பட்டி, தேனி.*

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான கடன் உதவிகளை செய்துதர வேண்டி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்து எங்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*ஏ. சின்னக்காளை, ராஜா ராணி ஆட்டக் கலைஞர், காந்தி நகர், அல்லி நகரம், தேனி.*

எனக்கு பணியில் இருந்தபொழுது கை எலும்பு முறிவு ஏற்பட்டு, ரூ. 69,410.75-ஐ மருத்துவமனைக்காக செலவழித்துள்ளேன். இப்பொழுது கையில் உள்ளே இருக்கும் ஸ்டீல் தகடை வெளியே எடுக்க மேலும் பணம் தேவைப்படுகிறது. இந்த மாதத்துடன் பணியிலிருந்த ஓய்வு பெறும் எனக்கு, மேற்கண்ட தொகையை காவல் துறையின் மருத்துவ நிதியிலிருந்து பெற்றுத் தருமாறு வேண்டுகிறேன்.

*எஸ். முகமது காசிம், தலைமை காவலர் (148), வைகை புறக்காவல் நிலையம், ஆண்டிபட்டி.*

முறையே +2, ஒன்பதாவது வகுப்பு படித்துள்ள நாங்கள் வேலையில்லாமல் வறுமையில் வாடுகிறோம். சுய தொழில் அடிப்படையில் முயல் பண்ணை தொடங்குவதற்கு PMRY Loan வழங்க எங்களுக்கு ஆவண செய்து உதவுங்கள் என்று தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*M. இராஜா மற்றும் அ. சுரேஷ், சுந்தரராஜபுரம், தெப்பம்பட்டி அஞ்சல், தேனி மாவட்டம்.*

தாழ்த்தப்பட்ட ஆதிவாசி பழங்குடியின இந்து இருளர் சமூகத்தைச் சேர்ந்த நான் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற சாதிச் சான்று கேட்டு உத்தமபாளையம் வட்டாட்சியரிடம் விண்ணப்பிக்கின்ற பொழுதெல்லாம் சாதிச்சான்று வழங்க மறுத்து வருகின்றனர். எனக்கு திருமணத்திற்கு முன்பு வழங்கப்பட்ட சாதிச் சான்று அடிப்படையில் தற்போது வசிக்கும் தேனி மாவட்ட உத்தம பாளையம் கோட்டாட்சியர் மூலம் சாதிச்சான்று வழங்கிட ஆவண செய்ய வேண்டுமாய் மிகப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

*செ. வசந்தகுமாரி, அம்பேத்கர் காலனி, பெரியார் லோயர் கேம்ப், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.*

பலியன் ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த நான் +2விற்குப் பிறகு மேற்படிப்புத் தொடர முடியாமல் வத்தலகுண்டு Sriram ITI-யில் சேர்ந்தேன். தற்போது ஸ்ரீ கிருஷ்ணா விடுதியில் நான் படித்த தற்கான உணவுக் கட்டணம் கட்டாத காரணத்தால் என்னுடைய படிப்புச் சான்றிதழ், 10-ஆம் வகுப்பு சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ் அனைத்தையும் தர மறுக்கின்றனர். மேற்கண்ட சான்றிதழ்கள் அனைத்தும் கிடைத்திட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*ஆர். சங்கர், வடகரைபாறை, மூலையார் அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம்.*

தேனி சிவாஜி நகரில் 24-ஆவது வார்டில் 2.33 ஏக்கர் பஞ்சமர் நிலத்தில் 1.17 ஏக்கரில் தாழ்த்தப்பட்ட மக்கள் சுமார் 40 குடும்பங்கள் குடியிருந்து வருகிறோம். மீதமுள்ள இடத்தில் இதர மக்கள் குடியிருந்து வருகிறார்கள். 19.1.2005 அன்று எந்தவித முன்னறிவிப்புமில்லாமல் போலீசார் திடீரென நுழைந்து எங்கள் வீடுகளை காலி செய்யுமாறு உத்தரவிட்டார்கள். எங்களின் ஒன்றுபட்ட கோரிக்கையின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் காலி செய்வதற்கு பத்து நாள் அவகாசம் கொடுத்துள்ளார். இதற்கு தாங்கள் உதவி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*மொ. பாண்டியன், பஞ்சமர் நிலமீட்புத் தலைவர், சிவாஜி நகர், தேனி.*

நான் பள்ளர் இனத்தைச் சேர்ந்தவள். எனது கணவர் குரும்பர் இனத்தைச் சேர்ந்தவர். கலப்புத் திருமணம் செய்து கொண்டதால் நாங்கள் அடிப்படை வசதிகள், வாழ்வாதாரமின்றி எங்களது இரண்டு குடும்பத்தினராலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். எங்களுக்கு அரசாங்கத்தால் கிடைக்கக்கூடிய இலவச வீட்டுமனைப்பட்டா கிடைக்க உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*பி. முருகேஷ்வரி, குறிஞ்சி நகர், அல்லிநகரம், தேனி.*

மேற்கண்ட விண்ணப்பங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு மேல்நடவடிக் கைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

- ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com




# புதிய கோடாங்கி

மலர் 4 - இதழ் 8
பிப்ரவரி 2005

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-



*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204
kodangi@hotmail.com


சிறப்பாக நடந்து முடிந்த புதிய கோடாங்கியின் தலித் - பழங்குடி - அரவாணி - சிறுபான்மையினர் 2-ஆவது மாநில மாநாட்டை புதிய கோடாங்கியின் வாசகர்களுக்காக நினைவு கூர்வது சுகமே.

பழங்குடியினரில் தோடர், கோத்தர், பலியர், பனியர், மலையாளி, இருளர், குறும்பர் மற்றும் துரும்பர், நரிக்குறவர் ஆகியோர் ஜீவாவுடன் 21-ஆம் தேதி இரவே வந்து சேர்ந்துவிட்டனர். சென்னையிலிருந்து அருணா தலைமையில் அரவாணிகளும் அவ்வாறே வந்துவிட்டனர். புதிய கோடாங்கி வாசகர் வட்டத்தை ஒருங்கிணைத்த திருவள்ளூர் சுப்பிரமணியம் திருவள்ளூர், காஞ்சிபுரம், அரக்கோணம் பகுதிகளிலிருந்து ஆர்வலர்களுடன் வந்து சேர்ந்துவிட்டார். எழுத்தாளர்களும், தலித் சிந்தனையாளர்களுமாக 22-ஆம் தேதி மொத்தம் ஐநூறு பேருக்கு மேல் திரண்டிருந்தனர்.

கிறித்துதாசு காந்தி துவக்கவுரையாற்ற, தங்கவயல் வாணிதாசன் தலைமையேற்க மாநாடு இனிதே தொடங்கியது. மாநாட்டின் மையக்கருத்தான 'தலித்துகளுக்கு தனி ஊராட்சி' என்ற கருத்தில் இன்பக்குமார் பேசியதையொட்டி அது பரவலாக விவாதிக்கப்பட்டது. தேசிய மனித உரிமை பிரச்சாரக் குழுவின் தென் மண்டல இயக்குநர் பாஸ்கரன், தலித் ஆதார மய்யத்தின் தலைவர் ஜயகரன், ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர்கள் சீனிவாசன், லோகநாதன் உள்ளிட்ட பலர், கன்னியாகுமரியிலிருந்து பேரா. பிரபாகரன், தூத்துக்குடியிலிருந்து அபிமானி, ஸ்ரீதர கணேசன், அன்பழகன், அம்பேத்கர் அறக்கட்டளையைச் சேர்ந்த நண்பர்கள், தேனி மாவட்ட தலித் இளைஞர்கள் நூறு பேர், தமுஎச-வைச் சேர்ந்த முகம்மது சபி உள்ளிட்ட எழுத்தாளர்கள், ஈரோடு சக்கிலியர் பேரவைத் தலைவர் காளிமுத்து உள்ளிட்ட பலர், தேனி நகரமன்றத் தலைவர் முகமது இலியாஸ், வழக்கறிஞர் ரஜினி, வழக்கறிஞர் நாகேஸ்வரி, பர்வீன் சுல்தானா, புதுவை லலிதா என்று பலருடன் புதிய கோடாங்கி குழுவினர் சிவகாமி, ப்ரதிபா ஜெயச்சந்திரன், சந்ரு, நிகழ், சன்னா, குடியரசன், வேலுச்சாமி, லெனின், யாக்கன் சேர்ந்து பல்வேறு அரங்குகளையும் சிறப்புற நடத்தினர். பேரா. கல்விமணி, முனைவர் க. பஞ்சாங்கம், அருட்தந்தை X.D. செல்வராஜ், அருட்தந்தை எட்வின், பேரா. அந்தோணி குருசு மற்றும் துரும்பர் பிரதிநிதி உதயக்குமார் போன்றோர் முழுநேரம் அமர்ந்திருந்து சிறப்பித்தனர். தலித் சுப்பையாவின் இசை நிகழ்ச்சி, புதுச்சேரி 'கூட்டுக்குரல்' கலைக்குழு, தோல்பாவைக் கூத்து,

www.padippakam.com

அரவாணிகள் கலை நிகழ்ச்சி என இரவு பத்து மணி வரை கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. பெரம்பலூரி லிருந்து அகவி, ஜெ. சங்கர், சீனிவாச ராவ், கரூரிலிருந்து சரவணன், அடையாளம் சாதிக், மதுரையிலிருந்து வடிவேல் ராவணன், கன்னியாகுமரியிலிருந்து ஜோ. சோமசுந்தரம் மற்றும் பலர், புதுக்கோட்டையிலிருந்து பல் மருத்துவர் ஜெயராமன் மற்றும் இளங்கோவன் எனப் பலரும் வந்திருந்தனர். ஸ்டாலின் ராஜாங்கம், பாரி செழியன் ஆகியோர் இரண்டாவது நாள் மட்டும் வந்து கலந்து கொண்டனர்.

மாநாட்டை மிகச்சிறப்பாக வடிவமைத்து, அனைத்து ஏற்பாடுகளையும் செவ்வனே செய்திருந்த முனைவர் ராஜ்குமாரை அனைவரும் பாராட்டினர். அவருக்கு உதவியாக இருந்து செயலாற்றிய சிவபாலு, மருத்துவர் கருணைக்கடல் மற்றும் அனைத்து தேனி மாவட்ட நண்பர்களுக்கும், வந்திருந்தோருக்கும் புதிய கோடாங்கி தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் நிறைவேற றப்பட்டத் தீர்மானங்கள் இவ்விதழில் பதிவாகியுள்ளன. அரங்கு வாரியான நிகழ்ச்சிப் பதிவும் எஞ்சிய கட்டுரைகளும் அடுத்த இதழில் பதிவாகும்.

மாநாட்டிற்கு வந்திருந்த பேரா. பிரபா கல்விமணி (கல்யாணி) புதிய கோடாங்கி அடுத்த கட்டத்தில் காலடி வைத்துவிட்டதாகக் கூறினார். உண்மையில் பொறுப்புகள் கூடிக்கொண்டுதான் வருகின்றன.

மாநாட்டின் நிறைவு விழாவில் உரையாற்றிய சிவகாமி அவர்கள் இனி புதிய கோடாங்கியின் கருத்துகள் செயல்வடிவம் பெறப்போகும் காலம் வந்துவிட்டது எனக் கூறினார். குறிப்பாக

- தலித் நிலவுரிமை மற்றும் பஞ்சமி நில மீட்பு
- சிறப்புக் கூறு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு
- தனி ஊராட்சி பற்றிய கருத்துப் பரவல்
- தனியார் துறை மற்றும் வளங்களை தலித்துகளுக்குப் பங்கீடு செய்தல்

ஆகிய நான்கினை முதன்மையானவையாகக் கொண்டு புதிய கோடாங்கி மற்ற இயக்கங்களுடன் சேர்ந்து செயல்திட்டங்களை வகுத்து களப்போராட்டங்களில் ஈடுபடும் என்றார். இது மாநாட்டு பங்கேற்பாளர்களின் மொத்தக் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அம்பேத்கர் சிந்தனைகளையொட்டி இவற்றை முன்னிறுத்தி செயல்பட அனைத்து வாசகர்கள் மற்றும் இயக்கங்களின் ஒத்துழைப் பைக் கோருகிறோம். ●

## புதிய கோடாங்கியின் 2-வது மாநில மாநாட்டில் பாடப்பட்ட வாழ்த்துப் பா

■ Dr. சி. செந்தமிழ்ச் செல்வி

**கா**விரியின் அலைகளிலே கலைகளாய் வந்தவளே
பாவிருக்கும் பாவலருள் பசுமையாய் நிற்பவளே
ஆவிருக்கும் பாலெனவே அமுதமழை பொழிபவளே
பூவிருக்கும் புதுமனையாய் புத்தின்பம் காண்பவளே

திருமதி சிவகாமி அவர்களே!
நீ வாழ்க உன் சீரிய தொண்டு வளர்க!

பார்க்கின்ற இடந்தோறும் காணுகின்ற பாறைதான்
ஈர்க்கின்ற நிலமாக்கி இயற்றுவதே புதுமையென
கல்வியிலே செல்வத்திலே கருத்திலே கடேசியில் நின்ற
திண்மையுடன் பலரையும் தன்மையுடன் உருவாக்கிப்
புத்துலக சிற்பிகளாம் பூபாள ராகங்களாய்
இத்தரையில் எல்லோரும் இனிதாய் வாழ்ந்திடவே
சத்தான வழியதனை சாறாக ஈர்ந்துவரும்
வித்தகர் விழியில் வீர கோடாங்கி நடக்கின்றான்

இவ்வாண்டு தொடக்கத்திலேயே
புதிய கோடாங்கியின் வளர்ச்சி
மேல்முனையைத் தொட்டிடும் - வானளாவ ஓங்கட்டும்
வகையான வழிகாட்டும் இனிய நல் கோடாங்கி
வற்றாமல் ஓடியே வையந்தனை உயர்த்தி
சகலரும் உயர ஒற்றுமை வழியை
முத்தெனக் கொண்டு முழுமையுடன் பாடுபடும்
புதிய கோடாங்கி வெற்றி நடைபோட
நேர்மையின் பங்குண்டு; நல்லோரின் துணையுண்டு
தோள் கொடுப்போம்; துணை நிற்போம் - சாதி வெறியினை
வாள் எடுத்தே வீழ்த்திடுவோம்
வாழும் நெறி ஏற்றிடுவோம்
தேசிய ஒருமையினை திறமையுடன் வளர்த்திடுவோம்

புதிய கோடாங்கியின் இரண்டாவது மாநில மாநாடு
வெல்லட்டும்.
வாழ்க! வளமுடன்!

www.padippakam.com

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| சமூக மாற்றத்திற்கு துணை நிற்கும் நாட்டுப்புறக் கலைகள் | ... | கே.ஏ. குணசேகரன் | 4 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | ... | குடியரசன் | 7 |
| மாதிரி வரைபடம் - கவிதை | ... | வே. எழிலரசு | 8 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | ... | அ. ராமசாமி | 9 |
| தலித் தேசியம் - தொடர் | ... | கௌதம சன்னா | 12 |
| கணிதம் நம் உடைமை | ... | குடியாசன் | 14 |
| நிழல் வருகை - சிறுகதை | ... | பாரதி நிவேதன் | 16 |
| சிவகாமியின் நமது (அப்னா) பஞ்சாயத்து | ... | மா. வேலுசாமி | 22 |
| ஆதிக்கக் கருவியாகும் ஊடகம் | ... | நிகழ் அய்க்கண் | 23 |
| உதிரும் மானுடம் - சிறுகதை | ... | விழி.பா. இதயவேந்தன் | 25 |
| போலியோ ஒழிப்பு போலியோ | ... | மருத்துவர் புகழேந்தி | 28 |
| உயிர்வதை - சிறுகதை | ... | பவானி | 32 |
| தீவிளை தாது | ... | மருத்துவர் காசி பிச்சை | 34 |
| நாய்கள் - கவிதை | ... | ப. முருகன் | 35 |
| ஒத்த அடி - சிறுகதை | ... | அன்பாதவன் | 36 |
| கோடாங்கியின் முகாம்கள் | ... | குடியரசன் / வை. சரவணன் | 39 |
| கேள்வி - பதில் | ... | முனிமா | 41 |


## மாநாட்டுக் கட்டுரைகள்


| | | | |
|---|---|---|---|
| தலித்துகளுக்கு தனி ஊராட்சி | ... | அகவி | 45 |
| தலித் கலை இலக்கிய வளர்ச்சியில் ஆதரவாளர்களின் பங்கு | ... | பேரா. க. பஞ்சாங்கம் | 48 |
| மதம் மாறியவர்களின் சமூக நிலை | ... | பேரா. லெனின் | 50 |
| தலித் நாவல்களில் அம்பேத்கரியம் | ... | அபிமானி | 52 |
| தனி ஊராட்சி அமைப்பதில் தலித் ஆதரவாளர்களின் பங்கு | ... | இன்பகுமார் | 56 |
| பழனிமலை பழங்குடியினர் | ... | நாகபாண்டியன் / லீலாவதி | 59 |
| அரசியல், கலை, இலக்கியத்துறையில் பெண்களின் பங்கு | ... | பே. நாகேஸ்வரி | 60 |


படிப்பகம்

www.padippakam.com

3

# சமூக மாற்றத்திற்கு துணைநிற்கும் நாட்டுப்புறக் கலைவடிவக் கூறுகள்

■ கே.ஏ. குணசேகரன்

### கூற்றுமுறை

நாட்டுப்புறக் கலைகளை நிகழ்த்தும் போக்கில் கதைசொல்லும் கூற்றுமுறை முதன்மையானது. கதை நிகழ்த்தும் முறையில் கூற்றுமுறை தீர்மானிக்கப் பட்டதல்ல. மாறாகப் பார்வையாளர், அரங்கச் சூழல் இவை தீர்மானிக்கவல்லன.[1]

**சரஸ்வதி நாடகம்**

(கதைசொல்லி நடிப்பிடத்திற்கு வருகிறார்)

**கதைசொல்லி**

நின்னு கேளு, நின்னு கேளு...
கொஞ்ச நேரந்தான்... நான்
சொல்லப்போறகதையெல்லாம்பொண்ணப்பத்திதான்

**பாட்டு**

நின்னு கேளு, நின்னு கேளு
கொஞ்ச நேரந்தான் - நான்
சொல்லப்போறகதையெல்லாம்பொண்ணப்பத்திதான்
கல்விக்கரசி சரஸ்வதி ஒர் பெண் தெய்வம்தான்
இங்கே கல்விக்கும் பொண்ணுக்கும் காததூரந்தான்
(சொல் - நின்னு)

**கதைசொல்லி**

பத்தாம் பசலித்தனமா பேசாதீங்க. பெண்கள் பங்கு பெறாம வரலாற்றில் எந்த மாற்றமும் நடந்ததில்லை... நீங்க என்னடான்னா பொண்ணுக்குப் படிப்பு வேண்டாங்கறிங்க... இது அநியாயம் (ப.69 சரஸ்வதி - நாடகம்)

கதைசொல்லியின் கூற்றுமுறையில் அனைவரும் கதைகேட்கத் தயாராவது போல் கவன ஈர்ப்புக்கு மக்கள் ஆளாகின்றனர். பேச்சு வழக்கு மொழிநடை, இசை, பாடல் குழுவுடன் கதைசொல்லி இடையிடையே விவரம் கேட்கும் பாங்கு என்னும் கூறுகள் நாட்டுப்புறக் கலை இலக்கியக் கூறுகளிலிருந்து பெற்ற உத்திமுறைகளாகும். நாட்டுப்புற மக்களிடம், எழுதப் படிக்கத் தெரியாத மக்களிடம் கலை வழியே கருத்துக் களை எடுத்துச் சொல்ல உள்ளமையால் கலைப்பயணம் மேற்கொண்ட அனைத்துக் கலைஞர்களும் வேட்டி, துண்டு, சட்டையற்ற மேனி என உடை, ஒப்பனை களைக் கொண்டிருந்தோம். இக்குறியீட்டினால் நாம் அனைவரும் ஒன்று. எங்கள் கருத்தை கவனியுங்கள். நாங்கள் வேறல்ல, உங்களில் ஒருவர் எனும் கருத்தை உடை, ஒப்பனைகள் வழி குறியீட்டுத் தன்மையுடன் விளக்கிடத் தக்கவாறு அமைந்தன.

### தலித் இயக்கம்

தலித் இயக்கங்கள் இன்று தங்கள் பிரச்சினை களை மக்களிடம் எடுத்துக்கூறிட, சமூக விழிப்புணர்வு கொண்டு சமூக மாற்றம் பெற பெரிதும் நாட்டுப்புற / தலித் கலை இலக்கிய வடிவக்கூறுகளைப் பயன்படுத்தி வருகின்றன.

'ஏழுபறையர்களாம் எங்களோட சொந்தங்களாம்
வெட்டுப்பட்டு மாண்டார்களே மேலவளவிலே - இந்த
வெட்கக்கேடு சுதந்திர இந்தியாவிலே'

எனும் பாடல் 'மனுசி' எனும் ஒலிநாடாவில் இடம் பெற்றுள்ளது (அரசரடி, தலித் ஆதார மையம் வெளியீடு). இப்பாடல் சுப்பையாவினுடையது. இசை என்னால் செய்யப்பட்டது. இந்த இசை தலித் மக்க ளின் ஒப்பாரி இசை வகையைச் சேர்ந்தது.

அட எத்தனையோ புத்திகளை
எடுத்துரைச்சுச் சொன்னாலுமே
நித்தம் போயிக் குடிக்கிறியே
நீயும் ஒரு ஆம்பளையா - அடி
ஒன்னோட என்னடா பேச்சு - சும்மா
ஒதுங்கிப் போடா சீச்சி
கஸ்டப்பட்டு சம்பாதிச்சு காசு போட்டு நான் குடிச்சா
நஸ்டமோடி ஒந்தனுக்கு நாசமத்த சிருக்கி
மூடிக்கொள்ளடி வாய சும்மா
முனுமுனுக்காதே நாயே

என்பதில் பேச்சு வழக்குப் போன்றே ஆணும் பெண்ணும் ஏசல்பாடல் வடிவில் பேசுவது நாட்டுப்புற இசை வகையினது ஆகும்.

1. There are hundreds of ways in which folk narratives can be studied. There is no one fixed way. P. 14. On folk narratives Komal Kothari Indian Folk life. NF Vol. 3, Issue 3, serial No. 16, July 2004.



படிப்பகம்

www.padippakam.com

தலித் மக்களிடம் உள்ள குடிப்பழக்கம் கூடாது, அப்போதுதான் சமூகத்தை மாற்றத் துணிவு பிறக்கும் எனும் கருத்தைக் கூற இப்பாடல் தலித் இயக்க மேடைகளிலும் பிற மேடைகளிலும் பாடப்படு வதைப் பலரும் கவனித்திருக்கலாம்.

'இந்த மாதிரிப் படுகொலை எதுவும்
இதுவரை நடந்ததில்லே - நினைக்கவே
இதயம் பொறுக்குதில்லே
சாதியின் பெயரால் படுகொலை செய்துவரும்
சமுதாயம் எதுவுமில்லே
இந்தியாபோல் சமுதாயம் எதுவுமில்லே"[2]

என்பதான தலித் பாடல்கள் வழிநடைச் சிந்து எனும் இசையில் அமைந்ததாகும்.

ஊடகங்களில் குறிப்பாக வானொலி, தொலைக் காட்சி, சினிமா போன்ற பலவழிகளில் இன்று நாட்டுப்புற கலைக்கூறுகள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.[3] பெரும்பாலும் விளம்பரங்களுக்கே இவை பயன்படுகின்றன. கிராம சமுதாயம், வயலும் வாழ்வும் என்பதான நிகழ்ச்சிகளை வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. இவற்றில் விவசாயி களுக்கான செய்திகளை, குறிப்பாக விதைப்பது, உரம் இடுவது, பூச்சி மருந்து அடிப்பது, ஊடுபயிர் விளை பயிர் விளைவிப்பது போன்ற விவசாயத் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுக்கும் பணியைச் செய்துவரக் காண்கிறோம்.

- ஆடியிலே...
  ஆடியிலே அடிக்குது
  அதிர்ஷ்டக் காத்து
  சல்லீசுக் காசிலே
  தள்ளுபடி விலையிலே
  சென்னை சில்க்கிலே
- பட்டுச் சேலை காத்தாட
  (ஜெயச்சந்திரன் துணிக்கடை)
- சுவையா மணமா சமைச்சு வச்சா
  ரசிச்சுச் சாப்பிடணும்...ம்
  அதுக்கு வேணும் சக்தி மசாலா
  வேணும் வேணும் சக்தி மசாலா
- சாப்பிடு ராசா
  சாப்பிடு ராசா - நல்ல
  இனிப்பு
  சாப்பிடு ராசா (Sugar free)
- ஆரோக்கியத்தின் ரகசியம் தெரியுமா
  இந்தச் சின்ன வயசில் இருந்தே...
  (கோல்டு வின்னர்)
- ஜொலிக்குதே ஜொலி ஜொலிக்குதே...
  (சரவணாஸ் துணிக்கடை)

போன்ற தொலைக்காட்சி விளம்பரப் பாடல்கள் நாட்டுப்புற இசை வகையைத் தழுவி நவீன பொருள் உற்பத்தியை மக்களிடம் விளம்பரம் செய்யப் பயன்படுத்தி வரக் காண்கிறோம். நாட்டுப்புறக் கலை இலக்கியக் கூறுகளை நவீன ஊடகங்கள் தங்கள் உற்பத்தியாக்க விநியோகங்களுக்கு விளம்பர உத்தி களாகப் பயன்படுத்திச் சுரண்டி வருகின்றன. இவ்விதச் சுரண்டல் முறை தனித்து கவனிக்கப்படக் கூடியவை.

**சினிமா**

- தாழையாம் பூ முடிச்சி தடம் பார்த்து
  நடைநடந்து
- அன்னக்கிளி ஒன்னத் தேடுதே
- உச்சி வகுந்தெடுத்து பிச்சிப்பூ வ ச்சகிளி
  பச்சமலைப் பக்கத்திலே
  மேயுதுன்னு சொன்னாங்க

என்பன போன்ற எண்ணற்ற திரைப்படப் பாடல்கள் நாட்டுப்புற அடிபிறழாமல் வைத்து எழுதப்பட்டவை. இசை வகைகள், கூத்துப் பாட்டுக்கள், ஒயிலாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், மயிலாட்டம், காளை ஆட்டம், கும்மி ஆட்டம், தேவராட்டம் போன்ற நாட்டுப்புற ஆட்டங்கள், இசை, பாடல் இவை திரைப்படங்களில் இடம்பெற்றுள்ளன.

மதுரைவீரன் கதை, காத்தவராயன் கதை, கருவாயத்தேவன் கதை எனப் பல நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும் சினிமாக்களில் இடம்பெற்றுள்ளன. இவ்வூடகத்தின் வழியே நாட்டுப் புறக்கலை, இலக்கியம், பண்பாடு, உடை, ஒப்பனை, வாழ்வியல் போன்ற பல்வேறு கூறுகள் நடுத்தர மற்றும் உயர்தர மக்களிடம் ஆழப்பதிந்துள்ளன. நாட்டுப்புறக் கலை இலக்கியக் கூறுகள் அற்ற சினிமா இல்லை எனக் கூறும் அளவுக்கு சமூகத்தில் நாட்டுப்புறவியலின் பங்களிப்பு உள்ளது. கிராமங்கள், அம்மக்கள் கொண் டுள்ள வாழ்வியல் சினிமாவில் வேடிக்கைத் தன்மைகள் எனும் அளவுக்கே புரிதல் கொள்ளப்பட்டுள்ள நிலை விளங்குவது வருந்தத்தக்கது.

**தன்னார்வத் தொண்டு இயக்கங்கள்**

எய்ட்ஸ் விழிப்புணர்வு, கண்தானம், ரத்ததானம், நில அபகரிப்பு, சட்ட ஆலோசனை, மனித உரிமை, பெண்ணுரிமை, தொழுநோய் விழிப்புணர்வு, தலித் உரிமை, இயற்கை உரம் போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து ஆங்காங்கு சமூகப் பணிகள் ஆற்றிவருகின்றனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவு வேணுங்க
ஒழுக்கமில்லா உடலுறவு கூடாதுங்க
அழகழகா ஆணு பொண்ணு திரியலாமுங்க
அன்புகொண்ட மனைவிக்கு ஈடா ஒன்னுமில்லீங்க
(யேஜி, தன்னானே)

என்பது போன்ற பாடல்கள் நாட்டுப்புற இசை வகையைச் சேர்ந்தவையாகும்.

---

2. குறிஞ்சா குளத்துத் தலித் கொலை பற்றிய சிந்துப் பாடல்

3. The Twentieth Century has seen introduction and rapid expansion of electronic media (cinema, radio and television), to the point of which they have become a dominant element in the experience and organisation of every day. (P. 225, Mass media, Key concepts in Cultural Theory, Edited by Andrew Ddgar and Peter Sedgnick Reprint - 2004)



படிப்பகம்

www.padippakam.com

திராவிட இயக்கங்கள் நாட்டுப்புற அரங்கக் கலைக்கூறுகளை அதிகம் பயன்படுத்தின. உழைக்கும் மக்களின் இசை, ஆட்டங்கள், கதைகூறும் விதம், வெளிப்பாட்டு உத்திமுறைகள் அவற்றிற்குப் பயன் பட்டன. அதிகம் தூய தமிழ் நடைகளைப் பயன் படுத்தினாலும் சாமானியப்பட்ட மக்கள் நாடகப் பாத்திரங்களாக இடம்பெறும்போது உழைக்கும் மக்களின் மொழி நடைகளைப் பயன்படுத்தினர். திராவிட இயக்கங்கள் தமிழ் உணர்வு, தமிழ் இயக்கம், ஜமீன் ஒழிப்பு, தமிழ் மொழி உயர்வு, சாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, தமிழர் விடுதலை என்பன போன்ற கருத்தியல்களை அரங்கியல் கலை வடிவக்கூறுகளைப் பயன்படுத்திச் சமூக மாற்றம் கொணர்ந்தனர். இந்தி மொழிப்போராட்டத்திற்கு இக்கருத்தியல்கள் வித்திட்டன.

சுதந்திரப் போராட்டக் காலகட்டங்களில் விடுதலை இயக்கங்கள் நாடக அரங்கியல் கலைவடிவக்கூறு களை அதிகம் பயன்படுத்தின. கும்மி ஆட்டப்பாடல், ஏசல் பாடல், கோலாட்டப் பாடல் போன்ற நாட்டுப் புறப் பாடல் வடிவங்களையும் இசைவடிவங்களையும் பயன்படுத்தின. இவ்வியக்கங்களின் முயற்சிகளினால் வெகுசன ஊடகங்கள் வளர்ச்சி பெரிதும் அற்ற அக்காலகட்டங்களில் பட்டிதொட்டிகளெங்கும் விடுதலை உணர்வு கிராம மக்கள் மற்றும் நடுத்தர மக்களிடம் பெற வாய்ப்பளித்தன. மக்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவும் பங்கேற்கவும் உணர்வு பெறவும் வழிவகுத்தன.

இடதுசாரி இயக்கங்கள் சுதந்திர வேட்கை, அரசியல் உணர்வு, மார்க்சியக் கொள்கை, சாதிமத பேதமின்மை, ஜமீன்தார் ஒழிப்பு, நிலங்கள் கையகப் படுத்துதல், சாணிப்பாலும் சவுக்கடியும் பெற்ற விவசாயத் தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு, கூலி உயர்வு போன்ற பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர் முன் னேற்றம், தொழிற்சங்கம் குறித்த விழிப்புணர்வு போன்ற சமூக விழிப்புணர்வு ஏற்பட நாட்டுப்புறக் கலை இலக்கிய வகைகளையும் கூறுகளையும் பயன் படுத்தின. இடதுசாரி இயக்கங்களின் இத்தகைய போராட்டங்களுக்கு நாட்டுப்புறப் பாடல்கள், இசை வகைகள், கதைகள், கதைப்பாடல்கள் போன்ற கலை இலக்கிய வடிவங்கள் பெரிதும் துணை நின்றன.

அறிவொளி இயக்கம் 1980-களின் இறுதியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டக் குக்கிராமங்களி லும் களப்பணி மேற்கொண்டது. பழமொழி, சொல வடை, கதைகள், கதைப்பாடல்கள், நாட்டுபுறப் பாடல் மற்றும் இசைவகைகள், கும்மி, கோலாட்டம், விளையாட்டு, கூத்து, நாடகம் போன்ற அனைத்துக் கலைவடிவக் கூறுகளையும் பயன்படுத்தி எழுத்தறிவு வேண்டும் எனும் கொள்கையை வலியுறுத்தக் கலைப் பயணங்களை மேற்கொண்டது. தோழர்கள், மாண வர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள், கலை இலக்கியத் தோழர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கள் என பல தளங்களைச் சேர்ந்தவர்கள் இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் துணையோடு பங்காற்றினர். இதனால் நாட்டுப்புறங்களில் அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் எனும் உணர்வினை மனங்கொள்ளச் செய்தது.

தலித் இயக்கங்கள் 1990-களின் இறுதிகளில் பர வலாக உருப்பெறத் தொடங்கின. அறிவுஜீவிகள் தலித் தியச் சிந்தனைகள் கொண்ட தங்கள் படைப்பிலக் கியங்கள், மேடைப்பேச்சுக்கலை, நூலாக்க முயற்சி கள், தலித் அரங்கியல் முயற்சிகள், தலித் அரசியல் பணிகளை நாட்டுப்புற மற்றும் தலித் கலை இலக்கிய வடிவங்கள் மற்றும் கூறுகள் வழி செய்தனர்.

பெண்கள் இயக்கம் கலை நிகழ்ச்சிகள், ஒலிநாடாக் கள், நூலாக்கங்கள், பெண்ணிய அரங்கியல் போன்ற தளங்களில் சமூக மாற்றம் குறித்த சமூகப் பணிகளை முன்னெடுக்கின்ற நம்பிக்கையளிக்கக் கூடியவையாக உள்ளன. பெண்ணிய இயக்கங்கள் நாட்டுப்புறக் கலை வடிவங்களைக் கையிலெடுத்துள்ளன.

அரவாணிகள், பள்ளங்கள் தோண்டும் பணிகளைச் செய்துவரும் ஒட்டர்கள், நரிக்குறவர்கள் போன்ற விளிம்புநிலை மக்களை ஒருங்கிணைத்துச் சமூக மாற்றங்களில் பங்கெடுக்க ஆங்காங்கு தோழர்கள் முயற்சித்து வருகின்றனர். இவர்களும் நாட்டுப்புறக் கலைகளைத் தங்கள் பிரச்சார ஊடகமாகக் கொண் டுள்ளனர்.

நாட்டுப்புற இசை மற்றும் பாடல் வகைகளை ஒட்டி அமைக்கப்பட்ட ஒலிநாடாக்கள் இடதுசாரி இயக்கங்களால் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. தன்னானே, மண்ணின் பாடல்கள் போன்ற கே.ஏ. குண சேகரனது தன்னானே கலைக்குழுவின் ஒலிநாடாக்கள், எம்பி. சீனிவாசன் எனும் இசையமைப்பாளரின் சேர்ந் திசை வடிவம் குறிப்பிடத்தக்கவை.

திராவிட இயக்கங்கள் திரைப்படங்களைப் பயன் படுத்தி மக்களிடம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. இந்தவகை உத்திமுறைகளை இடதுசாரி இயக்கங் களும் "பாதை தெரியுது பார்" போன்ற சினிமாக்கள் வழியாகச் செய்தன. பட்டுக்கோட்டை கல்யாண சுந்த ரத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தலித் இயக்கங்கள் நூலாக்கங்கள், ஒலி நாடாக் கள் ஆகியவற்றைத் (மனுசங்கடா கே.ஏ. குணசேகரன், இருண்ட காலம் முதல் பதினெட்டுக்கும் மேற்பட்ட ஒலிநாடாக்கள் வெளியிட்ட ம.க.இ.க. முயற்சிகள், தலித் ஆதாரமையத்தின் ஒலிநாடாக்களான மனுசி, தலித் முழக்கம், சுப்பையாவின் பாடல்களைக் கொண்ட தலித் தலைவர்கள் பற்றிய ஒலி நாடாக்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன) தொடர்ந்து வெளி யிட்டு வருகின்றன.

தலித் கலை இரவுகள் ஆங்காங்கு நடக்கின்றன சில கிறித்துவ நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கவை.

குறும் படங்கள் வழியே தலித் இயக்கங்கள் இன் னொரு ஊடகத் தளத்தைக் கைக்கொண்டு மக் களிடம் ஊடாடி வருவது கவனிக்கத்தக்கது.

(முடிவுற்றது) ●



படிப்பகம்

■ குடியரசன்
nalanda1956@yahoo.co.in

**17**

# மக்கள் அறியாத அம்பேத்கர்

*என்னுடைய பூர்வகுடி மக்கள் இன்று தாழ்த்தப் பட்டவர்களாக நடத்தப்படுகின்றனர். என் மக்களின் விடுதலைக்கு கோயில் நுழைவு, சமபந்தி உணவு போன்றவை எவ்வகையிலும் உதவாது. என் மக்கள் தங்கள் விடுதலையை மையமாகக் கொண்டு போராடு வதற்கு உகந்த வலிமையை அரசு பதவிகள், ஆட்சியில் பங்கு, உயர்கல்வி, நிலம் போன்றவைகள் தரும் என்பது என் நம்பிக்கை.*

*என் மக்கள் விடுதலைக்கு அரசியல் மாறுதல் தேவை என்பது உண்மையாக இருந்தாலும், அரசியல் மாற்றத்திற்கு முன்னர் சமூக மாற்றம் வலிமையாக நிகழ்த்தப்பட வேண்டும்.*

*M.C. ராஜா மற்றும் கவாய் போன்ற தலைவர்கள் இணை வாக்குரிமையை (Joint Electorates) தற்போது (1932) வலியுறுத்துகின்றனர். ஆனால் நான், என்னுடைய மக்கள் விடுதலைக்கு தனி வாக்குரிமை (seperate electorates) தேவை என்று வலியுறுத்துகிறேன்.*

அம்பேத்கர், 1932-ஆம் ஆண்டு நம் சமூக விடுதலைக்கு தேவையானவைகள் என்று நமக்களித்த மூன்று கருத்துகள் மேற்காணப்படுவன.

பிரிட்டிஷ் ஆட்சியின் துவக்கத்தில், அம்பேத்கர் அரசியலில் நுழைவதற்கு முன்னர் தேர்தல்கள் மாகாண வரையில் நடத்தப்பட்டன. அந்த தேர்தல்களில் காங்கிரசு கட்சி, சோசியலிஸ்ட் கட்சி போன்ற ஓரளவு மக்கள் செல்வாக்கு பெற்ற பெரும் பணக்காரர்களின் பிரதிநிதிகள் போட்டியிட்டனர். தேர்தலில் ஓட்டுப்போடும் உரிமை, பட்டதாரிகளுக்கும், நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கும் மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது. அக்காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் தாழ்த்தப்பட்டவர்கள் ஓட்டுப்போடாமலேயே தேர்தலில் வெற்றி/தோல்வி இறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசின் பகிர்வு அல்லது அரசு அதிகாரங்களின் பகிர்வு என்பது "எல்லோருக்கும் வாக்குரிமை" என்பதால் உறுதி செய்யப்படும். ஆனால் அந்த வாக்குரிமை தேர்தல் காலங்களில் மட்டுமே பயன்படும். அவ்வுரிமையை மிரட்டியோ, பலவீனப்படுத்தியோ செல்லாததாக மாற்றிவிடும் சக்திகளாக நிலம் கொண்ட சாதி, அதிகாரம் படைத்தவர்கள் உள்ளனர். மாற்றாக அம்பேத்கர் கருத்துப்படி நிலம், அரசின் உயர்பதவிகள், க்ல்வி போன்றவை நம் மக்களுக்கு பரவலாக தரப்பட்டிருந்தால் இன்றைக்கு நமது மக்களின் வாக்கு வங்கி (அ) வாக்குரிமைக்கு ஓர் உண்மையான பொருள் கிடைத்திருக்கும்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் 44 சட்டமன்ற நம் உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 90 விழுக்காடு உறுப்பினர்கள் தாங்கள் சார்ந்துள்ள கட்சியின் பணியாட்களாக உள்ளனர். இதில் தமிழக தாழ்த்தப்பட்ட மக்களின் ஒட்டுரிமை என்பது 10 விழுக்காடு உறுப்பினர்களான நேரடியாக பயன் தருவதென்பது இயலாது. உதாரணமாக புதிய தமிழகம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் நம் மக்களின் விடுதலையில் முழுக்கவனம் செலுத்தி இயங்கும் இயக்கங்கள். இவைகளின் பிரதிநிதிகள் தமிழகம் முழுவதிலும் நம் மக்களின் வாக்குகளை உறுதி செய்து கொண்டாலும், மக்கள் பரவலாக இருப்பதால், தொகுதிவாரி தேர்தல் முறையினால் தமிழகத்து தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற ஒற்றை முறையில் வாக்குகளை திரட்ட இயலுவதில்லை. தொகுதிவாரி நம் மக்களின் தொகை இவ்விரு இயக்கங்களால் ஈட்ட இயலும் என்றாலும் அது வெற்றி பெற போதுமானதாக இல்லை.

இதை கருத்தில் கொண்டு, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நாட்டின் ஒட்டுமொத்த போடப்பட்ட ஓட்டில் எந்த உறுப்பினர் அதிகம் பெறுகின்றனரோ அவர் வெற்றிபெற்றவர் என்று கணக்கிடுவது போல, குறைந்தபட்சம் தமிழக அளவிலாவது ஒட்டுமொத்த தலித் ஓட்டுகளை, தொகுதிகளை கணக்கிடாமல், ராஜ சபை பிரதிநிதிகளுக்குப் போல கணக்கிட்டு அவர்களை சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பிரதிநிதிகளாக கணக்கிடப்படவேண்டும். இதன் மூலமாக தலித்துகள் தமிழகம் முழுமையும் ஒருங்கிணைந்து, தங்களின் வாக்கு வீணாக்கப்படாமல், தங்கள் பிரச்சினைக்கு போராடும் ஒரு போராளிக்கு போய்ச்சேரும் என்பதை நம்பி உறுதியாக தங்களின் வாக்குகளை நம்பிக்கையோடு பயன்படுத்துவார்கள்.

அதாவது சட்டமன்ற தேர்தலில் தொகுதிக்கு ஒரு சீட்டு என்பது போல் அல்லாமல், தமிழகம் முழுவதும் ஒரே மாநிலத் தொகுதியாக ஒரே தொகுதியாகக் கணக்கிட்டு தேர்தல் நடத்தப்படவேண்டும். 1000-க்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவர். தலித் பிரதிநிதி தமிழகம் முழுவதிலும் வாங்கும் ஓட்டுக்களை கணக்கிட்டு அதற்கேற்றார்போல் அவருக்கு சட்டமன்ற உறுப்பினர் பதவி வழங்கலாம். தனி ஒரு சட்டமன்ற உறுப்பினர் பெறவேண்டிய ஓட்டுகள் இவ்வளவு என்று தமிழக முழுமையான வாக்காளர்களின்



படிப்பகம்

www.padippakam.com

எண்ணிக்கையை ஒப்பிட்டு வரையறுக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட அந்த உறுப்பினர் குறிப்பிட்ட வாக்குகளைப் பெற்றால் அவர் வெற்றிபெற்றவராக அறிவிக்கலாம். இரண்டு, மூன்று உறுப்பினர் பெற வேண்டிய ஒரே உறுப்பினர் பெற்றால் அவர் கட்சி சார்பில் நியமன உறுப்பினர்கள் நியமிக்கும் வழியைப் பெறலாம்.

இவ்வாறாக தலித் மக்களின் வாக்கு வீணாக்கப் படாமல் தலித் மக்களின் விடுதலையை உண்மையாக்க தமிழக அளவில் ஒரு தொகுதி முறையை நம் மக்கள் அளவிற்காவது கொண்டு வரலாம்.

இரண்டு கோடி தலித்துகளில் ஒரு கோடி தலித் மக்கள் வயது வரம்புப்படி ஓட்டு உரிமை பெற்றுள்ளனர். இவர்களின் ஓட்டில் அதாவது ஒரு கோடி தலித் ஓட்டில் தமிழகம் முழுமையும் சில லட்சம் ஓட்டுக் களை ஒரே ஒரு தலித்தால் பெற இயலும் என்பது இன்றைய தலித் இயக்கங்களின் வளர்ச்சியை நாம் காணும்போது முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

இந்திய அளவில் இந்த முறை நிகழ்விற்கு வருமே யானால், தலித்துகளின் வாக்கு உண்மையான அங்கீகாரத்தைப் பெற இயலும்.

இதனால் சாதி ரீதியாக பிற மக்கள் நம்மை எதிர்த்து அணிதிரள்வர் என்ற அச்சம் மேலோங்கலாம். கடந்த 50 ஆண்டுகளாக ஒற்றுமை என்பதற்காக தலித்துகள் ஆற்றிய தியாகங்கள் அளவிடற்கரியன. ஒப்பீட்டளவில் இன்றைய நடைமுறையில் உள்ள அவலத்தைவிட மோசமான இழப்புகள் தலித்துகளுக்கு ஏதும் நிகழ்ந்துவிடாது என்பது இதுவரை நடந்துள்ள நிகழ்வுகள் காட்டுகின்றன.

தலித் இயக்கங்கள், இத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து தங்கள் தேர்தல் அரசியல் போராட்டங்களை முன்வைத்தல் நமது மக்களின் போராட்ட சிந்தனையை ஊக்குவிக்கும்.

இரட்டை வாக்குரிமை அம்பேத்கரால் முன்வைக்கப்பட்டது. முழு வாக்குரிமை - இதுவும் அம்பேத்கரால் சிந்திக்கப்பட்டு திரு. N.C. ரட்டு அவர்களிடம் விவரமாக விவாதிக்கப்பட்டதுதான். இன்றைய சூழலில் முழு வாக்குரிமை தேவையான மாற்றத்தைக் கொண்டு வரும்.

1. தேர்தல் மாற்றத்திற்கு முன்பு அம்பேத்கர் விரும்பிய சமூக மாற்றம்.
2. நம் மக்களின் ஒருங்கிணைப்பு
3. மற்றைய மக்களுடன் நம் மக்களின் சம உரிமை வாழ்வு

இவைகளை முழு வாக்குரிமை நமக்கு அளிக்கும். அம்பேத்கரின் இச்சிந்தனை வெகு தளத்தில் எடுத்துச் செல்ல இம்முறை கூடுதல் வாய்ப்புகளை உருவாக்கும். ●

வே. எழிலரசு

## மாதிரி வரைபடம்

அண்டை நாட்டின் ஆயுத தளவாடங்கள்
ஒற்றறியும் உளவாளியென நான் அவன் வீட்டில்

நீலப் பின்னணியில் வரையப்பட்ட கோடுகளைவிட
நிஜமான அவன் வீடு போலவே
கட்டவேண்டும் அதே புதிர்களோடும் புதுமைகளோடும்

வரவேற்பறை வரை அவ்வப்போது வந்து போகும்
அவனது அம்மா மற்றும் அவன் வீட்டுப்பெண்கள்
புழக்கத்தில் ஊகிக்கக்கூடும் யாரும் அவன்
வீட்டுக்குப் பின்புறம் ஒரு நந்தியாவட்டைச் செடியும்
ஒரு கிணறும் ஒரு துளசி தளமும் உண்டென.

நீள அகலங்களின் அளவுகள் எந்தெந்த திசைமுகங்களில்
என்னென்ன அறைகள் பிசகாமல் சொல்லுமவன்
பிறப்பசிக்கு சோறும் தாகத்திற்கு தண்ணீரும் தவறாமல்
தருபவன்தான் ஆனாலும் அனுமதிக்க மறுக்கிறான்
வரவேற்பறையை மீறி உட்செல்ல எத்தனிக்கும் என்னை.

வரலாறறியும் காரணங்களை அறிந்த பின்
நான் கட்ட ஆரம்பித்து விட்டேன் எனக்கான வீட்டை
எந்த மாதிரி வரைபடமும் இல்லாமல்...

## தரிசனம்

நூதனமானவர்கள் திருடர்கள்.

கதவைத் தட்டி திறக்குமுன் முகமன் சொல்வர்
விற்பனையாளரென.

நோட்டம் பார்ப்பர் எலக்ட்ரிக் மீட்டர் பார்க்கும் சாக்கில்.

இந்த இலக்கம்தான். தெரு அடுத்தது என
தெரியாமல் நுழைந்து விட்டோமென நவில்வர்.
தருணங்களில் சபாரி உடையில் சர்க்கார் அதிகாரி என.

சற்றுமுன் துண்டித்த தொலைபேசி
இணைப்புச் சொறுக
தூசுதுடைப்பான் சேவையென
மற்றுமுன் பாவங்கள் தீர்க்க வருவார் இரட்சகர்
எனச் சொல்லி போடுவர் வேடங்கள் பல.

ஆனாலும் போடமாட்டார் ஓர் வேடமென அறியாமல்
முன்னெச்சரிக்கை மதியூகி நானென காட்டிக்கொள்ள
கேட்டேன் அடையாள அட்டை பாதாள சாக்கடை
அள்ள வந்தவரிடம் காட்டினார் கட்டியிருந்த
ஒற்றைக் கோவணம் அவிழ்த்து தறி.



படிப்பகம்

www.padippakam.com

# வரலாறு யாரை விடுதலை செய்யும்...?

■ அ. ராமசாமி **2**

**'வரலாறு என்னை விடுதலை செய்யும்' எனத் தோழர் 'பிடல் கேஸ்றோ சொன்னது அர்த்தமில்லாமல் போய்விடுமா... என்ன..? அல்லது போகத்தான் விடலாமா?**

திரள்மக்கள் உரிமைகளையும் விடுதலையையும் முன்னெடுக்கும் சமுதாய இயக்கங்களும் அரசியல் இயக்கங்களும் இப்பொழுதெல்லாம் வரலாறு படைப்பது பற்றிய அக்கறைகளைவிட வரலாற்றைப் பயன்படுத்துவது பற்றியே அதிகம் சிந்திக்கின்றன. கடந்தகாலம் தரும் படிப்பினைகள் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளவும் எதிர்காலத்தை வடிவமைக்கவும் உதவக்கூடும் என்பது ஒரு பொதுவான நம்பிக்கை. தனிநபர் சார்ந்து பல நேரங்களில் இந்த நம்பிக்கை உண்மையாகக்கூட ஆகி இருக்கலாம்; ஆகியிருக் கிறது. ஆனால் திரள்மக்கள் இயக்கங்கள் முன்வைக் கும் போராட்டங்களுக்கும் விடுதலைக்கும் அது அப் படியே பொருந்தக் கூடியதுதானா என்பது தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒன்று. இன்று தலித் விடுதலை மற்றும் போராட்டங்கள் பற்றிய சொல்லாடல்களுக்குள் அடிபடும் பௌத்தம், பூர்வ பௌத்தம் போன்றனவும், அதை முன்மொழிந்து பேசிய அயோத்திதாசரின் சிந்தனைகளைக் கற்றல் மற்றும் பின்பற்றுதல் போன்ற னவும் ஒருவிதத்தில் வரலாற்றுவாதம்தான்.

பல நேரங்களில் மக்களைத் திரட்டுவதற்கும் திரட் டப்பட்ட கூட்டத்திற்கு அடையாளம் ஒன்றை உரு வாக்குவதற்கும் வரலாற்று வாதம் பயன்பட்டிக்கிறது என்பது மறுத்துவிடக்கூடிய ஒன்றல்ல. ஆனால் அக் கூட்டம் உணர்வு ரீதியாக மட்டுமே திரட்டப்படும் கூட்டம் என்பதையும் நாம் மறந்து விட முடியாது. சகமனிதனை மதித்தல், காலம், வெளி, மொழி, இனம், சாதி, மதம், பால், நிறம், வர்க்கம் என மக்களைக் கூறு கட்டுவதற்குப் பயன்படும் சொற்களின் மீது விசாரணை களை எழுப்பி அவற்றிற்கிடையே நிலவும் வேறுபாடு களின் இடைவெளியைக் குறைத்தல், அதிகாரம் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்களைக் கேள்விக்குள்ளாக்குதல், தனிநபர்களைப் புனிதர்களாகக் காட்டுவதை எதிர்த்தல் என்பதாகச் செயல்படும் ஜன நாயகக் கருத்தியல் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய காலகட்டத்தில் வாழ்கிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இக்கருத்தியல் தனி மனிதனுக்குள்ளும் மக்கள் திரளுக்குள்ளும் போய் வினையாற்ற உடனடித் தேவை புத்திபூர்வமான அணிதிரட்டல்தானே தவிர உணர்வு பூர்வமான அணிதிரட்டல் அல்ல. இவ்வாறு திரட்டப்படும் அணிகள் விவாதிக்கத்தக்க மேடை களை உருவாக்குவதில்லை. விவாதிக்கத்தக்க மனநிலை யையும் உருவாக்கிக் கொள்வதுமில்லை. தனக்காகச் சிந்திக்கும் வேலையைத் தலைமையிடம் தந்துவிட்டு தொண்டனாக இருப்பதில் மட்டுமே மகிழ்ச்சி அடையக்கூடியன. தலைமையிடமிருந்து வலிமை யான ஆயுதங்களைத் தொடர்ந்து எதிர்பார்த்து நிற்கும் அக்கூட்டம் தலைமை இட்ட பணிகளைப் பொறுப் புடன் செய்வதைக் கடமையாகக் கருதும். பலநேரங் களில் தலைமையின் கட்டளைகளைத் தாண்டியும் வினைகள் செய்வதும் உண்டு. அத்தகைய வினைகளுக் கும் தலைமைதான் பொறுப்பேற்க வேண்டியதாக இருக்கும்.

இன்று தமிழ்நாட்டில் இயக்கங்கள் நடத்தும் பலரும் அணிதிரட்டலை மட்டுமே கருத்தில் கொள் கின்றனர். திரட்டப்பட்ட அணிகளை வழி நடத்து வதைப் பற்றியோ, வழிகாட்டுதலை மீறி அவ்வணிகள் செய்கின்ற வினைகளுக்குப் பொறுப்பேற்பது பற்றியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எவையெல்லாம் களையப்பட வேண்டிய வேறுபாடுகள் என ஜனநாயகக் கருத்தியல் முன் மொழிகின்றதோ அதையெல்லாம் பின்பற்றுகின்றன; தங்களின் அணி திரட்டலுக்குப் பயன்படுத்துகின்றன. ஜனநாயகத்தில் நம்பிக்கை இருப்பதாகப் பாவனைகளும் செய்துகொள்கின்றன. உணர்ச்சிவசப்படும் தொண்டர்களின் செயல்களைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியம் என அரசியல் தலைவர்கள் மட்டும் சொல்லவில்லை; பக்தர்களின் செயல்கள் வன்முறையில் இறங்கிவிடுகின்றன; கொலைவெறித்தாக்குதலுக்குக் காரணமாகி விடுகின் றன; அதையெல்லாம் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று மடாதிபதிகளும் கூடக் கூறுகின்றனர் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

பொறுப்பான தலைமைகள் அணிதிரட்டலை மட்டுமே கருதுவதில்லை. வழிநடத்துதலைப் பற்றியும் சிந்தித்துச் செயல்படும் தன்னிடம் எதிர்பார்த்து நிற்கும் அணிகளுக்குச் சரியான ஆயுதங்களைத் தருவதில் காட்டும் பொறுப்புணர்வுகளில்தான் தலைமைகளின் வரலாற்றுப் பாத்திரம் தங்கி நிற்கிறது. காந்தி தான் மட்டுமே பின்பற்றி, பரிசோதித்து, வெற்றிகண்ட அகிம்சையையும் சத்தியாக்கிரகத்தையும் ஆயுதங்களாகத் தனது அணிகளிடம் முன் மொழிந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

காந்திக்கு அணிதிரட்டலுக்கான ஆயுதங்களோ கருத்தியலோ தேவைப்படவில்லை. ஏனெனில் அவர் முன் நின்ற அணிகள் தேசவிடுதலை என்னும் பெயரால் ஏற்கெனவே திரட்டப்பட்ட கூட்டங்கள். ஆனால் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பணிகளோ அவ்வளவு சுலபமான பணிகள் அல்ல. அணி திரட்டுதலும் வழி காட்டுதலும் அவரது பொறுப்புக்களாகவே இருந்தன. முன்கையெடுக்கும் எல்லாத் தலைமைகளின் முன்னாலும் இந்தச் சவால்கள் இருக்கத்தான் செய்யும். தொடக்க காலங்களில் தனக்கான தனி அணி திரட்டுதலில் அதிகக் கவனம் செலுத்தாத அம்பேத்கர் வழி நடத்துதலைப் பற்றியே அதிகம் கவனம் செலுத்தினார். தேச விடுதலையெனக் கூறித் திரட்டப் பட்டுள்ள அணிகளில் அவரது வழிகாட்டுதலை எதிர் பார்த்து நின்ற கூட்டமும் உண்டு என்பது அவரது நம்பிக்கை. அந்த நம்பிக்கையில் தவறொன்றும் இல்லை. அவர் சொன்ன 'கற்பி; ஒன்றுசேர்; போராடு' என்னும் முழக்கங்கள் ஒன்றும் இன்று கருதப்படுவது போல் தலித்துகளுக்கு மட்டும் உரிய முழக்கங்கள் அல்ல. கற்க வேண்டியதும், ஒன்று சேர வேண்டியதும், போராட வேண்டியதும் ஒடுக்கப்படுவதாகக் கருதும் எல்லோருக்கும் உரிய முழக்கங்கள்தானே. ஆனால் அம்பேத்கர் சொன்னதினாலேயே அவை தலித்து களுக்கு உரிய முழக்கங்களாக மட்டும் ஆகிவிட்டன. இதுதான் ஒட்டுமொத்த இந்திய தேசத்தின் துயரம். அவர் தந்த இந்த முழக்கங்கள் அனைவருக்குமான முழக்கங்களாகக் கொள்ளப்படாத நிலையில் அவரே தன்னை தலித்துகளின் வழிகாட்டியாக நிறுவிக்கொள்ள வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. வரலாறு தந்த நெருக் கடியின் விளைவுகள்தான் அவையெல்லாம். அதன் பின் அவர் தன் பின்னால் பெருங்கூட்டத்தை அணி திரட்ட, அல்லது எதிரிகளிடம் தனது அணியின் வலுவைக் காட்ட முன்வைத்த ஆயுதம்தான் பௌத்த மதத்தைத் தழுவுதல் என்னும் ஆயுதம் அல்லது யுத்த தந்திரம். இந்த இடத்தில் ஆயுதம் என்பது வெறும் கருவி மட்டுமல்ல; கருத்தியலும்தான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். வரலாறு அல்லது வர லாற்று வாதம் என்பது பல நேரங்களில் கருத்தாகவும் இருக்கிறது; கருவியாகவும் இருக்கிறது. அம்பேத்கர் சொன்னபோதும் சரி, இன்று அயோத்திதாசரின் வெளிச்சத்தில் திரும்பச் சொல்லப்படுதலின் போதும் சரி - பௌத்தம் பற்றிய சொல்லாடல்கள் வெறும் கருவியாக இல்லாமல் கருத்தியலாகவும் இருக்கிறது என்பதுதான் ஆறுதலான விசயம்.

இதே நேரத்தில் நம் காலத்துச் சிந்தனையான பின்நவீனத்துவமும் சரி, அதனை வந்தடைய உதவிய பின் அமைப்பியல் சிந்தனையாளர்களான மிஷைல் பூக்கோ, ழாக் தெரிதா போன்றவர்களும் சரி வரலாற் றின் மீது கடுமையான சந்தேகங்களையே எழுப்பி யுள்ளனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சொல்லப்படுகின்ற வரலாறுகள் எல்லாம் சொல்லப்படுவன மட்டும்தான், உண்மையில் நிகழ்ந் தன அல்ல என்பது அவர்களது விமரிசனங்களின் சாரம். கடந்த காலத்தைப் புரிந்து கொள்ளத் தொடங் குதல் பல நேரங்களில் கொலைகளுக்கும் பழி வாங்குதலுக்குமே இட்டுச் செல்கிறது என்பது அந்த விமரிசனங்களின் பின்னிருக்கும் ஆதங்கமும் கூட. கடந்த காலத்தில் அதிகாரம் செய்தவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக மட்டுமே அவர்களின் சந்ததியினர் பழிவாங்கப்பட வேண்டுமா...? என்பது முன்வைக்கப்படும் வாதங்கள்.

வரலாற்றைத் தனது போராட்டத்தின் கருவியாகக் கொள்ளும் ஓர் இயக்கம் எப்பொழுதுமே கடந்த காலத்தின் ஒரு பகுதியைப் பொற்காலமாகச் சித்தரித்து அதற்காக ஏங்கத் தொடங்கிவிடுகிறது. அதனைத் திரும்பக் கொண்டு வருவதைத் தனது வேலைத் திட்டமாகவே ஆக்கிக் கொள்கின்றது. அப்படி ஆக்கிக் கொள்கின்றபோது அதற்குத் தடையாக இருக்கும் கூட்டம் அடையாளப்படுத்தப்படுவதும் அதற்கெதி ரான வன்முறைகள் நிகழ்வதும் நடந்தேறி விடுகின்றன. யூதர்களுக்கெதிராகச் சொல்லப்பட்ட நாஜிகளின் குரலில் வெளிப்பட்டது வரலாற்றின் அடிப்படையில் கட்டப்பட்ட பழிவாங்கும் உணர்வுகள் அல்லாமல் வேறல்ல. இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுக்க இதற்கு உதாரணங்கள் உண்டுதான்.

இந்திய தேசத்தின் விடுதலைக்கான போராட்டத் தில் - ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்ற களத்தில் மக்களைத் திரட்டப் பயன்பட்டது ஒரு வித வரலாற்று வாதம்தான் என்பதை மறுத்துவிட முடியாது. அந்த வாதத்தில் நேர்மறைக்கூறுகளும் இருந்தன; எதிர் மறைக்கூறுகளும் இருந்தன. இன்று தேசியவாதம் பேசும் பாரதிய ஜனதா கட்சி தொடங்கி தமிழினவாதம் பேசிய திராவிட இயக்கங்கள் மற்றும் தமிழ் தேசிய இயக்கங்கள் வரை ஒருவிதமாக வரலாற்றைக் கட்ட மைத்துப் பழம் பெருமைக்குள் இன்பம் காணவும் அந்த இன்பலோகத்தை அல்லது பொன்னுலகத்தை திரும்பக் கொண்டுவரவும் பார்க்கின்றன. கலாச்சார தேசியம் பேசும் இந்துத்துவ அடிப்படைவாதிகளுக்கு வேத நூல்களே ஆதர்ச நூல்கள்; மனுஸ்மிருதியைச் சட்ட நூல்களாக அங்கீகரித்த குப்தர் காலம்தான் பொற்காலம். அதைத் திரும்பக் கொண்டு வருவதே அவர்களின் இலட்சியக் கனவுகள். அதற்குத் தடையாக இருக்கும் பிற மதத்தினரும் ஜனநாயகவாதிகளும் ஒழித்துக்கட்ட வேண்டியவர்கள்; அல்லது இந்த நாட்டைவிட்டுத் துரத்தப்படவேண்டியவர்கள்.

***இடைநிலைச் சாதிகள்***
***தங்களின் சாதிகளை***
***அரசாங்கம் தரும் சலுகைகளுக்காக***
***மிகப் பிற்பட்டோர் பட்டியலில்***
***சேர்க்கும்படி கோரிக்கைகள்***
***கொடுத்துக்கொண்டே***
***இன்னொரு புறம்***
***தங்களை சத்திரிய இனம் எனவும்***
***காட்டிக் கொண்டிருக்கின்ற***
***முரணில்தான் அவை***
***இயங்குகின்றன***



படிப்பகம்

www.padippakam.com

**அதிகாரம் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்களைக் கேள்விக்குள்ளாக்குதல், தனிநபர்களைப் புனிதர்களாகக் காட்டுவதை எதிர்த்தல் எனச் செயல்படும் ஜனநாயகக் கருத்தியல் மீது நம்பிக்கை கொள்ளவேண்டிய காலகட்டத்தில் வாழ்கிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது**

தமிழ்நாட்டின் திராவிட இயக்கங்களுக்குச் சங்ககாலம் தான் பொற்காலம்; ஏனென்றால் தமிழ்நாட்டை அந்த நேரத்தில் ஆண்டவர்கள் தமிழ் மன்னர்கள் என்பதும், ஆரியர்களும் பிறமொழியாளர்களும் நுழையாத காலம் என்பதும் காரணங்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் தோன்றிய அறிவொளிக் காலத்தை ஒத்த பகுத்தறிவும், வேறுபாடுகளற்ற சமுதாய வாழ்வும், விரும்பியவர்களைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளும் உரிமைகளும் நிலவியதாகக் கட்டமைத்து அந்தப் பொற்காலத்திற்கு ஏங்குவதும் அதனை மீட்டெடுப்பதும் அவர்களின் நோக்கம். அதற்குத் தடையாக இருப்பவர்களாக அவர்கள் நிறுத்துவது சமய நம்பிக்கையாளர்களையும், சமஸ்கிருதம் உள்ளிட்ட பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்களையும்தான். சங்கப் பொற்காலத்தைத் திரும்பக் கொண்டு வரவேண்டுமென்றால் பிறமொழியாளர்களையும் சமயப்பற்றாளர்களையும் ஓடஓட விரட்டுவதுதான் ஒரே வழி. தடையாக இருப்பார்கள் என்றால் ஒத்துவராத தமிழர்களைக்கூட காட்டிக் கொடுப்பவர்கள் எனக் குற்றம் சாட்டிப் பழி வாங்குவதில் தவறொன்றும் இல்லை என்பதுதான் அவர்களது தத்துவம். சர்வதேச மனிதனைப் பற்றிப் பேசிய பொதுவுடைமைச் சிந்தனையும் கூடப் புராதனப் பொதுவுடைமைச் சமுதாயம் என்னும் பொன்னுலகத்தைக் கட்டமைத்து அதற்கு அறிவியல் காரணங்களைத் தந்துதான் உள்ளது. ஆக வரலாற்றைப் பயன்படுத்துவது என்பது ஒன்றும் புதிது அல்ல.

இந்தப் பின்னணியில்தான் சாதிய இயக்கங்களும் சாதிமறுப்பு இயக்கங்களும் கூட வரலாற்றைப் பயன்படுத்துவதில் தீவிரம் காட்டியே வருகின்றன. அதே நேரத்தில் இரு சாராரும் முன் வைக்கும் வரலாறும் பயன்படுத்தும் முறையும் வெவ்வேறானவை. இன்னும் சொல்வதானால் எதிரும் புதிருமானவை. சாதிமறுப்பு இயக்கமான தலித் இயக்கம் பௌத்த அடையாளத்தைச் சுட்டுவது பழம்பெருமை பேசுவதற்காக அல்ல. தனது எதிர்ப்பு மனநிலையின் தொடர்ச்சியைக் காட்டுவதற்காகத்தான். பௌத்தம் தமிழ்நாட்டிலும் இந்திய அளவிலும் இந்து மதத்தின் அதிகார வரம்பிற்குள் இல்லை எனக் காட்டுவதன் மூலம் இந்து மதத்தின் சாதிக்கட்டுமான நால்வருணம் தங்களுக்குப் பொருந்தாது எனச் சுட்டிக்காட்ட முடியுமல்லவா...? அதே நேரத்தில் இந்து மதம் பௌத்தத்தின் அடையாளங்களைச் சிதைத்துத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கத்தில் அழித்தொழிப்பு வேலைகளைச் செய்துள்ளது என்ற குற்றச்சாட்டும் இதன் பின்னணியில் இருக்கத்தான் செய்கிறது.

இதற்கு மாறாக சாதிய இயக்கங்கள் - தமிழ்நாட்டின் இடைநிலைச் சாதிகள் தங்கள் சாதிகளைப் பெரும்பாலும் ஆண்ட பரம்பரைகள் எனக் காட்டிக் கொள்ளவே முனைகின்றன. மூவேந்தர்களின் வாரிசுகளாகக் காட்டிக்கொள்வதற்கான ஆதாரங்களை இலக்கியங்களிலிருந்தும் வரலாற்றுக் குறிப்புகள் என நம்பப்படும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பட்டயங்கள் போன்றவற்றிலிருந்தும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றன. மூவேந்தர்களாகக் காட்டிக் கொள்ள இயலாத நிலையில் குறுநில மன்னர்களின் பரம்பரைகளாக, பாளையக்காரர்களின் வாரிசுகளாகக் காட்டிக் கொள்ள ஆதாரங்கள் கிடைத்தால் மகிழ்ச்சியடைகின்றன. தங்களின் சாதிகளை அரசாங்கம் தரும் சலுகைகளுக்காக மிகப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும்படி கோரிக்கைகள் கொடுத்துக்கொண்டே இன்னொரு புறம் சத்திரிய இனம் எனவும் காட்டிக் கொண்டிருக்கின்ற முரணில்தான் அவை இயங்குகின்றன. சாதிச் சங்கங்கள் நடத்தும் பத்திரிக்கைகளின் பெரும்பாலான பக்கங்களில் விளம்பரங்களைத் தாண்டி இடம்பெறும் உள்ளடக்கம் இவைதான். வன்னியர்கள் என்ற பொதுப்பெயரில் அடங்கிக் கொள்ளும் சாதிகளும், தேவர்கள் என்ற பொதுப் பெயரில்அடங்கிக் கொண்டு கோரிக்கைகள் வைக்கும் சாதிகளும் நடத்தும் பத்திரிக்கைகள் நல்ல உதாரணங்கள். தேவர்கள் பின்பற்றும் அதே உத்தியை இன்று பள்ளர்கள், தங்களைத் தேவேந்திரகுல வேளாளர்கள் எனச் சொல்வதன் மூலம் பின்பற்றுகின்றனர். ஒரே நேரத்தில் சில சாதிகளை மேல்நிலையாக்கத்திலும் கீழ்நிலையாக்கத்திலும் இயங்கும்படி செய்தது என்னவென்று நினைக்கிறீர்கள்; வேறொன்றும் இல்லை. வரலாறு என்னும் ஆயுதம்தான்.

ஜனநாயகக் கருத்தியலை நம்பிக்கையாகக் கொண்டு வாழத் தொடங்கியிருக்கும் இக்காலகட்டத்தில் திரள் மக்களிடம் வரலாற்றுவாதத்தை ஆயுதமாகத் தருவதைப் பற்றித் தலைமைப் பீடங்களில் இருப்பவர்கள் தீவிரமாக யோசித்துச் செயல்பட வேண்டும். நிகழ்காலத்தில் படும் துன்பங்களையும் துயரங்களையும் பற்றிப் பேசாமல் கடந்தகாலப் பெருமைகளையும் காட்சிகளையும் காட்டிக் கொண்டிருப்பது ஒரு விதத்தில் ஏமாற்று வேலைகளாகவே இருக்கமுடியும். நிகழ்காலத்தில் என்னவாக இருக்கிறோம் என்பதிலிருந்து தொடங்கி எதிர்காலத்தில் என்னவாக ஆக வேண்டும் என வழி நடத்துவதே சரியான வழி நடத்தலாக அமையத்தக்கது. புத்திபூர்வமான சிந்தனைக்கு இடமளிக்காது உணர்வுபூர்வமாகத் திரட்டப்படும் திரளிடம் வன்முறைக்கு வழிவகுக்கும் ஆயுதங்களைக் கையில் தருவது பற்றி ஒரு தடவைக்குப் பதிலாகப் பத்து தடவை யோசிக்க வேண்டும். வரலாறு இரு பக்கமும் கூரான ஆயுதம். எதிரிகளை மட்டுமே காயப்படுத்தும் என்பதில்லை. வைத்திருப்பவனுக்கும் காயங்கள் உண்டு பண்ணக்கூடியதுதான். ●



படிப்பகம்

www.padippakam.com

# தலித் - தேசியமாக முதல் முன்வைப்பு

■ கௌதம சன்னா

இதுவரை தேசிய இனப் பிரச்சினையில் உள்ள பல்வேறு வகைகளையும், பல்வேறு தேசிய இனங்களின் வரலாற்றையும், அவை எப்படி தேசிய இனமாக பரிணமித்தன என்பனவற்றையும் பார்த்தோம். இவைகளிலிருந்து விளங்குவது என்னவெனில், பல்வேறு தேசிய இனங்கள் மதம், நிலம், மொழி, நிறம், இனம், தொண்மை, பொருளாதார வாழ்வு மற்றும் அரசியல் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு ஒன்றுக் கொன்று தனித்தும், பிணைந்தும் இருப்பதைக் காணும் போது, தேசிய இனத்தை வரையறுப்பதில், தனி ஒரு கோட்பாட்டை மட்டும் முன்னிருத்திவிட முடியாது என்பதுதான். தேவையும், சூழலும், அதையொத்த அறிவியல் அணுகுமுறைதான் துல்லியத்தை அடைய உதவுகிறது.

இந்திய தேசியம், தமிழ்த் தேசியம் உட்பட பல தேசிய இன கோட்பாடுகள் நம் சூழலில் இருந்தாலும், இன்னும் நாம் காணவேண்டிய பல தேசிய இனங்கள் அடையாளப்படுத்தாமல் இருக்கின்றன என்பது உண்மை. அப்படி அடையாளப்படுத்த முடியாத தேசிய இனங்கள், தமக்கு வரலாற்று வாய்ப்பு வாய்க்கும் பொழுது தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளதோடு ஒடுக்கும் பேரின தேசியம் அவைகளை மறைத்தும் வந்துள்ளது. அப்படி மறைக்கப்பட்டு வந்த ஒரு தேசிய இனம்தான் தலித்துகள்.

இனி, தலித்துகள் ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்தப்பட்ட வரலாற்றுப் பின்னணி மற்றும் அதன் கோட்பாட்டு வளர்ச்சியினைக் காண்போம்.

இந்திய வரலாற்றில் தலித்துகளின் தேசியத் தன்மையை வலியுறுத்திய துவக்கப் புள்ளி பண்டிதர் அயோத்திதாசர்தான். இந்திய தேசிய இனங்கள் பற்றின அவரின் முன்வைப்பு நேரடியான மேற்குலத் தாக்கம் கொண்டது அல்ல. மாறாக முழுக்க, முழுக்க இந்திய சிந்தனைர் போராட்டத்தின் தொடர்ச்சியாக அமைந்திருக்கிறது.

இந்திய மக்களை இரண்டு அடிப்படைப் பிரிவுகளாக அவர் பிரித்தார். அவை,

1. சாதி பேதமற்றவர்கள்
2. சாதிபேதமுள்ளவர் (இந்துக்)கள்

அவரின் காலத்தில் இந்த சாதி பேதமற்றவர்களின் தொகை "ஆறுகோடி" பேர் இந்தியா முழுதும் பரந்திருக்கின்றனர். இந்த சாதி பேதமற்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என பல பெயர்களிலும் அழைக்கப்படுகின்றனர் என அவர் குறித்தார். அதேபோல சாதி பேதமுள்ளவர்களை, சாதி பேதமுள்ள இந்துக்கள், வேஷ மதத்தவர் என அடைமொழியிட்டார்.

மேலும் சாதிபேதமற்றவர்களின் பிரிவுகளில் 'சாதி' என்று உள்ளதை மறுத்த அவர், சாதி என்பதற்கு புதுவித விளக்கம் ஒன்றை அளித்தார்.

"சாதிப்போர் என்பதில் சாதி - பகுதி - ப் - சந்தி, ப் - இடைநிலை, ஆர் - விகுதியாகி, சாதிப்போரென முடிந்தது, நன்னூல் சூத்திரம் 353, சாதியாரென்பதில் சாதி - பகுதி, ய் - சந்தி, ஆர் - விகுதியாகக் கொண்டு சாதியாரென முடிந்து."

"பூர்வத்தில் ஆந்திரா சாதி, மராஷ்டக சாதி, திராவிட சாதியென அவரவர்கள் சாதிக்கும் பாஷையை வழங்கி வந்தார்கள்" (அ.தா.சி 1 = 693)

இந்த சாதிகளுக்குள் இருந்த பவுத்த அடையாளங்கள், அதன் தொழிற் பிரிவுகள் பின்னாளில் வந்த வேஷ பிராமணர்களால் வர்ண சாதியாக மாற்றப்பட்டதென பண்டிதர் கூறுகிறார்.

இதில் கவனிக்கவேண்டிய அம்சம் எதுவெனில், சாதிபேதமற்றவர்களில் இருந்த மொழி = சாதி முலம், அவர்கள் பூர்வத்தில் பவுத்தர்களாய் இருந்ததுடன், அவர்களுக்கான மொழியான தமிழ் அல்லது திராவிடம், சமஸ்கிருதம் அல்லது சகடபாஷை, பாலி அல்லது மகடபாஷைக்கு, புத்தர்தான் வரி வடிவம் தந்தார் என்றும், இப்பிரிவுகளே இந்தியா முழுவதும் பரவியிருக்கின்றன என அவர் கருதினார்.

சாதி பேதமற்றவர்கள் பூர்வத்தில் பவுத்தர்கள். பிராமணர்களால் தீண்டத்தகாதவர்களாக பழிவாங்கப்பட்டார்கள். இந்த சாதி பேதமற்றவர்கள் சாக்கியர்களுடன் அவரால் தொடர்புபடுத்தப்பட்டனர். எப்படியெனில் சித்தார்த்தரின் சாக்கிய வம்சத்தோடு சாதி பேதமற்றவர்களின் வரலாறு தொடர்பு கொண்டிருப்பதோடு, அவர்கள் அவரைப் பின் தொடர்ந்தும் வந்திருப்பதால், இந்த சாதி பேதமற்றவர்களின் பரவல் மற்றும் தொடர்பு இந்தியா முழுமைக்குமானது என்று அவர் கருதுகிறார். அதனால் தான் இந்த சாதிபேதமற்றவர்களின் மதம் "இந்திய மதம்" என்று வரையறுக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

பண்டிதரின் இந்த வரையறுப்புகள் ஒரு பண் பாட்டு மூலத்தை அடிப்படையாகக் கொண்டது மட்டுமல்ல, பூர்வத்தில் உள்ள சமூக இனத்தோடு தொடர்புடையது. அதனால்தான் இந்த இந்திய துணை கண்டம் முழுதும் சாதி பேதமற்றவர்களின் சொந்த நிலமாகப் பார்க்கிறார். இந்த இந்திய உப கண்டத்தில் தோன்றிய வேஷ பிராமணர்களால் இந்த தூய்மை சீர்கெட்டதுடன், அவர்களை அண்டி யெழுந்த சாதி பேதக் கூட்டமும், அதன் மதக்கடையும் எதிரினக் கூறுகளாக அடையாளப்படுத்துகிறார் என்னும் அவரது எல்லைக்குட்பட்ட தமிழ் மொழி பேசும் சாதி மதமற்றவர்களின் விடுதலையை பவுத்த மீட்பின் மூலம் முன்னெடுத்தார். இங்கு உள்ள பறை யர்கள் அல்லது சாதிபேதமற்ற திராவிடர்கள் அவரின் செயல்களத்திற்கு மையமாக, துவக்கப் புள்ளியாக அமைந்தது. திராவிடர்கள் என்ற பதத்தை தீண்டத் தகாதவர்களுக்கான பூர்வ அடையாளமாக அவர் வரித்துக் கொண்டதின் மூலம், சாதி பேதமுள்ள பிற பிற்பட்ட, முற்பட்ட சாதிகளுக்கு அந்த அடையா ளத்தை அறவே மறுத்துவிட்டார். அவர்களைத் தனித் தனி சாதியுள்ளவர்களாக, ஆதிக்கங்களாக அவர் அடையாளப்படுத்துகிறார்.

அதோடு பறையன் என்பது ஒரு கற்பனை என்றும், இட்டுக் காட்டியது என்றும் மறுத்த பண்டிதர், தீண் டாதாருக்கு பவுத்த சாக்கியர் அடையாளத்தை முன் னெடுத்தார்.

எனவே, பண்டிதரின் தேசிய இனக் கண்ணோட் டம் மிகுந்த அடிப்படைத்தன்மை வாய்ந்தது என்பதோடு, அது இந்தியாவில் தலித் தேசியத்திற்கான துவக்கப்புள்ளி என்ற கருத்தோடு நிறுத்திக் கொள் வோம்.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சி டாக்டர் அம்பேத்கர் அவர்களிடம் தொடங்கியது. இதுதான் தலித் தேசி யத்திற்கான வலுவான விஞ்ஞானப் பின்புலத்தை வழங்கியது.

II

1919 அம்பேத்கரின் அரசியல் பிரவேசத்தின் குறிப்பிடத்தக்க துவக்க ஆண்டாகும். ஏனெனில் அவ்வாண்டு வாக்குரிமை குழுவான, சவுத்பரோ பிரபுவின் தலைமையில் வந்த குழுவிடம் 27.1.1919 அன்று அம்பேத்கர் அளித்த சாட்சியம் அவரின் இந்திய சமூக - தேசிய இன அடிப்படைக் குறித்த அவதானிப்புகளை தெளிவாக எடுத்துரைக்கிறது. அவர் அளித்த அறிக்கையில், இந்தியாவின் உண்மை யான சமூகப் பிரிவுகள் என்பனவற்றைப் பிரிக்கிறார். அவை (அ.எ.பே.தொ.2)

1. தீண்டத்தக்க இந்துக்கள்
2. தீண்டத்தகாத இந்துக்கள்
3. முகமதியர்
4. கிறித்தவர்
5. பார்ஸிகள்
6. யூதர்கள்

ஆகியன இந்திய சமூகத்தின் உண்மையான பிரிவு களாக அடையாளம் கண்டது வெறும் பெயர் அடிப் படையிலோ அல்லது மத அடிப்படையிலோ மட்டு மல்ல. அவைகளுக்குள்ளான ஒடுக்குமுறைப் படிநிலை, அதிகாரப் போட்டியினால் எழும் அடையாள மோதல்கள் ஆகியன உள்ளடங்கியது.

"தீண்டத்தகாதவர்கள் ஒரு தனித்த இனம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்களுக்கான சுயநிர் ணய உரிமையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே" என அவர்களது சுயநிர்ணய திட்டங்களுக்கு - தீர்வுகளுக்கு தன் கோரிக்கையை முன்வைத்தார். (காண்க மேலது பக். 40)

இதே சாட்சிய கட்டுரையில் தீண்டத்தகாதார் ஓர் தனித்த தேசிய இனம் என்பதை விளக்க பல எடுத்துக் காட்டுகளை அவர் பயன்படுத்தினாலும், தேசிய இனம் குறித்த அவரது கோட்பாடுகள் "பாகிஸ்தான் பற்றின சிந்தனைகள்" நூலில் விரிவாக விவாதிக்கப்பட்டன. அது எந்த விதத்திலும் அவரது துவக்ககால தேசிய இன வரையறுப்புகளோடு முரண்படவில்லை. மாறாக, அதை வளப்படுத்தவே செய்தது.

அம்பேத்கரின் இந்த வரையறுப்பு வெறும் கோட் பாட்டுத்தன்மையை மட்டும் கொண்டதல்ல, அதோடு கூட நடைமுறையில் உள்ள சமூக முரண்பாடுகளின் வெளிப்படுத்தல்களாக, வகைப்படுத்தலாக அமைந் தது. இந்த ஆதார மையத்தை தொடர்ச்சியாக அவர் கூர்மைப்படுத்தினார். இது அம்பேத்கரோடு மட்டும் நிற்கவில்லை. அவரது சமகால தலைவர்களான ரெட்டமலை சீனிவாசம், மயிலை சின்னசாமி ராஜா உட்பட பலரிடம் இப்போக்கு இருந்தது.

எனவே தலித்துகளின் ஒரு தனித்த தேசிய இனம் என்பது, தலித் அரசியல் முன்னோடிகளின் துவக்க கால அரசியல் முன்னெடுப்புகளிலிருந்தே வருகிறது என்பது தெளிவு. இருந்தபோதும் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே, மேற்கத்திய சூழலிலும் தேசிய இனப்பிரச்சினை பிரமாண்டமாக வளர்ந்து வந்தன. பல நாடுகளில் அதற்கான தீர்வுகளும் கொடுக்கப் பட்டிருந்தன. இந்நிலையில் அதேபோன்ற வகையில் தேசிய இனம் பற்றின புரிதல் இல்லாமல், ஒரு புதுவித கருத்தோட்டத்தை தலித் முன்னோடிகள் வளர்த் தெடுத்தனர் என்பது, தலித்துகளுக்கான தனி தத்துவ தடத்தை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இந்த அம்சம் பிற சிந்தனையாளர்களால் கவனிக்கப்படாமல் அல்லது புறக்கணிக்கப்பட்டதோடு, தலித்துகளின் அடை யாளத்தை மிகுந்த வன்முறையோடு புனைய முனைந் தனர். இப்போதோ மேகம் விலகி ஒளி வந்துவிட்டது.

இனி தலித்துகளின் தேசிய இன முன்வைப்பினை ஒப்பிட்டு ஆய்வது அவசியம். இந்த ஒப்பீட்டு ஆய்வு தான், அவர்களின் முன்வைத்த கோட்பாடுகளுக்கான உறுதித் தன்மையை வழங்குகிறது. எனவே, தேசிய இனம் குறித்து முன்பு நாம் கண்ட அளவீடுகளுடன் தலித் தேசிய இனத்தினைப் பொருத்தி விவாதிப்போம்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# 6 கணிதம் நமது உடைமை

■ குடியரசன்
nalanda1956@yahoo.co.in

மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நிலங்கள் வரலாற்றுப் பின்புலம் வாய்ந்தவை. தொன்மை நாகரீகம் பொதிந்தவை. இந்திய மனிதன் அறிந்தவரையில் இந்நிலங்கள் நாகரீகத்தின் துவக்கம் என்றெல்லாம் இந்திய சரித்திரம் தன்னுடைய கருத்தை நம் பாடப் புத்தகங்களின் வாயிலாக நமக்குச் சொல்லித் தந்திருக்கிறது. இன்றையிலிருந்து 5000 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறாக மொகஞ்சதாரோ - ஹரப்பா நிலங்கள் உள்ளன.

பஞ்சாப் மாநிலத்தின் கிழக்குப் பகுதி, அகமதாபாத் என்றழைக்கப்பட்ட தற்போதையே குஜராத்தின் கடற்கரைப் பகுதி, ராஜஸ்தான் வடபகுதி, உத்திரப்பிரதேசம் போன்ற பகுதிகளை எல்லைகளாகக் கொண்டு அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. குறைந்தது 70-க்கும் மேற்பட்ட இடங்களில் இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

ஒப்பீடாக இந்த நிலப் பகுதிகளின் தொலைதூர ஊர்களாக, தட்சசீலம் - பாடலிபுத்திரம், லாகூர் - நாலந்தா, டில்லி - குசும்புரா, ஜெய்பூர் - பகுரஸ் அன்றைய காலம் அறிந்த பகுதிகளாகவும் இதே பெயர்கள் அறிந்திரா வகையிலும் இருந்திருக்க வேண்டும். நாம் 1921 முதல் 1923 வரை நிகழ்த்தப்பட்ட இந்த அகழ்வாராய்ச்சியை ஹரப்பா நாகரீகம் என அழைக்கிறோம். இப்பகுதிகளில் கோதுமை, பார்லி மற்றும் கால்நடை பழக்கத்தில் இருந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. இதைத் தவிர இப்பகுதி மக்களின் கணித திறன்பற்றி பரந்த விளக்கங்கள் வரலாறு நமக்கு போதிய கவனத்தோடு பதிவு செய்யவில்லை.

அந்த கணித திறனை இந்த கட்டுரையில் நாம் காண்போம்.

1 அளவியம்

சதுரம், செவ்வகம், முக்கோணம் போன்ற ஒழுங்கு வடிவங்களும், சாய்சதுரம், இணைகரம், இருசமபக்க, செங்கோண, சமபக்க முக்கோணங்கள் போன்ற derived form (வழிவடிவங்கள்) பற்றிய அறிவும், கனசதுரம், கனசெவ்வகம், இணைகர திண்மம் போன்ற முப்பரிமான வடிவங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவும் ஹரப்பா மக்கள் பெற்றிருந்தனர்.

எகிப்து, மெசபடோமியா பகுதிகளில் வழங்கப்பட்டுவந்த கணித விளக்கங்களை, ஊடகத் தொடர்பு இல்லாததால் இப்பகுதிகளில் மக்கள் சுய கண்டுபிடிப்புகளால் அறிந்திருந்தனர். இவைகளை நம் வரலாற்று அறிஞர்கள்(!), தங்களால் புரிந்துகொள்ள இயலாமற்போனதால், அதை மக்களிடம் சேர்ப்பிக்கும் திறனற்று மறைத்துவிட்டனர். இது ஏதோ திட்டமிட்ட சதி அல்ல. மாறாக வரலாற்று அறிஞர்களின் கணிதத்தை புரிந்துகொள்ளும் திறன் தவிர்த்த நிலையே, நம் வரலாறு பாட புத்தகங்களில் கணிதம் பற்றி வரலாற்று பின்புலம் அதாவது ஹரப்பா கால மக்களின் கணித உயர் வாழ்க்கை பதிவு செய்யப்படாமல் கைவிடப்பட்டதன் துவக்கக் காரணம். வரலாற்றறிஞர்களின் இந்த திறன் நீங்கிய நிலையில், நாம் நம் ஆதி மக்களின் கணித அறிவை ஏதுமற்ற நிலையாகவே பதிவு செய்து மனதில் பதித்து வந்திருக்கிறோம்.

வரலாற்று அறிஞர்களின் வாய்ப்பு ஆழமானது. அவர்களுக்கு இயல்பாய் தங்களின் துறைசார் நிபுணத்துவம் தவிர்த்த மருத்துவம், கணிதம், வான சாஸ்திரம், விஞ்ஞானம் உணரா நிலையில் இந்திய நாடு ஆதியில் நாகரீக நிலையில் இருந்தது என்று மட்டுமே பதிவு செய்துள்ளனர். இவ்வறிஞர்கள் இன்றைக்கு நடைமுறை விஞ்ஞானம் பயின்றிருப்பார்களேயானால், நமது தொன்மக் குடிகளின் குடியிருப்புகள் பயன்படுத்திய கருவிகள், உழவு செய்த முறைமை, பாதாளச் சாக்கடைகள், விளக்கு - ஒளி அமைப்புகளின் உரைந்திருந்த கணித அறிவை மெச்சி பதிவு செய்து நம்மை ஊக்கப்படுத்தும் நிகழ்வுகளில் பங்கெடுத்து வாழ்ந்திருப்பர். மாறாக அவர்கள் அதாவது வரலாற்றை இன்று வரை கட்டிக்கொண்டு தங்களுக்குப் புரிந்துள்ளதை வரலாறு என்று பதிவு செய்துள்ளவர்கள் தான் வரலாற்று அறிஞர்கள் என்று நிலைத்திருக்க மாட்டார்கள்.

நாம் ஒரு கற்பனையான நிலையை எடுத்துக் கொள்வோம். தமிழின் எழுத்துக்கள் - உச்சரிப்பு போன்ற தெரிந்தவர்கள் அனைவரும் மடிந்துவிட்ட நிலையை எடுத்துக்கொள்வோம். புதிய மனிதர்களின் தமிழின் இலக்கியத்தை மொழி அறிவு அற்று இருப்பதால் தமிழ் மொழியில் பதிந்துள்ள இலக்கியங்களை சுவைக்க இயலாது. ஆனால் இந்தப் பகுதியில் உள்ள கட்டடங்கள், மின்சாரம், தொழில்நுட்பம், நம் நடைமுறையில் உள்ள மருந்துகள், நாம் பயன்படுத்தும் விஞ்ஞானம் தோய்ந்த கருவிகள், வாகனங்கள் நம் வரலாற்றின் விஞ்ஞான வளர்ச்சியை இங்கு ஆய்வு நிகழ்த்தும் நபர்களால் உணர்ந்து கொள்ள இயலும்.



படிப்பகம்

www.padippakam.com

அதற்கு அடிப்படைத் தேவை அந்த புதிய மனிதர்கள் கணிதம், மருத்துவம், விஞ்ஞானம் பற்றிய தெளிந்த புலனறிவு பெற்றிருத்தல் வேண்டும். புதிய மனிதர்கள் கணித அறிவு அற்றவர்களாக இருந்தால், நமது கணித கண்டுபிடிப்பை அவர்களால் தெளிய இயலாது. நம்முடைய நாகரீகம் கணித அளவில் விஞ்சிய நாகரீகம் என பதிவு செய்யவியலாது. இந்த நிலையே தெளிவாக, நமது ஹரப்பா நாகரீகத்தை விவரிப்பதிலும் தற்போதைய இந்திய வரலாற்று அறிஞர்கள் தோற்றுப் போய்விட்டார்கள். காரணம் ஹரப்பா பகுதியில் பேசப்பட்ட மொழி இன்றைக்கு நமக்குத் தெரியாது.


ஒழுங்குவடிவ காரீய உலோக உருண்டைகள் 0.05, 0.1, 0.2, 0.5, 2, 5, 10, 20, 50, 100, 200 மற்றும் 500 கிராம் கொண்டவைகள் 12 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்ட ஹரப்பா முழுவதிலும் மக்களின் எடைக்கற்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவர்களின் பரவலாக்கப்பட்ட எடைக் கற்களின் பொது அளவு 27.584 கிராம் கொண்ட உலோக உருண்டைகள் பல்வேறு பகுதிகளில் பரவலாகக் காணப்பட்டன.


பவுர்ணமி நாம் வாழும் பூமியில் தோன்றுவதற்கு தேவைப்படும் நாள் கணக்கின் அடிப்படையில் இந்த அளவு தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்று கோள்களின் இயக்கம் பற்றிய ஆய்வுகள் நமக்குத் தெரிவிக்கின்றது.

மேலும் டெசிமல் வரையிலும் துள்ளிய அளவுகளைக் குறிக்க காரீய உலோக உருண்டைகளை ஹரப்பா மக்கள் (பண்டைய இந்திய மக்கள்) அறிந்திருந்தனர் என்பது 0.05, 0.1, 0.2 கிராம்... போன்றவைகள் நமக்கு ஊக்கம் தரும் நிகழ்வாகும். நடைமுறைக்குச் சாத்தியம், நன்கு நிருவப்பட்ட முறைமை, எடை மற்றும் அளவுகள் ஹரப்பா நாடு முழுவதும் பழக்கத்தில் இருந்தது அங்கு மைய நீரோட்டம் இருந்ததை நம்மால் உணர இயலுகிறது. இந்த நீரோட்டம் அரசு அல்லது கலாச்சாரம் சார்ந்து மட்டுமே சாத்தியம் என்பதால் அரசையும் கலாச்சாரத்தையும் சேர்ந்து இயக்குவதற்கு பொது வழிச் சட்டமும் நடைமுறையில் இருந்திருக்க வேண்டும் என்பது நம் அறிவில் உதிக்கும் தெளிவான கருத்து.

நீட்டல் அளவை அதாவது scale என்பதும் இப்பகுதியில் 66.2 மில்லி மீட்டர் (நமது இன்றைய நீட்டல் அளவைப்படி) மொகஞ்சதாரோ, ஹரப்பா பகுதிகளில் மிகப் பரவலாகக் காணப்படுகின்றன.

அளவுகோலின் நம் தற்போதைய மதிப்பு 10-இன் மடங்கில் உள்ளது. ஆனால் ஹரப்பா மக்கள் பயன்படுத்திய அளவுகோல் 6.7056 மில்லி மீட்டர் இடைவெளியை தொடர்ச்சியாகக் கொண்டுள்ளது. அதாவது நமது மதிப்புப்படி 5 & 6 புள்ளிகள் தூரம் 1 செ.மீ அதாவது 10 மி.மீ. என்பதாக உள்ளது. மொகஞ்சதாரோ அளவுகோலின் எல்லா இரு புள்ளிகளின் இடைத் தூரம் D & E-க்கு இடையில் உள்ள தூரம் 6.7056 மில்லி மீட்டர் இடைவெளி அளவுகளில் தொடர்ச்சி




வடிவமைக்கப்பட்டுள்ளது. இருபுள்ளிகட்கு இடைப்பட்ட கோடுகள் நமக்கு தற்போதைய அளவின்படி 10 எண்ணிக்கை உள்ளன. மாறாக ஹரப்பா அளவுகோல் 9 சமதூர கோடுகளாய் குறிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அலகும் 6.7056 மில்லி மீட்டர் இடைவெளி கொண்டதாக ஹரப்பா அளவுகோல் அமைந்துள்ளது. இவ்வகையான 5 அலகுகள் அதாவது 33.5 மில்லி மீட்டர் அளவை இன்றைக்கும் கணித உலகம் 1.32 இன்ச் என்கிறது. இந்த 1.32 இன்ச் அளவை கணித உலகத்தின் மிகவும் பிரசித்திப் பெற்ற அளவாக இன்டஸ் இன்ச் (Indus Inch) என்னும் வகையில் இந்திய நாட்டுடன் தொடர்புபடுத்தி வழங்குகிறது. இந்த உண்மை நாம் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் கணித வளமை படைத்திருந்தோம் என்பதற்கான மாபெரும் ஆதாரம். இதை நமது குழந்தைகளின் பாடப்புத்தகங்களில் பதிவு செய்யவேண்டுவது மிக அவசியம்.

இதன் பொருத்தப்பாட்டை உலக கணிதங்களுடன் ஒப்பிட்டு ஓர் அட்டவணையைக் காண்போம்.

| | |
|---|---|
| சுமேரியர்களின் சுசி (shushi) | அரை Indus inch (மிகச் சரியாக) |
| கஜம் (தற்போதைய வழக்கில் இல்லை) | 25 Indus inch |
| மேகலித்திக் அடி (ஏசு பிறப்பிற்கு 2000 ஆண்டுகள் முன் வடமேற்கு ஐரோப்பா) | இவ்வலகு Indus inch - உடன் நேரடித் தொடர்புடையது. சராசரி பிழை மிகவும் குறைவாக உள்ளது. |
| தற்போதைய பிரிட்டனின் கி.மு. கால அளவுகள் | Indus inch-இன் விகிதங்களில் உள்ளது |
| பண்டைகால எகிப்து மெசபடோமியா | Indus inch -இன் விகிதங்களில் உள்ளது |

இந்த பொருத்தம் உலகளாவிய வகையில் கணித சிந்தனைகள் பொதுமை என்பதாகவும், கணித வல்லுனர்களின் பழக்கம் பரவலாகவும், பண்ட மாற்று முறையால் பொருளாதார வளர்ச்சியினால் அலகுகளும் மடங்குகளின் சமத்துவத்தைப் பெற்றிருக்க வாய்ப்புள்ளதையே காட்டுகின்றது.

அடுத்த தொடரில் ஹரப்பாவில் பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் - கட்டிட முறை இன்றைய நவீன பொறியியல் முறையில் - பௌத்த கட்டிடங்களின் நேரடித் தொடர்பை விரிவாகக் காண்போம். •



படிப்பகம்

www.padippakam.com

# நிழல் வருகை

■ பாரதி நிவேதன்

காற்று சற்றும் இல்லாத நேரத்தில் தொட்டியிலிருந்து மூன்றடி வளர்ந்துள்ள குரோட்டன்ஸ் வெடவெடத்தது சலசலப்பிட்டது. டார்ச்சை எடுத்து ஜன்னலைத் திறந்துவிட்டபடி அடித்துப் பார்த்தபோது சலசலப்பு மெல்ல அடங்கிப் போனது. மீண்டும் அந்த குரல் ஒலிக்குமா? மனசுக்குள் ஜில்லிட்டு ஓடியது பயம். நிலா வெளிச்சம் தூரக் கட்டிடங்களை நிதானப்படுத்துவதாய் மெல்லிய அலை எழுப்பியது. எதிர்க் கட்டிடத்தின் இரண்டாவது அடுக்கு வலப்பக்க சுழல் படிக்கட்டு இடுக்கில் மரத்தைப் பார்த்து ஊர்ஜிதம் செய்தேன். மரக்கிளைகளை உற்றுப்பார்த்தேன். நிச்சலனம். மீண்டும் மீண்டும் சலசலத்தால் எதுவும் என் பொறுப்பிலில்லை. மின் விசிறியை முடுக்கிவிட்டுபோர்வையைத் தலைக்கு இழுத்துக் கொண்டேன். எதுவொன்றோ உறக்கத்திற்கு மிகு வேகமாக அழைத்துப் போனபோது மின் விசிறியின் இறைப்பு வெகுதூரமாகக் கேட்டது.

மூன்றாம் கோப்பு பார்வையில் ஓடிக்கொண்டிருந்தது. செலவு இடித்தது. தொகையைப் பென்சிலால் வட்டமடித்தபோது தேநீருக்காக காலியாகிக் கொண்டிருந்தன நாற்காலிகள். இதற்காகவே காத்திருந்த மூர்த்தி நெட்டை எடுத்து கழுத்தை வலித்துக் கொள்வது போகலாமா என்பதற்கானது. என் வருகைக்காக அவன் காத்திருக்கப் போவதில்லை. அவனிடம் பேச வேண்டி இருக்கிறது. விழுங்க முடியாமல் டீயைப் பீய்ச்சிச் சிரிக்க மாட்டான். பேசவேண்டும் குரோட்டன்ஸ் குறித்து.

மூடமோ அவமோ நம்பிக்கைக் குறித்து இருவருமே கரம் கோர்த்துக் கொள்கிறதான உடன்பாடுதான். பதிமூன்று வருடங்களாக உறுத்திக் கொண்டிருக்கும் விஷயம் இப்பொழுது பொழுதையெல்லாம் பொசுக்கிக் கொண்டிருக்க பரிசீலினிப்பதில் தவறில்லைதான். பாருங்களேன் சரியாய்த்தான் போகிறது. மூர்த்தி சிரிக்கவில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று நேற்றின் குரோட்டன்ஸ் பற்றி இரண்டாம் முறையாகச் சொன்னேன். தேநீரின் கடைசி மிடறை மெதுவாக விழுங்கினான். உதட்டில் கைக்குட்டையை ஒற்றியபடி 'வேறென்ன...ம்... ஜன்னல்தானா திறந்ததுங்குறியா' என்றான்.

'ஆமாம் மூர்த்தி, உராய்வுள்ள ஜன்னல் அது. பூட்டுவதற்கும் திறப்பதற்கும் ஒரு முயற்சியே வேண்டும். இது ஒரு மாதமிருக்கும். நேற்று குரோட்டன்ஸ். என்னவோ! இல்லை மூர்த்தி?'

'ஒரு எழவுமில்லே. சாயந்தரம் பேசுவோம்.. ம்.. இந்தவாட்டி... ம்... சரி... சாயந்தரம் பார்ப்போம்!' மூர்த்திக்கும் இது ஒரு விசயமாகத்தான் இருக்க வேண்டும். தொடர்ந்து நான் கோப்புகளில் கரைந்து கொண்டிருந்தேன். 'உன் வீட்டிற்கு நான் வரப்போகிறேன்.' திடும் என காதில் அந்த குரல். கழுத்தைச் சுழற்றிப் பார்த்துக் கொண்டேன். சந்தேகமே இல்லை. அலுவலக அறைக்குள்ளும் வந்து விட்டது அந்த குரல். சங்கடமில்லாமல் வியர்த்துக் கொட்டியது.

வழக்கமாக கேன்டீனை நோக்கி கடந்து கொண்டிருப்பதாக நினைத்த மூர்த்திக்கு என்ன என்று இருக்க வேண்டும். நான் அவனைப் பார்த்தபடி நெருங்கினேன். 'மனசு சரியில்ல. ஆவ் டே போட்டுட்டேன். கிளம்பறேன். ஆறுக்கு நீ பார்க் வந்துடு' என்றேன்.

'குழப்பம் ஒண்ணுமில்லியே' என்றான். நான் சிரித்தபடியே அவனைத் தாண்டிவிட்டிருந்தேன்.

முதல் காரியமாக பிரபஞ்சிக்கு S.T.D. போட்டேன். பேசியை எடுத்தது வழக்கமான பூஞ்சோலைதான். A ஜோக் ஒண்ணு என்றாள். பொறுமையாக கேட்டுக் கொள்ளாவிட்டால் இன்டர்காமை போட்டுத் தரமாட்டாள். தெரிந்த ஜோக்கை வலிக்க வலிக்க பெரிசுபண்ணி உடைப்பதற்குள் 'நான் கர்ப்பமா இருக்கேன் அப்பாஉன்னுவா அவ' என்றேன்.

'அப்பா சாமீ... இரு உன் லைனை கொடுத்திடறேன்' என்று ட்ரை செய்தாள். சிட்டுக்குருவி கூவிக் கொண்டிருந்தது. பூஞ்சோலை 'கட் பண்ணிட்டு கூப்பிடுங்க. வ்ரி லைன் பண்ணச் சொல்றேன்' என்றாள். லைன் கிடச்சதே பெரிசு, வெயிட் பண்றேன் கூப்பிடுங்க என்றதற்கு ஒரு ம்க்கும் கொட்டினாள். மீண்டும் சிட்டுக்குருவி கூவிக்கொண்டிருந்தது.

சிட்டுக்குருவி கூவுவது நின்று பிரபஞ்சி 'ஹே லூசு' எனும் தருணத்திற்கு காத்திருந்தபோது 'உன் வீட்டிற்கு நான் வரப்போகிறேன்' காதைவிட்டு தொலைப்பேசியை இரண்டடி நகர்த்தி படபடப்போடு பார்த்தேன். தூரத்திற்கு ஒரு நாள் அலைக்கழிக்கிற குரல் இப்போது விடாப்பிடியாக பற்றிக் கொள்கிறது பயமாகவும் இருக்கிறது. மீண்டும் தொலைப் பேசியை காதிற்குக் கொடுக்கச் சுணங்கிக் கொண்டிருந்தேன். எதிர்முனையில் குரல் வற்றி தொலைபேசி சாய்க்கப்பட்டிருக்குமோ? காதிற்கு கொடுத்தேன். நினைத்தது நடந்துவிட்டது.

பழுக்கிற வெய்யிலில் உடல் வற்றி உப்பு தேங்கியபோது மயக்கம் சுழற்றியடித்தது. மாரியம்மன் கோயில் சந்தை தாண்டிவிட்டால் குட்டியப்பா கடையில் சாப்பிட்டு விடலாம். ரெண்டாவதாக உண்மையில் சாப்பிடுகிற மனநிலையில் இல்லை. அந்த அமானுஷ்ய குரல்



படிப்பகம்

www.padippakam.com

இதுவரையிலான வாழ்க்கையை பிசிறில்லாமல் போய்க்கொண்டிருக்கும் இப்போதைய சந்தோசங்களைப் புரட்டிப்போட்டு கடித்துக் குதறி திக்குமுக்காட வைக்கிறது. ஏதோ ஓர் கணத்தில் கருப்புக் கப்பிப் போன கிழிந்த நைந்த உடையோடு உடலோடு தெருத்தெருவாக நான் அலைந்து கொண்டிருக்கிற பிம்பம் மனசுக்குள் வந்து போகிறது. பிரபஞ்சியின் குரலைக் கேட்டால் மட்டுப்படுவேன்.பூஞ்சோலையிடம் யார் என்ன என்று கேட்டு இந்நேரம் அலுவலகத்திற்கு அடித்து லிவு என்றால் குழம்புவாள்.

ஹே..ட்ட்ட்ர்ர்ர்... ஸஸஸக்க்க... சட்ட் சாலையில் அழுந்தி வழுக்கி மாருதி நின்றது. இப்போது மாருதிக்குள் அவர்கள் முகத்தைப் பார்க்கக்கூடாது. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே தாண்டிவிட முயற்சித்தேன். 'பாத்து போகலாமில்ல. அடிக்கிற வெய்யிலுக்கு நடு ரோட்டுலயா நடந்து வாறது.' பூக்கடைக்காரனாகத்தான் இருக்க வேண்டும் என் மூளைக்குள் புழுவைப் போல நெளியும் அந்தக் குரலை எடுத்து வீசிவிட முடியாதா...

மூர்த்தி வீட்டிற்கு வந்தபோது ஏழு ஏழரை இருக்கலாம். 'டே நான் பாட்டுக்கு - பார்க்குல...'காய்ந்து போன உதடுகளையும் மயங்கிக் கிடந்த விழிகளையும் இந்த நேரத்தில் என் படுக்கையையும் பார்த்து பேச்சை நிறுத்திக் கொண்டான். காது மந்தமாகி கண்கள் சோர்ந்து உடம்பெல்லாம் வலியாக புரண்டு கொண்டிருந்தபோது ரொட்டியைப் பிரித்துவைத்து வறக்காப்பியை ஆற்றி ஒரு மாத்திரையை எடுத்து வைத்தான். தொண்டைக் குழிக்குள் இதமாக இறங்கியது வறக்காப்பி.

'போன் போட்டு பிரபஞ்சியை வரச்சொல்லட்டுமா'

'ந்நோ'

'அப்புறம் எப்படி உன்ன'

'ஒரு நாலரை மணிக்கு எழுப்பி விட்டுடு. ஊருக்குக் கிளம்பறேன். டூ வீலர்தானே. நீ அப்படியே வீட்டுக்குப் போயிடலாம்'

'ஏற்கனவே காய்ச்சல். ட்ராவலிங் வேறயா'

'இங்க இன்னிக்கு தங்கறதுல உனக்கு ஒண்ணும் சங்கடமில்லியே'

மீண்டும் படுக்கையில் சாய்ந்து கொண்டேன். வயிறுக்குள் உடம்பு முழுவதுமே உயிர்ச்சத்தை எடுத்து இனி தூங்கு என்று விட்டுவிட்டதாய் தூக்கத்தில் கரைந்து கொண்டிருந்தேன். ஒவ்வொரு புரள்விலும் மூர்த்தி பூதமாக அலைந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஒரு கணம் ஒரு மூன்றடி எம்பி விழுந்ததைப் போலிருந்தான். என்னால் விழிக்க முடியவில்லை.விழிக்க விடாமல் யாரோ மிருதுவாக தலை வருடிக்கொண்டிருப்பதாய் பிரமை.

சீராகப் போய்க்கொண்டிருந்தது வண்டி. தேநீர் சாப்பிடுவதற்கு கடைகள் திறக்கப்படவில்லை. பேருந்து நிலையமே போய்விடலாம் என்றான். கை காட்டி இந்த இடத்திலிருந்தே ஏறிக்கொள்ளலாம்தான். தேநீர் சாப்பிட வேண்டுமே. தொண்டை கரகரவென்று காய்ந்து கிடக்கிறது. தெரு மனித அரவமற்று இருந்தாலும் குப்பைக் கூளங்கள் வீதியில் பரவியிருந்தது. எங்கேயும் புளித்த வாசம். தலைவேறு விண்ணென்று தெறிக்கிறது. எட்டு எட்டரைவாக்கில் ஊருக்குப் போய்ச் சேர்ந்தால் வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் பிரபஞ்சி பேய் முழிமுழிப்பாள். காய்ச்சலென்றால் ட்ரான்ஸ்பரைக் குறித்து புலம்பித் தள்ளுவாள்.

வண்டியின் பக்கக் கண்ணாடியைப் பார்த்து 'மப்ளரை வாய்க்கும் இழுத்துக் கட்டுடா' என்றான். வண்டி சீராகப் போய்க்கொண்டிருந்ததை கழுதையொன்று குறுக்காக வந்து கெடுத்தது.

'எனக்கும் ஒண்ணும் பிடிபடலடா. நீ சொன்னமாதிரி என்னவோ உன்னச் சுத்தி இருக்கிற மாதிரி இருக்குது. நைட்டு எனக்கே என்னவோ மாதிரி இருந்தது. என்னன்னு சொல்லத் தெரியலை. என்ன மயிருன்னு கதவ திறந்து வச்சு நின்னேன். கடைசியா படுத்து நல்லா பத்து நிமிஷம் தூங்கியிருப்பேன். யாரோ எழுப்புன மாதிரி இருந்துச்சி. முழிச்சுப் பாத்தா கதவுக்கு வெளியே என்ன யாரோ புடுச்சு இழுக்கிற மாதிரி. என்ன மயிருன்னு எந்திரிச்சு நின்னாலும் கடைசியில தொபீர்ன்னு படுத்துட்டேன். நான் என்ன நெனக்கிறேன்னா நீ சொன்ன கதைகள்தான் என்னையும் பிரமை பிடிக்க வச்சுருச்சின்னு. அதே மாதிரி நீயும் உன் பிரமையிலேயே வாழ்ந்துட்டு இருக்கே.அதுவே உனக்கு நெசமாத் தெரியுது. வேறென்ன சொல்றது.. ஒரு சைக்யாட்ரிஸ்ட்ட பாக்கலாம். முதலில் ஊருக்குப் போயிட்டு வா. ஒய்ப் கிட்ட எதுவும் சொல்லாத. பாவம் அங்க அவங்க தனியா இருக்கிற வங்க?'

பேருந்தில் சீட்டைப் பிடித்து மப்ளரை இறுக்கிக் கட்டி கண்ணை மூடும்போது 'சரி நான் போகுட்டா' என்றான். தலையசைத்தேன். ஊது பத்தி கமழ்வுடன் பேருந்து புறப்பட்டது. 'படைத்தானே... படைத்தானே.' டிஎம்.எஸ்ஸில் வண்டி. நடத்துநர் வந்தபோது பாட்டுச் சத்தத்தை குறைக்குமாறு கேட்டுக் கொண்டேன். அவர் டிக்கெட்டை மட்டும் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். சில்லரை பாக்கியை இப்போதே கேட்பதா என்ற குழப்பத்திலிருந்தேன். மூர்த்தியாக இருந்தால் நாலணாவா இருந்தாலு எவன்டா கொடுப்பான் என்பான். குளிர் முள்ளாய்க் காற்று. நெஞ்சுக் கூட்டுக்கு கையை மடித்து கொடுத்த போது பேருந்தின் குலுக்கல் கண்ணை அமர்த்தியது. சில்லறை அரோகரா.

❑❑❑

முகுந்தனையும் வசந்தனையும் இந்தமுறை பார்த்துவிடுவது என்பது ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்றுதான். எனினும் வீட்டிற்குள்ளேயே வளைய வருதலில்தான் பணிக்கப்பட்டிருந்தேன். பிரபஞ்சி அடுத்த முறை வரும்போது எல்லோரையும் போய் மாங்கு மாங்கு என்று பாருங்கள். யார் வேண்டாம் னது என்கிறாள். விடிந்தால் திங்கள். அவள் முகத்தை முத்த மிட்டு விட்டு கதவினை வெறுமனே சாத்தி வெளிவிளக்கை அணைத்து கூர்கா விடம் தலையாட்டி காலை நீலம் பாரிப்பதற்குள் பஸ் பிடித்து போயாக வேண்டும். ஆகக்கூடி இந்த முறையும் நடவாது அளாவல். வசந்தனுக்கு போன்போட்டபோது வெளியூரில் நாடக நிகழ்விற்கு



படிப்பகம்

www.padippakam.com

சென்றுவிட்டதாக தகவல். வந்த பிறகு பார்க்கும் ஆவலை பூட்டிக் கொண்டேன்.

படித்துக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் பட்ட மரங்களை புகைப்படம் எடுப்பதற்கான வசந்தன் முயற்சி கடைசிவரையிலும் நடக்காமல் போய்விட்டது. இப்படித்தான் அவன் திருமணத்திற்கு புகைப்படக்கருவி வாங்க நான் முயற்சித்ததும். எந்த வகையிலும் அவனூடான பிரேமை அணுகாம விருப்பதற்குக் காரணம் உணர்ச்சி சார்ந்த அவன் செயல்களே. தூக்கி எறிகிற அவனுடைய பிம்பங்களுக்கு நடுவில் ஊற்றாய் ஒரு இழையாய் ஈரமாய் அவன் பிம்பம் அணைத்துக் கொள்ளுதலும் உண்டு. சுயம் என்ற சிக்கலின் நடுவே புரிதல் என்ற வலைகளின் நடுவே ப்ரியமானவர்களாகவே மழைவடிந்த பாதைகளில் திடீரென முன்னகர்ந்து மரக்கிளைப் பிடித்து தொங்கி மூச்சு அறுபட நீரைத் துளிர்ப்பான். மரங்களினூடான சூரியக் கதிர்களை விரல்களின் கட்டத்தால் அடக்கி 'இப்படி ஒரு ஷாட் எடுக்கணும்' என்பான். கொடைக்கானல் பில்லர் ராக்கில் ஐந்திலை கொண்ட ஒற்றைப் பூச் செடியில் மகேஸ்வரி, செல்வா, வசந்தன், சந்திரசேகரன், செய்னம்பு பர்வீன் பெயர்களை எழுதிக் கொடுத்த போது இன்னும் திருமணமாவதற்கு முப்பது நாட்களே அவனுக்கு இருந்தன. தாயம்மாள் அறவாணன் இப்போது திருமணம் எதற்கு என்ற போது அவன் முகம் சுருங்கி விட்டது. இப்போது ஒன்றோ, இரண்டோ குழந்தையா அவனுக்கு? ப்ச்.. இந்த முறையும் அவனைப் பார்க்க முடியாமல் போய் விட்டது.

ஜன்னலின் திரைச்சீலைகளை விலக்கிவிட்டு வெளியுலகை அவதானிப்பதற்குள் முற்பகலின் வெப்ப இதத்துடன் கண்ணாடியை தழுவிக்கொண்டிருந்தது பூஞ்செடி. ச்சே எப்படி இரண்டு நாட்கள் இதுகளை மறந்துவிட்டேன்? விடுவிடுவென நகர்ந்து கதவை ஒருக்களித்துவிட்டு வலதுபக்க தோட்டத்திற்குள் கால்வைக்க மிக லகுவான மண் ஸ்பரிஸம் முன்னிரவு மழையைச் சொல்லியது. கைக்குள் சிக்கியவைகளை தழுவிக் கொடுத்தபடி உள் நுழைந்தால் பூ மணங்களின் கலவை மூக்கை நெருடி புது உலகின் மயக்கங்களுக்குள் இழுத்தது.

'உன் வீட்டிற்கு நான் வரப் போகிறேன்' மிக அருகாமையில் அதே பழைய குரல். இந்த முறை அந்தக் குரலுக்காக நான் அதிக கவனம் செலுத்தத் தயாராக இல்லை என்றாலும், இந்த இடத்தில் அந்தக் குரலை நான் கேட்பது புதிது என்பதால் கதவை நினைத்துக் கொண்டேன். தாழ்ப்பாள் போட்டு வந்திருக்கலாம் என்று யோசித்தபோது அது சரியாக இருக்க முடியாது என்றும் தோன்றியது. மீண்டும் அந்தக் குரலைக் கேட்டால் என்ன செய்வது என்ற சிந்தனைகள் இன்னும் நாற்பத்து மூன்று கிலோ மீட்டரில் வடக்குப் பக்கம் நுழையும் சின்னமலை கிராமத்தை நினைவூட்டியது. 'சூலியாத்தா' மிகவும் சக்தி வாய்ந்தவளாகவே கருதப்படுகிறாள். தேய் பிறையைத் தொடர்ந்து அமாவாசைக் காலங்களிலான அவள் வாக்குச் சாதுர்யமே பலன் தரக்கூடியது என்பார்கள். கும்மிடித் தேங்காயும், குங்குமம் மஞ்சள் கலந்த அரிசி கால்படியும், ஒரு பக்கா நெல்லும், எலுமிச்சை, கற்பூரம், ஊதுவத்தி என அவரவர் விருப்பங்களுக்கு ஏற்ப பிறகெதையும் கொண்டு செல்லலாம். தங்கக் காசு மாலையை யாரோ கொடுத்ததும் உண்டு.

இப்போது அங்கே தார்ச் சாலை பாய்ச்சப்பட்டிருக்கலாம். வாகனங்கள் இறைந்து கிடக்கலாம். முன்னம் அப்படி இல்லை. வயக்காட்டு மண்ணில் பொடிசுட ஐந்து பேர் ஆறுபேராக வருவார்கள். வருகிறவர்கள் எந்தத் தடங்களுமின்றி பிரயாணப்பட்டு நேரே 'சூலித்தாய்' குடில் பக்கம் போய்த்தான் நிற்க வேண்டும்.முதலில் வாசல் ஓரமாக நிற்கும் கலனில் தண்ணீர் மொண்டு தலைக்குத் தெளித்து, காலுக்கு ஊற்றி, சிறிது வாய் நனைத்து, தூணுக்குப் பக்கமாக இருக்கிற விபூதியை இட்டுக் கொண்டு கூரையை இடித்துக் கொள்ளமல் தலைவணங்கி உள்ளே நுழைய வேண்டும்.

வாக்குச் சொல்ல விசேஷமாய் தேர்ந்தெடுப்பாள். குங்குமத்தில் தோய்ந்த துண்டு எலுமிச்சைகளை விசிறுவாள். யார் மடியில் விழுகிறதோ அவர்களுக்கு அருள்வாக்கு. முந்திரிக்கொட்டைத்தனமாக அதைப் பிடித்துவிடக்கூடாது. கேட்கிறவர்களுக்கு கேட்க கேட்க அழுகையும் பவ்யமும் கூடிவிடும். சட்டென அவர்களுக்குள் பூடகமாகவே சம்பாஷணை நடக்கும். முடிவாக நெடுஞ்சாண்கிடையாக விழுந்து திரும்பிப் பார்க்காமல் செல்லவேண்டும்.

'சூலித்தாய்' அப்பா முணுமுணுத்துக் கொண்டிருப்பார். ஒரே ஒரு முறை நான் சென்றிருக்கிறேன். மற்றபடி நான் குழந்தையாய் இருக்கும்போது ஒரு முறை தூக்கிச் சென்றார்களாம். இறுதி வரைக்கும் எனக்கு நையாண்டிச் சிரிப்புத்தான். ஓலமும், தடபுடவும், ஆங்காரமும், அவ்வப்போது பயமும் ஒட்டிக் கொள்ளும்.

இருந்தாலும் எனக்கு முகம் ஞாபகம் இல்லாத அக்கா சாவிற்காய் அப்பா இன்னும் படாதபாடாக பழிதீர்த்துக் கொள்வது எதற்காக என்று தெரியாமலும், அதுவே பாவமாக மாறியும் அப்பா முகத்தை பார்த்திருப்பேன். அப்பா வாக்குப் பெற இருட்டாகிவிட்டாலும் சூலித்தாயின் அன்னதானம் அந்த இரவு வெளிச்சத்தில் கூடவே தெம்பாகத்தான். மற்றபடி அப்பா இழுத்து வைத்துக் கட்டியக் கருப்புக் கயிறில் இல்லை என்பது என் நிச்சயம்.

விடுதிக்குப் போய்ச் சேர்ந்த போதுதான் வசந்தன் லெட்டர் ரைட்டு வாங்கினான். 'தீசியஸ் முடிக்க இன்னும் ஒரு மாசம்தான் இருக்கு. நீ என்னடான்னா மாய மந்திரம்ன்னு அலையற.. இந்தக் காலத்துல இதெல்லாம் விளங்குமா.'

இத்தனைக்கும் வசந்தன் இரண்டு முறை போய்வந்ததான செய்தி எதற்கென்று தெரியாது. கேட்டால் அவனைப் பொறுத்தவரை அது ஒரு பெரிய விசயமாக இல்லாத தாய் நழுவிவிடும். 'சூலித்தாய்.. சூலித்தாய்'.

விசுக்கென்று பூந்தோட்டத்தில் யாரோ கால்பரவி ஒளிந்த மாதிரி. என்னைத் தாண்டி யாரோ



படிப்பகம்

www.padippakam.com

சென்ற மாதிரி. 'உன் வீட்டிற்கு நான் வரப்போகிறேன்' மிக மிக அருகா மையில் காதிற்குள்ளா...முளைக் குள்ளாக அந்தக் குரல். கூடவே அதன் பெருமூச்சு.

சாம்பார் சாதமும் தகைந்த நெல்லி ஊறுகாயும் மதியத்தை குட்டியூண்டு தூக்கத்தில் ஆழ்த்தி யது. தூக்க நெளிப்பிலேயே மெல்ல நெருடும் மல்லிகைக் கமழ்வு. வலது பக்கமாகப் புரளும்போது அறை யொலிப்பான் கத்துகிறது. எழ நினைத்தாலும் கட்டுண்டுக் கிடக் கிற உடம்பு. காதை அறுக்கிறது அறையொலிப்பான். நன்றாகவே விழித்துக்கொள்ள முடியும் என் றும் அப்போதே கதவைத் திறந்து விட முடியும் என்றும் முயற்சிக்க முயற்சிக்கக் கதவைத் திறந்திருந் தேன். வெளியே வெயில் பளீரித் துக் கூசியது. இமைகளைக் குறுக் கிப் பார்த்தேன். இரண்டு படி கட் டுகள் கீழாகத்தான் அவள் நின்றி ருந்தாள். வெளியே காக்கை குஞ்சு கள் கிடையாது.

'யார் வேண்டும்'

என்னையே உற்றுப் பார்த்தி ருந்தாள். அவள் கண்களின் மினுக் கலும் ஆதுரமான ஒரு சிரிப்புப் பவிசும் நிச்சயம் பண்ணி இந்த வீட்டிற்கு வந்த மாதிரிதான் இருக் கிறது.

'ஏங்க யார் வேணுன்னு கேட் டேன்'

தொடர்ந்து அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். மீண் டும் வெளியே பார்வையை வீசி னேன். யாருமில்லை. நாக்கில் ஈரம் உலர்ந்துவிட்டது. அவள் அப்படி ஒரு ஆதுரமான சிரிப்பைக் கொண் டிருந்தாள். தொடர்ந்து வலைக ளெல்லாம் அறுந்து இன்மைக்குள் மிக வேகமாகச் சுழல்வது போலி ருந்தது.

தலையைத் திருப்பி உள்வீட் டைப் பார்த்தபோது வெகு சுளிவாக அவள் வீட்டிற்குள் நுழைந்திருந் தாள்.

காங்கிரிட் வீடும் உயர்ந்த ரக மரப்பலகைக் கதவுமானது கூரை யால் வேயப்பட்ட வீட்டின் கதவாக என் பிடியில். 'இந்தக் கதவுலயே காலவச்சு ஆடி ஆடி வீட்டத் தேய்க் கப் போற' அப்பாவின் பலமான கொட்டு மண்டைக்குள் யங்ங்ங் கென்று பிறந்தது. வாசலில் ராகி யைப் புடைத்துக் கொண்டிருந்த அம்மா என் அழுகையை நிறுத்த ஓடிவருகிறாள். இதே கதவைத் திறந்து இடுங்கியிருந்த என்னை பற்றி இழுக்கிறாள். 'ஏஞ்சாமியில்ல' அம்மா தலையைத் தேய்த்து விடுகி றாள். பக்கத்து உள் அறை மரத் தடுப்பில் யாரோ பலகைக்கண் வழியாகசுவாசிக்கும்மூச்சு. எல்லாமே கலைகிறது. இதோ காங்கிரிட் வீடு. சமையலறைக்குள் அவள் புகுந்த பொழுது நடப்பதின் பிடிமான மற்றுச் சோபாவில் சரிந்தேன். இந்த இடத்தில் பழைய வீட்டில் என்ன இருந்தது? யோசித்தேன். உள்ளே அவள் பாலை ஆற்றும் சப்தம். கடக் கடக். தொண்டைக் குமிழின் சப்தம். அம்மா, சாணத்தால் வீட்டை மெழுகியிருக்கிறாள். வேக வைத்த நெல் கொட்டப்பட்டிருக் கிறது. அளைந்து அளைந்து அதில் விளையாடுகிறேன். பாட்டி கூட இருக்கிறாள். அவள் எப்போது வந் தாள்? தாத்தா ஏன் காணவில்லை. நெல்லை வீடு முழுக்க இறைத்து விட்டேன். மரப்பலகைத் தடுப் பினுள் நெல்லெடுத்துப் போட் டேன். உள்ளே கருப்பு நிழலொன்று முன்னேறியது. திரும்பிப் பார்த் தேன். அம்மா பாட்டி இருக்கிறார் கள். பயமில்லை. பலகைக் கண் வழியாக உள்ளே பார்த்தேன். உள்ளே இப்போது ஒன்றும் தெரியவில்லை. வெள்ளையாக என் கண்முன் உருண்டையாக ரோமங்கள் பலகைக் கண்ணில் துருத்தித் தெரிய.. அம்மா என்னைப் பார்த்ததும் பாத்திரத்தை அப்படியேப் போட்டு விட்டு உள்ளே ஓடிவந்தாள். அவள் நெஞ்சுதிக் திக் எனக்குக் கேட்டது. பலகைக் கண் ணிலிருந்து ஏதோ நகர்ந்தது.

'இந்தப் பக்கம் வரக்கூடா துன்னு எத்தனவாட்டி சொல்றது... ம்... எத்தன வாட்டி சொல்றது... வருவியா... சொல்லு வருவியா' கைப்பட்டைகளில் மாறி மாறி அறைந்தவள் முடிவாக கையிரண் டையும் பிடித்துக்கொண்டு கன்னங் கன்னமாக அறைந்தாள். மீண்டும் அந்த பலகைக் கண்ணில் நிழல் நிரம்பி தப்தப்பென்று அறைந்தது. பெருமூச்சும் அடங்கின குரலும் ஹீனமாய் ஒலித்தது அதற்குள். இதைப் பார்த்ததும் 'ஐய்யோ நா என்ன பண்ணுவேன்னு தெரிய லியே.. அடி ஆத்தா சூலி.. நீ தான இப்படி இருக்கச்சொன்னே. இப்ப இவனால எல்லா வினையாகிப் போகும் போல இருக்கே.. ஐய்யோ நான் என்ன பண்ணுவேன்னு தெரி யலியே' அம்மா கத்தினாள். அதற்குள் பாட்டி கிடாரியைப் போல் மூர்க் கங் கொண்டு உள்ளே வந்தாள். கற்பூரத்தைக் கொளுத்தி ஒரு கருப் புக் கயிறை அதில் வாட்டி போ... போ... வராத... என்ன வேணும் உனக்கு என்று மரப் பலகைக் கத வைத் திறந்து சூடங் காட்டின படி உள்ளே போனாள். உள்ளே இருந்து குப்பென்று ஒரு வாசம். அடங்க மறுக்கும் பலகீனமாக குரல் உள்ளே அதிர்வு கூட்டி ம்ம்ம்.. ம்ம்ம்.. என் றது. அம்மா என்னைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினாள். பாட்டி வெளியே ஓடிவந்து விளக்கு மாரைத் தேடித்துழாவி எடுத்துப் போனாள். என்னைக் கீழே இறக்கி விடவில்லை. கிளியொன்று பனை மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. அப்பா வந்ததும் அம்மா என்னதோ பேசி அழுகிறாள். அப்போது கிளி இல்லை.

அம்மாவின் இடுப்புச்சூட்டில் தொடை கந்தியிருந்தது. நான் இறக்கி விடச்சொல்லி அழுதபோது பாட்டி வாங்கி இருக்கிக் கொண்டாள். பாட்டி விளக்குமாறில் ஓட்டியதாக அம்மா சொன்ன போது அப்பா தாம்தூம் என்று குதித்தார். குதித் தவாக்கில் வீட்டிற்குள் ஓடினார். நான் கிணத்துப்பக்கம் பார்த்தேன். எப்போதும் நான் துரத்தும் அணில். கீழே இறக்கி விடச்சொல்லி அழு தேன். கன்னத்தில் ஒன்று போட் டாள் அம்மா. அணில் ஓடிவிட்டது. அப்பா தலையைக் கவிழ்த்து வெளியே வந்து கேவினார். 'சூலியாத்தா' வானைப் பார்த்து அழுதார். அம்மா மார்பி லடித்துக்கொண்டு உள்ளே ஓடினாள். ஊர்சனம் கூடி விட்டது. எனக்கு பசி. யாரோ என்னை தொட்டிலில் போட்டு விசையாக ஆட்டினார்கள். இந்த மண்வீடுதான் அது. இறுதிவரை அக்காவின் முகத் தைப் பார்க்கவில்லை. எதிரே இருக்கும் மரப்பலகை காங்கிரிட்



படிப்பகம்

www.padippakam.com

டாக மாற்றமெடுத்தப்போது எதிரே அவள் கண்கள் பணித்து நிற்கிறாள். இரு கரத்தையும் நீட்டி வாவென்று அழைக்கிறாள். நான் சோபாவில் இன்னும் வசதியாக சாய்ந்து கொள்வதாக உடம்பைக் குழைத்துக் கொள்வது சரியா. ஒரு ஐந்து நிமிடம் அவளுக்கும் எனக்கும் இதே போக்கு. முடிவாக டீபாயின் மீதிருந்த புத்த கத்தைப் புரட்டத் துவங்கினேன்.

அம்மா அப்பா பாட்டி எல்லாம் இதே வீட்டில்தான் நிகழ்ந்துவிட்டது. ஆனால் அக்காவைப் போலல்ல. எல்லாம் சிண்டும் சிடுக்குமாக நின்றுவிட்டபோது வசந்தன்தான் லோனுக்கு அப்ளை செய்யவைத்து இவ்வீட்டை முடித்துக் கொடுத்தான். ஏனோ தானோ என்றிருந்தவனிடம் மாமா அத்தை விலகிக் கொண்ட பிறகு சாதியாவாது... என்று பிரபாவதியை முடித்துக் கொடுத்தான். உண்மையில் என்னை கரையேற்றிவிட்டதாக வசந்தனுக்கு. ஆனால் என்னுலகத்தில் பழைய முடிச்சு. உளவியலா... இயல்பா என்று அனுக முடியாத பிரபாவதியை சிரித்துக்கொண்டே பார்க்கிறபோது 'போடா பண்ணி' என்பாள். வசந்தனுக்கு மெத்த சந்தோசம்தான். ஆனால் குற்றங்குறை அடுக்குவான். முஞ்சியிலடிப்பான். நான் புரிதலைமுடிபோட்டு வைத்திருக்கிறேன். நான் பாட்டுக்கும் பேசிக்கொண்டிருக்கிறேன். பேச்சிலிருந்து எல்லாரும் பிசிறை எடுத்து நீவிவிட்டு காட்டிச் சிரிக்கிறவர்களுக்கு மத்தியில் மீண்டும் புரிதலை பத்திரப்படுத்துகிறேன். பிரபாவதி இங்கேதான் தடுமாறுகிறாள். நானும் இப்படித்தானிருக்கிறேன். 'பழகாதே. பாதிக்கப்படாதே' என்னுடைய கையிருப்பு மந்திரங்கள் தவிடு பொடியாகின்றது. படுபட்டுத்தொலை - கண்ணாடியைப் பார்த்து துப்பலாம்.

இப்படியிருந்தால் உன்னதமான உறவுகளை இழந்து விடுவாய் என்கிறான் மூர்த்தி. உறவுகள் திருப்தியளிப்பதாய் எனக்கு நம்பிக்கையில்லை என்பேன் நான். எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளுமளவுக்கு இங்கே எதுவுமில்லை. பேசப் பேச உதடுகளில் சிரிப்புத் தேங்கும் எதிர்முகங்கள் என்னை பய முறுத்துகின்றன. தேவையான சமயத்தில் அதுவே அவர்களுக்கு கேடயங்களாக மாறிப்போகின்றன. நான் இப்படியே இருந்து விடுகிறேன் மூர்த்தி. உன்னால் தொடர முடிந்தால் தொடர். பிரபாவதியிடமும் இப்படித்தானா என்பான் மூர்த்தி. எனக்கு அவள் பெயர் பிரபஞ்சி என்று அவனுக்கு ஞாபகப் படுத்தத் தோன்றிது. அது ஒருஸ்பரிஸமானபொழுதில்நிகழ்ந்து விட்ட பெயர். நான் விட்டுவிட்டேன். தெரியாது என்றேன். சரி விடு. பியர் சாப்பிடலாம் என்பான்.

இனி என்ன வேண்டுமானாலும் நடந்துவிடலாம். எதிரே இருந்தவள் நகர்ந்து உள்ளறைக்கு போய்விட்டாள். மிகச் சொற்பமான கணங்களே எனக்கு இருப்பது போலிருக்கிறது. நினைவு கூறல்கள் மூலமே இக்கணத்தில் வாழ்வை அனுபவிக்க முடியும். இல்லாவிட்டால் இவளால் பைத்தியமடைவேன். இன்னுங் கொஞ்சநேரத்தில் இரத்தம் குதற இங்கே கிடக்கலாம். நாளைய தினசரிகள் கொலையா தற்கொலையா என்று யோசிக்கலாம். பிரபஞ்சியை நினைத்தால் தான்.. பிரபஞ்சி எப்படி வைத்தேன் அந்த பெயர். அவனால்தான். ஒரு வருடமிருக்கும் திருமணம் முடிந்து. இன்னும் இறுயோடிவிடாத மன பிசகல்கள், புரிதல்கள் எனக்கும் அவளுக்கும். யார் நடிப்பது என்ற பிரச்சினை இருவருக்கும். ஒவ்வொரு செயலிலும் இயல்பைத் தேடும் அவள். உளவியலைத் தேடும் நான்.

நான் எதுவும் பேசாமலேயே ஒரு யோகியைப் போல் நின்றிருந்தான் அவன். போதையின் விளிம்பிலும் அப்படியொரு நிதானம். வேறோரு உலகத்தில் இருந்தபடியே எனக்கு தரிசனம் கொடுத்திருப்பதாகச் சொல்லிச் சிரித்தான். அழைக்காமலேயே உள்ளறைக்கு வந்து நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்திருந்தான். என்னோடு படித்த முகம இது?. அவனை ஊடுருவ அவன் அனுமதிப்பதில்லை.

'சந்தேகம் எதற்கு? நான் அதே நான்' என்றான்.

எனக்கு திடுக்கிட்டுப் போய் விட்டது. பார்வையைப் படிக்கிறவன் இவன்.

'ஆனாலும் புரிதல் மா பிரச்சினை. எல்லோர்க்குமான திருப்திகளை ஆற்ற முடியாது. அதைத் தயாரித்துக் கொடுக்கும் கடவுளும் புரட்டிப் போடப்பட்டுவிட்டது. மனிதத்திலிருந்து எழும்ப வேண்டியவைகளுக்கு ஏராளமான குறுக்குச் சுவர்களை கட்டி வைத்துள்ளார்கள். இன்னும் கட்டுவார்கள். எழும்ப இடமே இருக்காது. அப்போது நீ கட்டளைப்படி மட்டுமே வேலை செய்வாய். எனக்குப் பொறுமையில்லை. என்னால் முடியவும் முடியாது. நான் இப்போதே ஒவ்வொரு சுவராக ஏறிக் குதித்துக் கொண்டிருக்கிறேன்... மன்னிக்க வேண்டும். இந்த பாட்டிலைராவாக் அடிக்கும்போது நீ வாந்தியெடுத்து விடாதே.'

வாயில் வைத்த பாட்டிலை காற்று குடிகுடிக்க கடக்கி முடித்தான். எனக்கு உமட்டியது.

'நான் சொல்லுவதை உன்னால் எழுதமுடியும்' என்றான். என் டைரிதான் பக்கத்தில் இருந்தது.

'உண்மையும் பொய்யும்
ஒரே ஊற்றுக்கண்ணில்தான்
இரவையும் பகலையும்
இரு இலையாய் பரப்பி
ஒன்றிலிருந்து ஒன்று பிறக்கும்
அத்தருணங்களில்
உன் உடலில்
தணிந்திருக்கிறேன்
அவ்விடத்தில்
நீரும் நெருப்பும்
ஒன்றாக உண்ணுகிறேன்.'

- வேறு எதையாவது சொல்லுவானோ?

நிமிர்ந்தபோது வாசலைத் தாண்டிவிட்டான் அவன். அவன் இப்படித்தான். பொசுக்கென்று வந்து போய்விடுவதும் நான்கு நாள் பேரா போடுவதும்..

பிரபாவதி ஹால் லைட்டை போட்டபோது நுணுகிய டைரிப் பார்வையை அவள் மேல் வீசினேன்.

'ஆறரை ஆச்சுப்பா என்ன செய்யுற.. ஓஹ்ஹோ.. கவிதையெல்லாம் எழுதிவியா.'

மனசுக்குள் அவன் சிரித்து 'உஷ்' என்றான்.



படிப்பகம்

www.padippakam.com

'எப்பவாவது' என்றேன்.

அவள் டைரியை வாங்க முயற்சித்தாள். மேலே பிரபஞ்சி என்று போட்டுக்கொடுத்தேன்.

'யாரு'

'நீ தான்'

'ஏன்'

'இனிமே நாம புதுசு.'

பிரபாவதி அப்போதுதான் பிரபஞ்சி ஆனாள்.

பிரபஞ்சியால் பூத்துக் குலுங்கிய இவ்வீடு... இனி என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். சாவு என்பது இப்படி குழப்பகரமாக அமைவதில்தான் எனக்கு உடன்பாடில்லை. ஒரு ஆக்ஸிடென்ட். அட்டாக். இப்படி குத்துப்பட்டு இரத்தம் சொட்ட சொட்ட போகக்கூடாது. இப்படித் தெளிவில்லாமல் போகக்கூடாது. உள் வீட்டில் நுழைந்த அவள் என்ன வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டு வந்து நிற்கலாம். அக்காவின் பழைய வாழ்க்கைக்கு நானும் உடந்தை அறிந்தோ அறியாமலோ. அதே மாதிரி அவள் இறப்புக்கும். ஆனால் அக்கா உனக்கு ஒன்று தெரியுமா. நான் உன் முகத்தையே பார்த்ததில்லை. ஆமா நான் கேட்காத கேள்வியைப் பிரபஞ்சிதான் வசந்தனிடம் கேட்டாள்.

'அக்காவை... செத்துப்போன அக்காவை கூட அவங்கப் பாக்க வைக்கலியே'

'அது ஒரு மூடத்தனமான நம்பிக்கை. பிறப்பிலேயே அது கல்லு மாதிரி ஒரே எடத்துல கிடக்கும். ஒரு வார்த்தை வராது. அப்பப்ப அழுகும்னு சொல்லுவாங்க. என்னப் புரிஞ்சுதோ என்னத் தெரிஞ்சுதோத் தெரியலை. வளர வளரக் கொஞ்ச சொஞ்சமா நகரும். அந்தப் பிள்ளைக்கு அப்புறம் பன்னெண்டு வருஷமா ஒண்ணுமில்லா. சூலித்தா கிட்டப் போனபின்னாடி இவன் வாய்ச்சதாச்சொல்றாங்க. ஏற்கனவே ஆணியறைஞ்ச பேய்ன்னு ஊருச் சொல்லும். எங்க பிறந்ததும் தப்பிப்பிருமோன்னு கண்ணுல காட்டாமயே'

'அக்கா தற்கொலதான் செஞ்சுக்கிச்சா'

ஆமாம்: எல்லாம் இதே வீடுதான். இதில் எந்த மூலையில் அவள் இருந்திருப்பாள்? அரவமற்ற வீடு. நடந்து முடியவேண்டியவைகள் அவ்வளவுதானா? உள்ளறைக்குள் எட்டிப் பார்த்தேன். பீரோவிலிருந்து எல்லாத் துணிகளையும் இறைத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். பிரபஞ்சியின் பாப்பாத் துணிகளை மேலுக்குப் போட்டு அழகு பார்த்தாள். பிரபஞ்சியின் அதிகபட்சமான சேட்டை குழந்தைத் துணிகளை இப்போதே வாங்கி அடுக்கியிருப்பதுதான். இருவருக்குமே எந்த குறையுமில்லை என்று நிச்சயமான பிறகு இப்படி அடுக்க ஆரம்பித்துவிட்டாள்.

இப்போது இவள் உலகம் முடியவில்லை. ஒருவேளை பலி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறதோ... பிரபஞ்சியை விட்டு விடு அக்கா... என்னை... இதோ என்னை...

நினைத்து முடித்த அக்கணம்... அக்கணமேதான். ஹாலில் நடுநாயகமாக தலைவிரித்து பூக்கள் உதிர... அடேயப்பா என்ன ஊளை அது. ஏன் பக்கத்திலிருந்து யாரும் ஓடி வரவில்லை. நிற்காத ஊளை. இதுவரை என்னை பயபித்த அதே குரல். ஊளை... மகா ஊளை. என்னைக் கலவரம் பண்ணுகின்ற என் சிந்தனை அடுக்குகளைக் கலைக்கின்ற அந்தக் குரலுக்குச் சொந்தமான ஊளை. இதோ அதே சாண நிலம். மூலையில் நெல் குவிப்பு. எங்கே அம்மா... அப்பா... பாட்டி... நான் மட்டும் நிற்கிறேன். அந்த மரப்பலகை இடுக்கு திறக்க உள்ளே கணத்த கும்மிருட்டில் இதோ இதே அக்கா. என் அக்கா இவ்வளவு அழகானவளா? இரு கரம் நீட்டிய அவளது பலகீனமான அணைத்தல். என் கையில் ஒரு குத்து நெல்.

'தம்பி. பாலக்குடிச்சுட்டேன்... வாய்க்கரிசி போடுடா... போடுடா.' குரல் சக்கரமாய் என் மூளையைக் கிளறுகிறது. என் அக்காவின் குரல் இவ்வளவு அற்புதமானதா.

குட்டியூண்டு பாதங்களால் அவள் முன் நான் நகர நகர... 'வா... வா' வெறியோடும் அன்போடும் அழைக்கிறாள்.

எங்கே என்ன குளிச்சுடு பாக்கலாம்.

என் துணிகள் கின்றன. கண்கள் சிவ.

ஊட்டி விடு.

தயிரைப் பிசைந்து கிறாள்.

என்கு காய்ச்சா.

அக்கா ஊட்டி விடறேனில்ல. உனக்கு ஒண்ணும் ஆகாது...

என்ன ஓடி வந்து பிடி பாக்கலாம்.

வேண்டாம் தம்பி. அக்காவுக்கு நேரமில்ல. அக்கானால இனி வரமுடியாது. இப்ப வாய்க்கரிசி போடு பாக்கலாம்.

போடி. என்ன வந்து புடிடீ.

வீட்டை விட்டு வெளியே ஓடி வருகிறேன். கன்னங்களில் கையை வைத்துக் கொண்டு 'ஆஹா' என்கிறாள்.

அக்கா அங்கதான் கிணறு இருந்துச்சு. அணில் எத்தன வரும் தெரியுமா.இங்க பாரேன்க்கா. இதுதான் பனைமரம்.கிளிக்குஞ்சு இருந்துச் சுக்கா. நீ செத்தபிறகு அதுவும் இங்கில்ல. இங்கதான அம்மா ராகி புடைக்கும். பாட்டி இங்கதான் நெல்லை வேக வைக்கும். அப்பா இங்கதான் கட்டில்ல கிடப்பாரு.

என்னை அப்படியே தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டாள்.

அக்கா எனக்கு முத்தம் குடேன்.

நீயி.

நானுந் தருவேன்.

ஏக்கா இறக்கி விடற.

ஏக்கா தூரமா போற.

வேணாக்கா

நீ வேணும்

ஏய் வந்து தொலைடி.

போகாதடி

நாயே பேயே என்னவுட்டுப் போகாதடி.

இனி நா பயப்பட மாட்டேன். நீ கூடவே இருடி. அக்கா... அக்கா... போவாத...

கிழக்குப் பக்கமாக நின்று ஓங்கி மண்ணடித்து சத்தியம் செய்தாள்.

திடும்மென்று உந்தினேன். கண்கள் விழித்தேன். தூர மயக்கங்



படிப்பகம்

www.padippakam.com

..எல் நிரம்பிய பிம்பங்கள். யாரது... பிரபஞ்சி... மூர்த்தி... முகுந்தன்... வசந்தன்...

பிரபஞ்சியின் இதமான சூடு விரல்களின் வழியாக எனக்குள்... வசந்தன் எல்லா பிம்பங்களையும் இழுத்துக் கொண்டு போனான். மருந்து நெடி இப்போதுதான் நாசியில்.

பிரபஞ்சி அழுதிருக்க வேண்டும்.

'ஒண்ணுமில்லடாப்பா... ஒண்ணுமில்ல... யு ஆர் ஆல்ரைட்'

மீண்டும் கண் செருகியது. நான் பிரபஞ்சியை அனுமானப் படுத்திக் கொண்டேன். அவள் கை விரல்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன். இதமான முத்தமொன்று அப்போது அவளிடமிருந்து என் விரல்களின் வழியாக...

'பிரபஞ்சி... பிரபஞ்சி' மெல்ல முணகினேன்.

'இவ்வளவு நேரம் பேசுனது போதும்பா... எங்க கொஞ்ச நேரம் தூங்கு... இதோ பக்கத்துல நான் இருக்கேன், டாக்டர் இருக்கார், எல்லாரும் இருக்காங்க... எங்க கொஞ்ச நேரம் உளறாம தூங்கு பாக்கலாம்.' ●

## சிவகாமியின் நமது (அப்னா) பஞ்சாயத்து
# தலித் விடுதலையின் புதிய பரிணாமம்!

■ மா. வேலுசாமி

நல்ல சிந்தனையாளர் 'குரல்' எல்லாம் வரலாறு ஆக மாறிவிடுகிறது என்பது உலகம் கண்ட உண்மையாகும். அந்த நல்ல சிந்தனையாளரின் சிந்தனைகள் அவர் வாழ்ந்த காலத்திலே ஒருவேளை வரவேற்கப் படாமல் போகலாம். அல்லது எதிர்ப்புகளையும் சந்திக்கலாம். எப்படியிருப்பினும் சொல்லப்படும் கருத்து காலத்தால் அழிக்க முடியாததாக இருந்து விட்டால் அவற்றை எவராலும் எந்தக் காலத்திலும் மாற்றவும் முடியாது, மறைக்கவும் முடியாது. இந்தியா போன்ற நாட்டில் மதவெறி, சாதிவெறி என்ற பாகுபாடு மிகுந்திருக்குமிடத்தில் சொல்லப்படுகின்ற கருத்து என்ன என்பதை விட சொல்கிறவர் யார், எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்துகொள்ளவே முயற்சிப்பார்கள். அத்துடன் சிறுபான்மை, பெரும்பான்மை என்று பாகுபடுத்தி மதரீதியாக பெரும்பான்மையுள்ளவர்களின் வாக்கையே பெரும்பாலும் மதிப்புறச் செய்வார்கள். அண்ணல் அம்பேத்கரும் இதற்கு விதி விலக்காகிவிடவில்லை. அன்று அவருடைய கருத்தை இருட்டடிப்பு செய்ய முயன்றவர்கள் எல்லாம் பெரும்பாலும் தோல்வியையே கண்டார்கள். இன்று அவர் இருந்தால் இப்படி விளக்கம் தந்திருப்பார் என்று கூறுமளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. இன்று எல்லா இயக்கங்களும் அமைப்புகளும் தங்கள் விளம்பரங்களில் அவருடைய திருவுருவை வெளியிடுவதும், அவர் கருத்தை மேற்கோளாகக் கூறுவதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஏனெனில் அண்ணலின் சீரிய கருத்து இந்திய சாதிய, சமய சாஸ்திர கோட்பாடுகளுக்கும் மனிதநேய மேம்பாடுகளுக்கும் வழிகாட்டிய வரலாறாகும் என்றால் மிகையாகாது என்ற கோட்பாட்டின் வரிசையில் இன்றைய தமிழக தலித்துகளின் வளர்ச்சியிலும், விடுதலையிலும் அக்கறை கொண்டு உழைக்கும் தலித் சிந்தனையாளரும், எழுத்தாளருமான சிவகாமி அவர்களின் தலித் விடுதலைக்கான புதிய பரிணாமமான அப்னா பஞ்சாயத்து (தலித்துகளுக்கான தனி பஞ்சாயத்து) என்ற (தலித்துகளின் எதிர்கால சமூக, அரசியல் விடுதலையை நிர்ணயிக்கும் ஆவணம்) ஆய்வுக் கட்டுரையும் ஏறக்குறைய அனைவராலும் மறைக்கப்படுவதற்கான உத்திகளை எதிர்கொள்வதை நாம் காண முடிகிறது. அன்று அண்ணல் அம்பேத்கர் எவ்வாறு சமகாலத்தவர்களால் புறக்கணிப்புகளை எதிர்கொள்ள நேரிட்டதோ அதே நிலையை இன்று சிவகாமியின் அப்னா பஞ்சாயத்து என்ற அறிவுபூர்வமான ஆக்கப்பூர்வமான ஆய்வுக்கட்டுரையும் எதிர்கொண்டுள்ளது. இதிலிருந்து இரண்டு புரிதல்கள் தெளிவாகிறது. அவை,

1. தலித் மக்களுக்கான உண்மையான விடுதலைக் கருத்துக்கள் 'தலித்' என்று சொல்லி அனைத்து தளத்திலும் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள முயலுபவர்களால் வேண்டுமென்றே நிராகரிக்கப்படுகிறது. உதாரணமாக தலித் பத்திரிக்கைகள், தலித் அரசியல் இயக்கங்கள், தலித் அறிவு ஜீவிகள், தலித் ஆதரவாளர்கள், அவர்களது பத்திரிக்கைகள்.

2. தலித் மக்களின் உண்மையான பிரதிநிதிகளையும் அவர்களது கருத்துக்களையும் மறைக்க முயலுதல். உதாரணமாக தலித் மக்களின் ஆய்வரங்குகளில் தங்களை தலித்துகளின் அனுதாபிகளாக காட்டிக் கொள்ள முயலும் அரசியல்வாதிகள், பத்திரிக்கைகள், ஆதரவாளர்கள் ஆகியோர் இந்த ஆய்வுக்கட்டுரைக்கு தங்களது தளத்தில் முக்கியமளிக்காமல் இருப்பது.

எதிர்காலத்தில் தமிழ்நாட்டையே பிரளயப் படுத்தும் அளவிற்கு செய்திகள் ஆவணப்படுத்தப் பட்டுள்ள இந்த ஆய்வுக்கட்டுரை தலித்துகளின் வாழ்வுரிமையை கௌரவமாக மீட்டெடுக்கும் முயற்சியின் முதல் முயற்சி. ●



படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்கக் கருவியாகும் ஊடகம்

■ தமிழில் : நிகழ் அய்க்கண்

**ஒரு நாட்டின் பலம், சுயசார்புத் தன்மை, மொழி வேறுபாடுகள் பல்வேறு கூறுகளை கவனத்தில் கொண்டு அந்தந்த நாடுகளின் அளவுக்கும், வலிமைக்கும் உகந்தாற் போன்று உலகமயமாக்கலானது தனது வேகத்தையும், செறிவையும் மாற்றியமைத்துக்கொள்கிறது.**

ஊடகங்கள் பொருளாதார - கலாச்சார ரீதியாகப் பெற்றுள்ள அதிகாரங்கள் ஒருபுறமிருக்க, மேலைக் கலாச்சாரத்தின் ஊற்றாயிருக்கிற அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் இணைந்து பின்தங்கியுள்ள நாடுகளின் மீது தங்களுடைய பொருளாதார - கலாச்சார ஆதிக்கத்தைத் திணிக்கின்றன.

பெரும்பாலான ஆய்வுகளின்படி திரைப்படங்கள், பிரசித்திபெற்ற இசை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், செய்திகள், புத்தகம், சஞ்சிகைகள் மற்றும் விளம்பரங்களையும் இவற்றோடு தொடர்புடைய வடிவமைப்புடன் மதிப்பீடுகளையும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் நாடாகவும், குறைந்த அளவில் இறக்குமதி செய்யும் நாடாகவும் அமெரிக்காவே இருக்கிறது.

அமெரிக்காவின் ஊடக ஏற்றுமதியின் அளவினைப் பார்க்கும்போது பிரேசில், மெக்ஸிகோ, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஊடக ஏற்றுமதிகள் பெருமளவில் குறைந்து கொண்டிருக்கின்றன. இதை ஆய்வாளர்கள் கருத்தில் கொள்ளத் தவறிவிடுகின்றனர். அதே நேரத்தில் அந்நிய கலாச்சார அத்துமீறல்களுக்குக் கடுமையான எதிர்ப்புணர்வு முகிழ்ந்து கொண்டிருப்பதையும் பார்க்கத் தவறிவிடுகின்றனர்.

தங்களுடைய மாதிரிகளை பிற நாடுகளில் நிலைநிறுத்தவே மேலைநாடுகள் முயலுகின்றன. வளர்ச்சியே முக்கியத் தேவையாக முன்னிறுத்தப்படுகிறது. தங்களுடைய வணிகத்தளத்தை ஒருமுகப்படுத்துவது, மையப்படுத்துவதே இதன் நோக்கம். அதுமட்டுமின்றி உலகமயமாக்கலுக்கு உறுதுணையாக ஒற்றைத் தன்மையை அதிகரிக்கும் வண்ணம் அவை செயல்படுகின்றன. இவற்றின் மூலம் பொருளாதார, அரசியல், கலாச்சார தளத்திற்குள் ஆதிக்கம் செலுத்த முனைகின்றன. பழமையான, காலாவதியாகிப் போன காலனித்துவ ஆட்சிமுறை மற்றும் தெளிவற்ற ஆட்சி முறைகளை நீக்க நவீன காலனித்துவ முறை வழி காண்கிறது.

திரைப்படங்கள், சஞ்சிகைகள், இசை ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்ற கலாச்சார தளத்தில் அதிகாரத்தைச் செலுத்துவது மட்டும் நவீன ஏகாதிபத்தியத்தின் கூறாக இல்லை. பொது வணிகம், முதலீடு, விற்பனைக் கிளைகளைத் தொடங்குவது, உள்நாட்டு ஏஜெண்டுகளுக்குச் சலுகைகள், கடன் வழங்குதல், அரசு - தனியார்களுடன் உறவை வளர்த்துக் கொள்ளுதல், பன்னாட்டு விளம்பரக் கம்பெனிகள் தங்கள் கிளைகளை நிறுவி, அதன்மூலம் நவீன உத்திகளைக் கொண்டு தங்களுடைய வருவாயைப் பெருக்குவது போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன.

நிதி உதவியளிப்பது, பன்னாட்டு நிதி மூலதன நிறுவனங்களின் மூலம் நிதி கிடைக்கச் செய்வது, பலவகைப்பட்ட துறைகளுக்கு நுண்ணறிவாளர்களை அறிமுகம் செய்வது போன்ற பணிகளை அமெரிக்காவே செய்கிறது. மேலும் காவல் பணி, இராணுவத்திற்குத் தேவையான பயிற்சிகளையும் அளிக்கிறது. தம்மைச் சார்ந்து உறவு இருக்க வேண்டும் என்பதுடன் கருத்தியல் ரீதியாகத் தனக்குச் சாதகமான தளத்தினை உருவாக்குவதிலும் அது குறியாய் இருக்கிறது.

வளரும் நாடுகளில் இருக்கும் பணக்காரர்கள் தாங்கள் கல்வி கற்க, மேலை நாடுகளைச் சார்ந்து இருக்கிறார்கள். இதன்மூலம் அதிகாரமுள்ள மேற்கத்திய கருத்தியல்களை உள்வாங்கிக் கொண்டவர்களாக மாறுகின்றனர். சுற்றுலாத்துறை, தொலைத் தொடர்பு சம்பந்தமாக நிறைய பேர் மேற்கத்திய நாடுகளுக்கு இடம் பெயர்வதும் நடைபெறுகிறது.

ஒரு நாட்டின் பலம், சுயசார்புத் தன்மை, மொழி வேறுபாடுகள் பல்வேறு கூறுகளை கவனத்தில் கொண்டு அந்தந்த நாடுகளின் அளவுக்கும், வலிமைக்கும் உகந்தாற் போன்று உலகமயமாக்கலானது தனது வேகத்தையும், செறிவையும் மாற்றியமைத்துக் கொள்கிறது.

கீழ்க்கண்ட நான்கு வழிகளில் உலகமயமாக்கலின் எதிர் விளைவுகளைப் பார்க்கலாம்.

**மதிப்பீடுகள் :**

ஊடக முதலீடு விளம்பரங்களின் விற்பனை மூலமே கிடைக்கிறது. அதனால் வாழ்க்கையில் 'நுகர்வே' முதன்மையானது என வலியுறுத்தப்படுகிறது. இத்தகைய மதிப்பீடுகள் 'பொருண்மை' மதிப்பை வலியுறுத்துவதால் காலப்போக்கில் பிறமக்களின் மீது கரிசனப் பார்வை குறையலாம். சமூக உணர்வும் மத ஒருங்கிணைப்பும் குறையலாம். மேலும் இது நுகர்வுப் பொருட்கள் வீட்டிற்குள் நுழைவதை தடுக்க முடியாமல் செய்துவிடும். அபகரிப்பவர்களுக்கு எதிராக மக்கள் திரள வாய்ப்பில்லாமல் போகும்.



படிப்பகம்

www.padippakam.com

**மக்கள் தொடர்பு சாதனங்களை கோரிக்கைக்காக பயன்படுத்துவது**

ஏற்கனவே கூறப்பட்டது போல, விளம்பரதாரர்களும் வெகுஜன ஊடகங்களும் முரணற்ற அதிக அளவிலான நேயர்களை உருவாக்க முனைகின்றன. ஆழமான பொதுவான விஷயங்கள், பகுப்பாய்வுகள், விவாதங்கள், செய்திச் சுருக்கங்கள் ஆகியவற்றை முக்கிய நேரங்களில் ஒளிபரப்ப மறுக்கின்றன. இவற்றை விடுத்த பிற நிகழ்ச்சிகளை மட்டும் அமெரிக்க முன் மாதிரியைக் கொண்டு மக்கள் தொடர்பு சாதனங்கள் சந்தோஷச் செய்திகள், உண்மைச் சம்பவங்கள், டாக் ஷோ, முக்கிய நகரைப்பற்றிய செய்திக்கோவை, முரண்பாடுகள், சிறு குற்றங்களை வெளிப்படுத்துதல், கிரைம், பாலியல் வன்முறை, ஒற்றர்கள் குறித்த கதைகள், மேலைநாட்டு இசை, செல்வத்தை அடைதல், காதலை வெளிப்படுத்தவல்ல நாடகங்கள் இவற்றையே பிரதானப் படுத்தி ஒளிபரப்புகின்றன. இவைகள் அனைத்தும் விளம்பரதாரர்களின் நலனை முன்னிருத்தியே செயல் படுகின்றன. நுகர்வில் தனித்தன்மை, நுகர்வின் முக்கியத்துவம், 'லக்' மூலம் செல்வத்தைப் பெறலாம் என்பது, தீவிரவாதிகள் குறித்த அச்சம், அதனை முறியடிக்க படைகளைப் பயன்படுத்துவது போன்றவை திணிக்கப்படுகின்றன. குழந்தைகள் அதிக நேரம் தொலைக் காட்சி பார்ப்பதில் செலவிடுவதால் குறைந்த அளவிலேயே குழந்தைகளைக் கட்டுப்படுத்த முடிகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கூட நாட்டத் தூண்டுதல்களாக முன்வைக்கப்படுகின்றன. செய்தியினை தெரிந்துகொள்ளுவதாக இல்லை. விளம்பரங்களுக்காக குழந்தைகள் வளைக்கப்படுவதால் பொம்மைகள் போன்ற குழந்தைகள் விரும்பும் பொருள்கள் விற்பனை செய்யப் பயன்படுகின்றன.

**பழமைவாத அரசியலைப் பலப்படுத்துதல்**

மத்தியப்படுத்தப்பட்ட, உலகமயமாக்கப்பட்ட வணிகமய ஊடகமானது, விளம்பரதாரர், தொழிற்குழு சமூகத்துடன் இணைந்து பழமைவாத அரசியலைப் பலப்படுத்துவதாக அமைகிறது. சமூக ஜனநாயக விருப்பங்களை புறந்தள்ளி நவீனப் பொருளாதாரக் கொள்கையினை ஆதரிப்பதின் மூலம், ஊடகமானது பன்னாட்டுக் கம்பெனிகளின் நலனை முன்னிறுத்துவதாக அமைகிறது. அமைப்பு ரீதியாக அணிதிரட்டப்பட்ட தொழிலாளர்களை புறந்தள்ளுவது, வருவாயைப் பெருக்குவதில் ஊடகங்கள் நாட்டமுள்ளவையாக இருக்கின்றன. சுயநலத்தின் விளைவாக சுயலாபத்தின் விளைவாக விளம்பரதாரர்களும், செல்வந்தர்களும் சேர்ந்து கொள்கிறார்கள். இவர்கள் அரசியல்வாதிகளைப் பணியவைத்து தங்களுடைய வணிக நோக்கை நிறைவேற்றிக் கொண்டு பொதுமக்கள் தொடர்பு சாதனங்களை ஊனமாக்கிவிடவும் செய்கிறார்கள்.

ஊடகத்தைச் சார்ந்துள்ள நிறுவனங்கள் பழமைவாத அரசியல்வாதிகளுடன் தங்களுடைய உறவினை மேம்படுத்திக் கொள்கின்றன. சோஷலிஸ்டுகளிடமும் கூட தங்களுடைய வியாபார நலனை முன்னிருத்தி வெற்றியும் பெற்றுவிடுகின்றன. பலம் வாய்ந்த அரசியல் கட்சிகளுடன் உறவுவைத்துக் கொண்டு புதிய பொருளாதாரக் கொள்கையை இனி மாற்றவே முடியாது எனக்கூறவும் செய்கின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளின் அரசியலைப் பொருத்த வரை பன்னாட்டுக் கம்பெனிகளும், ஊடகங்களும் பழமைவாத அரசியல் கட்சியினருடன் உறவைப் பலப்படுத்தவே முயலுகின்றன. சமூக, ஜனநாயக, முற்போக்கு தேசியவாதிகளிடம் இருந்து விலகியே இருக்கின்றன. அமெரிக்கா இப்போது உலகம் முழுவதும் ஜனநாயக அரசுகளை அகற்றிவிட்டு இராணுவ ஆட்சியினைக் கொண்டு வருகிறது. அதில் வெற்றியும் பெற்று வருகிறது. 1960-1969 வரை 19 இலத்தின் அமெரிக்க நாடுகளில் இராணுவ ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் ஆதரவு இந்த ஆட்சி மாற்றத்திற்கு இருந்திருக்கிறது. இராணுவப் புரட்சிகள் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள் தொழிற்சங்கத்தையும், சமூக ஜனநாயகவாதிகளையும் ஒதுக்கி விடுகின்றனர். தாராளமயத்துக்குப் பொருளாதாரத்தைத் திறந்துவிடுகின்றனர். உடனடியாக இப்பணியைச் செய்ய முடியவில்லையாயின், ஊடகத்தின் உதவியுடன் அரசியல் சூழலை உருவாக்கவும் செய்கிறார்கள்.

**உள்நாட்டுக் கலாச்சாரம் கரைந்து போதல்**

உள்நாட்டுக் கலாச்சாரத்தின் மீது உலகமய தாக்கமானது அதிகாரத்தின் அளவைப் பொருத்து மாறுபடுகிறது. காரணம் உலகமயத் தாக்கமானது அந்நாட்டின் அரசியல், பொருளாதார, இராணுவ ஊடுருவலைப் பொருத்தே மாறுபடுகிறது. பலம் வாய்ந்த கலாச்சாரப் பின்னணி கொண்ட, மொழி மாறுபாடு கொண்ட நாடுகளின் மீது கலாச்சாரத் தாக்கம் அதிகமிருக்காது. இலத்தின் அமெரிக்க நாடுகளிலுள்ளசெல்வந்தர்கள் மேற்கத்திய (அமெரிக்கா) கலாச்சாரத்தைப் பேணுபவர்களாக இருப்பதால் அதன் தாக்கம் இருக்கவே செய்யும். ஊடகத்தின் விளைவானது அரசியல் , பொருளாதார, கலாச்சார தாக்கத்துடன் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகவே பார்க்கப்பட வேண்டும்.

*(GLOBAL MEDIA- எனும் ஆங்கிலப் புத்தகத்திலிருந்து CULTURAL IMPERIALISM உப தலைப்பில் உள்ள கட்டுரையின் சுருக்கம்.)*


**புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம்**

இடம்
திருத்தணி, ஆர்.கே. பேட்டை

நாள்
27.2.2005

தொடர்புக்கு
ஏழுமலை (95-4118-246100




படிப்பகம்

www.padippakam.com

# உதிரும் மானுடம்

■ விழி. பா. இதயவேந்தன்

அலுவலகம் புதிய வண்ணங்களில் பளீச்சென்று இருந்தது. பொழுது இருட்டத் தொடங்கியது. மின் விளக்குகள் ஆங்காங்கே எரியத் தொடங்கின. வாசலின் நீண்ட வராண்டாவின் சோடியம் வேப்பர் மின்விளக்கு பளீச்சென்று ஒளிர்ந்து கொண்டேயிருந்தது.

அதிகாரியின் வாகனம் அந்தப் படிக்கட்டுகளின் கீழ் எப்போதும் பிரமாண்டமாக நின்றிருக்கும். அன்று வாகனம் இன்றி காலியாக சின்ன மைதானம் போல் காட்சியளித்தது. வழியெங்கும் நீண்டு உயர்ந்த அசோக மரத்தின் ஆடும் ஆட்டம் பார்ப்பதற்கு நாட்டியக் காரியின் நளினமாய்த் தோன்றியது.

உள்ளே சன்னல் கதவுகள் பல சாத்தப்பட்டிருந்தது. ஒன்றிரண்டு சன்னல்களுக்கிடையே வெளிச்சத்தில் அதிகாரிகள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. மணி ஏழுக்கு மேலிருக்கும். ஏன்தான் இவர்கள் இன்னும் போகவில்லை என்று காவலாளி வடிவேலு உள்ளுக்குள் புலம்ப ஆரம்பித்தான்.

வெள்ளிக்கிழமை. பெண்கள் கோவிலுக்குப் போகவேண்டும் என்று மேலாளரிடம் சொல்லி விட்டு ஒரு சிலர் முன்னதாகக் கிளம்பினார்கள். வெளியூர்க்காரர்கள் பலர் அலுவலக நேரம் முடிந்ததும் கறாராகக் கிளம்பிவிட்டிருந்தார்கள்.

எல்லோரையும் அனுப்பிய பின்பு சன்னல்களை சாத்திவிட்டு ஒவ்வொரு அறைக்கதவுகளையும் மூடி சீல் வைத்து அதன் பிறகு இரும்புக் கதவுகளை இணைத்துப் பூட்டிவிட்டு இரவு வீடுபோய் சாப்பிட்ட பின்பு அலுவலகம் திரும்பவேண்டும் என்பது வடிவேலுவிற்கு பழக்கப்பட்ட கட்டளையாக இருந்தது.

வடிவேல் எப்போதும் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிட்டுத் திரும்புவது என்பது முடியாதது. அலுவலகப் பேரிரைச்சலில் ஒவ்வொருத்தராய்ப் போய் முடிவதற்குள் இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்கு மேல் ஆகிவிடும். அதற்கப்புறம் தான் பூட்டிவிட்டு வீட்டிற்குப் போய் வரவேண்டும்.

சிலபேர் தாள்களை புரட்டிப் புரட்டிப் பார்ப்பது கோப்புகளைக் கட்டிக்கொண்டு அழுவதுபோல் இருக்கும். 'நாளைக்குத்தான் வந்து பாத்தா இன்னாங்க சார்' என்று சிலரிடம் மனம்விட்டேகேட்டு விடுவான். முடிக்காமல் போக முடியாது என்பதால் அவர்கள் தவமிருக்கும்போது அவனுக்குள் ஆத்திரம் பற்றி எரியத் தொடங்கும்.

அதிலும் அன்றைக்கு உயர் அதிகாரி இல்லாததால் மேலாளர் எல்லாவற்றையும் முடித்து சரி பார்த்துவிட்டு புறப்படுவதற்கு நேரமாகும் என்பது அவனுக்கு முகத்தில் சோகம்படிந்து ஒருவித விசனத்தை ஏற்படுத்தியது. அவ்வப்போது அடிக்கோப்புகளை எடுத்து வைக்கவும் தேநீர் வாங்கிக் கொடுக்கவும் தண்ணீர் பிடித்துத் தரவுமாக ஏதாவதொன்றிற்கு அழைப்பு மணி வரும். உடனே போய் செய்யாவிட்டால் பெரிய அதிகாரி மூலம் மறுநாள் ஓலை கொடுத்து பத்து பதினைந்து நாள் நிறுத்தி விடுமளவிற்குப் போய்விடும்.

வடிவேலு அதையெல்லாம் நினைத்தபடி தேநீர் வாங்க வெளியே வரும்போது எதிரே தொப்புளான் மூச்சிரைக்க உள்ளே ஓடிவந்தான் கொஞ்சமாய்த் திறந்திருந்த கதவுகளை நெருக்கித் தள்ளியபடி அவன் உடல் வியர்வையால் நனைந்திருந்தது. காக்கிச் சட்டைப் பின்புறம் சுவற்றில் வெள்ளை அடித்துக் காய்ந்துபோன மாதிரி வெள்ளை பூத்திருந்தது.

"டேய், டேய் நில்லு"

"அய்யா இருக்காரா"

"எந்த அய்யாடா"

"கமிசனரு அய்யா"

"டேய் எந்த நேரத்துல வந்து கேக்குற"

"அய்யோ, அங்க பாருங்கண்ணே"

தொப்புளான் வெளியேகையைக் காட்டவும் கூடவே ஆட்டமும் பாட்டமுமாக பறைமேளம் அடித்துக்கொண்டு வாசலின் கதவுப் பக்கம் கூட்டமாக நுழைவது தெரிந்தது.

வடிவேலுவுக்கு ஒன்றும் புரியாமல் குழம்பிப்போனான். இன்னா என்பதுபோல் முகம் அதிர்ச்சியில் சூழ்ந்தது. உள்ளே போய் சொல்வதா, வெளியே போய்த் தடுத்து என்ன ஏது என்று விசாரிப்பதா எனப் புரியாமல் விழித்தான்.

"இன்னாடா இதுவெல்லாம்"

தொப்புளானைப் பார்த்து கலக்கத்தோடு விழி பிதுங்கக் கேட்டான்.

"இன்னாவா, பின்னாடி பொணம் வருதே, தெரியல. அங்கபார்"

வேலப்பன் தலையில் துண்டை வரிந்து கட்டியபடி ஆடிக்கொண்டே வந்தான். காக்கிச் சட்டையும் டவுசரும் தொள தொளவென அவன் ஆட்டத்திற்கு வளைந்து கொடுத்தது.

"டேய் டேய் நிறுத்துங்கடா"

வடிவேலு கத்தியதும் மேள தாளங்களுடன் வந்த கூட்டம் அப்படியே நின்றது. பின்னா லிருந்து பிணம் முன்னால் வாகனம் நிறுத்தும் இடத்திற்கு வந்தது. பெஞ்ச் கட்டையின் மீது வைத்துக் கட்டித் தூக்கிவந்து கீழே வைத்து விட்டு அப்பாடா எனப் பெருமூச்சு விட்டார்கள். கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது.

"டேய் டேய் தூக்குங்கடா, குடிகாரப் பசங்களா..."

"டேய் யாரடா சொன்ன"

வேலப்பன் அவனை நெட்டித் தள்ள கூட்டத்தில் அவனைத் தரதர வென இழுத்து வந்தனர். சத்தங் கேட்டு உள்ளேயிருந்து மேலாளர் வெளியே வந்து கண்ணாடியைக் கழட்டிக் கொண்டு பார்த்தார்.



படிப்பகம்

www.padippakam.com

"ஏய்ய்ய்...
எட்டு ரூபா எட்டறிக்கா
எதுரக்கப் பள்ளிக்கூடம்
எனக்குஎழுதஒருபிள்ளயிருந்தா
எதிராளிய ஏன் தேடுறேன்...
போடு ஜினக்தா"

வேலப்பனின் ஒப்பாரிக்கு பறை அதிர இளவயசு பிள்ளைகள் ஆட ஆரம்பித்தார்கள்.

நகராட்சியில் வேலை செய்கிற ஆண்களும் பெண்களும் பிணத்தைச் சுற்றி கண்ணீரும் கம்பலையுமாக நின்றிருந்தார்கள். தீராத சோகத்தில் அழுது புலம்பிய மாதிரி கண்களில் கண்ணீர் பனித்திருந்தது. கண்கள் சிவப்பேறி இருந்தது. வேலைக்குப் போய்வந்த அலுப்பில் யாரும் குளிக்க முடியாமல் உடல்கள் வியர்வையால் நசநசத்துக் கொண்டிருந்தது.

"ஏம்பா, யோவ், உன்னதாம்பா"

மேலாளர் காரணம் புரியாமல் தடுமாறினார். மேல் படியில் நின்று கொண்டுஒவ்வொருத்தராய்ப் பார்த்து "நிறுத்துப்பா" என கையைக் காட்டினார். சட்டென நிசப்தத்தில் ஆழ்ந்தது. வறண்ட சித்தேரிக் கரையின் சிதைந்துபோன குடிசைகளுக்கிடையில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் கருத்து சிறுத்த ராசாங்கத்தின் முகம் மெர்க்குரி வெளிச்சத்தில் பளிச்சென்றி ருந்தது. கன்னங்களை தடவிக்கொடுத்து "உட்டுட்டுப் போயிட்டியே அய்யோ என்ராசா" என அகிலாண்டத்தின் குரல் தனிமையில் அலறியது. தொப்புளான் ஓடிவந்து அவள் அழுகையை நிறுத்தினான்.

"இன்னாய்யா இதெல்லாம்"

"சாமி... ராசாங்கம் செத்துப் போயிட்டான்"

"செத்து எம்மா நேரமாவுது தெரிமா"

"கேப்பாரு மேப்பாரு இல்லைன்னு நெனைச்சியா"

"தே பாரு, ஆளாளுக்கு பேசிக் கிட்டிருந்தா அப்புறம் நான் சும்மா இருக்க மாட்டன்."

மேலாளர் சொல்ல கூட்டத்தில் கசகசவென அவர்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"நான் கேட்டேன்னு என்னயும் நெட்டித் தள்ளிட்டாங்க அய்யா"

வடிவேலு அருகே வந்து நின்று பணிந்த குரலில் சொன்னான்.

"பொணம் செத்து எம்மா நேரமாவுது, ஆபிசுல குடுக்க வேண்டியதக் குடுக்கல; ஏழைங்கன்னா எளப்பமா"

"இன்னா வேணுமிங்க"

"அய்யாயிரம் பணந்தான்"

"மனு குடுத்தாச்சா"

"காலைல செத்தவொடனேக் குடுத்தாச்சு சாமி..."

"சரி, அதிகாரி இல்லியே"

"அதிகாரி இல்லேன்னா ஆபிசு நடக்காதா"

"யோவ், நீ யாருகிட்ட பேசுற தெரிமா"

மேலாளரின் குரல் ஆணவத்தோடு எழுந்தது.

"தோ பாரு, மெரட்டர வேலயெல்லாம் வாணாம். கத நாறிப் பூடும் சாக்கிரத"

மாரியின் குரல் பளீரென கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது. இனிமேல் பேசினால் இருக்கிற மரியாதையும் போய் விடும்போல் இருக்க அவர் உள்ளே அறைப்பக்கம் நகர்ந்தார்.

"டேய் அடிங்கடா"

மாரி கையைக் காட்டியதும் மீண்டும் வேலப்பன் குரலெடுத்துப் பாடினான். அடிவயிறு இறுக அவன் குரல் சாலைப்பக்கம் வரை ஒலித்தது.

"ஏய்ய் ய்ய்...
பத்து ரூபா பத்தறிக்கா
பக்கத்துலப் பள்ளிக்கூடம்
படிக்க ஒரு பிள்ளையிருந்தா - ஒரு
பங்காளிய ஏன் தேடுறேன்..."
போடு ஜினக்தா ஜினக்தா

ஒரு பக்கம் ஆட்டமும் பாட்டமும், மறுபக்கம் நகராட்சியில் அவனோடு வேலை செய்து வந்த பணியாளர்கள் அழுகையும் ஓலமும் எழும்ப எழும்ப சாலைப் பக்கம் போகிற வருகிறவர்கள் ஆச்சரியத்தோடு அலுவலகத்திற்குள் நுழைந்து சூழ்ந்துகொண்டார்கள்.

எல்லோரும்போல் ராசாங்கத்தை அத்தனை எளிதில் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. குறிப்பிட்ட சிலர்தான் நகராட்சியில் குறிப்பிட்ட வேலைகளை செய்ய முடியும். அவற்றில் கிட்டத்தட்ட கைதேர்ந்த நிபுணர்கள்போல் ராசாங்கமும் ஒன்றாக இருப்பான்.

இப்போதுள்ள மாதிரி இல்லை அப்போது. ராசாங்கம் போன்று ஒரு சிலரை மலத்தொட்டி தூக்கும் வேலைக்கு போட்டிருப்பார்கள். வேலை செய்யும் தெருக்களில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மலத்தொட்டி தகர டிரம்மில் நிரம்பியிருக்கும். அது அதிகமானால் அருகே குப்பைத் தொட்டிப் பக்கம் மலம் தரையில் கொட்டிக் கிடக்கும். டிராக்டர் மேல் கயிறு கட்டி தொட்டியை ஏற்ற வேண்டும். கீழே இருக்கிற மீதி மலத்தை வாளியில் வாரி மேலே வண்டியில் அரை குறையாய் இருக்கிற தொட்டிகளில் கொண்டு நிரப்ப வேண்டும். அப்புறம் ஊருக்கு வெளியேயுள்ள குப்பை மேட்டில் தோண்டப்பட்ட குழிகளில் கொட்டி நிரப்ப வேண்டும். வராத மலத்தை தொட்டியிலிருந்து கரண்டி மாதிரியான சுரண்டியில் வழித்துத் தள்ளிவிட்டுத் திரும்ப வேண்டும்.

அதிகாலையில் சரியான நேரத்திற்கு வருவதும் நேரமானாலும் வேலையை முடித்துவிட்டுப் போவதும் துப்புரவு அதிகாரிகளிடம் அவனுக்கு நல்ல பெயரைத் தந்திருந்தது. ராசாங்கம் இறந்த செய்தி கேட்டு மேஸ்திரியோ ஆய்வாளரோ எங்கே போனார்கள் என்று தெரியவில்லை.

"ராத்திரி பகலா வொழைச்ச என் வூட்டுக்காரருக்கு கேக்குறதுக்கு நாதியில்லியா. இப்டீ நடுத்தெருவுல அய்யோ..."

அகிலாண்டம் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள்.

"புத்தம் புது கல்லு - நான்
பொறிக்கெடுக்கும் ராணி முத்து
பொழுதுக்கப் பாருங்களேன்-என்
பொன்னான திருமுகத்த
புருசனில்லாச் சஞ்சலத்த"

ராசாங்கம் வேலைக்கு இடை



படிப்பகம்

www.padippakam.com

யிடையே பீடிபத்த வைக்கும் போது ஒருவித போதை நெடி அடிக்கும். ஏற்கனவே பீடிக்குள் கஞ்சாவைக் கசக்கித் திணித்து வைத்திருப்பான். அந்தப் பீடியைப் பற்றவைத்த பின்தான் அவனுக்கு புதுத்தெம்பு வந்த மாதிரி இருக்கும். மல நாற்றம் ஒரு பக்கம். மேலே படுகிற மலத்தை சாக்குத் துணியினால் துடைத்துக்கொண்டே பொழுது கழியும். பீடி பற்றவைத்ததும் உள்ளுக்குள் ஏற்படுகிற ஒரு புத்துணர்ச்சியில் மலத்தொட்டியை ரெண்டு பேராக சேர்த்து தூக்கும் போது அசாதாரணமாய் அவன் கை மேலே எழும்பும்.

கொஞ்சம் கொஞ்சமாய் நெஞ்சைக் கவ்விப் பிடித்தபடி வந்த இருமல், சளி, அன்று அப்படியே சட்டென நின்று போனதும் அகிலாண்டம் நிலை தடுமாறி போய் கதறக் கதற அழுது கொண்டிருந்தாள்.

"செஞ்சிக்கு அண்ணாண்ட
செல்வம் ரெண்டு வாழுதும்மா - நான்
செத்தேன்னு சேதி கண்டா
செஞ்சி பெரண்டு வரும் - என்
செல்வம் ரெண்டும் முன்னவரும்"

மேளத்தின் அடி அழுத்தமாய் நங் நங்கென்று. புதிய வேடிக்கையாய் பார்த்த சனங்களுக்கும் மனதில் ஒருவித துள்ளல் எழுந்தது. அசோக மரத்தின் தலை இப்படியும் அப்படியுமாக காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

உள்ளேயிருந்து வடிவேலு வருவதைப் பார்த்த சனங்கள் ஒரு சிலர் என்ன ஏது என்பது போல் அவன் பக்கம் திரும்பினார்கள். அவன் முகம் கலக்கத்தில் இருந்தது.

"யாராச்சும் நாலுபேர அய்யா கூப்டாரு"

"டேய் வாங்கடா" எனப் பத்துப் பதினைந்து பேருக்கு உள்ளே நுழைந்தார்கள்.

"வடிவேலு"

"அய்யா"

"போய், மேஸ்திரி இன்ஸ்பெக்டர வீட்லப் போய்க் கூப்டா"

சொன்ன வேகத்தில் அவன் சைக்கிள் பறந்தது.

"இப்படி கூட்டமா வந்து அசிங்கப்படுத்துனா, நடக்கிறதே வேற"

மேலாளரின் வார்த்தைகள் மீண்டும் கண்டிப்புடன் எழுந்தது.

"என்ன செய்வீங்க"

"போலிசக் கூப்பிடுவன்"

"கூப்பிடுப் பாக்கறம்; திருடனமா கொள்ளை அடிச்சமா, இல்ல உன்கிட்ட கடனா கேக்குறம்; எங்க வூட்டுப் பணத்துல குடுக்கிற செத்தக் கடனத்தான கேக்குறோம்"

"கமிசனரு ஊர்ல இல்லேன்னு சொல்றேன்ல. திங்கள் கெழமப் பாத்துக்கலாம், பொணத்தத் தூக்குங்க"

"அநாவசியமா பிரச்சினைய வளத்தாதிங்க சார்" பொது மக்களிடமிருந்து ஒரு தடித்த குரல் வந்தது.

"எனக்குக் குடுக்கிற அதிகாரம் இல்ல"

"இல்லாம எப்பிடி..."

கூட்டத்தில் ஒருவன் சீறி எழுந்தான். ஆளாளுக்குப் பேச வார்த்தைகள் சிதறின. மேலாளர் வெட்கித் தலை குனிந்தபடி யோசனையில் ஆழ்ந்தார். நிலைமையை எப்படி சமாளிப்பது என்று குழப்பத்தில் ஆழ்ந்தபோது வந்திருந்தவர்களின் வார்த்தைகள் அந்த நிலைமையில் தாருமாறாய் விழுந்தன. காற்று வாக்கில் பிணம் நாற்றம் எடுக்க ஆரம்பித்தது. சத்தமும் வீச்சமும் அவன் மனசைப்போட்டுப் பிராண்டி எடுத்தது. வடிவேலு துப்புரவு ஆய்வரை அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தபோது அவனைப் பார்த்ததும் இன்னும் கோபம் உச்சத்தில் சென்றது.

"ஏன்யா எங்கப் போய்த் தொலைஞ்சீங்க"

அவன் மவுனமாக நின்றிருந்தான்.

"தேப்பா, கொஞ்சம் எடயப் போங்க, கூப்டறோம்"

"தோ பாரு, காச குடுத்தாதான் எடுத்தக் காவி பண்ணுவம், இல்லாட்டி பொணத்த என்னிக்கா இருந்தாலும் நீங்கதான் தூக்கணும்..."

தொப்புளானின் வார்த்தை செவுளில் அறைவது போலிருந்தது. கண்டிப்பான குரல் அவரை எச்சரிக்கை செய்தது. சனி, ஞாயிறு, திங்கள் மூன்று நாள். நினைக்கவே அச்சமாக இருந்தது அவருக்கு. மேலாளரும் ஆய்வாளரும் பேசி முடிவு செய்தபடி எழுந்தார்கள். தொலைபேசியில் பேசியபின் அலுவலகப் பெட்டியிலிருந்து அய்யாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு வந்தார்.

"அகிலாண்டத்த கூப்டுப்பா"

பூ வைத்துப் பார்த்திராத அவளது கொண்டையில் வதங்கிய பூ சுற்றப்பட்டிருந்தது. நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டு அப்பியிருந்தது. வயசுப் பொண்ணாயிருந்தபோதுகூட அவள் சீவி சிங்காரிக்க நேரமில்லாமல் அவளும் நகராட்சியில் பீவாரியாக வாழ்க்கையைத் தொடங்கியவள்தான். வாயிலிருந்த வெற்றிலை எச்சிலைக் குதப்பித் துப்பிவிட்டு கண்ணீரையும் மூக்குச் சளியையும் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டு அருகே வந்தாள்.

"ரேகையை வை" என்று பேப்பரை நீட்டி பொறுப்பாய் வாங்கிக் கொண்டு அவள் கையில் பணத்தைக் கொடுத்தான். 'அப்புறம் உங்களைப் பாத்துக்கறம்' என்பதாய் அதிகாரிகளின் முகசாடை சொன்னது.

"சாமி" என அவள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

போய்த் தொலைங்க என்பது போல அவன் பார்வை வெடுக்கெனத் திரும்பியது. பிணத்தைத் தூக்கிக் கொண்டு நகர்ந்தபோது ராசாங்கத்தின் முகம் உட்பட பெட்ரோமாக்ஸ் விளக்கு அணைந்து எல்லோர் முகமும் இருளில் சூழ்ந் தது. கூடியிருந்தவர்கள் கலைய ஆரம்பித்தார்கள்.

"ஓடையில்லத்தான் புள்ள பெத்து - மாமா
சாலையில ஏனை கட்டி
சந்தைக்குப் போற மச்சான் - எனக்குச்
சங்கு மணி ஒன்னு வாங்கி வாய்யா"

ஆட்டம் பாட்டத்துடன் பிணம் குடிசை நோக்கி நகர்ந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# போலியோ ஒழிப்பு போலியா?

■ மருத்துவர் புகழேந்தி

"அமெரிக்காவில் 1961-ஆம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்ட அனைத்து போலியோவிற்கும் போலியோ சொட்டு மருந்துதான் காரணம்" *(ஜோனஸ் சால்க் போலியோ தடுப்பூசி கண்டு பிடிப்பாளர் அமெரிக்க Senate sub committee-இல் அளித்த வாக்குமூலம்).*

"போலியோவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கொடுக்கப்பட்ட தீவிர சொட்டு மருந்து முயற்சிகளுக்குப் பின்னரும், அரசு ஆவணங்களை உற்று நோக்குகையில் இச்சொட்டு மருந்தால் பெருமளவு பலன் ஏதும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது" *(சாபின் - முதன்முதலில் போலியோ சொட்டு மருந்து உருவாக்கியவர்.)*

போலியோ தடுப்பு மருந்துகளை கண்டு பிடித்தவர்களே இப்படிக் கூறுகையில், நமது அரசிற்கு மட்டும் போலியோ சொட்டு மருந்தை மக்கள் மீது திணிப்பதற்கு காரணம் என்ன? இதற்கான பதிலைக் காண்பதற்கு முன் போலியோ குறித்தான புள்ளி விவரங்களையும் மேற்படி அவசியமான விசயங்களையும் தெரிந்து கொள்வது நல்லது.

**போலியோ குறித்தான வெளிநாட்டு அனுபவங்கள்**

வைரஸ் கிருமியால் ஏற்படும் இளம்பிள்ளை வாதம் (Polio) ஜெர்மனியில் இப்போது கேள்விப்பட முடியாது. இருப்பினும், ஒவ்வொரு வருடமும் போலியோ சொட்டு மருந்தால் ஏற்படும் போலியோ வியாதி தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் உள்ளது.

அமெரிக்காவில் போலியோவிற்கு எதிரான தீவிர சொட்டு மருந்து சிகிச்சை முறை அமலுக்கு வந்தபின் போலியோவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 50% உயர்ந்துள்ளது. இன்னும் பல மாநிலங்களில் போலியோவின் பாதிப்பு சொட்டு மருந்து சிகிச்சைக் குப்பின் இரட்டிப்பாகி உள்ளது.

மேலும் போலியோ சொட்டு மருந்து அறிமுகப் படுத்துவதற்கு முன்னரே போலியோவால் ஏற்படும் இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது.

இங்கிலாந்திலும் போலியோ தடுப்பு மருந்து அறிமுகப்படுத்துவதற்கு முன்னரே, போலியோ பாதிப்பு விகிதம் 82% குறைந்துள்ளது.

ஆஸ்திரேலியாவிலும் போலியோ இறப்பு விகிதம், தடுப்பூசி கொடுக்கப்படுவதற்கு முன்னரே கணிசமாகக் குறைந்துள்ளது.

1923 - 1953க்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், போலியோ தடுப்பூசி அறிமுகப்படுத்துவதற்கு முன்னரே அதன் இறப்பு விகிதம் அமெரிக்காவில் 47%, இங்கிலாந்தில் 55% குறைந்துள்ளது.

அந்தக் காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள், அடிப்படை வீட்டு வசதி, உணவு, சுத்தமான குடிநீர், சுற்றுப்புற சுத்தம், சுகாதாரம் முதலியன பெரும் பாலோர்க்கு கிட்டியதால் அம்மாற்றம் நிகழ்ந்தது எனக் கூறலாம்.

போலியோ நோய் ஒரு சுழற்சியின் அடிப்படையில் (cycles) ஏற்படுகிறது. அது உச்சத்தை எட்டும் போது மருத்துவர்களாலும், அரசு அதிகாரிகளாலும் அது குறித்தான பயம் மக்கள் மனதில் ஏற்படுத்தப்பட்டு, தடுப்பூசித் திட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளுமாறு நிர்பந்திக்கப்படுகின்றனர். பின்னர் நோயானது அதன் இயற்கை சுழற்சியில் தாழ்வை எட்டும் போது தடுப்பூசிகளே அதற்கு காரணம் எனத் தவறாக சித்தரிக்கப்படுகிறது.

போலியோ தடுப்பு மருந்தானது குரங்குகளின் சிறுநீரகங்களில் வளர்த்தெடுக்கப்பட்டு பின்னர் நோய் தடுப்பு மருந்தாக உருவாக்கப்பட்டது. அக்குரங்குகளின் சிறுநீரகங்கள் சிமியன் வைரஸ் 40 (sv40) எனும் வைரஸ் கிருமியால் பாதிக்கப்பட்டிருந்தது மறைக்கப்பட்டுள்ளது. சிமியன் வைரஸ் 40 பல வருடங்கள் கழித்து மூளை, ஈரல், நுரையீரல், எலும்பு ஆகிய இடங்களில் புற்று நோயை ஏற்படுத்தும் திறன் கொண்டுள்ளது.

1950-களில் பல இலட்சக் கணக்கான குழந்தைகளுக்கு sv40 கலந்த தடுப்பூசி கொடுக்கப்பட்டுள்ளது. இக்குழந்தைகள் பெரியவர்களாகும்போது இவர்களிடமிருந்து இவர்கள் குழந்தைகளுக்கும் sv 40 கிருமித் தாக்கம் ஏற்படும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்விசயம் பெண் மருத்துவர் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டு அமெரிக்க அரசிற்கு தகவல் கொடுக்கப்பட்டாலும், அமெரிக்க அரசு அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அப்பெண் மருத்துவர் வேலை செய்த ஆய்வகத்தை இழுத்து மூடியுள்ளது. இங்கிலாந்திலும் அதே தடுப்பு மருந்தை பயன்படுத்தியதால், அவர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்ட நிலையிலும் அத் தடுப்பூசியை புழக்கத்திலிருந்து எடுக்கத் தவறியதுடன், யார் யாருக்கெல்லாம் sv 40 கலந்த தடுப்பூசி கொடுக்கப்பட்டுள்ளது எனும் புள்ளி விவரத்தை 1987-இல் ஆங்கில அரசு அழித்துவிட்டது. இதனால் அரசின் மீது சட்டரீதியாக தொடுக்கப்பட இருந்த வழக்குகள் தொடுக்க முடியாது போயின.

போலியோவைப் பொறுத்தமட்டில் நோய்த் தடுப்பிற்காக கொடுக்கப்பட்ட தடுப்பு மருந்துகள் நோய் பாதிப்பிற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேலும் நோய்த்தடுப்பிற்கு கொடுக்கப்பட்ட தடுப்பு மருந்துகளிலிருந்து பலம் பொருந்திய, பல புது வகை போலியோ கிருமிகள் தோன்றியதற்கும் ஆதாரங்கள் உள்ளது. (Haiti & Dominican Republic 2001 - 2002).



படிப்பகம்

www.padippakam.com

Centre for Disease Control (CDC) நிறுவனம் அமெரிக்காவில் 1980-1989க்கு இடையில் ஏற்பட்ட அனைத்து போலியோ பாதிப்பிற்கும் தடுப்பூசியே காரணம் என உறுதி செய்துள்ளது.

1959-ஆம் ஆண்டு அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் எனும் நகரில் ஏற்பட்ட 77.5% போலியோவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடுப்பூசிகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

1959-இல் Francis எனும் இடத்தில் நடந்த சோதனையில் பலரும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட பின்னரும் போலியோ நோயால் பாதிக்கப்பட்டது தெரிய வந்துள்ளது. இதை புள்ளி விவரங்கள் மூலம் மறைக்க, சொட்டு மருந்து கொடுத்த ஒரு மாதத்திற்குள் ஏற்பட்ட போலியோ வியாதியினர் பலர் ஏற்கனவே போலியோ வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தவறாக புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டன.

அமெரிக்காவில், கனடாவில் (Ottawa) இன்னும் பல நாடுகளில் தீவிர போலியோ சொட்டு மருந்து தடுப்பு முயற்சிகளுக்குப் பிறகு போலியோவின் பாதிப்பு 700% அதிகரித்துள்ளது.

ஆக, போலியோ நோய் வராமல் தடுக்க தடுப்பூசி / சொட்டு மருந்து பயன்படுத்தாமல் இருப்பதே நல்லது. (Dr. Mendelsohn, 1984)

சொட்டு மருந்திற்குப் பின் ஏற்பட்ட போலியோ காரணம் தெரியாமல் ஏற்பட்ட மூளைக் காய்ச்சல் (Aseptic Meningitis) அல்லது வேறு ஒரு வைரஸால் (Cocksackie virus) ஏற்பட்ட பாதிப்பு எனத் தவறாக புள்ளி விவரங்கள் காட்டப்பட்டன.

போலியோ தடுப்பூசியால் போலியோ வராது எனும் தவறான கண்ணோட்டத்தால், தடுப்பு மருந்தால் போலியோ ஏற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர்.

1990-93க்கு இடைப்பட்ட வருடங்களில் அமெரிக்காவில் FDA நிறுவனம் தடுப்பூசிகள் காரணமாக ஏற்பட்ட 54,072 பாதிப்புகளை பதிவு செய்துள்ளது. இது 10%தான் எனவும், மீதி 90% பதிவுசெய்யப்படாமல் இருந்தது எனவும் Food and Drug Administration இயக்குநர் டாக்டர் டேவிட் ப்ரெஸ்ளர் ஒத்துக் கொண்டுள்ளார்.

Dr. Bernard Greenberg எனும் மருத்துவ புள்ளியியல் மேதை 1962-இல் போலியோ பாதிப்பு குறைவதற்கு காரணம் மருத்துவர்கள் இவ்வியாதியை முறையாக அரசின் கவனத்திற்கு கொண்டுவரவில்லை என்பது தான் எனக் குறை கூறியுள்ளார். மேலும் போலியோ பாதிப்பை பிற வியாதியின் பாதிப்புகள் என திரித்துக் கூறியதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்காவில் 1985-இல் போலியோ தடுப்பு மருந்தை பயன்படுத்தத் துவங்கினர். அடுத்த 4 மாதங்களில் 350 பேர் போலியோவால் பாதிக்கப்பட்டனர். மேலும் பலருக்கும் கொள்ளை நோயைப் போன்று போலியோ நோய் பரவ ஆரம்பித்தது. உடனே அதிகாரிகள் அது போலியோ அல்ல; வேறு வகை ஊனம் என பேசத் துவங்கினர். - Viera Scheibner.

தடுப்பூசிகள் புற்றுநோய்க்கும், இரத்தப் புற்று நோய்க்கும் (Leukemia) வழி வகுக்கின்றன. - Prof. L. Vincent.

குரங்கின் சிறு நீரகங்களிலிருந்து உருவாக்கப்பட்ட போலியோ தடுப்பு மருந்துகளால் நம் நாட்டில் இரத்தப் புற்றுநோயின் பாதிப்பு மிகவும் அதிகரித்துள்ளது. - Dr. F. Klenner, M.D. (USA).

இத் தடுப்பூசிகளை நியூசிலாந்து நாட்டில் 1959 - 1965இல் பயன்படுத்தியதன் விளைவாக SSPE எனும் ஒருவகை மூளைக் காய்ச்சல் பாதிப்பு எதிர்பார்த்ததை விட 100 மடங்கு அதிகமாகியுள்ளது. அதே காலத்தில் இத்தடுப்பூசி போடப்பட்ட 58,000 பெண்களின் குழந்தைகளுக்கு மூளையில் கட்டி ஏற்படும் வாய்ப்பு 13 மடங்கு அதிகமாகியுள்ளது.

சிமியன் வைரஸ் 40 தவிர குரங்குகளை பாதிக்கும் Respiratory Syncytial Virus (RS) எனும் கிருமிகளும் போலியோ தடுப்பூசிகளில் கலந்திருப்பது தெரிய வந்துள்ளது. குரங்கைப் பாதிக்கும் இவ்வைரஸ் கிருமிகள் மனிதர்தளையும் மிக மோசமாகத் தாக்கி உயிரிழப்புகளைக் கூட ஏற்படுத்தியுள்ளது. 1932-இல் குரங்குகள் கடித்ததால் 10 தடுப்பூசி சோதனையாளர்கள் இறந்துள்ளனர். அதில் ஒருவர் சாபின் (Sabin) கூட வேலை செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குக் காரணம் Monkey B Virus எனும் கிருமியே என பின்னர் தெரிய வந்துள்ளது.

1976-இல் அமெரிக்காவில் Lederle நிறுவனம் தயாரித்த போலியோ மருந்துகள் மூன்றினை சோதனை செய்தபோது. பரிந்துரைக்கப்பட்ட அளவைக் காட்டிலும் பல மடங்கு (1000 முதல் 1 இலட்சம் வரை) சிமியன் வைரஸ்40/ஒரு மில்லிக்கு இருப்பது தெரிய வந்துள்ளது.

Louis Pascal என்பவர் பெல்ஜிய காங்கோ நாட்டில் ஏற்பட்ட AIDS நோய்க்குக் காரணம் போலியோ தடுப்பூசியில் கலக்கப்பட்ட Simian Immuno Deficiency Virus எனப்படும் ஒரு வகை வைரஸ் கிருமியே என நிறுவியுள்ளார்.

1992-இல் அமெரிக்காவில் இருந்து வெளியாகும் Polio Network News எனும் செய்தியில் அமெரிக்காவில் போலியோ தடுப்பூசி/மருந்தால் ஏற்படும் பாதிப்பு/இறப்பு தொடர்பாக 4.236 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

Bernard Reis எனும் ஆங்கிலப் பேராசிரியர் (Cornell Universitsy) அவரது குழந்தைக்கு கொடுக்கப்பட்ட போலியோ தடுப்பூசியின் காரணமாக (போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பது அப்போது அமெரிக்காவில் சட்டமாக்கப்பட்டிருந்தது) ஒரு மாதம் கழித்து போலியோவால் பாதிக்கப்பட்டார். அதனால் கட்டாயமாக



படிப்பகம்

www.padippakam.com

போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பது சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது. (குழந்தைக்கு செலுத்தப்பட்ட தடுப் பூசி (கிருமி) மூலம் அவருக்கு நோய் தொற்றியுள்ளது)

Kay Mcneary எனும் பெண்மணி தனது குழந்தையின் பிறப்பு உறுப்பை பாதுகாக்கும் ஆடையை (Nappy) களையும் போது அதிலிருந்த கிருமிகளால் போலியோவால் பாதிக்கப்பட்டு. அதன் காரணமாக தொடர்ந்த வழக்கில் 1.1 மில்லியன் டாலர் அவருக்கு அளிக்கப்பட்டது.

FAD நிறுவனம் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு விதி முறைகளை மீறி உருவாக்கப்பட்ட உயிருடன் உள்ள கிருமிகளைக் கொண்ட போலியோ தடுப்பு மருந்துகளை புழக்கத்தில் விட அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்தான ஒரு நீதிமன்ற வழக்கில் தோற்ற பின், அமெரிக்க அரசு பாதுகாப்பு விதி முறைகளை தளர்த்த முடிவெடுத்து முன்பு ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததை ஏற்றுக் கொள்ளும்படியான சட்டம் இயற்றியுள்ளது!

Wellcome எனும் போலியோ தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனம் இது தொடர்பான பல வழக்குகள் காரணமாகவும், குறைந்த இலாபம் காரணமாகவும் அம்மருந்தின் உற்பத்தியை நிறுத்தியுள்ளது.

இறப்புகளை மட்டும் கணக்கில் கொண்டால் 1961-ஆம் ஆண்டிலிருந்து 3000 பேர் இறந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சமீபத்திய 5 ஆண்டுகளில் மேற்கொண்ட போலியோ சொட்டு மருந்தின் பாதிப்பு ஆய்வு விவரம் பின் வருமாறு:

பின் விளைவுகளால் பாதிக்கப்பட்ட மொத்த பேர் 13,641; இவர்களில் உடனடி அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் - 6364. உயிருக்கே ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் - 236. மருத்துவ மனையில் சேர்க்கும் அளவிற்கான பாதிப்பிற்கு உள்ளானவர்கள் - 1726. பாதிப்பிலிருந்து மீள்வார்களா? இல்லையா? எனச் சொல்ல முடியாதவர்கள் - 1695. நிரந்தர பாதிப்பிற்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை-133. இறந்தவர்களின் எண்ணிக்கை - 540.

போலியோ தடுப்பூசி/சொட்டு மருந்தால் ஏற்படும் பாதிப்பு நரம்பு மண்டலம்/மூளை பாதிப்பு, இறப்பு குறித்து நிறைய செய்திகள் உள்ளன.

ஓமன் (Oman) நாட்டில் 1988-1989இல், போலியோ கொள்ளை நோயாக பல ஆயிரம் குழந்தைகளை பாதித்துள்ளது (இவர்கள் அனைவரும் 3 முறை போலியோ தடுப்பூசி போடப்பட்டவர்கள்) இதில் அதிர்ச்சி என்னவெனில், போலியோ தடுப்பு மருந்து அதிகம் போடப்பட்ட இடங்களில் போலியோவின் பாதிப்பு அதிகமாகவும், குறைவாக போடப்பட்ட இடங்களில் அதன் பாதிப்பு குறைவாகவும் இருந்ததுதான்.

New England Journal of Medicine என்ற மருத்துவ செய்தி ஏட்டில் போலியோ தடுப்பூசி கொடுக்கப்பட்ட பல ரோமானியக் குழந்தைகள் போலியோவால் அதிகம் பாதிக்கப்பட்டது தெரியவந்தது. இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்கையில், தடுப்பூசி கொடுத்த தேதியிலிருந்து 1 மாதம் வரை அக்குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் கிருமிக் கொல்லிகள் (Antibiotics ஊசி மூலம்) காரணமாக இருந்தது தெரிய வந்துள்ளது.

1 ஊசியால் போலியோ பாதிப்பு 8 மடங்கு; 2-9 ஊசியால் பாதிப்பு 27 மடங்கு; 10-10க்கு மேல் ஊசியால் பாதிப்பு-182 மடங்காகும் வாய்ப்பு உள்ளது தெரியவந்துள்ளது.

**போலியோ தடுப்பு மருந்து பாதிப்பு குறித்தான் நம் நாட்டு அனுபவங்கள்**

இந்தியாவில் 3 வேளை கொடுக்கப்பட்ட போலியோ சொட்டு மருந்தால் ஏற்படும் பாதுகாப்புத் திறன் 60-70%. முறையான குளிர் சாதன வசதி இல்லாதது, இந்தியக் குழந்தைகளின் குடலில் வாழும் பிற வைரஸ் கிருமிகளால் ஏற்படும் பாதிப்பு இதற்கு காரணமாக சொல்லப்படுகிறது. மேலும் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்ட இந்தியக் குழந்தைகளில் நோய் எதிர்ப்பு புரதம் உண்டாக்கும் திறன் போலியோ தடுப்பு மருந்திற்குப் பின் குறைவாக உள்ளதென ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. (Chandra, R.K., British Medical Journal 1975; 2: 583-585)

தொண்டையில் சதை (Tonsilitis) காரணமாக பெரும்பாலும் அனைத்து மருத்துவர்களாலும் Tonsils வெட்டியெடுக்கப்படுகிறது. இவ்வாறு Tonsils நீக்கப்பட்டவர்கள் போலியோவின் மிக மோசமான தாக்குதலுக்கு (மூளையைத் தாக்கும் Bulbar Polio-வால் பாதிக்கப்படுகின்றனர்) உள்ளாகுகின்றனர் என்பது தெளிவாக உள்ளதால் Tonsils அறுவை சிகிச்சை செய்யாமல் இருப்பதே நல்லது.

கொள்ளை நோயாக (Epidemic) போலியோ பாதிக்கும்போது, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை எனத் தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் நான்கில் மூன்று பங்கு போலியோ கடந்த 10 ஆண்டுகளில் போடப்பட்ட தேவையற்ற ஊசிகளின் விளைவே எனக் கூறப்பட்டுள்ளது. (The Lancet Volume:341)

வட இந்தியாவில் உள்ள ஒரு கிராமத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் 1990-91இல் செய்த கள ஆய்வில் பல பேர் போலியோவால் பாதிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இவர்களில் 60% சாதாரண சுரத்திற்காக கிருமிக் கொல்லிகள் (Antibiotics) ஊசி தேவையற்று போடப்பட்டிருந்தனர் எனத் தெரிய வந்துள்ளது. (National Medical Journal of India Vol:.10 No.1 Jan-Feb 1997, Pages 8-10)

உத்தரப் பிரதேசத்தில் போலியோ தடுப்பு மருந்து கொடுத்தும் புதிதாக 2002-ஆம் வருடம் 26 பேர் போலியோவால் பாதிக்கப்பட்டதன் விளைவாக மருந்தின் தரம் குறித்து இந்திய அரசு உலக சுகாதார நிறுவனத்திற்கு கடிதம் எழுதியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

Dr. Kaita (Dean of Pharmacology at the Ahmadu Bello University, Kano நாடு) zaria - இவர் செய்த ஆய்வில் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட போலியோ தடுப்பு மருந்துகளில் பின் விளைவுகளை உருவாக்கும் பல கலப்பட மருந்துகள் (17 வகை - உதாரணத்திற்கு Estradiol - இவை இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் திறன் கொண்டவை) கலந்திருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.

அஸ்ஸாமில் போலியோ தடுப்பு மருந்து கொடுக் கப்பட்ட 10 குழந்தைகள் இறந்துள்ளன. 500க்கும் மேற்பட்ட குழந்தைகள் பின் விளைவுகளுக்காக மருத் துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளன. இது Silchar எனும் இடத்தில் நடந்தது. தில்லியிலும் (முராடாபாத்) இதே போன்று 2002-இல் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட பின்னரும் பல பேர் போலியோவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போலியோ தடுப்பு மருந்தால் வரும் போலியோவை Vaccine Associated Paralytic Polio (VAPP) என அழைப்பர்.

இந்தியாவிலும் பல வருடங்களுக்கு முன்னரே போலியோ தடுப்பு மருந்தின் காரணமாக போலியோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. (Basu SN: Journal of Indian Medical Association1986, Bhagwat SM etal-Indian Journal of Medical Sciences -1966.)

இந்தியாவில் தற்சமயம் இயற்கையான போலி யோவைக் காட்டிலும். தடுப்பு மருந்து காரணமாக வரும் போலியோ அதிகம் என பல இந்திய மருத்துவ அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். உ-ம். Dr. Jacob John (இவர் இத்துறையில் மிகச் சிறந்த வல்லுநர்.)

இந்திய புள்ளி விவரங்களின்படி இது 1.5-2 மில்லி யன் Dose-க்கு 1 நபர் என கணக்கிடப்பட்டுள்ளது. இது பிற நாடுகளோடு ஒப்பிடுகையில் மிகவும் அதிகம். இந்தியாவில் இதன்(VAPP)பாதிப்பு ஒரு வருடத்திற்கு 300 பேர் இருக்கக் கூடும் என Dr. Jocab John கூறுகிறார். VAPP-யை கருத்தில் கொண்டே பல வளர்ந்த நாடுகள் போலியோ சொட்டு மருந்தை (OPV) பயன்படுத்து வதில்லை. அங்கு போலியோ தடுப்பூசி (IPV) பயன்படுத் தப்படுகிறது.

OPV எனும் போலியோ சொட்டு மருந்து முழுவதுமாக பாதுகாப்பற்றது. போலியோ தடுப் பூசியும் (IPV) முற்றிலும் பாதுகாப்பானது எனக் கூற முடியாது. அக்டோபர் 2004 வரை 200-க்கும் மேற் பட்ட குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட் டுள்ளது தெரியவந்துள்ளது.

சமீபத்தில் ஆந்திராவில் சிரிகாக்குளம் பகுதியில் ஒரு குழந்தையும், உ.பி. மாநிலத்தில் 8 குழந்தைகளும் போலியோ தடுப்பு மருந்து முழுமையாகக் கொடுக் கப்பட்டிருந்தும் போலியோவின் பாதிப்பிற்கு உள் ளாகியிருப்பது தடுப்பூசியின் திறனை கேள்விக்கு உள் ளாக்கியும், தடுப்பு மருந்தின் காரணமாகவே அப் பாதிப்பு வந்திருக்கக் கூடும் என்பதையும் நிறுவுவதாக உள்ளது.

**தமிழ்நாட்டில் போலியோ தடுப்பு மருந்தின் பாதிப்பு**

1989-91 இல் பாண்டிச்சேரியில் 54% குழந்தைகள் 3 வேளை போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட பின்னரும் போலியோ பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். (Journal of Epidemiology and Community Health (London) vol: 51 no:6 Aug 1997 pages 443-48) அதற்குக் காரணம், கொடுத்த தடுப்பு மருந்தே என பலரும் கருத்து தெரி வித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் சமீபமாக 2004-இல் ஒரு குழந்தை போலியோ சொட்டு மருந்து கொடுத்தும் போலியோவின் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது. மேலும் பிற இடங்களில் போலியோ பாதிப்பு இங்கொன்றும், அங்கொன்றுமாக தலை தூக்கிய வண்ணம் உள்ளது.

நவம்பர் 2, 2000-இல் அமெரிக்காவில், St. Louis என்னுமிடத்தில் அமெரிக்க மருத்துவர்களும் அறுவை சிகிச்சை நிபுணர்களும் (AAPS) அவர்களது 57-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் 'தடுப்பூசிகள் கட்டாயமயமாக்க வேண்டும் எனும் கருத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்' எனத் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானம் ஒருவரின் எதிர்ப்புகூட இல்லாமல் இனிதே நிறை வேறியது.

Harris Coulter எனும் அமெரிக்க, மருத்துவ வரலாற்று நிபுணர் 'Vaccination, Social Violence and Criminality' என்பது குறித்து எழுதுகையில் "அமெரிக்காவில் வாழும் பெரும்பான்மையான மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள், வளரும்போது ஏற்படும் பலவகைக் குறைபாடுகள், Autism, Hyper-activity, Dyslexia, Seizures (வலிப்பு நோய்) போன்ற வியாதி களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குக் காரணம் சிறு வயதில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தடுப் பூசிகளே" எனத் தெளிவாக சுட்டியுள்ளார்.

போலியோ வைரஸ் நீர், உணவு மூலம் பரவுவதால், பாதுகாக்கப்பட்ட குடிநீர், நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்க சத்தான உணவு, சுற்றுப்புறம்/தனி நபர் தூய்மை பாதுகாக்கப்படுதல், அது அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யுமாறு உள்ள சமூக சூழல், முறை யான கழிப்பிட வசதி கொண்ட வீடு அனைவருக்கும் கிடைத்தல், காலில் அணிய செருப்பு (இந்திய சூழலில் இன்றளவும் சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதிக்க சாதிக்காரர்களால் காலில் செருப்பு அணிவதை தடுக்கும் நிலை இருக்கிறது) முதலியன அனைவருக்கும் கிடைக்கச் செய்வதே நிரந்தரத் தீர்வை நோக்கிய பாதை யாக இருக்கும்.

ஆக தடுப்பூசிகளைப் பொறுத்தமட்டில் அதன் சாதக/பாதகங்களை தெரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இது குறித்தான விழிப்புணர்வு இருந்தால் மட் டுமே தடுப்பு ஊசி/மருந்து தேவையா, இல்லையா என சரியாக முடிவு எடுக்கமுடியும். ●



படிப்பகம்

www.padippakam.com

# உயிர்வதை

■ பவானி

**இந்த கருப்பன ஒம்போது வருசமா பழக்கம். அதுக்கு முன்னெல்லாம் யாரும் கண்டுகிறதே கெடையாது. ஏன்னா அது அம்மாவதான் நாங்க வளத்தோம். இத கண்டுக்கிறதே இல்ல. அதும் பேரும் கருப்பன்தான். நல்ல மொய்க் மொய்க்குனு இருக்கும். கன்னங்கரேல்னு இருக்கிறதனால கருப்பன்னு பேரு வெச்சிப்புட்டேன்.**

அந்த நாய அடிச்சி போட்டுருங் கப்பான்னு எங்க தெருவுல கீறவங்க சொல்றாங்க. எனக்கு எந்த நாயின்னு விளாவாரியா தெரியல. அப்பாற மா கேட்டப்பதான் தெரிஞ்சது நம்ம கருப்பன் நாய்தான்னு. எனக்கு பக்குன்னு ஆச்சி. சரி... பையன் யாரு வூட்லியோ பூந்து கூல் சட்டியை உருட்டிக்கிறான் அதான் எல்லாருமா கூடிக்கினு நிக்கிறாங்கன்னு நெனச்சிக்கினு, என்வேல உண்டு, வெட்டி உண்டுனு கெடந்தேன்.

ஒரு நாளு மட்ட மதியானம் இருக்கும். வெய்யிலோ புட்சி புடுங்குது. நான் எங்க வூட்டு வாசல்ல கீற புங்க மரத்து நெகில்ல ஒக்காந்துகினுகீறேன். பக்கத்துல யாரு வர்றா, யாரு போறான்னு தெரியல. அந்த அளவுக்கு ஒரே மயக்கம். திடீர்னு பொணக்கவுல் மூக்குல அப்டியே பச்சையா கவ்வுது. ஏரெடுத்துப் பாத்தா நம்ம கருப்பன் வாலாட்டிக்கினு கீது. பட்டுன்னு ஏந்து தூரமா போய் நின்னுக்கினு பாத்தா என்னாலதாங்க முடியாத நாத்தம். எங்கண்ணே பிதுங்கி தொங்கிக்கிற மாதிரி ஆயி போச்சி. வெய்யில் மயக்கம் எப்படி போச்சினே தெரில. மனசெல்லாம் நொந்துபோச்சி. தோளுமேலகெடந்த துண்ட எடுத்து மூக்குல வச்சிக்கினு கருப்பன் தலைய பாத்தேன். பீசக் காது மட்டும் கொல கொலன்னு அய்வி போயி கீது. காது கெட்டுப் போயி, ரெத்தமும், தண்ணியுமா வழிஞ்சி சாக்க சாக்கியா ஒய்விக்கினு கீது. அதுங்கால்ல வியற ரெத்தத்த நாக்கால சுத்தமா நக்கி எடுத்துக்கினே என்னப் பாக்குது. என்னால ஒன்னும் செய்ய முடியல. அப்பிடியே நின்னுப்புட்டேன். எந்த நாயி இப்படி வெக்க வர வேதி வர கடிச்சிப்போச்சோ தெரியல. ஒரு பக்கம் மண்டையிலிருந்து கயித்து வரைக்கும் வீங்கிப் போய்கீது. சட்டுன்னு வூட்டுவுள்ள நொய்ஞ்சி கை கெட்டிக் கூலு அள்ளிக்கினு வெளி வந்தா நடவுள்ள வந்து படுத்துக்கினு கீது. ஏய் திர்றி... திர்றின்னு அலட்டி வெளியே கொண்ணாந்துட்டேன். அள்ளியாந்த கூல சைடுக்காவா மேல வச்சிட்டு தூரமா நின்னுக்கினேன். அது பாட்டுக்கும் லவுக்கு... லவுக்குன்னு... மொல்லமா துன்னுது. துன்னும்போது வலிக்கிதாகாட்டியும், மண்டையும் கயித்தையும் வலிக்காம துன்னுப்புட்டு பக்கத்து வூட்டு சந்துக்கா பூட்சி. ஆனா புண்ணு நாத்தம் மட்டும் தாங்க முடியல. நான் மூக்க புட்சிக்கினு கூலும் கீலும்மா கீற கைய கைவிக்கினு வர சாக்கடிக்காப் பூட்டேன்.

இந்த கருப்பன ஒம்போது வருசமா பழக்கம். அதுக்கு முன் னெல்லாம் யாரும் கண்டுகிறதே கெடையாது. ஏன்னா அது அம்மா வதான் நாங்க வளத்தோம். இத கண்டுக்கிறதே இல்ல. அதும் பேரும் கருப்பன்தான். நல்ல மொய்க் மொய்க்குனு இருக்கும். கன்னங்கரேல்னு இருக்கிறதனால கருப்பன்னு பேரு வெச்சிப்புட்டேன். இது நடந்து இருவது வருஷத்துக்கு மேல ஆயி போச்சி. பக்கத்து வூட்டு பசங்கல்லாம் பால்வாடி சோத்துக்கு பழைய சேரிக்குத்தான் போவாங்க. அதுங்களோட நானும் போயிடுவேன். எனக்கு சோறு கெடையாது. இருந்தாலும் சொம்மா அவங்களோட போறது. அப்ப தான் இந்த கருப்பனோட அம்மா சின்ன குட்டியா வெய்சி ஒனத்தன நெல்லுமேல ஓடிக்கினும், நக்கிக்கினும் இருந்திச்சி. நான் அத அப்பிடியே வவுத்துல வச்சி அடக்கினு வூட்டுக்கு வந்துட்டேன். சில பேரு தருமன்னு கூப்புடுவாங்க. சில பேரு கருப்பன்னும் கூப்புடுவாங்க. இது எத்தன குட்டிப் போட்டுக் கீது தெரியுமா? வயசாயி நாடி நரம்பு அத்து கண்ணு மண்ணு தெரியாம சுத்திகினு இருந்திச்சி. கடைசியா எங்க ஊரு பால்வண் டிக்காரன் அட்சிப் போட்டு பூட்டான். அதோட குட்டி தான் இப்ப காது அயிவி போய்கீற கருப்பன். அம்மாவுக்கு வச்சபேரையே இதுக்கும் வச்சி கூப்பிட்டோம். இது அம்மா மாதிரியே திருடாம கொல்லாம இருக்கும். இந்த தெருவே சோறு போட்டு வளத்திச்சி. பக்கத்து தெரு, அக்கத்து தெருவுன்னு போவாது.

எங்க அப்பா அம்மா வேல வெட்டிக்கிப் போயிட்டாங்கனா தலமோட்டு வாசல்லியே படுத்துக்குனு தூங்கும். நான் வெளியூர் போய் வந்தன்னா போதும்... அது அப்பிடியே ரெண்டு காலையும் எம்மேல தூக்கி போட்டுக்கினு கொஞ்சும். அப்ப எம்மனசு சொகமா இருக்கும். நான் அப்பிடியே தலையையும், காதயும் தடவி விடுவேன்.



படிப்பகம்

www.padippakam.com

அது எம்பின்னாலியே வரும் போவும். ஆனா இன்னிக்கி இந்த கருப்பன் தலய பாத்தாலே போதும். புதுசா பாக்கிறவன் நாளு நாளிக்கி சோறு தண்ணி குடிக்கமாட்டான். அங்கியே வாந்தி எடுத்து செத்துப் போவான். அப்பிடியே மொளேர்னு தலயெல் லாம் ஈ மொச்சிக்கினு... சீவும் தண் ணியும் ஒய்வுக்கினு கீது...

இந்த கருப்பன் என்னா பன் னும்முனா, யாருமில்லாத வூட்டு தாவாரத்தல, இல்லைன்னா நடை யில பட்துப்புட்டு வரும். அது எங்க தெருவுக்கு லொக்கு லொக் குன்னு கைத்த ஒரு பக்கமா தூக் கினு, எங்க வூட்டுக்கு வந்து நிக்கும். செத்த நேரத்தில அய்வி போன கறி நாத்தம் குப்புனு வரும். இந்த கறி நாத்தம் பக்கத்தில அக்கத்தில பர வன ஒடனே பாக்கிறவங்க மூக்க புட்சிக்கினு அப்பால போய் நின் னுக்குவாங்க. கல்லெடுத்து வலிக்காம மேல போட்டு தாமுட்டு வாசல்ல இருந்து அப்பால ஒட்டி விடுவாங்க. அப்பிடி அப்பிடியே எல்லாருமா ஒட்டி... ஒட்டி... அது அந்தாண்ட தெருவுக்குப் போய்ச் சேந்துடும்.

முன்னெல்லாம் அந்த தெருவே சோறு போட்டு வளத்து வச்ச கருப்பன இன்னிக்கு இந்த தெருவே கல்லப் போட்டு தொரத்தும்போது பெத்துபுள்ள கணக்கா மனசொடிஞ்சி போனேன். தலை சாயற நேரத்தில இதுக்கு மருந்து போட்டு காப்பாத்த முடியாத நிலைக்கு ஆயிபோச்சி. இருந்தாலும் நாத்தம் கொறை யிட்டுமேன்னு டின்சர் வாங்கியார பக்கத்து தெருவுல கீற இனாம் ஆஸ்பத்திரிக்குப் போனென். தயக் கத்தோட கம்பௌண்டருக்கிட்டெ கேட்டேன்.

என்னாப்பா... மனுசனுக்குத் தான் டிஞ்சரு... நீ என்னாடான்னா நாய்க்கின்னு கேக்கிறியே... நெலம எப்பிடி இருக்குப் பாரும்மான்னு சீட்டு எய்தி குடுக்கிற நர்ச பாத்து சொல்லிக்கினு என்ன உள்ள வரச் சொன்னாரு. நான் டிஞ்சரு கெடக் கப்போற சந்தோசத்துல தயக்கத்த உட்டுப்புட்டு உள்ள போனேன். அந்த கம்பௌண்டரு சின்ன அரை பாட்டுலு டின்சரு எடுத்து மேஜ மேல வெச்சிட்டு பஞ்ச பிச்சி பிச்சி எடுத்துக்கினு சொன்னாரு...

இந்த பஞ்ச எடுத்து காயங்கீற எடத்தில நல்லா தொடச்சிட்டு, அப்பாரம்தான் டிஞ்சரு வெக்கனும்... என்னா புரியுதான்னு கேட்டாரு. நான் தலைய மட்டும் ஒரே அசக்கு அசக்கிட்டு கொடுத்த பஞ்சையும், டிஞ்சரையும் எடுத்துக்கினு வூடு வந்து சேர்ந்தேன். அன்னைக்கு நாள் பூரா கருப்பன் எங்க வூட்டுப் பக்கமே வரல. கம்பௌண்டரு சொன்ன மாதிரி எல்லாம் காத புட்சி, கால புட்சி எப்படி ஊத்த முடியும்...? பக்கத்தல ஒருத்தரு ரெண்டு பேரு இருந்தா பரவா யில்ல... அது முடியாதே. சின்ன காயமா இருந்தா செய்யலாம். இது தான் காது மண்டைன்னு மொத் தமா அய்வி போய் கீதே. இத எப்படி புட்சி மருந்து போடுறது. சரி இன்னிக்கி கருப்பன் வந்தா அப்பிடியே காயத்துல மருந்த ஊத் திர வேண்டியதுதான். வேற வழி யில்ல. நாத்தம் கொஞ்சம் கொறை யுமே தவிர பொயிக்கிறது கஸ்டம் தான்னு தோனிச்சி.

எங்க ஊர்ல புள்ளையார் கோயில் கீது. ஆனா நீங்க நெனைக் கிற மாதிரி கார்க்கில் புள்ளையாரு, கம்ப்யூட்டர் புள்ளையாருன்னு ராம கோபாலன் கூப்புட்டுப் போற புள்ளையாரு இல்ல. இது அந்த காலத்திலேயே எங்க பாட்டம் மாரு வச்சிக்கிற கூரான கல்லுதான். அந்த கல்லுக்கு வெள்ள துண்ட கட்டி வெச்சிருப்பாங்க. இதுதான் எங்க ஊரு புள்ளையாரு கோயில். இப்பகீற நாட்டாமை எல்லாம் ஒன்னா கூடி பாட்டம்மாரு வச்சி கும்புட்ட கல்லு புள்ளையார தூக்கிப்புட்டு இராமகோபாலன் புள்ளையார வச்சிப்புட்டாங்க. இதல எனக்கு மட்டும் மனஸ்தாப மில்ல. எங்க கூட்டாளிங்களுக்கும் கூடத்தான் மனஸ்தாபம். நம்ம கருப்பனுக்குக்கூட அம்மா யகத் தாளமோ ஏவாடோ தெரியல. அப்பப்ப அதுவுள்ளதான் பேனு வைப்பான். அக்கம் பக்கம் கீறவங்க கருப்பன அடிச்சி முடுக்குவாங்க.

இப்ப கருப்பனுக்கு வந்துக்கிற நோவுகூட கோயில்ல பேனு வச்சத னாலதான் வந்திருக்குமுன்னு எங்க பாட்டி சொல்லிச்சி. நான் எங்க பாட்டிய அதுக்காகத் திட்டுவேன். வெறி புடிச்ச வேத்து நாயி பலமா கடிச்சி கொதறனதாலதான் வந் திச்சே தவிர புள்ளையார் கடிச்சி யில்லடன்னு சொன்னதுக்கு எம்மேல பாட்டிக்கு கோவம்.

சாயந்திரம் நேரம். பள்ளிக் கோடத்துப் பசங்கல்லாம் கருப்பன தொரத்தி அடிச்சிக்கினு கீதுங்க. நான் ஓடிப் போய் வாங்கியாந்து வெச்சியிருந்த டின்சர எடுத்துக் கினு அதுந்தலையில காதுல ஊத்தி வுட்டத்தான் தாம்சம். படபடன்னு தலைய ஆட்டிபுட்டு தள்ளாடி தள்ளாடி தெருவே போய்க்கினு கீது. என் முட்டி காலுக்கு கீய சில்லி சீல்லியா சீவும் ரெத்தமும் தெளிச் சிட்டு பூட்சி. நான் மூக்குல மறச் சிருந்த துண்ட எடுத்துட்டு நின்னா' ஒரே கௌலு தாங்க முடியில. தெரு வுல போறவங்க வரவங்க எல்லாம் மூக்க புச்சிக்கினு போறாங்க. கருப் பன் ரொம்ப தூரமா நின்னு என்ன பாக்குது. எனக்கு ஏன்டா கருப்பன வளத்தோம்முனு ஆயிப்போச்சி. எப்படி இருந்த கருப்பன். எம்முஞ்ச நக்குவான். கால நக்குவான். ஒரே எகுறா எகிறி ரெண்டு கால எடுத்து என்கைமேல வைப்பான். இன்னிக்கி அவனுக்கு வந்துகிற நிலமைய பாத்தியாடான்னு மனசுல நெனச் சிக்கினேன்.

இப்ப சேரியில கீற பாதி ஜனங் களுக்கு நாத்தமடிக்கிற நாயி எங்க வூட்டுப்பக்கமா வந்திச்சி, உங்க வூட்டுப்பக்கமா வந்திச்சா... ஒரே நாத்தம் தாங்க முடியலடி தாயி... பீசக்காது சீத்தாப்ளி பயித்த பிதுக் கனா எப்படி இருக்குமோ அப்பிடி அய்வி போய்கீது டியம்மா...ன்னு தெரு தெருவா பேசுற அளவுக்கு கதை வளந்து போச்சி. இப்பல்லாம் எங்க தெருவுல பேசுற அளவுக்கு பகல்லயும் வரதில்ல.

ராவிலியும் வரதில்ல வளத்தவங் களே தொரத்தி அடிக்கிறதனால மன சொடிஞ்சி புதுகாலனிக்கா போயி கொட்டா இல்லன்னா யாரும் இல்லாத வூட்டு தாவாரமா பாத்து தூங்கும்... வூட்டுக்காரங்க பாத்துட்டாங்கன்னா வெளிய ஓடி யாந்து படுத்துக்கும். இன்னிக்கோ நாளைக்கோ தெரியல. "பூட்டாக் கூட" நல்லா தாம் இருக்கும். ●



படிப்பகம்

www.padippakam.com

■ மருத்துவர் காசி பிச்சை

# தீவிளை தாது

தாய்மை அடைந்த பெண் மக்களில் பலர் சாம்பல் சாப்பிடும் பழக்கம் கொண்டிருப்பார்கள். சில நோஞ்சான் குழந்தைகளும் சரி, கன்றுகளும் சரி மண்சாப்பிடும் ஆவல் கொண்டிருக்கும். இதற்குக் காரணம், நம் உணவில் போதிய தாது உப்புக்கள் இல்லாமை என்பது தான். அனைத்துவித தாதுக்களும் நமக்குத் தேவை என்றாலும், குறிப்பாக "பெரும்பான்மை தாது" (Major Minerals) என்று சொல்லக்கூடிய சோடியம், பொட்டாசியம், மக்னீசியம், கால்சியம், இரும்பு தாதுக்களும், "சிறு பான்மை தாது" (minor minerals) என்று சொல்லக் கூடிய தாமிரம், கோபால்ட், மங்கனீசு, துத்தநாகம், அயோடின், புளோரின் உட்பட அனைத்து தாதுக்களும் அன்றாடம் நம் உணவில் சேர்க்கப்பட்டே ஆக வேண்டும்.

பொதுவாக எந்தப் பொருள் எரிக்கப்பட்டாலும், எரிந்து முடிந்த சாம்பலில் இந்தத் தாதுக்கள் நிரம்பியுள்ளன. இந்த வித தாதுக்களின் கலவையை நம் உடலுக்கு, கால்நடைகளின் உடலுக்கு கொடுத்தே தீர வேண்டும். உலக உயிரினங்களே பயிர் வகைகளை, தாவரப் பொருட்களை உண்டுதானே உயிர் வாழ்கின்றன. விளையும் பயிர்களில் இந்த தாதுப்பொருட்கள் நிரம்பியிருந்தால்தானே அதனை உட்கொண்டு மற்ற விலங்கின உயிர்கள் செரிமானித்து கிரகித்துக் கொள்ள முடியும்!

தாதுப்பொருள் கலவை தயாரிப்பதை நாம் ஒன்றும் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. 600 ஆண்டுகளுக்குமுன் பழனியில் மூலிகை அறிஞர், சித்த மருத்துவர் அனைத்துவித நோய்களுக்கும் சிகிச்சையளித்து குணமாக்கினார். இவரின் "தாதுக் கலவைப் பொடி" தமிழ் மருத்துவத்திற்கே அரும்பெருஞ் சாதனையாகக் கருதப்பட்டது.

பழனியில் குவிந்த பல்வேறு நோயாளிகள் இக்கலவைப் பொடியை உச்சி முதல் உள்ளங்கால் வரை நன்றாகப் பூசி, சூரிய உதய வெய்யிலில் நீண்ட நேரம் உலவிவர விடப்பட்டார்கள். இந்தத் தாதுக்கலவையும், சூரிய ஒளியின் கதிர்வீச்சும் சேர்ந்து, உடலுக்குத் தேவையான வைட்டமின் 'டி' மற்றும் தாதுச் சத்துக்களை தோல் வழியே உடலுக்குள் உறிஞ்சிக் கொள்ள வழி வகை செய்தன.

அதிகாலை எழுதலும், காலை வெய்யிலின் கதிர் வீச்சும், உடல் இயக்கத்திற்கான தாதுக்களும், நரம்பு மண்டலத்தின் செயல் பாட்டை தூண்டிவிட்டு, சராசரி இயக்க நிலைக்கு உயர்த்தி, மக்கள் நலமடையச் செய்தன. இதனை நாமே தயாரித்துக் கொள்வது மிக எளிது.

1. கன்று ஈன்ற பசுக்களின் (நாட்டுமாடு - அயல் இன பசுக்கள் இல்லாதிருக்கலாம்) சாணத்தை தூய்மையானதாக சேகரித்து, விரட்டியாகத்தட்டி, நன்றாக உலர்த்தி சேகரித்துக் கொள்ள வேண்டும்.

2. உயிர் மரத்திலேயே காய்ந்து பட்டுப்போன அரசங்குச்சி, மாங்குச்சி, பால் வடியும் மரங்களான ஆலங்குச்சி, அத்திக் குச்சிகளை சேகரித்து நன்றாக உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

3. அன்னக் கூடை போன்ற வாய் அகண்ட, மின்கதிர் எளிதில் பாயும் செப்புப் பாத்திரத்தை இதற்காகவே செய்து தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

4. மலைஉச்சி போன்ற உயரமான செங்குத்துப் பாறையின் மேல், நிழல் இல்லாத இடத்தில், மேகமூட்டம் இல்லாத நாளில், காலைக்கதிர் நேராக தங்குதடை இல்லாமல் விழக்கூடிய உச்சிப்பகுதியில் கிழக்கு நோக்கி அமர்ந்து கொண்டு , சேகரித்த அனைத்துப் பொருட்களையும் கையருகே வைத்துக் கொள்ள வேண்டும். செம்பிலான அன்னக் கூடையைத் தவிர அருகில் வேறு எந்தவித உலோகப் பொருளும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

5. சூரியக் கதிரையும் தீ மூட்டத்தால் மேலெழும்பும் ஆவியையும் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் தண்ணீருக்கு உண்டாகையால், அருகில் தண்ணீர் இல்லாத (குடிநீர் கூட இல்லாத) இடத்தை தீ மூட்டத்திற்கு தேர்ந்தெடுக்க வேண்டும்.

6. ஆயிற்று! காலைக் கதிரொளி புறப்படும் சரியான நேரத்தில் செப்புப் பாத்திரத்தில் கூடம் ஏற்றி, விரட்டியில் தீ மூட்டி, எரிக்கத் தொடங்கி (நெய் சேர்ப்பதும் உண்டு) அரசங்குச்சி, மாங்குச்சி, ஆலங்குச்சி, அத்திக்குச்சி (சுள்ளிகள்) கொண்டு சிறுகச் சிறுக தீயில் இட்டு எரிக்க வேண்டும். பொருட்கள் புகை கக்காமல் தீப்பற்றி எரிய வேண்டும் என்பதில் கவனம் தேவை. அதிலிருந்து கிளம்பும் ஆவி, புகையில்லாமல் தூய்மையான ஆவியாக இருக்க வேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கம்.

முழுதும் எரிந்து தணிந்தவுடன் எவ்வித உலோகக் கரண்டியையும் பயன்படுத்தாமல், புதிதாக ஒடித்துக் கொண்டு வரப்பட்ட பச்சை வேப்பங்குச்சி அல்லது பச்சை கருவேப்பிலை குச்சி அல்லது பச்சை ஆவாரங்குச்சி கொண்டு கிளறிவிட்டு தணலை தணியச் செய்யவேண்டும். முழுவதுமாக ஆறி அடங்கும் வரை செப்புப் பாத்திரத்தினுள் கிளறிவிட்டுக் கொண்டிருக்க வேண்டும். முழுவதுமாக ஆறி அடங்க ஒரு முழுநாள்கூட ஆகிவிடும்.

தயாரிக்கப்பட்ட தாதுக்கலவையில் மணல் துகள்கள் கலந்திருக்க வாய்ப்புண்டு. ஆகவே பொடியினை மெல்லிய துணியால் சலித்து, தூய்மை செய்து, புதிய பயன்படுத்தாத 'மண்' கலயத்திற்குள் பாதுகாப்பாக நிரப்பி, துணியால் வேடு கட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

தாதுப்பொடியை விபூதி போல நெற்றியிலும், உச்சந்தலையிலும், தொண்டைக்குழி, நெஞ்சுக்குழி



படிப்பகம்

www.padippakam.com

யில் பூசி வரலாம். திடீர் நரம்பு மண்டலத் தாக்குதல்காரர்களுக்கு உடல்முழுவதும் உச்சிமுதல் உள்ளங் கால் வரை பூசி, காலை மாலை வெய்யிலில் உடல் முழுவதும் சூரி யக் கதிர் படும்படி நிற்க வைத்துக் கொள்ளலாம். ஒரு சிட்டிகை அள விற்கு தினமும் வாயில் இட்டு உமிழ் நீரில் கரைத்துக் குடித்து வரலாம்.

பக்கவாதம் கொண்டவர்கள் இந்தப் பொடியை உடல் முழுவதும் தடவுவதுடன், வாதம் தாக்கப்பட்ட பகுதியில் நன்றாகத் தேய்த்துவிட்டு வரவேண்டும். குளிக்க வேண்டிய அவசியம் இல்லை. காற்றில் கரைந்து போய்விடும். துணியால் துடைத்து விட்டு ஆடை உடுத்தி மற்ற வேலை களில் ஈடுபட்டுக் கொள்ளலாம். அப்படியே குளிக்க நேர்ந்தால் குளிர்ந்த நீர் குளியலை மட்டும் கடைப்பிடிக்க வேண்டும்.

ரத்த சோகையில் மெலிந்து, வயிறு பெருத்து, நோஞ்சானாகக் காட்சியளிக்கும் இளங்கன்றுகளுக் கும், குறிப்பாக எருமைக் கன்று களுக்கு தீவிளை தாதுப் பொடியை தினமும் இரண்டு கிராம் வரை புகட்டி வருவது நாளா வட்டத்தில் நல்ல பயன் கொடுக்கும். மண் சாப் பிடும் பழக்கத்தையும் அறவே மறந்துவிடும்.

நரம்பு மண்டல பாதிப்பு என் பதே நீண்ட நாளாகத் தாக்கப்பட்ட நோய் என்பதால், குணமாகவும் நீண்ட நாட்கள் பிடிக்கும் என் பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பழனியில் செய்யப்பட்ட இந்த சித்த மருத்துவம்தான் விபூதியாக பரிணமித்து, உடல் முழுவதும் பூசப்பட்ட ஆண்டிகோல முருக னாக அவதரித்து, கோவில்களில் அர்ச்சனை பிரசாதமாக உருமாறி வழிபாட்டு அடையாளமாக நிலைத்து நின்றுவிட்டது.

“தீவிளை தாது” தயாரிக்கும் போது எழக்கூடிய மூலிகைகளின் ஆவி, சூரியக் கதிர்களுடன் சேர்ந்து, தாமிர உலோகத் தாக்கத்தால் ஒரு மின்காந்தப் புலன் ஊடாகச் செலுத்தப்பட்டு (சார்ஜ் செய்யப் பட்டு) வளிமண்டலத்தையே பக்கு வப்படுத்தும் சக்தியை பெற்று, தூய்மையான சுற்றுப்புறச் சூழலையே நிர்மானித்து விடுகிறது.

இதனால் உயிரினங்களுக்குத் தேவையான தூய்மையான வளி மண்டலம் கிடைப்பதுடன், மரம் செடி கொடிகளுக்கு ஊட்டமாக வும் அமைந்து, தூய்மையடைந்து, மழைவளம் பெருகி உலக உயிரினங் களே செழிப்பாக வாழ வகை செய் கிறது. ●

## உயிரை கேட்கும் கோவம்...

ப. முருகன்

எனக்கென இருந்த
இறகுகளை உடைத்தாய்
உன் சுபாவமென சகித்தேன்
ஊன்றிக் கொள்ள இருந்த
கோலையும் உடைத்தாய்
நாயடித்தல் பாவமென
பொறுத்தேன்

என் சகிப்புகளையும்
பொறுமைகளையும்
உன் வீரமென கூறும் நீ
அடிமையென்றும் கூறத்
தயங்குவதில்லை
உன்னை ஒன்று கேட்கிறேன்
உயிரென்பது யாருக்கு
அழுத்தமானது...

## நாய்கள்...

என் தெரு
ஆண் நாயொன்று
மேலத்தெரு
பெண் நாயோடு புணர..

புணர்வின் சுமையை
எங்களூர் இரண்டு
வீதிகளிலும் வரைய

மேலத்தெருவின்
மீசை முகங்கள்
ஒன்றின்றி கருக...

மறுநாள்...
ஆண் நாய் தூக்கில்...
கீழத்தெருவில்
ஆண் நாய் வளர்க்கத் தடை..

பாவம்... பரிதாபம்...
நாய்களுக்கு அறிவு ஐந்தாம்...



படிப்பகம்

www.padippakam.com



# ஒத்த அடி

"காய்ச்ச காய்ச்ச
இறுகுகிறது எம்பறை

நெருப்பின் தகிப்பில்
சிறுதிண்டலிலும் பிறக்கிறது பெருமுழக்கம்
பேரலைகளாய் எழும்
காற்றின் அணுக்களில் அதிர்வுகள்

இசையின் திசைகளில்
கலந்திருக்கிறது எம் உயிர்

திரண்ட பறைகளின்
குமுறல்களில் பொங்கும்
யுகங்களின் கோபம்
மறுக்கப்பட்டவர்களின் மனதாக
ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக"

சுகுமார் பேருந்தை விட்டு கீழே கால் பதித்த வினாடியில் ஒலிக்கத் தொடங்கின தாரை தப்பட்டைகளோடு பறை இசையும்.

"ஜஞ்சனக்கு ஜனக்கு ஜனக்கு
ஜஞ்சனக்கு ஜனக்கு ஜனக்கு
ஜஞ்சனக்கு ஜனக்கு ஜம்"

வழக்கம் போல நடேசன் தான் பாட்டு...

"தானா வந்தான் தானாவந்தான்
தங்கவேலு
இப்பிடி வந்தான் அப்பிடி வந்தான்
எங்க வேலு
ஓ ட்ரியோ ட்ரியோ
ஓ ட்ரியோ ட்ரியோ"

நாலைந்து வரிப்பாடல்... பின் பறையும் தப்பட்டையும் பின் தொடரும்.

"தானா தானா தானா தானா
வந்து போனா
இப்பிடி வாணா
ஓ ட்ரீயோ ட்ரீயோ
ஓ ட்ரீயோ ட்ரீயோ"

"டேய் நம்ம வக்கீல அலேக்கா தூக்குங்கடா. நம்ம புள்ள பாதம் தரைல படக்கூடாது"

"தூக்கி வையுங்கடா... ஏந்தோள் மேல ஏத்துங் கடா..."

"பெருசு... வேணாய்யா... உன்னால முடியாதுய்யா..."

"டேய் அந்தக் காலத்துல ரெண்டு தோள்லேயும் ரெண்டு மூட்டை நெல்லை வச்சிகிட்டு ஓடுனவன்டா நானு..."

"தூக்குங்கடா... ஏறு வக்கீலு..."

"வாய்யா வாய்யா வாய்யா வங்கத்தூராரு
வளச்சி கிட்டார் ஜெயிச்சி புட்டார்
சிங்கத்தூராரு
ஓ ட்ரியோ ட்ரியோ
ஓ ட்ரியோ ட்ரியோ..."

பழமலை படையாச்சி முதன்முதலில் சால்வை அணிவித்தார். யாரோ சுகுமாரைத் தூக்கினார்கள். யாரோ தோள்மீது அமர்த்திக் கொண்டார்கள். யார் யாரோ மாலை அணிவித்தார்கள். வீடு வரை நடக்கக் கூடாதென அன்புக் கட்டளை வேறு.

'எதற்கு இதெல்லாம்... இந்த மக்களுக்கு நான் என்ன செய்துவிட்டேன்... எனது படிப்புத் திறமையை... தொழில் திறமையைக் கொண்டு செய்த ஒரே காரியம் இவர்களிடையே என் மதிப்பை உயரச் செய்து விட்டதா.'

சேரி மக்கள் தன்னைப் புகழ்வதில் பெரிய ஆச்சர்யமொன்றுமில்லை... தான் ஓடி விளையாண்ட வீடுகள்... பார்த்து பழகிய மக்கள்... நெருங்கிய உறவுகள் கூட...

ஊர்க்காரர்கள் கூட... ஒன்றாகத் திரண்டு வந்து மாலை மரியாதை என்று தன்னை பெருமைப் படுத்துவதென்பதை நினைக்கையில் சுகுமாருக்குள் சின்ன சந்தோஷத்தை கொடுத்தது.

'இந்த ரெண்டு சாதி ஜனங்களும் ஒன்னா இணைஞ்சு நின்னா... எவனும் இவுங்கள ஒன்னும் பண்ண முடியாது... பாப்போம்... மனுசன் நெனச்சா நடக்காதது கூட இருக்கா...'

எல்லாம் சுகுமார் செய்த ஒரே காரியம்... அவனை சாதனையாளனாக்கி அவன் யாரென்று ஊருக்கு தெரிய வைத்துவிட்டது.எத்தனைப் பணமிருந்தாலும்... செல்வாக்கான பதவி இருந்தாலும்... படிப்பும் திறமையும் அவற்றை வெற்றி கொள்ளும் என்பது நிருபிக்கப்பட்டுவிட்டது.

சுகுமாரின் சிந்தனையை அறுத்தது அதிரடியாய்க் கிளம்பிய பறையொலி.

"ஜஞ்சனக்கு ஜனக்கு ஜனக்கு..."

சேகரும் கூத்தானும் ஆடத் தொடங்கிவிட்டால் அவுங்க வேகத்துக்கு பறையடிக்க ரெண்டு கை பத்தாது.

"உய்ய் உய்ய் உய்ய்ய்ய்" கூத்தானின் சீழ்க்கை சப்தம் பறையொலியையும் விழுங்கி முழங்கியது.

"டேய் நிறுத்ததுடா... வேற எதுவும் அடிக்காத. ஒத்த அடி அடிடா..."



படிப்பகம்

www.padippakam.com

பறைமேள இசையில் பல்வேறு பரிமாணங்கள் இருந்தாலும் இந்த ஒத்த அடிக்கு மட்டும் ஒரு ஸ்பெஷல் உண்டு. கேட்கக் கேட்க சுவையான சீரான ஓட்டம்... பார்வையாளர்களையும் ஆடவைக்கும் தாளலயம்... கடேய்சியில் கும்கும் என்று உச்ச ஸ்தாயியில் போய் நிறுத்தும் அழகு! அ! ஒத்த அடி- ஒத்த அடி தான்-

'ஜஞ்சக்சக் ஜஞ்சக்சக் ஜாங் சச்சக் ஜக்
ஜம் ஜம் ஜம் ஜம்...'

நடேசனுக்கு உற்சாகம் பீறிட்டு விட்டதை பாடிய குரல் சொன்னது.

"அஞ்சுப் புளியா மரம்
அரை நெல்லிக்கா மாயவரம் நா(ன்)
செத்தேன்னு சேதி கண்டா
செஞ்சி பெரண்டு வரும்
நான் மரிச்சேன்னு சேதி கண்டா
மதுர தெரண்டு வரும்
மோளக்கார அண்ணமாரே
தாளக்கார தம்பிமாரே
நீ ஒழுங்கா அடிச்சேன்னா
நா(ன்) உனக்கு சாராயம் வாங்கித் தருவேன்
நீ தப்பா அடிச்சேன்னா
உன்னை நிக்க வச்சி சுளுக்கெடுப்பேன்..."

தொடர்ந்து மேளம் ஒலிக்க யாரோ நிறுத்தினார்கள்...

"டேய் நிறுத்துங்கடா... அட நிறுத்துங்கடான்னா... வீடு வந்துடுச்சி..."

"மாப்ள... செம அடி அடிச்சே... இந்தா பத்து ரூவா... ஸ்பெசலா சாப்புடு... அதுவும் ஒத்த அடி அடிச்ச பாரு அதுக்குதான் இது... இன்னும் கொஞ்ச நேரம் இருந்து அடிச்சிட்டு போ..."

"டேய்... இது இன்னாடி அடி.... நம்ம சுகுமார் அடிச்துதாண்டா ஒத்த அடி... அடின்னா அடி செம அடி... சேரி ஆளுவன்னா சாராயத்துக்கும் சாப்பாட்டுக்கும் வாயப்பொளந்துகிட்டு நிப்பானுங்கன்னு நெனச்சானுங்களே! அவுங்களுக்கு நெத்தி அடி!"

"நெத்தியடி இல்ல மாமோய்... எழுந்திருக்கவே முடியாத மரண அடி...!"

மூணு மாதத்திற்கு முன் விடுமுறையில் தாமரைக் குளத்திற்கு வந்திருந்தான் சுகுமார்... வழக்கறிஞர் பணி சென்னையில்தானென்றாலும் மாதமொரு முறையாவது வீடு வந்திட வேண்டுமென்பது அவன் அன்னையின் ஆணை.

குடியானவத் தெருவையும் காலனியையும் பிரிக்கிற இடத்தில் அமைந்திருந்த கலிவரதன் டீக்கடையில் தன் சகாக்களோடு டீ குடித்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தான் சுகுமார். அதே நேரம் கடையில் வந்து அமர்ந்த பெரியவர் பழமலை படையாச்சி வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவியபடியே கேட்டார்.

"தம்பி யாரு...? பாத்த மொகமாத்தான் தெரியுது..."

பழமலைப் படையாச்சி ஊரிலேயே பெரிய புள்ளி... நல்ல வசதி நிறைய... நிலம் நீட்சியென உண்டு. போதாக் குறைக்கு கிராம மக்கள் வசதிக்காக டூரிங் தியேட்டரும் வைத்திருந்தார்.

"இதுங்களா... நம்ம சாமான் மொவன்யா..."

"டேய்... சாமான் இல்லடா... 'சாம்பான்'ற பேரைத் தான் சாமான்... சாமான்னு கூப்புடறாங்க..."

"தம்பிகளா... அது சாமானும் இல்ல... சாம்பானுமில்ல... சம்புகன்... சம்புகன்றவன் பெரிய்ய ஆளு... புராணத்துல வர்ர அசகாய சூரன்... வீராதி வீரன்... என்ன தம்பி நான் சொல்றது சரிதான..."

"சரிதானுங்கய்யா... நீங்க சொன்னா தப்பாவா இருக்கப்போவுது..."

"தம்பி படிச்ச புள்ளையா தெரீர... எங்க வேல செய்றாப்ல..."

"வக்கீலுக்கு படிச்சிட்டு... இப்போ மெட்ராஸ்ல சந்துருன்னு பெரிய வக்கில்கிட்ட உதவியாயிருந்து தொழில் கத்துகிட்டு இருக்கன்யா..."

"நல்லது நல்லது... கத்துக்க வேண்டியதுதான... கத்துக்கிட்டாதான சொல்லிக் குடுக்கவும் முடியும்..." - படையாச்சி

"சரியா சொன்னீங்க அய்யா" - சுகுமார்.

"அப்றம் தம்பி... ஓய்வா இருந்தா... நம்ம தோப்பு பக்கம் ஒரு எட்டு வந்துட்டு போவனும்..."

"ஆகட்டுங்கய்யா... எப்போ வரணும்னு சொல்லுங்க... நா வந்துர்ரன்..."

"சாயந்திரம் ஒரு அஞ்சு... அஞ்சரைக்கா... வர முடியுமா..."

"அவசியம் வந்துர்ரன்யா..."

"அப்போ நானும் கௌம்புறன் தம்பி... பயலுங்களா தம்பி சொல்றபடி கேட்டு புத்தியா நடந்துக்கங்க... வரட்டுமா"

"வாங்கய்யா..."

"பாருங்கடா பெரிய மனுசன்னா... பெரிய மனுசன் தான்... என்ன பக்குவமா பேசிட்டுப் போறார் பார்..." - சுகுமார்.

"க்கும்... ஏதோ ஒருத்தரு நம்மள மதிச்சி பேசிட்டாருன்னு சந்தோஷப் படற... நம்ம ஊரையே விலக்கி வச்சிட்டானுங்க... தெரியுமா ஒனக்கு" - கோவிந்தராஜ்.

"அது இன்னாடா கதை..." சுகுமார்

"அட... அது. எதுக்கு இப்போ... எல்லாம் முடிஞ்சு போச்சு... பழைய குப்பைய போய் இப்போ எதுக்கு கௌறணும்"

"அது ஒண்ணுமில்ல சுகுமாரு... போனமாசம் நம்ப தொகுதில இடைத்தேர்தல் நடந்துச்சில்ல... நம்ம அரிசி பாளையம் ஆயில்மில் ஓனர்தான் எலக்ஷன்ல



படிப்பகம்

www.padippakam.com

நின்னாரு... அந்த எலக்‌ஷன்ல... நம்ம ஊர்க்காரங்க... காலனிக்காரங்க யாரையுமே ஓட்டுப் போட வுடல... அவரை... அதான் வெங்கடாசலத்தைப் போய் நம் மாளுங்க கேட்டதுக்கு, ஒங்க ஓட்டையெல்லாம் எங்காளுங்களே போட்டுறுவாங்க... போய் மில்லுல சாராயமும் பிரியாணியும் வாங்கிட்டு ஊரைப் பாத்து போய்ச் சேருங்கடான்ட்டாரு..."

"நீங்க போய் தேர்தல் அதிகாரி... போலீஸ் கிட்டல்லாம் கம்ப்ளெயிண்ட் பண்ணலியா..."

"த்தோடா.. அதிகாரிங்க எல்லாம் ஆளுங்கட்சிக்கு சப்போர்ட் பண்ணுவானா... அன்னாடங் காய்ச்சிக்கு ஆதரவா நிப்பானா... ஏழை சொல் என்னிக்கிடா அம்பலம் ஏறிக்கிது..."

"என்னடா நீங்க... இவ்ளோ பெரிய விஷயம் நடந்திருக்கு... ஒருத்தனும் எங்கிட்ட இவ்ளோ நாளு சொல்லவேயில்லையே"

"நீ எங்க ரெண்டு மாசமா இந்தப் பக்கம் வந்த... மாசா மாசம் வர்ர ஆளு.. இந்த ரெண்டு மாசமா வரவே இல்ல... தேர்தல் நடந்தப்பவுமில்ல... நாங்க இன்னா பன்றது" - கோவிந்தராஜ் தன்னிலை விளக்கமளித்தான்.

"சரி பாக்குலாம்... எங்க சீனியர் கிட்ட கலந்து பேசுறன். நிச்சயமா ஏதாவது வழி சொல்வாரு."

"இனிமே எது நடந்து இன்னா... சுகுமாரு... அந்தாளு செயிச்சு எம்எல்ஏ ஆயிட்டாரு... நாம போய் அவுருகிட்ட மோதிகிட்டு இருக்க முடியுமா...?"

"இதை மோதல்னு ஏன் நாம எடுக்கனும்... நியாயம் கேக்குறதுன்னு எடுத்துகிலாமில்லையா..." - சுகுமார்.

"என்னவோப்பா... நீ நெறைய படிச்சவன்.. ஒனக்கு தெரிஞ்சதெல்லாம் எங்களுக்கு தெரியாது... ஆனா ஏதாவது பண்ணு சுகுமாரு... நம்மள கிள்ளுக் கீரையா நெனச்சவனுங்களுக்கு ஒரு பாடம் சொல்லியாவனும்... அது ஒன்னாலதான் முடியும்...!"

"சரி வுடுங்க... இந்த விஷயத்த நான் பாத்துக்குறன்"

"கௌம்புவமா..."

"போலாண்டா..."

தென்னந்தோப்பு மாலை வெயிலுக்கு 'தண்' ணென்று இதமாக இருந்தது.

"டேய் முனியா... இன்னும் ரெண்டு எளநீ சீவுடா..." - படையாட்சி.

"போதுங்கய்யா... இப்பவே மூணு காய் சாப்பாடச்சு..."

"அட என்னா தம்பி நீ.. ஒன்) வயசுல ஏழெட்டு எளநிய ஒரே தடவைல சாப்டுவன் நானு."

"அது சரீங்கய்யா...: அதெல்லாம் அந்தக் காலம். அதனாதான் உங்கள மாதிரி ஆளுங்க இந்த வயசுலே யும் தெம்பா தெடமா இருக்கீங்க..."

"ஆமா... நீ ஒடம்பு தெடத்தை பத்தி சொல்ற... மனசுல தெடமில்லையே... அத எங்க போய் சொல்றது... எந்தக் கோயில்ல போய் வுழுவறது..."

"என்னய்யா... பெரிய்ய வார்த்தையெல்லாம் பேசுறீங்க... என்னப் பிரச்னை சொல்லுங்க... என்னால என்ன செய்ய முடியுமோ அத செய்யுறன்..."

"வெங்கடாசலம் தெரியுமில்ல... தம்பி..."

"இடைத் தேர்தல் எம்எல்ஏ தானங்கய்யா... நாங்கூட கேள்விப்பட்டன்.. ஊர்ல யாரையுமே ஓட்டு போட விடலயாம்... அநியாயமாவுல்ல இருக்கு..."

"இது ஊர்க்கதை தம்பி... அதைவிட அநியாயம்... பத்திரத்துல கையெழுத்து போட்டு எங்கிட்ட பணம் வாங்கிட்டுப் போனா(ன்) அந்தப்பய... என்னப் பாத்தா தெரு நாய் மாதிரி பம்முவான்.. பதவி பவுசுன்னு ஆன வுடனே... ஆளே மாறிட்டான்..."

"ஏங்கய்யா ஏதாவது வில்லங்கமா..."

"இந்த வருஷம் வெளச்சல் சரியில்லயா... அசல்ல பாதியாவது கேப்பம்னு போனா... ஆளவுட்டு வெரட் டுறான்.. பணம் குடுக்க முடியாது... ஒன்னால என்னா பண்ண முடியுமோ பண்ணிக்கன்றான்... நான் கெராமத்தான்... ஒண்டியாளு... அதிகாரத்தை எதுத்து தனி யாளா என்ன பண்ண முடியும் தம்பி."

"ஏங்கய்யா... கோர்ட்டுக்கு போலாமே..."

"அட... ஏந்தம்பி நீ வேற... அது பாட்டுகினு வாய்தா வழக்குன்னு இழுத்துகிட்டு போய் சிவில் கோர்ட்ல எனக்கு சாதகமா தீர்ப்பும் ஆயிடுச்சு... ஆனா அந்த வெங்கடாசலம் சட்டத்தையும் மதிக்கல... அட என்னோட வயசுக்காவது மரியாதை குடுத்திருக்க லாம்... அதுவும் குடுக்கல... எனக்கு இப்போ ஆளு அம்பு மில்ல... மனசுல தெம்புமில்ல..."

"உங்களுக்கு உங்க பணம் ஒடன கெடைக்கனும் அதான..."

"ஆமா தம்பி... அதுக்கு எதுனா உதவினா நல்ல இருக்கும்"

"பண்ணிடலாங்கய்யா... அந்த மாதிரி ஆளுங் களுக்கு எடுத்து சொன்னா புரியாது.. அதிர்ச்சி வைத் தியம் குடுத்தாதான் புரியும்... அந்த கோர்ட் பேப்பரை யெல்லாம் எங்கிட்ட குடுங்க... இன்னும் ரெண்டு நாள்ல மெட்ராஸ் கௌம்புறன்... போனவுடனே இந்த வேலதான் மொதல்ல..."

"ரொம்ப நல்லது தம்பி... நாளைக்கு வீட்டுக்கு வந்து நீங்களே வாங்கிட்டு போயிடுங்க..."

சுகுமார் ஊருக்கு போய் ஒரே வாரத்தில் செய்தி வந்துவிட்டது.

"அரிசிப் பாளையம் எம்எல்ஏ
திவால் ஆனதாக
உயர்நீதி மன்றம் தீர்ப்பு
பதவி பறி போகிறது
வாங்கிய கடனை திருப்பி செலுத்தாததால்
உயர்நீதி மன்றம் அதிரடி உத்தரவு"

'ஜஞ் சக்சக் ஜஞ்சக் சக்
ஜங் சச்சக் ஜக்
ஜம் ஜம் ஜம் ஜம்'

தொடர்ந்து ஒலித்த ஒத்த அடி காற்றில் கலந்து தொடர் அதிர்வுகளைப் பரப்பிக்கொண்டிருந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# கோடாங்கியின் முகாம்கள்

■ நிகழ்வு - 1

■ நாள் : 12.01.05

■ இடம் : உழவர்கரை, பாண்டிச்சேரி

■ தொகுப்பு : குடியரசன்

முற்பகல் நிகழ்வு தொடங்கப்பட்டது. திரு. குடியரசன் அம்பேத்கரின் பொருத்தப்பாடு என்ற தலைப்பில் பேசினார்.

1. ஹரிஜன், 2. ஹரிஜன் பத்திரிக்கை, 3. ஹரிஜன சேவா சங்கம் மூன்று நிலைகளில் காந்தி, அம்பேத்கரை எதிர்த்தார். ஹரிஜன் என்ற சொல்லின் ஆபத்தை உணர்ந்த நாம் ஹரிஜன் பத்திரிக்கை, ஹரிஜன சேவா சங்கம் அமைப்பு மக்களிடம் எச்சரிக்கை உணர்வை தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் பற்றி குடியரசன் விரிவாகப் பேசினார்.

அவரைத் தொடர்ந்து கௌதம சன்னா இந்திய அரசியல் சட்டமும், சகோதரத்துவமும் என்ற தலைப்பில் "நமது அரசியல் சாசனம் சகோதரத்துவ உணர்வினை தன்னுடைய முகப்பிலேயே உறுதி செய்கிறது; சகோதரத்துவ உணர்விற்கு எதிரானவை களை குற்றம் என்று தடை செய்கிறது; சகோதரத்துவ பண்பிற்கு அனைத்து வகையிலும் பாதுகாப்புத் தருகிறது. எனவே அம்பேத்கர் மக்களின் நெஞ்சம் விசாலமாக இந்திய அரசியல் சட்டத்தில் அவசியமான வழிவகை செய்துள்ளார்" என்று உரை நிகழ்த்தினார்.

ப்ரதிபா ஜெயச்சந்திரன் பேசுகையில் "நிலம் 100 ஆண்டுகளுக்கு முன்புவரை எந்த தனி மனிதருக்கும் சொந்தமானதாக இருந்ததில்லை; பஞ்சமி நிலங்கள் சாதி இந்துக்களால் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. தலித் நில உரிமைப் போராட்டம் சட்டப்பூர்வமானது" என்று 'மண் விடுதலையில் தலித் பங்கு' என்ற தலைப்பில் பேசினார்.

'தலித் விடுதலையில் பஞ்சாயத்துகளின் பங்கு' என்ற தலைப்பில் திருமதி சிவகாமி பேசுகையில்,

"1. அண்மைக்காலங்களில் தமிழகத்தைப் பொருத்தவரையில், பெரியார் இயக்கங்கள் - திராவிடக் கட்சிகள்தான் தலித் மக்களின் ideal அதாவது உதாரண அமைப்புகளாக உள்ளன. இதனால் பூவை மூர்த்தி, திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்ற போராளிகளின் பணி மக்களிடம் வீச்சாக சென்றடைவதில் தாமதம் ஏற்படுகிறது.

2. The Hindu, Indian Express பத்திரிக்கைகளில் தலித் செய்திகள் உண்மையான வகையில் வெளிவருவதில்லை.

3. 60% தலித் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளனர். கொத்தடிமைகள், குழந்தைத் தொழிலாளர்கள், ஆரம்ப கல்விகூட பெறாதவர்கள், அடிப்படை வசதி அற்றவர்கள் பிரிவுகளில் தலித்துகள்தான் மிகப் பெரும்பான்மையாக உள்ளனர்.

4. இன்றைய சேரிகள், ஊர்களுடன் எல்லாத் தொடர்புகளையும் தவிர்த்த இருண்ட வாழ்விடங்களாக உள்ளன. இதை எதிர்கொள்ள சேரிகளை - தனிப் பஞ்சாயத்துகளாக அறிவிக்கக் கோரி தலித்துகள் இயக்கமாகலாம்.

5. தனிப்பஞ்சாயத்துகள் மூலமாக சேரிகளுக்கான முழு நிதியும் தாழ்த்தப்பட்ட மக்களின் வளமைக்குச் செலவிட இயலும்.

6. தனிப் பஞ்சாயத்துக்களின் மூலமாக சேரி மக்கள் தங்களின் வாழ்வியல் முன்னேற்றத்தை தாங்களாக வடிவமைத்துக் கொள்வர். அதன் மூலம் அவர்களின் உண்மையான தேவைகள் பூர்த்தி செய்யப்படும்" என்று குறிப்பிட்டார். நிகழ்வின் இடையிடையே மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலும் வழங்கினார்.

திருமதி ப. லலிதா, அதேகொம் பின்னகம் வாழ்த்துரை வழங்கினார். சாக்கிய Dr. மோஹன், மாலதி மைத்ரி ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். மாலதி மைத்ரி, பெண்விடுதலை என்ற பெரிய தளத்தில் தலித் பெண் விடுதலையையும் பார்க்கவேண்டிய அவசியத்தையும், தலித் பெண்கள் தற்காப்புப் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

■ நிகழ்வு - 2

■ நாள் : 15.01.05

■ இடம் : வேப்பங்குடி, கரூர்

■ தொகுப்பு : வை. சரவணன்

நிகழ்ச்சி காலை 10.20-க்கு துரையரசனின் தமிழிசை, தலித் எழுச்சிப் பாடலோடு புதிய கோடாங்கியின் இளைஞர் பயிற்சி முகாம் தொடங்கியது. வழக்கம்போல் சிவகாமி அம்மையார் அவர்கள் நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு அருகில் உள்ள கருப்பசாமி கோயிலுக்குச் சென்று கள ஆய்வு செய்துவிட்டு வந்தார்கள்.

முகாமிற்கு திரு. மாரிச்சாமி அவர்கள் தலைமை வகித்தார். திரு மணிவேல், TNPL அவர்கள் முன்னிலை வகிக்க, வரவேற்புரையை வை. சரவணன் நிகழ்த்த, மணிவேல் அவர்கள் வாழ்த்துரைக்க, பிச்சை அவர்கள் முகாமை துவக்கி வைத்தார்.

முதலில் 'இரட்டை வாக்குரிமை' பற்றி விளக்கிப் பேசிய பேராசிரியர் லெனின் அவர்கள் "இரட்டை வாக்கு முறை நடைமுறைக்கு வரவேண்டும். அப்போதுதான் தலித்துகளின் பிரச்சினைகளை தலித் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் பேச முடியும். இன்றைக்கு இருக்கும் தனித் தொகுதி வேட்பாளர்



படிப்பகம்

www.padippakam.com

கள் தத்தம் கட்சியின் கட்டுப்பாட்டிலேதான் இயங்க முடியும். ஆனால் தலித்துகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அம்மக்களுக்காக பல்வேறு நிலைகளில் விவாதிக்கலாம். தனித்தொகுதி வேட்பாளர்கள் போல் மௌனித்திருக்க மாட்டார்கள்" என்றார். ஆதி திராவிட நலத்துறையின் செயலராக அம்மையார் அவர்கள் இருந்தபோதுதான் கடனாக வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை, அவர்களுக்கு மானியமாகவே வழங்கிட உத்தரவிடப்பட்டது என்ற செய்தியையும் அவர் தெரிவித்தார்.

அடுத்துப் பேச வந்த குடியரசன் அவர்கள் கேள்விகள் மூலம் பதில் பெற்று அதன்பின் கருத்துகளை வழங்கிய விதம் மிக அருமையாக இருந்தது. அம்பேத்கர் பட்ட சாதிய ஒடுக்குமுறைகள், குறிப்பாக இளமைப் பருவத்தில் தண்ணீர் குடிக்கப் போராடிய நிகழ்வு பற்றி கேட்டது அனைவர் மனதையும் இன்னமும் வதைக்கும் செய்தியாய் உள்ளது. மேல்தட்டு, மேல்சாதிப் பெண் படிக்காமல் இருந்தாலும், தலித் படித்து இருந்தாலும் தலித்துக்கு வழங்கப்படும் மரியாதை என்பது மிகவும் மோசமாகவே உள்ளது என்று கூறினார். தலித்துகள் அனைவருமே பௌத்தத்தினர். பௌத்தம் என்பது மதமல்ல, அது ஒரு வாழ்வியல் நெறி என்று விளக்கினார். அம்பேத்கர் வழியை பின்பற்றியே புதிய கோடாங்கி ஒரு வரலாற்றுப் புரட்சியை தன் ஏட்டில் பதிவு செய்து தலித் மக்களுக்கு வழங்கி அதன் மூலம் புரட்சி ஏற்படுத்தும் என்று தெரிவு படுத்தினார்.

நிகழ் அய்க்கண் அவர்கள் பேசுகையில், பஞ்சமர்கள் நால்வர்ணத்தாரை விட கீழானவர்கள். அவர்களின் மேம்பாட்டிற்காக ஆங்கிலேயே அரசு ஒதுக்கிய நிலம்தான் பஞ்சமி நிலம் என்ற செய்தியைச் சொன்னார். மேலும் பஞ்சமி நிலங்கள், நில உடைமையாளர்களால், முன்னாள் மணியக்காரர் போன்றவர்களால் சுரண்டப்பட்டு தலித் மக்களுக்குப் போய் சேராமல் தடுத்து, ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டன; அந்த நிலங்களை மீட்பதே நமது தலையாய கடமையாகும் என்றுரைத்தார்.

நிகழ்ச்சியிடையே, தலைவர் மாரிச்சாமி தங்கள் பகுதியான தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூரில் பள்ளர்கள் ஒற்றுமையாக இருந்து வருவதால் வேற்று சாதிக்காரர்கள் பிரச்சினைக்கு வருவதில்லை. அதைப் போன்றே நம்மிடையேயும் ஒற்றுமை வரவேண்டும். மேலும் தலித்துகள் வீடுகளில் அம்பேத்கர் படம் வைக்கப்படுவதில்லை. அண்ணலின் படம் அனைத்து தலித் வீடுகளிலும் காணப்பட வேண்டும் என்றார்.

அதைத் தொடர்ந்து பெண்விடுதலை பற்றிப் பேசிய அரங்க மல்லிகா அவர்கள் "பெண்களுக்கு கல்வி முக்கியம். பெண் கல்வி கற்றால், நல்ல ஒரு தலைமுறை உருவாக வாய்ப்புள்ளது. எனவே தலித் பெண்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கான ஒரு தனித்துவத்தை, முக்கியத்துவத்தை இந்த சமூகம் வழங்குவதுதான் பெண் விடுதலை. தலித் பெண் விடுதலையிலிருந்துதான் தலித் ஆண்கள் விடுதலை பெற முடியும். தலித் பெண் விடுதலையிலிருந்துதான் மற்ற பெண்கள் விடுதலை அடைய முடியும்" என்று வலியுறுத்தினார்.

நிகழ்வின் நிறப்புரையாக திருமதி சிவகாமி அவர்கள்,

"இங்கு 87 கிராம தலித் மக்களின் குலதெய்வமான கருப்பசாமிக்கு விழா எடுக்கப்படுகிறது. இந்த நிகழ்விற்கு 87 கிராமங்களிலிருந்தும் 10,000 மக்கள் வந்துள்ளனர். இவர்களுக்கான விழிப்புணர்வை இந்த முகாம் தோற்றுவிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

மூட்டை தூக்குபவர்கள், கட்டிட வேலை செய்பவர்கள், கூலித் தொழிலாளர்கள் தலித்துகளாக உள்ளனர். அரசு மருத்துவமனைகளில் தலித்துகள் நிறைந்து காணப்படுகின்றனர். பெரும்பான்மையான தலித்துகள் வறுமை நிலையில் உள்ளனர். இருப்பவர் X இல்லாதவர் பிரச்சினைதான் இது என்றால் இதே பெரும்பான்மை எல்லா சாதிகளிலும் இருக்கவேண்டும். ஐந்து நட்சத்திர விடுதிகள், விமானங்களில் பயணம் என ஒன்றிரண்டு தலித்துகள், அரசு ஊழியர்கள் தவிர பெரும்பான்மையான தலித்துகள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வது சாதிப் பிரச்சினையின்றி வேறில்லை.

தமிழ்நாட்டில் மட்டும் தலித்துகளுக்கான 6,000 காலி பணியிடங்கள் அரசுப்பணியில் நிரப்பப்படாமல் உள்ளன.

தலித்துகள் விடுதலை பெற நிலம் மிக மிக அவசியம். இதுவரை எந்த அரசியல் கட்சியும் தலித்துகளின் நிலப்பிரச்சினையை கையில் எடுத்ததில்லை.

தற்போது தலித் அல்லாத கட்சிகள், தலித்துகளை அக்கட்சிகளில் உறுப்பினராக சேர்த்துக் கொள்வதில் கொள்கைப் பிரச்சினை ஏதும் இல்லை. சொந்தப் பிரச்சினை அல்லது சோற்றுப் பிரச்சினை மட்டுமே உள்ளது.

தலித் மக்கள் சிதறி உள்ளனர். இவர்களை விழிப்புணர்வு பெற்றவர்களாக மாற்ற தனிப்பஞ்சாயத்து முறை வழிவகுக்கும்.

அம்பேத்கர் பற்றிய புரிதல், நம் போராட்டத்திற்கு புதிய ஒளியைத் தரும்" என்று விளக்கினார். கிராமத்து தலித் மக்கள் மிகுந்த ஆர்வமுடன் அம்மையாரின் உரையைக் கேட்டனர்.

திரு. யோகரத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. ●

**புதிய கோடாங்கியின் இளைஞர் முகாம்**

இடம்
**காங்கேயம்**

நாள்
**22.2.2005**

தொடர்புக்கு
**ஜெயக்குமார்**
(0-93606-21227)



படிப்பகம்

www.padippakam.com

■ முனிமா

# கேள்வி - பதில்

✍ இரட்டை வாக்குரிமையை இன்று பரவலாக அனைத்து தலித் இயக்கங்களும் வலியுறுத்தி வருகின்றன. இதனால் தலித் கிறித்தவர்களுக்கு என்ன பயன்?

*- பிரான்சிஸ், மதுரை*

புதிய கோடாங்கியின் 2-ஆவது மாநில மாநாட்டில் மதம் மாறிய தலித்துகளின் இன்றைய நிலை குறித்து கட்டுரை வாசித்த பேரா. லெனின், தலித் கிறித்துவர்கள் இரட்டை வாக்குரிமை மூலம் பயன் பெற முடியாது எனக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தனி வாக்காளர் தொகுதி என்ற கோரிக்கை இரண்டாவது வட்டமேஜை மாநாட்டின்போது முன்வைக்கப் பட்டது. காந்தியின் சாகும்வரை உண்ணாவிரதம் மூலம் இது முறியடிக்கப்பட்டது. பின்னர் ஒருபோதும் தனிவாக்காளர் தொகுதி பற்றி அம்பேத்கர் விவாதிக்க வில்லை. அரசியலமைப்புச் சட்டத்தில் தலித்து களின் கல்வி, அரசில் வேலைவாய்ப்பு, வயது வந்தோர் வாக்குரிமை இவற்றுக்கு வழிவகுத்த அவர், தலித்து களின் பொருளாதார முன்னேற்றத்தை மாநில அரசு களின் பொறுப்பாக்கினார். இச்சலுகைகள் எதுவும் தலித் கிறித்துவர்களுக்குக் கிடையாது. பொருளாதாரத்திலும் கல்வியிலும் பின்தங்கியுள்ள பிறசாதியினரின் ஒதுக்கீட்டுக்கு அரசியலமைப்புச்சட்டத்தில் வழி செய்துள்ளார். அதன் மூலம் தலித் கிறித்தவர்கள் பயனடைகின்றனர். எனவே இப்போதைய சூழ்நிலையில், தலித் கிறித்தவர்கள் இரட்டை வாக்குரிமை மூலம் (அமலாக்கம் பெறும் பட்சத்தில்) பயன்பெற வாய்ப்பில்லை.

✍ திராவிட இயக்கம் வலுப்பெற்று வந்தபோது பிராமணர்களைக் கடுமையாக விமரிசித்த எழுத்துக்கள் தடைசெய்யப் பட்ட சூழல் நிலவியது. ஆனால் இன்றோ தலித்துகள் மேல்சாதி என்று சொல்லப்படுகின்றவர்களை தாராளமான வசவுகள் மூலம் கடுமையாக விமரிசனம் செய்தாலும், அவ்வகை எழுத்துக்கள் தலித்தல்லாதவர்களால் பிரசுரிக்கப்படுவதுடன், பாராட்டும் பரிசும் குவிகின்றன. காரணம் என்னவாயிருக்கும்?

*- முனைவர் க. பஞ்சாங்கம் (புதிய கோடாங்கியின் 2-ஆவது மாநாட்டின் போது எழுந்த கேள்வி)*

'பிராமணர்களை எதிர்க்கவில்லை, பிராமணியத்தையே எதிர்க்கிறோம் நாங்கள். ஆனால் அவர்களோ பிராமணர்களை எதிர்க்கிறார்கள், பிராமணியத்தை அல்ல' என்று பிராமணரல்லாதோர் இயக்கம் குறித்து அம்பேத்கர் கூறினார். இக்கூற்று திராவிட இயக்கங்களுக்கு முற்றிலும் பொருந்தும். பிராமணர்கள் சிறுபான்மையினர்; எனவே அவர்களுக்கெதிரான கருத்துப் பிரச்சாரத்தைக் கண்டு வெகுவாக அச்சமடைந்திருந்தனர். எனவே அவ்வகை எழுத்துக்களை தடைசெய்ய வேண்டிய அவசியமேற்பட்டது. ஆனால் தலித்தல்லாதோர் எண்ணிக்கையில் தலித்துகளை விட அதிகமானவர்கள். தலித்துகள் தங்கள் விருப்பம்போல் எழுதிக்கொள்ளட்டும், அவர்களால் என்ன செய்து விட முடியும் என்று நினைக்கிறார்கள் போலும். தங்கள் அதிகாரம் பறிபோய்விடாது என்ற நம்பிக்கையிலிருக்கிறார்கள்!

✍ தலித்துகள் மதம் மாறுவது அவசியமா?

*- கோபாலன், பாண்டிச்சேரி.*

அம்பேத்கர் தலித்துகளின் வரலாற்றை ஆய்வு செய்கையில் அவர்கள் சுட்டிக் காட்டக்கூடிய எந்த மதத்தினராகவும் இருந்ததில்லை என்கின்றார். பௌத்த நெறியாளர்களாக தலித்துகள் இருந்திருக்கலாம் என்பதற்கு, பௌத்தர்களும் சமணர்களும் கழுவிலேற்றப்பட்டு அந்நெறியாளர்கள் அழித்தொழிக்கப்பட்ட அதே கால கட்டத்தில்தான் தீண்டாமையின் தோற்றமும் என்பதை சோழர்கால இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இந்து மதம் சாதியை அடிப்படையாகக் கொண்டது. பௌத்தர்களோ சாதிக்கு அப்பாற்பட்டவர்கள். தலித்துகளும் சாதிமுறைமைக்கு வெளியே நிறுத்தப்பட்டவர்கள். எனவே தலித்துகள் பௌத்த நெறியாளர்கள் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இக்கருத்து அம்பேத்கரால் வலுவூட்டப்பட்டுள்ளது. இதைப்பற்றிய விரிவான கட்டுரை அவசியமானது. எனினும் மதமாற்ற நிலையும் சாத்தியம் எனும்போது, ஏன் அதை நாம் கைக்கொள்ளக் கூடாது?

✍ லோன் மேளா என்று ப. சிதம்பரம் ஊர் ஊராக வங்கிக் கடனை வழாங்கி வருகிறார். தலித்துகள் இதனால் பயனடைகின்றனரா?

*- வீரன், உளுந்தூர்பேட்டை.*

தலித்துகளுக்கு கடன் வழங்குவதில் வங்கிகள் தயக்கம் காட்டுகின்றன. அவர்கள் கூறும் காரணம்



படிப்பகம்

www.padippakam.com

கடனை திரும்ப வசூல் செய்ய முடியாது என்பதே. ஆனால் திரும்பி வராத கடன்களில் தலித்துகளின் பங்கு எத்தனை சதவீதம் என்று அறிந்தாலே போதும் திருப்பித் தராதவர்கள் தலித்தல்லாதவர்களே என்பதைப் புரிந்து கொள்ள. தலித்துகளுக்கு வங்கிக் கடன் வழங்காததற்கு முக்கிய காரணம் இங்கு நிலவும் கடுமையான சாதியமே. ப. சிதம்பரம் என்ன செய்யப் போகிறார் வங்கி ஊழியர்களின் சாதியத்தைப் போக்க.

**ஜார்ஜ் புஷ் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது எதைக் குறிக்கிறது?**

*- சொக்கநாதன், மதுராகுளம்.*

அமெரிக்க மக்கள் புஷ்ஷை உறிஞ்சு குழலாக்கி தொடர்ந்து பெட்ரோலுடன் ரத்தத்தையும் குடிக்கத் தயாராகிவிட்டார்கள். இதுவரை உள்ள புஷ்ஷின் நடவடிக்கைகள் அனைத்திற்கும் ஒப்புதல் வழங்கிவிட்டார்கள். தீவிரவாதம் என்ற பெயரில் போர் தொடுக்கவும், உதவும் கரங்கள் என்ற பெயரில் பொருளாதார அடிமை நாடுகளை கபளீகரம் செய்யவும் ஒப்புதல் வழங்கிவிட்டார்கள்.

**உள்ளூரில் ராமதாஸ் திருமாவளவனையும் பீகாரில் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த லாலு பிரசாத் யாதவையும் ஆதரிக்கும் இரட்டைக் குணம் உள்ளவராக இருக்கிறார். இதை எப்படி சகித்துக் கொள்கிறார்கள்?**

*- லலிதா, செங்கல்பட்டு.*

திருமாவளவன் தலித் என்ற அடிப்படையில் அல்லது தமிழர் என்ற அடிப்படையில்தானே ராமதாசுடன் உறவு கொண்டாடுகிறார். ஆகையால் முரண் எங்கே வந்தது? ராமதாசுக்கு எப்போதும் ஒரே குணம் தான் - அதன் பெயர் பார்ப்பனியம்.

**தனியார் துறையில் ஒதுக்கீடு எனச் சட்டம் வருமானால் அந்நிய முதலீடு கணிசமாகக் குறையும் எனச் சொல்லப் படுகிறது. நீங்கள் அதை எவ்வாறு கணிக்கிறீர்கள்?**

*- பாலகிருஷ்ணன், சென்னை.*

மேலைக் கிறித்துவம் இந்தியாவில் முதலில் தலித்துகளையே அரவணைத்தது. பின்னர், தலித்துகள் காரணமாக பிறசாதியினர் கிறித்துவத்துள் நுழைய தயக்கம் காட்டியதினால், சாதியை ஏற்றுக் கொண்டு கிறித்துவம் பிறசாதியினரை உச்சாணிக் கொம்பில் வைத்துக் கொண்டாடியது. தலித்துகள் மீது வெறுப்பு காரணமாக இல்லாவிட்டாலும் பிறசாதியினர் குறித்த அச்சம் காரணமாக கிறித்துவம் சாதியத்தை ஏற்றுக் கொண்டது. அதைப்போல அந்நிய முதலீடுகள் பிற சாதியினர் குறித்த அச்சம் காரணமாக குறைய வாய்ப்பிருக்கிறது. அவ்வளவு வல்லமை பெற்றது சாதியம்.


**சென்னை பல்கலைக் கழகம்**
**டாக்டர் அம்பேத்கர் பொருளியல் கல்வி மையம்**

**தென்னிந்தியாவில் தலித் இயக்கங்கள் பற்றிய**
**தேசிய கருத்தரங்கம்**
**மற்றும் தலித் தலைவர்களுடன் விவாதம்**

இடம்
**சென்னை பல்கலைக் கழகம்**

நாள்
**25_27 பிப்ரவரி 2005**

முன்னாள் மிசோரம் ஆளுநர்
முனைவர் **பத்மநாபன்** அவர்கள்
**தலித் இயக்கங்களை**
**எதிர்நோக்கியிருக்கும் சவால்கள் என்ற**
**தலைப்பில் சிறப்புப் பேருரை ஆற்றுகிறார்.**
**அனைவரும் வருக!**

தொடர்புக்கு
முனைவர் **எம். தங்கராஜ்,** பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தொலைபேசி : 2538 7424 / 2536 8778 (Extn. 359)

புதிய கோடாங்கியின் முகாம்கள்

**TNPL தொழிலாளர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம்**

இடம் : நாள்
**கரூர் வேலாயுதம்பாளையம் 12-2-2005**

**ஒருங்கிணைப்பு**
**கருணாகரன் / மணிவேல்**
TNPL SC,SC தொழிலாளர் சங்கத் தலைவர்

**SC/ST மாணவர் விடுதிக்**
**காப்பாளர்களுக்கான பயிற்சி முகாம்**

இடம் : நாள்
**புதுக்கோட்டை 13-2-2005**

ஒருங்கிணைப்பு
**மருத்துவர் ஜெயராமன்**
*95-4322-262620*




படிப்பகம்

www.padippakam.com

புதிய கோடாங்கி 22-23 சனவரி, 2005 தேதிகளில்

தேனியில் நடத்திய தலித் - பழங்குடி -

அரவாணிகள் - சிறுபான்மையினரின் இரண்டாவது

மாநில மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட

# தீர்மானங்கள்

## பெண்கள் அரங்கு

1. பஞ்சாயத்து அமைப்புகளில் தலித் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதிகாரம் முழுமையாக கிடைக்க வழிசெய்யவேண்டும்.

2. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும் போது சாதி - சமயமற்ற முறையில் அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

3. தலித் பெண்களுக்கு பெண்களுக்கான இட ஒதுக்கீட்டிலும், தலித்துகளுக்கான இட ஒதுக்கீட்டிலும் உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டும்.

4. சிறப்புக்கூறு திட்டத்தில் தலித் பெண்களுக்கான தனித் திட்டங்களை உருவாக்கி அமல்படுத்த வேண்டும்.

5. தலித் பெண்கள் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க மாநில அளவில் தலித் பெண்களை உள்ளடக்கிய ஆலோசனைக்குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

## கலை இலக்கிய அரங்கு

1. சாகித்ய அகாடமி குழுவில் தலித் எழுத்தாளர்களை, சிந்தனையாளர்களை இடம் பெறச் செய்யவேண்டும்.

2. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 2002 அரசாணையின்படி, ஆதி திராவிடர் நலத்துறை தீர்மானித்த தலித்துகளுக்கான பதிப்பகத்தை நிறுவி, தலித் படைப்புக்களை வெளியிட விரைவில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தலித் மற்றும் பறையிசைக் கலைஞர்களுக்கு நலிவுற்ற கலைஞர்கள் உதவித் திட்டத்தின் அரசு உதவித்தொகை வழங்கப்பட வேண்டும்.

## அரவாணிகள் அரங்கு

1. அரவாணிகள் வசிக்கின்ற பகுதிகளில் அரசு வீடுகள் கட்டித் தரவேண்டும்.

2. நிரந்தர வருமானம் ஈட்டும் வழிகளாக படித்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பும், படிக்காதவர்களுக்கு சிறு தொழில்களும் ஏற்படுத்தித் தரவேண்டும். தனியார் கம்பெனிகளிலும் வேலை வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும்.

3. பள்ளிக் கல்வி முதல் கல்லூரி வரை எவ்வித இனப்பாகுபாடும் காட்டி ஒதுக்காமல் அரவாணிகள் என்ற நிலையிலேயே இலவசக் கல்வி வழங்க வேண்டும்.

4. அனைவரையும் அடித்து துன்புறுத்தி கொடுமை செய்து வருகின்ற காவல்துறையிடம் அவர்களின் பிரச்சினையை எடுத்துச் சொல்ல கவுன்சிலிங் ஒன்றை புதிய கோடாங்கி ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. அரசு மற்றும் பண உதவிகள் அரவாணிகளை சென்றடைய வேண்டும்.

6. அரவாணிகள் நலத்துறை ஒன்று அரசால் உருவாக்கப்பட வேண்டும்.

## தலித் ஒற்றுமை அரங்கு

1. தலித் உட்குழுக்களின் ஒற்றுமையை அனைத்து தளங்களிலும் வளர்த்தெடுக்கும் கூட்டு முயற்சியாக பறையர் - பள்ளர் - சக்கிலியர் பாதுகாப்புக் குழு ஒன்றை அமைக்கவேண்டும்.

2. தலித்துகளின் எக்குழுவினர் மீது தாக்குதல் நடைபெற்றாலும், அனைவரும் ஒருங்கிணைந்து எதிர்கொள்வதற்கான பணிகளை முனைப்படுத்த வேண்டும்.

3. அனைத்து தலித் உட்குழுக்களின் கலாச்சார கலைவடிவங்களை பரிமாறிக்கொள்ள கலை நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

4. உட்குழு மணங்களை ஊக்குவித்து, அதற்கான தொடர்ந்த பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

## சிறுபான்மையினர் அரங்கு

1. பதினெட்டு வயது நிரம்பிய இந்தியர் ஒவ்வொருவருக்கும் அரசியல் தளத்தில் ஒரு வாக்கு என்று வந்ததின் கீழ் சமுதாயத் தளத்தில் இன்னமும் சமத்துவம்



படிப்பகம்

www.padippakam.com

எட்டப்படாத நிலையில் இத்தகைய சமத்துவத்திற்காகப் பல்வேறு தளங்களிலும் போராடும் அனைத்து அடித்தள சக்திகளையும் மக்கள் இயக்கங்களையும் இனம் கண்டு அவர்களோடு இணைந்து போராட வேண்டுமென நல்லுள்ளம் கொண்டவர்களையும் மனிதநேயவாதிகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. தமிழகக் கிறித்துவ இறையியல் கல்லூரிகள் அம்பேத்கரிய நோக்கிலான தலித் விடுதலை இறையியலாக்கக் கருத்தியலை உருவாக்குவதன் மூலமே மண்ணுக்கேற்ற விடுதலை இறையியல் வேர்கொள்ள முடியும் என்பதால் அதற்கான செயல்திட்டத்தைக் குறிப்பிட்ட காலவரை இலக்கைத் தீர்மானித்து நிறைவேற்றுமாறும், மதத்தின் பெயரால் தலித்துகள் பிளவுபடாமல் ஒன்றிணைந்த சக்திகளாக அணிதிரளும் முறையில் கருத்தியலாக்கம் செய்யுமாறும் மதமாற்றமும் விடுதலையும் பற்றிய அரங்கு கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தை முன்வைக்கிறது.

## பழங்குடியினர் அரங்கு

1. ஆதிவாசிகள் பூர்வீகமாக அனுபவித்துவரும் விவசாய நிலங்களுக்கு அரசு உடனடியாக பட்டா வழங்கிட வேண்டும். நிலம் இல்லாத ஆதிவாசிகளுக்கு தலா 5 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

2. வனத்தில் கிடைக்கும் சிறுவன மகசூல் சேகரித்து விற்பனை செய்யும் உரிமையை ஆதிவாசி மக்களுக்கே வழங்க வேண்டும்; மற்றும் வனக்குழு திட்டத்தை ரத்து செய்யவேண்டும்.

3. வனத்துறையினரால் ஆதிவாசி மக்கள் மீது தொடுக்கப்படும் பொய் வழக்குகளை தடுத்து நிறுத்த வேண்டும்.

4. தமிழகத்தில் உள்ள அனைத்து ஆதிவாசிப் பகுதிகளையும் ஐந்தாவது அட்டவணையில் சேர்க்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும்.

5. தமிழ்நாடு அளவில் ஆதிவாசி மக்கள் குறித்து உண்மையான புள்ளி விவரங்களை சேகரித்து மாவட்ட அளவில் இனம் வாரி யாக மக்கள் தொகை எவ்வளவு என்று அறிவிக்க வேண்டும்.

6. தமிழகத்தில் மொத்தம் 36 வகையான பழங்குடியினர் உள்ளனர். இதில் கொண்டா ரெட்டி, காட்டு நாயக்கன், மலைக்குறவன், குறும்பாஸ், குறும்பன்ஸ், சோழகா ஆகிய 6 பிரிவுகளில்தான் போலிச்சான்றுகள் வழங்கப்பட்டுள்ளதாக புகார்கள் நிலுவையில் உள்ளன. புகார்கள் இல்லாத மீதமுள்ள 30 பழங்குடி பிரிவினருக்கும் வட்டாட்சியரே

கே. சுப்பிரமணியம்

### வாழ்த்துப் பா

புதிய கோடாங்கியின் ஒலி
திக்கெட்டும் எதிரொலிக்கட்டும்
தீப் பொறிகள் பறக்கட்டும்
தீய சக்திகள் பொசுங்கட்டும்

தேனி அதற்கு வழி காணட்டும்
அரவாணி, பழங்குடி, தலித்
சிறுபான்மை மாநாடு
போர் முரசு கொட்டட்டும்

சாதிச்சான்று வழங்கலாம் என தமிழக அரசு ஆணை வெளியிட வேண்டும்.

7. ஆதிக்க சாதியினரான ரெட்டியார்களே கொண்டா ரெட்டி எனவும், நாயக்கர்கள், காட்டு நாயக்கன் என்றும் போலியாக சாதிச்சான்று பெற்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. எனவே கொண்டா ரெட்டி, காட்டு நாயக்கன் என வழங்கப்பட்டுள்ள அனைத்து சாதிச் சான்றுகளையும் சிபிஐ (அ) சிபிசிஐடி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

## தலித் ஆதரவாளர் அரங்கு

வன்கொடுமைக்கு ஆளாகும் எஸ்சி/எஸ்டி மக்களின் புகார்களை பதிவு செய்வதில் இருந்து, நீதிமன்றத்தில் விசாரனை முடியும் வரை பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு விதமான இடற்பாடுகளை சந்தித்து வருகின்றனர். பெரும்பாலான புகார்கள் இச்சட்டத்தில் பதிவு செய்யப்படுவதில்லை. பதிவு செய்யப்பட்டாலும் உரிய நேரத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு அவர்களுக்குரிய தீருதவி வழங்கப்படுவதில்லை. ஆதிக்கச் சக்திகள் தலையீடு காரணமாக, பல வழக்குகள் உண்மைக்கு புறம்பானவை எனப் புறம் தள்ளப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக வன்கொடுமைக்கு ஆளானவர்கள் மீது பொய்யாக எதிர் வழக்குகள் போடப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். எனவே வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் அமலாக்கம் குறித்து ஆய்வுசெய்து மூன்று மாதங் களில் அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் தற்போது பதவியில் இருக்கும் சென்னை உயர்நீதிபதி தலைமை யில் ஒரு விசாரணைக் கமிஷ்னை தமிழக அரசு உடனே நியமனம் செய்ய வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



■ அகவி

# தலித்துகளுக்கு தனி ஊராட்சி

இந்திய ஜனநாயகத்தை தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பது நான்கு தூண்கள் என்கிறார்கள். பாராளுமன்றம், சட்டமன்றம், நீதித்துறை, பத்திரிக்கை முதலியவைகள்தான் அந்த நான்கு தூண்கள். இவைகள் எல்லாம் மனிதாபிமானத்தோடு தலித்துகளின் வாழ் நிலையை தூக்கிப்பிடிக்கும் நிலைப்பாட்டை கூர்ந்து பார்ப்போமானால் ஜனநாயகம் தலித் மக்களின் மீது சவாரி செய்து திமிர் பிடித்த ஆதிக்கச் சமூகத்தை வளர்த்து எடுக்கிறதேயொழிய இருபத்திநாலு கோடி தலித் மக்களின் மேம்பாட்டிற்கு தெளிவான திட்ட வரைவுகளை செய்ய அது முயலுவதில்லை. அரசியல் நிலைகளிலும் அதிகாரப் பகிர்தல் நிலையிலும் இப்போதைக்கு தலித் சமூகத்தை தாங்கிப்பிடிக்க இரண்டு தூண்கள் நிறுத்த முயற்சிக்கப்படுகிறது. அதில் ஒன்று மாமேதை அம்பேத்கர் முன்மொழிந்த இரட்டை வாக்குரிமை இரண்டாவதாக அதன் படிநிலையாய் முன்னெடுத்துச் செல்லும் தலித்துகளுக்கு தனி ஊராட்சி என்பனவாகும். இந்த இரண்டு கருத்தியலும் தற்காலத்தில் விவாதப்பொருளாகி எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற நம்பிக்கை ஊட்டும் அம்சமாக பரவி வருவதை புரிந்து கொள்ள முடிகிறது. தலித்துகளுக்கு தனி ஊராட்சி என்பது பற்றி சில கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தலித்துகளை முன்னேற்றாத பஞ்சாயத்து ராஜ் அமைப்பு**

இந்திய உள்ளாட்சி அமைப்பிற்காக எழுபத்து மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தம் 1991-இல் கொண்டுவரப்பட்டது. பஞ்சாயத்து நிர்வாகத்தின் பணிகளை 29 வகையாகப் பிரித்து பஞ்சாயத்து ராஜ்யங்களிடம் ஒப்படைத்து அரசு நடைமுறைப்படுத்தியது. கிராம முன்னேற்றத்தில் நம்நாடு நல்ல விதங்களில் அடியெடுத்து வைத்திருக்கிறது, இந்தியாவின் உள்ளாட்சித் துறை வரலாற்றில் இது ஒரு மைல் கல் என்றெல்லாம் சமூக ஆய்வாளர்கள் வர்ணனை செய்தார்கள். ஆனால் தலித் மக்களுக்கு 73-ஆவது அரசியல் சட்டத் திருத்தம் எந்தளவு பயன்படுகிறது என்ற ஆய்வறிக்கைகள் எல்லாம் தலித் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்ற கவலையை தாங்கியே வெளி வருகின்றன.

அப்னா பஞ்சாயத்து அல்லது 'தளையறுத்தல்' என்னும் சிறு நூலை அடர்த்தியான தகவல் பெட்டகமாக திருமதி சிவகாமி அவர்கள் எழுதியுள்ளார்கள். அதில் தலித்துகளுக்கு தனி ஊராட்சி அவசியமாவது குறித்து மிகுந்த நேர்மையுடன் உண்மையுடன் மிகைப்படுத்துதல் இல்லாத அணுகு முறையில் அலசி ஆராய்கிறார். உள்ளாட்சி அமைப்புக்காக உண்டாக்கப்பட்ட 73-ஆவது அரசியல் சட்டத் திருத்தம் வெளியிட்ட 29 வகையான பஞ்சாயத்து பணிகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு கடந்த 10 ஆண்டு காலமாக நடைமுறையில் உள்ள பஞ்சாயத்து ராஜ்ஜியப் பணிகளில் சமுதாயப் பயன்பாட்டை கணக்கெடுத்தால் அற்ப சொற்ப அளவே தலித்துகள் பயனடைந்து இருக்கிறார்கள் என்று தெரியவரும். தலித்துகளின் பயன்கள் வேறு எங்கோ மடைதிருப்பப்படுகிறது என்ற பார்வையைத்தான் பஞ்சாயத்து ராஜ்ஜிய நடைமுறை நமக்கு உணர்த்துகிறது. இது குறித்து ஒரு நீண்ட ஆய்வை அரசு மேற்கொள்வது அவசியம் என்று சிவகாமி அவர்கள் குறிப்பிடுகிறார்.

**தளையறுத்து தடம் சமைக்கும் வழிகள்**

500 குடும்பங்கள் இருந்தாலே ஒரு ஊராட்சி அமைக்கலாம் என்றிருக்கும்போது ஏன் நாம் தனி ஊராட்சி அமைத்து நம்மை நாமே ஆளக்கூடாது என்று தலித் சமூகத்தினருக்கு சிந்தனைகள் வரத் துவங்கியிருக்கின்றன. பெருமையெல்லாம் ஊருக்கு சிறுமையெல்லாம் சேரிக்கு என்று திரு. சன்னா கூறும் பேர் உண்மையை எப்படி களைவது என்று சிந்திக்கும் கால கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இப்போதைய தலித் மக்களுக்கு உண்மையிலேயே நம்மை காக்கும் ஒரு தலித் தலைவர் உள்ளாரா என்ற ஏக்கம் மேலிடத் துவங்கியிருக்கிறது. தலித்துகளுக்கு தனி அதிகாரப் பகிர்வை வழங்கும் போது அடிமைத்தளைகள் இயல்பாகவே அறுத்தெறியப்படுகின்றன. ஆதிக்கச் சாதிகள் சுட்டிக் காட்டிய தலித் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சித்தலைவர் என்பவருக்கும், தலித்துகள் சுட்டிக் காட்டிய தலித் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர் என்பவருக்கும் பெரும் வேறுபாடுகள் உள்ளன. செம்மாப் போடும், மிடுக்கோடும், அறிவாற்றலோடும் இருக்கிற தலித்தை ஆதிக்க சாதிகள் விரும்பமாட்டார்கள் என்பதே உண்மை. அடிமைத் தனத்தின் அழுத்தத்தை ஆண்டாண்டு காலமாய் சுமந்துவந்த தலித் மக்கள் மேல்சாதிக்காரர்கள் தன்னோடு பலர் முன்னால் வெட்டவெளியில் பேசினாலே பெரும் கௌரவம் என்று கருதுகிற நிலையில், கிராமங்களில் இன்னும் வேர் பிடுங்கப்படாத பரிதாபமான மனோபாவங்கள் தலித் மக்களிடத்தில் இருக்கின்றன. அதற்கு வறுமையும் கல்வியறிவின்மையும்தான் மூலகாரணம் எனலாம். தனி ஊராட்சி வரும் போது பள்ளிக் கூடங்கள், அரசு திட்டப் பணிகள், மருத்துவ வசதிகள், உணவுப் பொருள் அங்காடி என தனித் தனியே இயல்பாக வந்துவிடும். சாதி இந்துக்களின் மனோபாவத்தை மாற்றுவதற்கு நம்மை நாமே செழுமைப்படுத்தி



படிப்பகம்

www.padippakam.com

மேம்பட்ட உணர்வு பூர்வமான சுதந்திரம் தேவையாகிறது. ஒரு தலித்துக்கு சொந்த ஊர் அமைக்கும் அற்புதமான ஏற்பாடுதான் தனி ஊராட்சி என்பதாகும். இப்போதைக்கு உள்ள இட ஒதுக்கீடு பிரதிநிதித்துவ தலித் ஊராட்சித் தலைவர்கள், பொம்மைகள் மாதிரி இயங்க வைக்கப்படுகின்றனர். நமக்கான அதிகாரத்தை நமக்குத் தெரியாமலேயே நம்மிடமிருந்து தட்டிப் பறிக்கிற செயல்பாடாகவே தலித் ஊராட்சித் தலைவர்களின் நிலை உள்ளது என்று தெளிவாய் நம்மால் உணரமுடிகிறது. ஆதிக்கச் சாதிகளை மிஞ்சுகிற வகையில் எல்லா நிலையிலும் தலித்துகள் ஆளாக வேண்டும். இதற்கு நம்மை நாமே ஆளும் தனி ஊராட்சி முறைதான் அடிக்கட்டுமானமாக அமைய முடியும்.

**வன்கொடுமை தளையறுக்கும் வழிகள்**

நாட்டில் இட ஒதுக்கீடு சலுகைகள் இருந்தும், ஊராட்சித் தலைவராக தலித் மக்கள் வாய்ப்பு பெற்றும், மனித உரிமை ஆணையம் பல கிளைகளாக நாட்டில் பரவி செயல்பட்டும், இந்திய குடியரசுத் தலைவராக ஒரு தலித் பிரதிநிதி வந்தும் தலித் சமூகத்திற்கு எதிராக வன்கொடுமைகள் தொடர்கின்றது. அது ஏன்? ஊரும் சேரியும் இருக்கிற நிலையில் கிராமங்களில் சாதிப் பகைமை இன்னும் கொழுந்து விட்டு எரிந்துகொண்டுதான் இருக்கிறது. தலித் மக்களுக்கு நிகழ்ந்த பல்வேறு சட்ட வன்முறைகளை சாதியை குறிப்பிடாமல் வெகுஜன பத்திரிக்கைகள் வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

அண்மைக் காலமாக 18 ஊர்களில் நடந்த வன்கொடுமை செய்தியை பெயர்வாரியாக தேதி வாரியாக குறிப்பிட்டு தனது நூலில் வெளியிட்டுயிருக்கிறார் திருமதி சிவகாமி.

1999-இல் பாராளுமன்ற தேர்தலின் போது சிதம்பரம் தொகுதியில் தலித் மக்களுக்கு எதிராக நடந்த கலவரம் குறித்து 'வன்முறை ஜனநாயகம்' என்று 71 பக்கத்தில் தனி நூலாக, ஆய்வேடாக ரவிக்குமார் அவர்கள் எழுதியுள்ளார்கள். அதில் தேதி வாரியாக சம்பவங்களையும், சம்பவம் நடந்த இடங்களையும், சம்பவத்தின் தன்மையையும் காவல் நிலைய குற்றப்பதிவு குறிப்புடன் 51 ஊர்களில் பா.ம.க. ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட வன்முறை விவரங்களை வெளியிட்டிருக்கிறார். இதற்கெல்லாம் ஒரே தீர்வு தலித்துகளுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதாகும்.

**குடியரசுத் தலைவரின் குடியாட்சி சிந்தனைகள்**

"இந்தியா 2020" என்ற நூலை குடியரசுத் தலைவர் மேதகு ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் எழுதியிருக்கிறார். 2020-இல் இந்தியா வல்லரசு நாடாகும் வாய்ப்பை பெறவேண்டுமானால் இந்தியா செய்யவேண்டிய பணிகள், திட்டமிடலோடு கூடிய கடமைகள் எப்படி அமையவேண்டுமென அந்த நூலில் எழுதியிருக்கிறார். அதில்,

*"தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் தொடர்ந்து வறுமையிலும் வெறுமையிலும் கல்லாமையிலும் இல்லாமையிலும் வாடும் வரை, அவர்கள் பின்தங்கியவர்களாக இருக்கும்வரை இந்தியாவை வலிமைமிக்க வளர்ச்சியுற்ற நாடாக மாற்றமுடியாது"*

என்று குடியரசுத் தலைவர் கூறுகிறார். இது முழு அளவில் செயல்படுத்தப்பட வேண்டுமென்றால் வறுமையை, இல்லாமையை, கல்லாமையை ஒழிக்க எடுக்கப்படும் அரசு நடவடிக்கைகள், செலவினங்கள் எல்லாம் தலித் மக்களுக்கு 100% போய்சேரவேண்டும் என்பது தான் இப்போதைய கவலை. தனி ஊராட்சி அமைத்து நிர்வாகம் செய்கிறபோது மக்களுக்கெதிரான விரையங்கள் நிச்சயம் நிகழாமல் இருக்கும். குடியரசுத் தலைவர் அதே நூலில் வேறொரு இடத்தில் கூறுகிறார்.

*"ஒரு வளர்ந்த நாடு என்ற வாஞ்சையுடன் கூடிய குறிக்கோள் நோக்கி பீடுநடை போட இன்றைய நம் பணிமுறைகளை உடனடியாக மாற்றவேண்டும். ஒரேயிடத்தில் கொட்டிக் கிடக்கும் அதிகாரங்களால் உறைந்துகிடக்கிற மனங்களை மாற்றவேண்டும்." (இந்தியா 2020, பக்கம் 429)*

ஒரே இடத்தில் கொட்டிக் கிடக்கிற அதிகாரங்களை பரவல் செய்யவேண்டுமென்பதுதான் தலித் சிந்தனையாளர்களின் கருத்தியல் மையப்புள்ளியாகும். உறைந்து கிடக்கிற மனங்களை மாற்றும் செயல்களை செய்வது யார்? தெளிவாக அறுதியிடும் போக்கை இந்த நாடு பெறவேண்டும். தலித்துகளுக்கு தன்னாட்சி வாய்ப்பு அளித்து தலித் சமூகத்தை முன்னேற்றாமல் விட்டுவிடுவாரேயானால் இந்தியா எப்போதும் வல்லரசு ஆக முடியாது. எல்லா மக்களுக்குமான அதிகாரப் பகிர்தலுக்கு பரந்த நோக்குடன் செயல்பட்டால் இறுகிய மனம் தானாக இளகி மலரும்.

**மாமேதை அம்பேத்கரின் விடுதலைச் சுவடுகள்**

1932-இல் தலித்துகளுக்கு தனி வாக்காளர் தொகுதி என்பதை காந்தி கடுமையாக எதிர்த்தார். அவரது உள்நோக்கம் பொருந்திய லாவகமான பேச்சும் எழுத்துக்களும் எல்லோரையும் இளக வைத்தன.

தனி வாக்காளர் பிற்பாடு இட ஒதுக்கீடு என மாற்றம் பெற்று தலித்துகள் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவிபெற முடிந்தது. ஆனாலும் உயர்சாதி கட்சி அரசியல்வாதிகள் கைகாட்டுகிற தலித்துகள் தான் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சி மேலிடம் என்ன குறிப்பு தருகிறதோ அதைத்தான் தலித் சட்டமன்ற உறுப்பினர்கள் பேச முடிந்தது. சாப்பாட்டை வைத்துவிட்டு கைகளை கட்டிப் போட்ட கதையாய் முடிந்தது. இதற்கு விதிவிலக்குகளும் உண்டு. 1952 வாக்கில் பழனிமுத்து என்ற ஒருவர் தலித்துகளின் 100% ஆதரவோடு சுயேட்சை எம்.எல்.ஏ ஆகி சிங்கம்போல யாருக்கும் அஞ்சாமல் 'மக்கள் ஊழியம் என்றால் என்ன' என்பதை உயர்ந்த பதவியில் அமர்ந்திருக்கும் அரசு ஊழியர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் அஞ்சா நெஞ்சுடன் பணியாற்றியிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

நேருக்குநேர் அதிகாரிகளை சந்தித்து குறைகளை சுட்டிக்காட்டி ஒட்டுமொத்த மக்களுக்கு மட்டு மின்றி தலித்துகளுக்கும் தீவிரமாக உத்விபிருப்பதாக சொல்லுவார்கள். அதே காலகட்டத்தில் ஆலம்பாடி பெரியண்ணன் என்பவரை சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்க தலித் என்ற அக ஒருமைப்பாட்டுடன் விட்டுக்கொடுத்து இன்னொரு தலித் வெற்றிபெற பழனிமுத்து அவர்கள் கடுமையாக பணியாற்றி னார் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளும் செய்தி தலித்துகள் எந்தக் கட்சியில் இருந் தாலும் தலித்துக்களின் ஒட்டு மொத்த நன்மை என்று வருகிற பொழுது 1% கூட அவர்களுக்கு நன்மை பிசகாமல் நடந்துகொள் வதுதான் தலித் தொண்டனுக்குரிய அடையாளமாகும்.

இக்காலத்தில் கட்சி அரசி யலில் வாய்ப்பு பெறும் தலித்து களை ஆதிக்க சாதிகள் சேனம் பூட்டி, கடிவாளம் போட்டு இயக் கிக்கொண்டிருக்கின்றன. ஆதிக்க சாதித்தலைவர்கள் சூட்சுமமாக தலித்துகளின் அறிவையும் உழைப் பையும் தங்களது சமூகத்திற்காக சுரண்டிக் கொழுக்கின்றார்கள். காந்தி ஹரிஜன சேவா சங்கம் என்ற சங்கத்தை உருவாக்கி அதை மக் களுக்கான அமைப்பு என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். இது அரசியல் சாரா அமைப்பு எனவும் அறிவித்துக் கொண்டு எல்லா தலித்துகளுக்கான எதிர் அரசியலை காந்தியார் செய்தார். அந்த ஹரிஜன சேவா சங்கத்தின் நோக்கங்களில் ஒன்று,

*"உரிமைகளை பெறுவதற்கு எத்தகைய நிர்பந்தத்தையும் பயன் படுத்தக்கூடாது. அதற்குப் பதில் அமைதியான முறையில் இணங்கச் செய்யும் வழியை மட்டும் கைக் கொள்ளவேண்டும்." (பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு - 10, பக்கம் 394)*

காந்தியார் கூறிய இந்த வாச கத்திலிருந்து, அண்ணல் அம்பேத்கர் காந்தியின் எதிர் உருவத்தை நமக்கு புலப்படுத்துகிறார். தலித்துகளுக்கு எதிராக அடிமைத்தனங்களை புகுத்துவதில் காந்தி குறியாய் இருப்பதை பிரச்சாரம் செய்தார். தலித்துகளுக்கான தனித்தொகுதி யின் இப்போதைய நடைமுறை கூட மாமேதை அம்பேத்கர் தொடர்ந்து நிகழ்த்திய போராட்ட விளைச்சலாகும். இதையெல்லாம் வைத்துத்தான் இப்போதைய சமூகத்தை துல்லியமாக சீர்தூக்கிய மனிதநேய சிந்தனையாளர்கள் நேரடியானதொரு நரம்பு ஊசி அணுகுமுறையில் சிகிச்சை அளிக் கும் நோக்கை கையில் எடுக்க முனைகிறார்கள். அதில் முக்கிய மான ஒன்று தலித்துகளுக்கு தனி ஊராட்சி என்பதாகும்.

## முடிவுரை

வன்முறைகளையும், பலாத் காரங்களையும், அவமானங்களை யும், சகித்துக் கொண்டு கூட்டுக் குடும்பமாக இருப்பதைவிட பங்கு பிரித்து தனிக்குடித்தனம் அமைப் பதே தலித் மக்களுக்கு சரியானதாக அமையும். சுயாட்சி நெறிமுறை யினை கையில் எடுக்கும் எந்த சமூகமும் வெற்றிபெறத்தான் செய் துள்ளது என்பது இந்த உலகத்தின் கண்கூடு. மக்களாட்சி என்பது அந்தந்த மக்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதே! அதுவே உண்மை யான சுதந்திரத்திற்கு அடையாளம். அதைவிட்டுவிட்டு "தரகு" சமைக் கும் ஏற்பாடாய் தலித்துகளின் மேம்பாட்டுப் பணியை தலித்து அல்லாதவர்களின் மேலாண்மை தீர்மானிக்கிறது என்பது சுதந்தி ரத்தை களவாடும் நிலையாகவே உணரமுடிகிறது.

உலகம் மிக நவீனமாகவும் பரந்த மனப்பான்மையாகவும் வளரும் இந்த சூழலில் தலித் சமூக மக்களுக்கு உகந்ததாகப்படும் **வாழ்க்கையை அமைக்கவேண்டும். ஒவ்வொரு ஊரிலுமிருக்கிற சேரியை தனி ஊராக மாற்றவேண்டும். தனி** ஊராட்சி, தனி ஆளுமையை கைக் கொள்ளும் வகையை. அரசு நடை முறைப்படுத்த வேண்டும். ●



**சென்னை** நகரம் சென்னை கிராமமாக இருந்தபொழுது பெரும் பான்மையாக வாழ்ந்து வந்த ஆதித்திராவிடர் எனப்படும் தலித் மக்கள். சென்னை நகரமாக மாறிய பிறகும் அதே பகுதிகளில் அந்தந்த நிலங்களில் வாழ்ந்தார்கள். ஆக பூர்வீக குடிகளாக, பூர்வீக மக்களாக பெரும்பான்மையான இச்சமூகத்தினர் வாழ்கின்றதால் இவர்களை சென்னையை விட்டு ஒட்டுமொத்தமாக வெளியேற்ற வேண்டும் என்று திட்டமிட்டு பல நூற்றாண்டு காலமாக அனுபோக ரீதியாக தலித் மக்கள் வாழ்ந்த பகுதியை, பெரும் கட்டிட உரிமையாளர்களுக்கு கிரையம் செய்து அதன் மூலம் பல கோடி ரூபாய்கள் வருவாய் பெற்றதோடு தலித் மக்களை நிரந்தரமாக சென்னையிலேயே குடியிருக்க முடியாத அளவுக்கு சென்னைக்கு அருகாமையில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் 10 அடிக்கு 8 அடி என்ற சிறைச்சாலைக் கூடத்தைப் போன்ற அடிப்படை வசதியற்ற ஒரு குடியிருப்பை உருவாக்கி மாதவாடகை அவர்களிடம் பெறப்படுகிறது. அங்கே குடியேறிய தலித் மக்கள் வேலை வாய்ப்பற்று தினம் தினம் வறுமைக்கு இறையாகின்றார்கள். அதனால் ஏழைகள் குற்றங்கள் செய்வதாக வதைக்கப்படுகிறார்கள்.

இதை ஆட்சேபித்து அம்பேத்கர் புரட்சி புலிகள் இயக்க நிறுவனரான மு. கிருஷ்ண பறையனார் தன்னுடைய அமைப்பின் பொறுப்பாளர்களுடன் மேதகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



■ பேரா. க. பஞ்சாங்கம்

# தலித் கலை இலக்கிய வளர்ச்சியில் தலித் ஆதரவாளர்களின் பங்கு

தலித் கலை, தலித் இலக்கியம், தலித் பண்பாடு என்று பேசத் தொடங்கிய தொண்ணூறுகளில் ஏற்பட்ட அமளி, ஓரளவு இன்று அமுங்கிவிட்டது; அதென்ன சாதி அடிப்படையில் தலித் இலக்கியம், வேளாளர் இலக்கியம், வன்னியர் இலக்கியம் என்பது? இலக்கியத் திற்குச் சாதி ஏது? பால் ஏது? மதம் ஏது? வர்க்கம் ஏது? மொழி, நாடு என்ற எல்லை ஏது? என்றெல்லாம் எழும்பிய சத்தங்கள் ஓய்ந்துவிட்டன. 'இது தலித் இலக்கியத்திற்கான' காலமென்று உரக்க ஒலிக்கக் கூடிய அளவிற்கு ஏராளமான தலித் எழுத்தாளர்களும் எழுத்துக்களும் புதிது புதிதாக வந்த வண்ணம் இருக்கின்றன. தலித் எழுத்துக்களுக்கு உலக அளவில் அங்கீகாரமும் அமைந்துவிட்டது. சாகித்திய அகாடமியின் பொன்விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி வழங்கப்பட்ட சிறப்புப் பரிசு ரூ. 2.5 லட்சம் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த 'மகர்' இனத்துத் தலித் எழுத்தாளர், லஷ்மண் தலால் அவருக்குக் கிடைத்துள்ளது. தமிழிலும் தலித் எழுத்தாளர் சிவகாமி, பாமா, அன்பாதவன், விழி.பா. இதயவேந்தன், கே.ஏ. குணசேகரன், சோ. தர்மன் முதலியோர் பல இலக்கியப் பரிசுகளைப் பெற்று தலித் இலக்கியத்திற்கான அங்கீகாரத்தை உறுதி செய்துள்ளனர். இதன் விளைவாக, தலித் இலக்கியத்தைத் தலித்தாகப் பிறந்து, அதன் வலியை உணர்ந்தவர் எழுதுவதுதான் நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கும் என்ற கருத்து ஓரளவிற்குத் தமிழ் இலக்கியப் பரப்பில் நிலைநிறுத்தப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். தலித் ஆதரவாளர்கள், தலித்தியத்திற்குச் சார்பாக நின்று கவிதையோ, கதையோ, நாவலோ எழுதலாம். (பலபேர் அவ்வாறு எழுத முன்வரவில்லை என்பதையும் இந்த இடத்தில் பதிவு செய்து கொள்வது நல்லது). ஆனாலும் அந்த எழுத்துக்கள் 'தலித் ஆதரவாளர்களின் எழுத்துக்கள் அல்லது படைப்புக்கள்' என்ற தனித் தலைப்பின்கீழ் பகுக்கப்பட்டு தலித் இலக்கியத்திற்குப் பக்கபலமாக நின்றுதான் வினைபுரிய முடியுமே ஒழிய, தலித் இலக்கியமாகக் கருதி விட முடியாது. இலக்கியத்திற்கு உயிர்நாடியாக விளங்குவது நம்பகத் தன்மை. இந்த நம்பகத் தன்மையை தலித்தாகப் பிறந்து, வாழ்ந்து, வளர்ந்த ஓர் உயிர்தான் சரியாகக் கட்டமைக்க முடியும். தலித் ஆதரவாளர் எழுத் தில் தொழில்நுட்பம் மிகச் சிறப்பாக அமையலாம். படைப்பாற்றலை பாங்காக வெளிப்பட்டிருக்கலாம்; ஆனாலும் அது வெளிப்படுத்தும் அனுபவம் 'கற்பனையானது' என்ற உண்மை வந்து முன்னே நிற்கும்போது எல்லா வகையான 'தந்திரங்களும்' பயனற்றுப் போய்விடுகின்றன. எனவே தலித் கலை இலக்கிய வளர்ச்சிக்குத் தலித் ஆதரவாளர்கள் படைப்புத் தளத்தில் பெரிய அளவில் பங்காற்றிவிட முடியாது என்றே கருத நேர்கிறது.

வாசகர் என்ற தளத்தில், தலித் ஆதரவாளர்கள் தலித் கலை, இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை வழங்க முடியும். தலித் எழுத்துக்களை விலைக்கு வாங்கி விற்பனையைப் பன்மடங்கு காட்டுவதன் மூலம் தலித்திய வளர்ச்சிக்குப் பக்கபலமாக நிற்க முடியும். உண்மையில் சிறுபத்திரிக்கை வட்டாரத்தில் பழக்கமுடைய தலித் ஆதரவாளர்களின் வாசிப்புதான் தலித் கலை இலக்கியச் சொல்லாடலை இந்த அளவிற்கு வளர்த்தெடுத்திருக்கிறது எனக் கருதுவதற்கு இடம் இருக்கிறது. ஆனாலும் ஒரு சர்வே நடத்தி புள்ளி விவரங்களைத் திரட்டி அலசுவதன் மூலமாகத்தான் இந்தக் கருதுகோளின் வன்மை மென்மைகளை நிறுவமுடியும். மேலும் தலித் ஆதரவாளர்கள் வாசகர்களாக விளங்கும் தொகையை விட, தலித்தியத்திற்கு எதிரானவர்கள் தலித் எழுத்துக்கான வாசகர்களாக விளங்கும் தொகை அதிகமாக இருக்கவும் வாய்ப்பு உண்டு. சும்மா கைகட்டிக் கொண்டிருந்தால் தலித் விரோதியாகக் கணிக்கப்பட்டு விடலாம் என்ற அச்சத்தின் காரணமாகவும் நவீன இலக்கியப் போக்கோடு பரிச்சயமே இல்லாமல் போய் விடக்கூடாதே என்ற விழிப்புணர்வு காரணமாகவும், தலித் இலக்கிய வாசகர்கள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கருத வாய்ப்பிருக்கிறது. இத்தகைய வாசகர்களைத் தலித் இலக்கிய ஆதரவான வாசகர்களாக மாற்றுவதில், தலித் ஆதரவாளர்கள் பெரும் பங்களிப்பினைச் செலுத்த முடியும்.

விமர்சகன் என்ற தளத்தில், தலித் ஆதரவாளர்களின் நிலை பெரும் இக்கட்டான சூழலில் இயங்க வேண்டியதாக இருக்கிறது. தலித் இலக்கியத்தைத் தலித்துதான் படைக்க வேண்டும் என்ற கருத்தாக்கத்தைக் கட்டமைத்துள்ளது போல, தலித் இலக்கியத்தை மற்றொரு தலித் வாசகன்தான் திறனாய்வு செய்ய வேண்டும் என்ற கருத்தாக்கம் இங்கே உருவாக்கப்படவில்லை; பெண்களின் எழுத்துக்களைப் பெண்கள்தான் திறனாய்வு செய்யவேண்டும் என்று பெண்நிலை நோக்குத் திறனாய்வு (Gyno Criticism) என்ற ஒன்றினை எலைன் ஷோவால்டர் என்ற அமெரிக்கப் பெண் எழுத்தாளர் கட்டமைத்துள்ளது போல, தலித் எழுத்துக்கள் குறித்து அப்படியொரு பேச்சு இங்கே இன்னும் எழவே இல்லை. இன்னும் சொல்லப் போனால், "எங்கள் எழுத்துக்களைக் குறித்து நாங்களே எங்களுக்குள் பேசுவதில் என்ன இருக்கிறது; மற்றவர்கள் பேசட்டும்" என்று கருதுகிற போக்கு பல தலித் எழுத்தாளர்களிடம் நிலவுவது ஆச்சரியம் தரத்தக்கதாக இருக்கிறது; தங்கள் எழுத்துக்களுக்கு 'உயர் சாதியினரிடம்' அங்கீகாரம் கேட்டு நிற்கும் மனப்பான்மையிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. தங்களுள் ஒருவன் தங்கள் எழுத்



படிப்பகம்

www.padippakam.com

தைப் பாராட்டுவதைவிட, தங்களில் அல்லாத ஒருவன் பாராட்டுவதைப் பெருமையாகப் புனைந்து கொள்ளும் பாங்கு நீடிப்பது துக்கப்படத் தக்க ஒன்றாகும்.

தலித் ஆதரவாளர்கள், தலித் கலை இலக்கியம் குறித்துத் தங்களின் மதிப்பீட்டை முன்வைக்க முடியாத சூழல் நிலவுவதாகக் கருதுகிறார்கள். விமர்சனத்தை முன்வைக்கும்போது, "இந்த விமர்சனத்தில் தலித் அல்லாத அவருக்குள்ளே அவருக்கும் அறியாமலேயே பதுங்கிக் கிடக்கும் உயர்சாதி படைப்பான்மைதான் வெளிப்பட்டுள்ளது; சாதியை உதர முடியாதவன், தலித் இலக்கியத்தை விமரிசிக்க என்ன தகுதி இருக்கிறது?" என்ற விதமான குற்றச்சாட்டிற்கு உள்ளாக வேண்டியது வரும் என்ற நிலையில் பெரும்பாலும் தலித் இலக்கியத்தை மதிப்பிட்டு உரைக்க முயல்வதைத் தவிர்க்கின்றனர்; இதன் விளைவாக தலித் இலக்கியம் குறித்த தொடர் உரையாடல் நிகழாமல், அந்த 'எழுத்து' அப்படியே தேங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது? உண்மையில் யாரும் சாதி உணர்வில் இருந்து முற்றிலும் விடுதலை பெற்றவர்கள் இல்லை; 'தலித் ஆதரவாளர்கள்' எனச் சொல்லிக் கொள்பவர்களுக்கும் இது பொருந்தும். இந்த உண்மையை உள்வாங்கிக் கொண்டு, தலித் ஆதரவாளர்கள், தலித் இலக்கியம் குறித்த விமர்சன மொழியாடலை நிகழ்த்தும்போது, ஓரளவிற்குத் தலித் இலக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும்; தனக்குள் வந்து படிந்திருக்கும் 'இலக்கியம்' குறித்த பார்வைகள், கருத்தாக்கங்கள் எல்லாம் ஆதிக்கவாதிகள் கட்டமைத்து விட்டவைகளில் இருந்து புறப்பட்டு வந்தவை என்ற புரிதலோடு இயங்கும்போது, 'தலித் இலக்கியம்' குறித்த சரியான மதிப்பீடுகளோடு முன்னே வரமுடியும். அப்பொழுது மேற்கண்ட பிரச்சினை வர வழியில்லை.

இதழாளர்கள் என்ற முறையில் தலித் ஆதரவாளர்கள் பலர் தலித் இலக்கியச் சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளனர். தினமணிக் கதிர், இந்தியா டுடே, விளிம்பு நிலை இலக்கியம் என்ற பெயரில் 'வல்லினம்' முதலிய இதழ்கள் தலித் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை நின்றுள்ளன. மேலும் தலித் இதழ்களாக அடையாளம் காணப்படும் கோடாங்கி, தலித், தலித் முரசு, தாய்மண் முதலிய இதழ்களிலும் பங்கெடுப்பதன் மூலம் தலித் ஆதரவாளர்கள், தலித் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை செய்கின்றனர். அதுபோலவே பதிப்பகங்களிலும் தலித் ஆதரவாளர்களை அடையாளம் காண முடிகிறது. விடியல், க்ரியா, அன்னம், காவ்யா, தமிழினி, மித்ரா, காலச்சுவடு முதலிய பதிப்பகங்கள் தலித் கலை இலக்கியங்களை வெளியிட்டுள்ளன. ஆனால் பதிப்பகங்களின் இந்தச் செயல்பாட்டை முழுக்க முழுக்கத் தலித் ஆதரவான செயல்பாடாகக் கொள்ள முடியுமா? என்ற ஐயமும் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை; தலித் அரசியலும், தலித் இலக்கியச் சொல்லாடலும் முதலிடத்தை நோக்கி நகர்கிற ஒரு காலகட்டத்தில், அவைகளை நுகர்வுப் பண்டமாக மாற்றிச் சந்தைச் சரக்காக விற்க முயலுகிற பதிப்பகத்தாரையும் வெகுஜன ஊடகத்தாரையும் தனியே அடையாளம் காணவேண்டும் என்றும் சொல்லத் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும் ஒரு பக்கம் வியாபாரம் என்றாலும், மறுபக்கம் தலித் சொல்லாடலை வளர்த்தெடுக்க அந்த முயற்சிகள் பயன்படுகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

கல்விக் கூடங்களில் தலித் ஆதரவாளர்கள் சிலர் காணக் கிடக்கின்றனர். இவர்கள் மூலமாக தலித் இலக்கியம் வருந்தலைமுறைக்கான பாடப்பகுதியாக இடம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. 'ஆய்விற்கு' முன்மொழியப்படுகிறது. பல 'கருத்தரங்குகள்' நடத்தப்படுகின்றன. சென்ற ஆண்டு தேசிய அளவில், பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன், திருச்சி பிஷப் ஹிப்பர் கல்லூரியின் பேராசிரியர் பூரணச்சந்திரன் தலித் இலக்கியம் குறித்து இரண்டு நாள் கருத்தரங்கினை நடத்தி, அந்தக் கட்டுரைகளையும் தொகுப்பாகக் கொண்டு வந்துள்ளார். இந்த அளவிற்குப் பல்கலைக் கழக அளவில் தலித் ஆதரவாளர்கள் தலித் இலக்கியம் குறித்த உரையாடலை வளர்த்தெடுக்க துணை நிற்கின்றனர். ஆனால் இத்தகைய முயற்சிகள், எந்த அளவிற்குத் தமிழ் இலக்கியத்தின் அற நோக்கிற்கு, கலகச் செயல்பாட்டிற்குத் துணைநிற்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்; அடுத்த தலைமுறைக்குத் தலித் இலக்கியச் சொல்லாடலை நகர்த்துகிறார்கள் என்பது இதில் உள்ள நல்ல அம்சம்.

பழைய இலக்கியங்களை தலித்தியப் பார்வையில் மறுவாசிப்பிற்கு உட்படுத்துவது, காணாமல் அடிக்கப்பட்ட பழைய தலித் எழுத்துக்களைக் கண்டெடுத்து அச்சுக்குக் கொண்டுவருவதன் மூலமாகவும் தலித் ஆதரவாளர்கள் தலித்தியத்திற்குத் துணை நிற்கின்றனர். இந்த வகையில் அயோத்திதாசப் பண்டிதர் எழுத்துக்கள் அச்சில் வந்தன. இது ஒரு முக்கியமான செயல்பாடாகும். இதுபோலவே சேலம் தமிழ் நாடன் "பாப்பாத்திக்கும் பறைச்சிக்கும் நடந்த அலங்காரச் சண்டை" (1929), "விநோத விசித்திர பார்சி, தோட்டி, தோட்டிச்சி, பறையன் பாட்டு" (1929) ஆகிய இரண்டு நூல்களைத் தேடித் தந்துள்ளார். இத்தகைய முயற்சிகள் வலுப்பெறும்போது, தலித்திய அரசியலும் பண்பாட்டுக் கூறுகளும் மேலும் வளர்ச்சி அடைய வாய்ப்பாக அமையும்.

பிற அமைப்புக்களில் இருக்கிற தலித் ஆதரவாளர்கள், தலித் கலை இலக்கியத்திற்கு ஓரளவு துணையாக நிற்கின்றனர். அரசியல் நிலைப்பாட்டில் தங்கள் தங்கள் அரசியல் பார்வையோடுதான் விளங்குகிறார்கள் என்றாலும், தலித் சார்பாகக் கருத்தாக்கங்களைக் கட்டுவதில் கவனம் கொள்ளுகின்றனர். இந்தச் சக்திகளை ஒன்று திரட்டிக் கொள்ளும்போது, தலித் கலை, இலக்கிய வளர்ச்சியும் சொல்லாடலும் பன்மடங்கு பெருக வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறு பன்முகப்பட்ட ஒரு தளத்தில், தலித் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவான குரல்கள் ஒலிக்கின்றன. அவைகளின் உண்மைத் தன்மையை அடையாளம் கண்டு பயன்படுத்திக்கொள்ள முயல வேண்டும். அதே நேரத்தில் எல்லாவற்றையும் "ஐயப்படு" என்றார் மார்க்ஸ். அதையும் மறந்துவிடக் கூடாது எனவும் சொல்லத் தோன்றுகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



■ பேரா. லெனின்

# மதம் மாறியவர்களின் சமூக நிலை

மதம் என்பதே சமூக சமநிலைக்கு எதிரான கட்டமைப்பாகும். இந்து மதத்தின் வருண அமைப்புமுறை அதனை மெய்ப்பிக்கும். அது படிநிலை அமைப்புமுறையைக் கொண்டிருப்பதுடன் அம்மதத்தை ஏற்காதோர் மீது இந்து மதம் கட்டவிழ்க்கும் அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் தலித்துகளின் வரலாறே சான்றாகும்.

பார்ப்பனர்களின் வருண கட்டமைப்பிற்குள் அடங்கி சமரசமான சாதி இந்துக்கள் இரண்டாம் நிலை ஆதிக்கத் தன்மையுடன் இருப்பதோடன்றி தலித்துகள் மீதான வன்கொடுமைகளை நேரடியாகவே நிகழ்த்தி வருகின்றனர். அத்தகைய அடக்குமுறைகள் அருவெறுப்பானதும், அப்பட்டமான மனித உரிமை மீறலாகவும் உள்ளது.

தலித்துகள் சாதியற்றவர்கள் என்றாலும் சாதி இந்துக்கள் பார்ப்பனர்களோடு சேர்ந்து கொண்டு தலித்துகளை சமூக அமைப்பில் கீழ்தட்டிலேயே வைத்திருப்பதோடு அருவறுக்கவும் வெறுக்கவும் தக்கதான இழிவான தொழில்களை செய்யும் நிர்பந்தங்களை உருவாக்கினர். ஏற்கனவே சமூக, பொருளியல் சூழலில் ஒடுக்கப்பட்ட தலித்துகள் சார்புநிலை வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் (நிலம் வைத்திருப்போரிடம்) வேறு வழியின்றி இத்தகைய இழிநிலையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

பார்ப்பனர்களின் அடிமைகளாக இருந்த தமிழ் மன்னர்களின் அரச பயங்கரவாதம் தலித் மக்களை நிலம், ஆயுதம், பொருளற்ற ஏழைக் கூலிகளாக்கியதோடு தீண்டத்தகாதவர்களாக்கியது.

மொகலாயர், கிறித்தவர் வருகைக்குப்பின் தலித்துகளின் வாழ்நிலையில் மாற்றம் நிகழும் என்று நம்பினர். ஆனால் இஸ்லாமிய மதமாற்றம் ஓரளவிற்கு சமத்துவ நிலைக்கு இட்டுச் சென்றாலும் உருது மொழி பேசும் முஸ்லிம்களுக்கே முதன்மைத்துவம் கிடைக்கிறது. என்றாலும் பிளவுகள் பேதங்கள் காட்டப்படவில்லை.

இஸ்லாமியர்கள் எண்ணிக்கை பலமற்றவர்கள் என்றாலும் அவர்களின் கூட்டுணர்வும் பரஸ்பரமும் தனிநாட்டை உருவாக்கும் அளவிற்கு இட்டுச் சென்றது. எஞ்சிய இஸ்லாமிய சமூகம் பெரிய அளவில் பொருளாதார கட்டமைப்பைக் கைப்பற்றினாலும் அவர்களின் வளர்ச்சியை நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்துத்துவ சக்திகள் தடுத்து வருகின்றன.

ஆனாலும் அவர்கள் பெரிய அளவில் அவர்களுக்கான அரசியல் அதிகார பங்களிப்பினை கோரவில்லை என்றாலும் அவர்களின் வேலைவாய்ப்பை அரபு நாடுகள் உறுதி செய்து அளிக்கின்றன. மிகக் குறைந்த அளவினரே ஏழ்மைநிலையில் உள்ளனர். எனினும் அவர்கள் இந்து சனாதன அமைப்பு முறை வாழ்க்கையை விட்டு விலகியே இருக்கின்றனர். மேலும் இழி தொழில்களை செய்துதீர வேண்டும் என்ற சமூகக் கட்டாயமோ அச்சுறுத்தலோ இருப்பதில்லை.

இருப்பினும் பிற சமூகத்தின் அதாவது சாதி இந்துக்களுடனான உறவுமுறையில்மோசமில்லை. ஆனால் எந்தவிதத்திலும் தலித்துகளுக்கு ஆதரவான நிலையை இஸ்லாமியர்கள் மேற்கொள்வதில்லை. அண்மையில் வெளிப்படையான அறிவிப்புகளோடு இந்துமதப்பிடியிலிருந்து விலகி இஸ்லாம் தழுவியவர்களை முன்னதாக மதம் மாறியவர்கள் முழுமனதுடன் அரவணைத்து செல்லவில்லை என்பதும், இருப்பினும் தமது மதத்தை முன்னிறுத்தி அவர்கள் அரபு நாடுகளில் வேலைபெற முடிகிறது என்பதும் மறுக்கவியலாத உண்மையாகும்.

ஆனால் இஸ்லாம் மதத்தின் இந்திய சமூக அணுகுமுறைக்கும் கிறித்தவ மதத்தின் இந்திய சமூக அணுகுமுறைக்கும் பெரும் வேறுபாடு உண்டு. இஸ்லாத்தைப் போல் தனித்துவமான அடையாளங்களுடன் கிறித்தவம் காப்பதிக்கவில்லை. அவை நேரிடையாகவே வருண சாதி அமைப்பு முறையை உள்வாங்கிக்கொண்டு பெயர் மாற்றம் (இந்து கிறித்தவமானது) மட்டுமே ஏற்பட்டதே ஒழிய அடிப்படையில் கிறித்தவம் இந்துத்துவத் தன்மையுடனேயே இயங்கி வருகிறது.

முந்தைய காலங்களில் எழுப்பப்பட்ட ஆலய கட்டிட அமைப்பு முறையும், இன்றுவரையில் கல்லறைகளில் இருக்கும் தடுப்புச் சுவர்களுமே அதனை மெய்ப்பிக்கும். அதோடு மட்டுமின்றி மதம் பரப்ப வந்த பாதிரிகளும் இந்து மத போதகர்களைப் போலவே வேஷமிட்டுக் கொண்டதையும் மறக்கவியலாது. சாதி ஒழிப்பை மதமாற்றத்திற்கான முன்நிபந்தனையாக இஸ்லாம் வலியுறுத்திய அளவிற்கு கிறித்தவம் வலியுறுத்தவில்லை.

போதிய கல்வியறிவை கிறித்தவர்களைப் போல் இஸ்லாமியர்கள் பெறமுடியாமல் இருப்பதற்கு அவர்கள் வணிகத்தின் மீதான நாட்டத்தை கல்வியின் மீது காட்டவில்லை. ஆயினும் 80%-க்கும் மேற்பட்ட தலித்துகளும் 20% அளவிலான சாதி இந்துக்களும் கிறித்தவம் தழுவினர். ஆனால் நடை



படிப்பகம்

www.padippakam.com

முறையில், தலைகீழாக குறைந்த எண்ணிக்கையுடைய சாதி இந்துக்கள் (கிறித்தவர்கள்) மத நிறுவனங்களை கைப்பற்றி கோடிக்கணக்கான சொத்துக்களை தமது அதிகார அமைப்பிற்குள்ளாக வைத்திருப்பதோடு நிறுவனங்களினூடாக வேலை வாய்ப்பினையும் தமது சாதியினருக்கே அளித்து வந்தனர், வருகின்றனர்.

இந்து சமூக கட்டமைப்பில் உள்ள படிநிலை பேதங்களும் இழிதொழில் கொடுமைகளும் கிறித்தவத்திற்குள்ளும் தொடரவே செய்கின்றன. கிறித்தவ நிறுவனத்தின் பள்ளி மற்றும் கல்லூரிகளில் மதம் மாறிய தலித்துகள் போதிய அளவில் சேர்க்கப்படுவதில்லை என்பதோடு முதன்மையான அறிவியல் பாடங்களை வெளிப்படையாகவே மறுத்தும் வருகின்றனர்.

இந்திய கிறித்தவத்தைப் பொறுத்தவரையில் ஒரே நேரத்தில் இரண்டு கிறித்தவப் பிரிவினர் (ரோமன் கத்தோலிக்கர்கள், தென்னிந்திய திருச்சபை) உள்ளே நுழைந்தாலும் அடக்குமுறையும், ஒடுக்கு முறையும் ஒன்றே. CSI எனப்படுகிற தென்னிந்திய திருச்சபையில் 'நாடார்களின்' ஆதிக்கம் தமிழகத்தின் தெற்குப் பகுதியில் ஓங்கி இருக்கிறது. நிறுவன அமைப்பில் நாடார்களே அதிகாரம், ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். வட தமிழகத்தைப் பொறுத்தவரையில் தலித்துகள் பெரும்பான்மையாக (CSI) தென்னிந்திய திருச்சபையினராக இருந்தாலும் வடபகுதியில் அம் மதப் பிரிவினரின் கல்வி நிறுவனங்கள் திறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் மத போதகர்களான நாடார்கள் வட தமிழகத்திலும் கோலோச்சுகின்றனர்.

CSI அமைப்பினைப் பொறுத்தவரையில் தலித்துகள் ஏதுமற்ற நிர்கதியாளர்கள்தான். எனினும் அவ்வமைப்பிற்குள் எத்தகைய கலக உணர்ச்சியும் இதுவரையில் தலைதூக்காமலிருப்பது வேதனையான விந்தை.

கத்தோலிக்க கிறித்தவ மதத்தில் பல்வேறு பணிக்குழுக்கள் இருப்பினும் கிறித்தவ சகோதரிகள் (sisters) அமைப்பில் பெரும்பகுதி மலையாளப் பெண்கள் கையிலும், எஞ்சியவை சாதி கிறித்தவப் பெண்கள் கையிலும் உள்ளன. இருப்பினும் ஆண்கள் தலைமையில் பரவலாகப் பேசப்பட்டு வருகிற 'விடுதலை இறையியல்' என்னும் கருத்தியலை தலித் குருக்கள் உயர்த்திப் பிடிக்கின்றனர். மறைமாவட்ட அளவில் தலித்துகள் பெரிய அதிகார அமைப்புகளில் அமர்த்தப்படுவதில்லை. குழுவாக இருக்கிற அமைப்புகளிலும் இதுவே நிலைமை என்றாலும் சேசுசபையில் மட்டும் கடந்த பத்தாண்டுகளில் சில சமூக மாறுதல்கள் நிகழ்ந்து அங்குள்ள தலித் குருக்களின் வற்புறுத்தல்களால் அவர்களின் பார்வை தலித்துகளின் பக்கம் திரும்பியுள்ளது.

இருப்பினும் கத்தோலிக்கக் கிறித்தவ அமைப்பில் தலித்துகள் திரட்டப்படாத பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். CSI அமைப்பிலும் அவ்வாறே உள்ளனர். இரண்டு கிறித்தவ அமைப்பின் கீழ்வரும் நிறுவனங்களிலும் சாதி கிறித்தவர்கள் தற்சார்பு பொருளாதார நிலையோடும் நிரந்தர அரசு ஊதியப் பணியோடும் இருக்கிறார்கள். ஆனால் தலித்துகள் கணிசமான அளவிற்குக்கூட அப்படி இல்லை.

உரிமை, பங்கு என்ற எண்ணத்தை தலித் கிறித்தவர்கள் மத்தியில் விதைத்த தலித் கிறித்தவர் விடுதலை இயக்கம் காலப்போக்கில் தொய்வடைந்து விட்டது. இத்தகு உரிமைக் கிளர்ச்சிகள் ஆதிக்க சாதி வெறியர்களை வேறுவகையில் சிந்திக்கவைத்து விட்டது. அதாவது சொத்தும், அதிகாரமும் நிறைந்த மதம் மற்றும் மதம் சார் நிறுவன அமைப்பிலிருந்து முற்றிலும் தலித்துகளை விலக்கி விடுகிற முயற்சியே ஆகும்.

தேசிய அளவில் கிறித்தவர்களுக்கான அரசியல் அதிகார அமைப்பில் இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வரும் தருவாயில் தலித்துகளை தனித்த சிறுசிறு குழுக்களாக உடைக்கிற முயற்சியே அது.

ஒன்றுபட்ட தலித்துகள் கத்தோலிக்க அமைப்பிற்குள் திரட்டப்பட்டிருந்தாலும் அதிகாரம், உரிமை கோருகிறவர்களை கத்தோலிக்க மற்றும் CSI அமைப்பினை விட்டு வெளியேற்றி துண்டு துண்டாக சிதறும்படி புதிய வழிபாட்டு குழுக்களாக தலித்துகளைப் பிரிக்கின்றனர். அவ்வாறு உருவாக்கப்படும் குழுக்கள் வெற்று வழிபாட்டு நிலையோடு நின்றாலும் அவர்களைக் காட்டி பிழைப்பு நடத்துவோர் சாதி கிறித்தவர்களாகவே இருக்கின்றனர்.

இவ்விரு கட்டுமான அமைப்பினை விட்டு (சொத்து, அதிகாரம்) வெளியேறுகிறவர்கள் மீண்டும் அவற்றின் மீது உரிமை கொண்டாடவோ, உரிமை கோரவோ முடியாது. இப்படி செய்யப்படுகிற முயற்சியை சாதி கிறித்தவர்களின் மதத்தலைமை கண்டிப்பதில்லை. ஏனென்றால் சொத்து அவர்களுக்கு மிச்சம். கிறித்தவர்களுக்கான இடஒதுக்கீடு சாத்தியப்படும் தருவாயில் தலித்துகள் சிதறுண்டிருந்தால் அவற்றின் பலனைப் பெற இயலாமல் போகும். ஏற்கனவே ஒருமத அமைப்பிற்குள்ளே இருப்பவர்களை மற்ற கிறித்தவ அமைப்பிற்குள் ஏற்றுக்கொள்ளவோ வாய்ப்பளிக்கவோ மாட்டார்கள். இப்போதே இப்படியென்றால் சிதறடிக்கப்பட்ட தலித்துகளுக்கு எதுவுமே கிடைக்காமல் போய்விடும்.

மதம் மாறினாலும் தலித்துகளின் வாழ்நிலையில் பெரும் மாற்றமில்லை. என்றாலும் கணிசமான அளவில் கலைத்துறை சார்ந்த பாடங்களைப் படித்து இருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. எனினும் அரசின் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் போட்டி பிற்பட்ட சாதி இந்துக்கள் மற்றும் கிறித்தவர்கள் என்று வருகிறபோது, அவர்களுக்கு அரசியல் அதிகாரம் வெறும் கனவாகவே இருக்கிறது.

தனித்த வணிகம் மற்றும் பொருளாதார அமைப்பு முறைகளோடு சாதி கிறித்தவர்களுக்கு மட்டுமே தொடர்பும் அனுபவமும் இருக்கிறது. அந்த வகையிலும் மதம் மாறிய தலித்துகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். மதம் மாறினாலும் வருண வாழ்க்கை முறையே மிச்சமாயிருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



■ அபிமானி

# தலித் நாவல்களில் அம்பேத்கரியம்

தலித் நாவல்களே படைப்புச் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை கிளர்த்திவிட்டிருக்கின்றன எனலாம். ஏனெனில் நாவல்கள் என்பது ஒரு மனிதனின் அல்லது ஒரு சமூகத்தின் சகல வாழ்க்கைப் பரிமாணங்களையும் கேள்விக்கு உட்படுத்துகிறது. குறிப்பாக தலித் நாவல்கள் தன் சமூகத்தின் வாழ்க்கைத் தோற்றங்களை கேள்விக்கு உட்படுத்துவதோடு, தலித் சமூகத்தின் விடுதலைக்கான கூராம்சங்களையும் கருத்தரித்துக் கொண்டிருக்கின்றன. அப்படியெனில் தலித் படைப்புக்களைப் பற்றுக்கோடாகக் கொண்டே தலித் விடுதலையை வென்றெடுக்க முடியுமா என்பது கேள்விக்கு உரியதாயிருக்கிறது. தலித்துகளின் விடுதலைக்காக டாக்டர் அம்பேத்கர் முன்வைத்த கோட்பாடுகள் தேவையற்றவையா என்பதையும் விசாரணைக்கு உட்படுத்தத் தோன்றுகிறது.

அந்த விசாரனை சாரமற்றது. படைப்பாக்கம் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கைப் பரப்பளவைப் பிரதியெடுக்கும் பணி. அந்தப் பிரதியைப் பரிச்சயப் படுத்தும்போது விவரிக்கப்பட்டிருக்கும் சமூகத்தின் இழிவுநிலை குறித்து வாசக மனங்களில் ஆதங்கம் கிளம்பலாம்; ஆவேசம் எழலாம். அச் சமூகத்தின் இழிவு நிலையைத் துடைத்தெறிய வேண்டுமென்ற உந்துதலுக்கு உட்படலாம். ஆனால் அந்த உந்துதலை சீராக வழிநடத்திச் செல்வதற்கு கோட்பாடுகள் வேண்டும். அந்தக் கோட்பாடுகளே எதிரி யார், நண்பன் யார், எவற்றை எதிர்த்து நாம் போராட வேண்டும், எவற்றோடு நாம் ஒருங்கிணைத்துக் கொள்ளவேண்டும் என்று ஒழுங்குபடுத்துகிறது.

தலித்துகளின் விடுதலைக்காக உறுதிமிக்கக் கோட்பாடுகளை முன்வைத்தவர் டாக்டர் அம்பேத்கர். தலித்திய விடுதலை குறித்துப் பேசுகிற எவரும், டாக்டர் அம்பேத்கரின் சிந்தனையை மறுதலித்துவிட்டு ஒன்றும் சாதிக்க முடியாது என்பது யதார்த்தம். அப்படியென்றால் அம்பேத்கரியம்தான் தலித்தியமா என்ற ஐயப்பாடும் எழுகிறது. நியாயமான ஐயப்பாடுதான்.

நான் உள்வாங்கிக் கொண்ட அளவில் அம்பேத்கரியம் வேறு தலித்தியம் வேறு என்பதாகவே என்னால் பதில்சொல்லத் தோன்றுகிறது. ஏனெனில் தலித்தியம் என்பது தலித்துகளின் சகல வாழ்க்கை அனுபவங்களையும் - பொருளாதார அவலங்கள், கலாச்சாரம், தீண்டாமை பண்பாடு போன்ற சகல வாழ்க்கை அனுபவங்களையும் விசாரணைப்படுத்தும் அல்லது பிரதியாக்கம் செய்யும் பொருண்மை நிலை. அம்பேத்கரியம் என்பது சகல மட்டங்களிலும் அடக்கி ஒடுக்கப்பட்ட தலித்துக்களின் விடுதலையை வழிப்படுத்தும் கோட்பாட்டு ரீதியானக் கருத்து நிலை. பார்ப்பனியத்தால் தலித்துகள் தீண்டாமைக்கு ஆட்படுத்தப்பட்டதை விவரணைப்படுத்துவது, பொருண்மை நிலை தலித்தியம். பார்ப்பனிய நுகத்தடியை உடைத்தெறிந்து தீண்டாமையிலிருந்தும் சாதியத்திலிருந்தும் விடுதலைபெற புத்தமதம் தழுவ வேண்டும் என்று அம்பேத்கர் அறைகூவல் விடுத்தது கருத்துநிலை- கோட்பாடு - அம்பேத்கரியம். தலித்துகளின் விடுதலைக் குரலாக ஒலித்து நிற்பது அம்பேத்கரியம். அப்படியெனில் அம்பேத்கரியத்தை தன்னகத்தே இழையோட விடாத தலித் படைப்புகள், விடுதலைக்கான சாராம்சத்தைக் கொண்டிருக்குமா? நிச்சயமாக இருக்க முடியாது என்றே பதில்சொல்லத் தோன்றுகிறது. ஏனெனில் தலித்துகளின் விடுதலையை சாத்தியப்படுத்தி விடுவதாய் எச்சில் வடிய வாயிலடித்துப் புலம்பிக்கொண்டு வந்த மற்ற இதிகாசங்களெல்லாம் பார்ப்பனியத்துடன் சமரசம் கொண்டு சரசமாடி விட, அம்பேத்கரியம் மட்டுமே பார்ப்பனியத்தை நெஞ்சுரத்தோடு எதிர்த்து நிற்பதை நாம் அனுபவபூர்வமாக அறிந்துகொள்ள முடிகிறது.

தலித் நாவல்கள் பரந்துபட்ட எல்லைகளைக் கொண்டவை. இந்திய மொழிகள் பலவற்றிலும் அவை படைப்பாக்கம் பெற்றிருக்கின்றன. எல்லா மொழியிலும் தரவுகளாக்கப்பட்ட அனைத்துத் தலித் நாவல்களையும் நான் தெட்டத் தெளிவாக வாசித்துணர்ந்து ஆய்வு செய்வது என்பது அளப்பரியக் காரியம். எனக்குள் கிடைத்த, என் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்ட நாவல்கள் மூலமே என் ஆய்வை சாத்தியப்படுத்தியிருக்கிறேன். அதாவது எனது ஆய்வை சுருக்கியிருக்கிறேன். ஆகையினால் எனக்குப் பணிக்கப்பட்ட தலைப்பில் சிறிது மாற்றம் செய்து 'தலித் நாவல்களில் அம்பேத்கரியம்' என்பதை 'நான் வாசித்துணர்ந்த தலித் நாவல்களில் அம்பேத்கரியம்' என்பதாக மாற்றம் செய்து என் ஆய்வைத் தொடங்கியிருக்கிறேன்.

தலித்துகளின் விடுதலையின் பொருட்டு டாக்டர் அம்பேத்கர் முன்வைத்தக் கோட்பாடுகளை மூன்று கூறுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். 1. சமூக விடுதலை, 2. பொருளாதார விடுதலை, 3. அரசியல் விடுதலை.

தலித்துகளின் சமூக விடுதலைக்குக் காரணியாக அம்பேத்கர் பிரதானமாக எடுத்தாட்கொண்டது பார்ப்பனிய எதிர்நிலையே. பௌத்தத்திற்கும் பார்ப்பனியத்திற்கும் இடையிலான ஜீவமரணப் போராட்



படிப்பகம்

www.padippakam.com

டமே இந்திய வரலாறு என்கிறார் அம்பேத்கர். தன்னை புத்த மதத்துக்கு அவர் கையளித்துக் கொண்டது. தன்னை ஒரு புத்த மதத்தவராக அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விருப்பதைக் காட்டிலும், பார்ப்பனியத்திற்கு எதிரான சமரசமற்ற நிலைப்பாட்டில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற உறுதிப்பாட்டுக்காகவே என்பதுதான் பொருத்தப்பாடாக இருக்கும். பார்ப்பனியமே சாதியத்தின் ஊற்றுக் கண்ணாய் இருக்கிறது. பார்ப்பனியமே தீண்டாமையை நிர்ப்பந்திக்கிறது. தலித்துகள் செருப் பணியக்கூடாது, வேட்டியை முட்டுக்குமேலே தூக்கிக் கட்டக்கூடாது, ஊர்க் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது, முடிவெட்டிக் கொள்ளக் கூடாது, கோயிலுக்குள் நுழையக் கூடாது போன்ற பல 'கூடாது'களை தலித்துகள் மேல் ஈவிரக்கமின்றி வெறிநாய்த்தனமாய் திணித்துவிட்டிருப்பது பார்ப்பனியம். இத்தகைய சமூகக் கொடுமைகளிலிருந்து தலித்துகள் விடுதலை பெற வேண்டுமானால் அவர்கள் எத்தகைய பங்கினை ஆற்றியாக வேண்டும்? அவற்றையும் அம்பேத்கரே வரையறைப்படுத்துகிறார். 1. இந்து சமூக அமைப்பை இடையறாதத் தாக்குதலுக்கு உள்ளாக்க வேண்டும், 2. சிந்தனையிலும் செயல்பாட்டிலும் தலித்துகள் சுதந்திரமானவர்களாக, வேறுபட்டவர்களாக இருந்தாக வேண்டும் என்பதே அவர் முன்வைக்கும் வரையறைகள். அம்பேத்கர் கோட்பாட்டு ரீதியாக முன்வைத்தவைகளை தலித் படைப்பாளிகள் தங்களின் இலக்கியப் பிரதிகளில் எத்தகைய பரிமாணத்தில் வடிவமைக்க வேண்டும்? அதையும் அம்பேத்கரே சொல்கிறார். 'அவன் அடிமை என்பதை உணரச் செய்; அவன் கிளர்ந்தெழுவான்' என்று! 'தகப்பன் கொடி'யில் அத்தகைய உணர்தலை கறாராகவே வடிவமைத்திருக்கிறார் அழகிய பெரியவன். சின்னச் சேரியின் ஆற்றோரம் நடந்து போகிற முத்துமாரியின் கால்களில் செருப்பு அணிந்திருப்பது கண்டு முகம் சுளிக்கிற மேட்டுக்குடி பொன்னு வைத்தியர் 'வேட்டியச் சுருட்டினு, எட்றா செருப்ப கையில' என்று மிரட்டுவதும், செருப்பைக் கையில் எடுத்துக்கொண்ட மாரிமுத்து பொன்னு வைத்தியரை முறைத்துப் பார்ப்பதுவுமாக விவரணைச் செய்கிறார். முத்துமாரி முறைத்தது எதன் பொருட்டு என்ற கேள்வி பிறக்கிறது. அவனின் அடிமை நிலையை அவன் உணர்ந்து கொண்டதால் அவனுக்குள் எழுந்த கோபமே அந்தப் பிரதிபலிப்பு. முத்துமாரிக்கு மட்டுமா கோபம்? அந்த விவரணையை உள்வாங்கிக் கொள்கிற வாசகர் தளத்திலும் அத்தகைய கோபத்தை இழையோட விட்டிருக்கிறார் ஆசிரியர்.

ஊற்றில் வாளி போட்டு தலித்துகள் தண்ணீர் எடுப்பதற்கு மறுப்புக்காட்டும் புதுப்பட்டி ஊமை நாயக்கரைப் பார்த்து, "யோவ் ஊம நாயக்கர... நாங்க சாம்பாக்கமாருதான்" என்று பலிப்புக் காட்டி ஓடும் சேரிச் சிறுவர்களை 'சிலுவைராஜ் சரித்திரத்தில்' உலவ விட்டிருக்கிறார் ராஜ் கௌதமன். பரதவர்களின் முன் னிலையில் அடிமைத்தனம் பேணும் தன் தாத்தாவான மின்னடிச் சாம்பான் மீது விசனம் கொள்ளும் பக்கிளை "வாங்க"வில் ஸ்ரீதரகணேசனும், செருப்புத் தைப்பதையே குலத்தொழிலாகக் கொண்ட அழகிரி சாமிப் பகடை தன் ஆண்டைகளின் முன் செருப் பணிந்து போக முடியாதிருந்த சமூகப் புறக்கணிப்பை 'பிறகு'வில் பூமணியும், ஆந்திராவின் நிலாத்திண்ணை கிராமத்தில் செத்த மாடுகளை தின்னவைக்க நிர்ப் பந்திக்கும் ரெட்டியார்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் அருந்ததியர்களை 'தீண்டாத வசந்தத்தில்' ஜி. கல்யாண ராவும், சமூகக் கட்டுப்பாட்டின் நிமித்தம் தனக்கு வந்து சேரவேண்டிய பன்றித் தலையை மேட்டுக்குடிகள் அடாவடித்தனமாய் தர மறுத்த போது, அவர்களுடன் மல்லுக்கு நிற்கும் ஆரோக்கியம் என்கிற வண்ணாத்தியை 'கோவேறு கழுதை'யில் அடையாளங்காட்டிய இமயமும் அம்பேத்கரியத்தை அமைப்புக்களில் ஆணித்தரமாகப் பதிவு செய்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகிறது.

கவனிக்க வேண்டிய ஓர் அம்சமொன்றுண்டு. கருக்கு, வன்மம், சிலுவைராஜ் சரித்திரம், கோவேறு கழுதைகள், மாற்குவின் யாத்திரை போன்ற நாவல்களில் கிறித்துவமதப் பின்புலங்களே காட்சி தருகின்றன. தீண்டாத வசந்தம் என்கிற தெலுங்கு நாவலிலும் கூட இந்துவாகப் பிறந்து அவதிப்படுகிற தலித் கிறித்துவனாக மாறிய பின்பும் அங்கேயும் உயர்சாதிக் கிறித்தவர்களால் சாதியப் புறக்கணிப்புக்கு ஆளாக்கப்படுகிற அவலத்தைத்தான் சந்திக்க நேர்கிறது. ஆக மத மாற்றம் அல்லது நம்பிக்கை என்பது தலித்துகளின் விடுதலைக்குச் சரியான வழிகாட்டுதலாக இருந்து விட முடியாது என்பதையே நாவலாசிரியர்கள் பூடகமாகக் கூறி நிற்கிறார்கள் என்று நாம் உள்வாங்கிக் கொள்ளத் தோன்றுகிறது. அதுவே உண்மையாகவும் இருக்கலாம். நான் முதலிலே கோடிட்டுக் காட்டினேன். அம்பேத்கர் புத்தமதம் மாறியதன் மூலக்காரணம் தன்னைப் பார்ப்பனியத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் நிலைநிறுத்திக் கொள்வதே அவரின் முதன்மையான குறிக்கோளாக இருந்தது என்று. துரதிர்ஷ்டவசமாக, புத்தமதத்தில் கூட சாதியப் பிணக்குகள் தலை தூக்கி நிற்பதை சில செய்தி ஊடகங்களின் மூலம் தெரிந்து கொள்ளமுடிகிறது. மதமாற்றம் தலித்துகளின் சமூக விடுதலைக்கு ஒப்புதல் அளிக்காது எனில் வேறு என்ன மார்க்கம் இருக்கிறது என்ற கேள்வியும் பிறக்கிறது. அதனால் 'மதமற்றவர்கள்' என்ற நிலைப் பாட்டில் அவர்களின் சமூக விடுதலையை சாத்தியப் படுத்தலாம் என்றே தீர்மானிக்கத் தோன்றுகிறது.

தலித்துகளின் பொருளாதார விடுதலை குறித்த சாராம்சங்களில் நம் படைப்பாளர்கள் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். இழந்துவிட்ட தன் நிலஉரிமையை மீட்டுக் கொள்ளும் ஆதங்கத்தில் நொம்பலப்படும் அம்மாசியை மட்டும் தகப்பன் கொடியில் சந்திக்கிறோம். 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்களில் ஏறக்குறைய எதுவுமே இன்று தலித்துகளிடம் இல்லை என்று படைப்பாளி பொருமுகிறபோது நாமும் நம்முடைய பொருமலை அவருடன் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இதே பொருமலையும் ஏக்கத்தையும்தான் அறை நூற்றாண்டுக்கு முன்பே டாக்டர் அம்பேத்கர் வெளிப்படுத்தினார்.



படிப்பகம்

www.padippakam.com

"நாங்கள் முற்றுகையிடப்பட்ட மக்களைப்போல் வாழ்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைப் பேசினால் மேல்சாதிக்காரர்கள் தங்களுடையப் பொருளாதார ஆதாரத்தைப் பயன்படுத்தி அவர்களைப் பழி வாங்குகிறார்கள். நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். விவசாயக் கூலிகளாகக் கூட அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்நோக்கியுள்ள மற்றொரு துன்பம் பொருளாதார நிலையும் ஆகும்" என்று மனங் கசிந்துக் கொள்கிறார் அம்பேத்கர். நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நிலவுடைமை என்பது எக்காலத்திலும் தலித்துகளை ஆதிக்க வகுப்பினர் களாக்கி விடாது. சாதி என்கிற நுகத்தடி அவர்களின் கழுத்துக்களை அமுக்கியே வைத்திருக்கிறது. அம்பேத்கரே சொல்கிறார். "தீண்டத்தக்கவர் எவ்வளவுதான் குறைவான செல்வத்தை உடையவராக இருந்தாலும், தீண்டத்தகாதவரின் அந்தஸ்தைவிட உயர்ந்தே இருக்கிறார்" என்று.

ஆயினும் தலித்துகள் நிலங்களை உடையவர்களாக இருக்கிற பட்சத்தில்தான் அத்தகைய நிலவுடைமையே அவர்களைச் சுயமரியாதையுள்ள மனிதர்களாக நிர்ணயிக்கிறது எனலாம். ஆதிக்க சாதிகளை எதிர்த்துப் போராட்டத்திற்கு பொருளாதாரப் பலத்தைச் சாத்தியப்படுத்துகிறது. 'ஆண்டைகளை எதிர்த்து நின்றால் மீண்டும் அவர்களின் நிலங்களில் கூலி வேலை கிடைக்காதே' என்று தலித்துகள் அடங்கிப் போகும் அவலத்தை துடைக்கிறது.

அனைத்து தலித் நாவல்களுமே கிராமச் சூழலில் தான் உருவேற்றப்பட்டிருக்கின்றன. கிராமங்கள்தான் சாதியின் பிறப்பிடமாக இருக்கின்றன என்பது அம்பேத்கரின் தெளிவு. நகர மயமாக்கலுக்குப் பரிந்துரை செய்கிறார் அம்பேத்கர். ஆனால் சாதியச் சாக்கடையில் ஊறித் திளைத்த காந்தி, 'கிராமமே இந்தியாவின் முதுகெலும்பு' என்று புளகாங்கிதம் கொள்கிறார். கிராமப் பொருளாதாரத்திலிருந்து படிப்படியாக நகரப் பொருளாதாரத்திற்கு மாறிக்கொண்டு போகும் வளர்சிதை மாற்றத்தை நயமாகக் கொண்டு கட்டமைத்திருக்கிறார்கள் தலித் படைப்பாளிகள். மரபு வழிப்பட்ட தங்கள் தொழிற்கருவிகளான கலப்பைகளும் கமலைகளும் மாறி, டிராக்டர்களும் எந்திரங்களும் கிராமங்களில் இடம் பிடித்துக் கொள்வதை 'பிறகிலும்', மரபுவழிப்பட்ட கலாச்சாரமான குடுமிகள் பறிபோய் கிராப்பு வைத்துக்கொண்டதை 'கோவேறு கழுதை'யிலும், 'தகப்பன் கொடி'யிலும் பரிவர்த்தனை செய்துகொள்ள முடிகிறது. தலித்துகளின் பொருளாதார விடுதலைக்காகவே அரசு வேலைகளிலும், பதவி உயர்வுகளிலும் இடஒதுக்கீடு கொண்டு வந்தார் டாக்டர் அம்பேத்கர். அவரின் இடைவிடாத முயற்சியின் பலனாகவே 1934-ஆம் ஆண்டு ஆங்கில அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு செய்ய முன்வந்தது. அதை உறுதிப்படுத்தும் பொருட்டு அரசியல் சட்டத்தில் 16 (4) மற்றும் 16 (4) A என்ற பிரிவுகள் அம்பேத்கரால் உருவாக்கப்பட்டன. இன்று நடப்பதோ ஏறுக்கு மாறாயிருக்கிறது. ஏற்கனவே தலித்துகளின் விகிதாசாரப்படி மத்திய, மாநில அரசுத் துறைகளில் பதவிகள் நிரப்பப்படாமல் தலித்துகள் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அவமானச் சூழ்நிலையில், உலகமயமாக்கல் என்கிற ஏகாதிபத்திய மோசடியால் அரசுத் துறைகள் எல்லாம் தனியார்மயமாக்கப்பட்டு 'தலித்துகளுக்குப் பணியிடங்களே கிடையாது' என்று 'உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா' என்கிற ரீதியில் தலித்துகளை வீதியில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது அரசு. இடஒதுக்கீடு அம்சம் குறித்த விவரணைகள் 'வாங்க'லில் மட்டும் இடம் பிடித்திருப்பதாக தீர்மானிக்க முடிகிறது. பக்கிள் என்கிற தலித் இடஒதுக்கீட்டின் மூலம் தபால் அலுவலகத்தில் ஊழியரான செய்தி கிடைக்கிறது.

எல்லாப் படைப்புகளிலுமே தலித்துகளின் வாழ்க்கை நிலை குறித்த எல்லா அம்சங்களையும் பதிவு செய்துவிட முடியாது என்பது யதார்த்தமே. எந்த அம்சத்தைப் பிரதானப்படுத்தி, அல்லது அச்சுக் கோடாகக் கொண்டு நாவல் கட்டமைக்கப்படுகிறதோ அந்த அம்சத்தைச் சாதகப்படுத்திய நிகழ்வுகளின் விவரணைகள்தான் பெரியதாக வடிவமைக்கப்படும். ஆதலால் தலித் நாவல்களில் இடஒதுக்கீடு குறித்த முனைப்பான விசாரணைகள் இல்லை என்பதைப் பெரிதுபடுத்திக் கொள்ளத் தேவையில்லை என்றே முடிவு செய்துகொள்ளலாம்.

தோழர்களே! சமூக விடுதலை, பொருளாதார விடுதலையைக் காட்டிலும் தலித்துகளின் அரசியல் அதிகாரத்திற்குத்தான் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அதிக முக்கியத்துவம் தந்தார் என்பதை நாம் தெளிவாக அறிவோம். 'அரசியல் அதிகாரம் எங்கள் கைகளுக்கு வந்தாலொழிய எவராலும் எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாது' என்று ஆணித்தரமாக அறைகூவல் விடுக்கிறார். அதிகாரத்தை வெல்வதற்கு அதிகாரமே வேண்டும் என்பது அவரின் கோட்பாடாக இருந்தது. அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக இரட்டை வாக்குரிமையைக் கேட்டு நின்றார். தலித்துகள் அடித்தளத்திலிருந்து அதிகாரம் பெற்று நிற்க நாம் இன்று 'அப்னா பஞ்சாயத்து' கோரி நிற்கிறோம். தலித்துகளின் அரசியல் விடுதலையை யார் கோரி நிற்பது? இந்துத்துவம் பீற்றி நிற்கும் பார்ப்பனியக் கட்சிகளா? வர்க்க சமன்பாட்டில் தலித்துகளை படைப்புக்குள் மட்டுமே நிறுத்தி வைத்திருக்கும் மார்க்சியர்களா? எல்லோரும் திராவிடர்கள், ஆனால் நீ மட்டும் ஆதிதிராவிடன் என்று ஏகடியம் பேசும் திராவிடக் கட்சிகளா? அவையெல்லாம் தலித்துகளுக்கு நிலாவை மட்டுமே காட்டிக் கொண்டிருக்கின்றன. சோற்றை ஊட்டுவது மட்டும் தலித் கட்சியாகவே இருக்கிறது. தலித்துகளின் விடுதலையை தலித்துகளால் மட்டுமே, தலித் அரசியலால் மட்டுமே சாத்தியப்படுத்த முடியும் என்பதே யதார்த்தமாயிருக்கிறது. வெண்மணியில் 44 தலித்துகளை உயிரோடு கொளுத்தியபோது எந்த அரசியல் கட்சியுமே எதிர்ப்புக்குரல் எழுப்பவில்லையே - அவர்களா தலித்துகளின் விடுதலையைச் சாத்தியப்படுத்துவார்கள் என்று நம்பிக்கைக் கொள்ள முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

மேலவளவில் முருகேசனும் அவரைச் சார்ந்த தோழர்களும் காவு வாங்கப்பட்டபோது எந்த ஒரு அரசியல் கட்சியுமே ஏனென்று கேட்கவில்லையே - அவர்களையா தலித்துகள் நம்பிக் கொண்டிருப்பது? கண்ணாமூச்சி ஆடுவது போல பாப்பாபட்டி, கீரிப் பட்டியில் தேர்தலை அறிவிப்பதும், தேர்தலில் நிற்க விடாமல் ஆதிக்கசாதியினர் மிரட்டுவதால் தலித்துகள் தேர்தலில் நிற்க முடியாமல் பின்வாங்குவதும், அதை ஆளுங்கட்சி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும் மட்டும் அல்லாமல் அனைத்துக் கட்சிகளும் வாய் களில் விரலை வைத்துச் சூப்பிக் கொண்டிருக்கின் றனவே - அவர்களா தலித்துகளின் விடுதலையைச் சாத்தியப்படுத்துவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியும். தலித் விடுதலையை, தலித் துகளை ஆளுமைப்படுத்தும் தலித் அரசியலால் மட் டுமே மீட்டெடுக்க முடியும் என்பதே நிதர்சனம்.

'வன்மத்'தில் பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றி பெற்ற தலித்தை அந்தக் கோணத்தில்தான் நிறுத்தி வைத்துப் பார்க்கிறோம். 'கண்டம் பட்டியில பள்ளரும் பறையரும் ஒன்னு சேர்ந்ததாக் கேள்விப்பட்ட மத்த ஊரு பள்ளு பற சனங்க ரொம்பச் சந்தோசப்பட்டாக' என்ற விவரணையில் தலித்துகளின் ஒருங்கிணைவை மெச்சிக் கொள்ள முடிகிறது. தலித்துகளுக்கிடையே யான உட்கிளை முரண்பாடுகள் கண்டிக்கத்தக்கது தான். அம்பேத்கரும் கண்டிக்கிறார். 'நம்முடைய சமூ கமும் சாதியத்திற்கு ஆட்பட்டு பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. நம்மீது பிறர் இழைக்கும் தீண்டாமையை அகற்ற நாம் போராடும்போது, பட்டியலின சாதி களிடையே உள்ள உட்பிரிவுகளைத் துடைத்தெறிய உங்களுக்குள்ள பொறுப்பு மென்மேலும் அதிகரிக் கிறது' என்று அறிவுரை கூறுகிறார். அன்று சித்தூரில் அருந்ததியர்கள் மீது பறையர்கள் நடத்திய வன்முறை யைப் போலவே, இன்று பரமக்குடி எஸ். தாவனூரில் அருந்ததியர்கள் மீது பள்ளர்கள் செலுத்திய வன் முறைத் தாக்குதலையும் அந்தக் கோணத்தில்தான் கண்டனம் செய்கிறோம். இவர்கள் அய்க்கியப்பட் டால் அதிகாரத்தை மீட்டெடுக்கலாம் என்பதையே வன்மத்தில் கண்டம்பட்டி தலித்துகளின் ஒன்றுமை மூலம் நிருபித்துக் காட்டுகிறார் பாமா.

'பிறகு'வாலும், 'கோவேறு கழுதை'களிலும் தேர் தல் பற்றிய விவரணைகள் வடிவமைக்கப்பட்டிருந்தா லும் ஆட்டுக்கறிச் சோற்றுக்காகவும், அரையணாத் துட் டுக் காசுக்காகவும் தலித்துகள் ஆண்டைச் சாதியின ருக்கு தங்கள் வாக்குகளை விற்றுவிட்டு வந்ததாக வெளிச்சப்படுத்தப்படுகிறது. அன்றாடங் காய்ச்சிக ளான தலித்துகளுக்கு ஜனநாயகத் தன்மையான தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வது கூட, கூலிக்கு வேலை செய்துவிட்டு வருவதுபோன்ற நெருக்கடியைத்தான் ஏழ்மை பரிந்துரை செய்கிறது. தலித்துகளின் வறுமை அவலங்கள் அவர்கள் தங்கள் சனநாயக உரிமையை நிறைவேற்றிட முட்டுக்கட்டை போடுகிறது என்பது ஒரு பக்கம் உண்மையாயிருப்பினும், தலித்துகளுக்குப் போதிய அரசியல் விழிப்புணர்ச்சி இல்லை என்பது மறுக்க முடியாத மறுபக்க உண்மையாயிருக்கிறது என்பதனையும் நாவல்கள் வெளிப்படுத்துகின்றன. அத னாலே தலித்துகளை அரசியல்படுத்த வேண்டியிருக் கிறது என்ற அவசியத்தை உணர்கிறோம். 'தகப்பன் கொடி'யில் ரெங்கசாமி, அம்மாசிக்குப் புகட்டியது போல, 'நீ நெறைய புஸ்தகங்களைப் படிக்கணும்... அப்பதான் நாட்டு நடப்புத் தெரியும். நம்ம இனத் துக்குப் பாடுபட றதுக்குன்னே அம்பேத்கருன்னு ஓர்தரு வந்துக்கீறாரு தெரியுமா?' என்பது போன்று அம்பேத் கர் பற்றிய புரிதலை நம் தலித்துகளுக்கு பரிச்சயப் படுத்த வேண்டியிருந்திருக்கிறது. 'நீங்க கேக்குறது நாயந்தான். ஆனா, நம்ம ரெண்டு சாதியுமே அனா வசியமா நிர்மூலமாகிப் போயி, அறிவு கெட்டுப் போயி, ஒருத்தர ஒருத்தர் வெட்டிச் சாச்சுக்கிட்டு, நாலா திக் கமும் செதறிப்போய்க் கெடந்து - இப்ப ஒணந்து கிட்டோம். நம்மளத் தூண்டிவிட்ட சாதிகாரனுங் கலாம் அப்பிடி அப்பிடியே நல்லா இருக்க, நாம தானெ இப்படி ஆகிப்போனோம்னு தெரிஞ்சிக்கிட் டோம். இனி அப்பிடி நடக்காது. சத்தியமா நடக் காது' என்று 'வன்மத்'தில் பள்ளர் தெரு பரமசிவம் சொன்னதுபோல தலித்துகளை ஒற்றுமைப்படுத்தி, ஆதிக்கத்திற்கு எதிரான பாய்ச்சலைத் தொடுத்தாக வேண்டியிருக்கிறது.

அம்பேத்கரியத்தை உள்வாங்காத தலித் படைப் புகள், தலித்துகளின் விடுதலைக்கு சாதுர்யமான வழிகளை அடையாளம் காட்டாது என்பதையும் புரிதல்படுத்தியிருக்கிறேன். தலித் இலக்கியம் வேறு, தலித் அரசியல் வேறு என்பதல்ல உண்மை நிலைப் பாடு. தலித் அரசியலை உளப்பாங்காக முன்னெடுத்துச் செல்ல உந்து சக்தியே தலித் இலக்கியம். மரபு வழிப் பட்ட பெருமைகளை முன்வைப்பது ஒரு ஆதிக்கத் திற்கோ அல்லது ஒரு அடிமைத்தனத்திற்கோதான் இட் டுச் செல்லும். புதுயுகம் படைப்பதற்கான யுக்தியாக தலித் படைப்புகள் கையளிக்கப்பட வேண்டியிருக் கிறது. தலித்துகளுக்கான விடுதலையை மட்டும் தலித் இலக்கியம் முன்மொழிந்துகொண்டு நிற்கவில்லை. தலித்துகளின் விடுதலையே அனைத்து சாதியினரின் விடுதலையாக உள்பொதிந்து நிற்கிறது. தலித்துகளின் விடுதலையை சாத்தியப்படுத்தித் தருவதாய் பீற்றிக் கொண்டு தொடைதட்டி முன்னே பாய்ந்த பல இசங் களின் பராக்கிரமப் படைப்பாளிகளையெல்லாம், முகம் கருக்க வைத்து, "போங்கடா மயிருகளா... நீங் களும், உங்கள் இசங்களும், உங்கள் படைப்புக்களும் உங்களுக்கான விடுதலையையே உங்கள் படைப்புகளால் உத்திரவாதப்படுத்த முடியாதபோது, தலித்துகளின் விடுதலையை நீங்கள் சாத்தியப்படுத்துவது காதில் பூச் சுற்றுகிற வேலையா? இதோ நாங்கள் படைக்கிறோம் தலித் படைப்புகள்... தலித்துகளின் விடுதலைக்கான படைப்புகள் எங்களின் விடுதலையிலேதான் ஒளிந்து கிடக்கிறது உங்களின் விடுதலையும்.. வாருங்கள்... எங்கள் தலித் படைப்புகளின் தராதரத்தைப் பாருங் கள்" என்று அறைகூவல் விடுக்கும் காலகட்டத்தில் அணி சேர்ந்து வந்து நிற்கிறார்கள் நம் தலித் படைப் பாளிகள்.

●



படிப்பகம்

www.padippakam.com



■ ஐ.ஜா.ம. இன்பகுமார்

# தலித்துகளுக்கு தனி ஊராட்சி அமைப்பதில் தலித் ஆதரவாளர்களின் பங்கு

"பொதுத் தொகுதியாக
மாற்றக்கோரி தேர்தல் புறக்கணிப்பு"

- இவண் : நாட்டார் மங்கலம், அய்யம்பட்டி, சக்கரப்பட்டி, நாகலாபுரம் கிராம பொதுமக்கள்

கடந்த உள்ளாட்சித் தேர்தலின்போது, தேர்தல் நடத்த முடியாத பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் பகுதிகளில் மேற்கண்ட சுவரொட்டி ஒட்டப் பட்டிருந்தது. இந்த சுவரொட்டி வாக்கியங்களை உற்று கவனிக்கும்பொழுது "பொதுத் தொகுதி" "பொதுச் சொத்து" "பொது மக்கள்" ஆகிய வார்த்தைகளில் "பொது" என்கிற வார்த்தையை தலித் அல்லாதவர்கள் எப்படி புரிந்து கொள்கிறார்கள் என்பது புரியும்.

"பொது" என்கிற வார்த்தைக்கு பல்வேறு விளக் கங்கள் வரையறுத்தாலும் இன்றைய யதார்த்தம் என்னவெனில் "பொது" என்பது தாழ்த்தப்பட்ட மக் களுக்கு மறுக்கப்பட்ட ஒன்றாகும். "பொது" என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை இல்லாத ஒன் றாகும்.

"பொது சுடுகாடு" என்றால் அங்கு தாழ்த்தப்பட்ட மக்களின் பிணத்தை எரிக்க முடியாது. "பொதுவான கோயில்" என்றால், கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட வர்கள் நுழைய முடியாது. "பொதுக் கிணறு" என்றால் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் எடுக்க முடியாது. "பொதுச் சந்தை" என்றால் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே சென்று உட்கார முடியாது. கிராமத்து டீக்கடைகளில் "பொது டம்ளர்களில்" தேனீர் குடிக்க முடியாது. "பொதுப் பாதை"களில் நடக்க முடியாது.

"பொதுத் தொகுதி" என்பது தாழ்த்தப்பட்டவர் கள் போட்டியிடக் கூடாது என்கிற ஆதிக்க சாதியின ரின் புரிதலுக்கு கடந்த உள்ளாட்சி தேர்தலில் மருக் காலம்பட்டியில் நடந்த தாக்குதல் ஒரு உதாரணம் ஆகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு சொத்தாக, ஒரு பண்டமாக கருதப்பட்டதும் நிலத்துடன் பிணைக்கப் பட்டு அந்த நிலத்தோடு விற்கப்பட்டதும் வாங்கப்பட்ட தும் கடந்தகால வரலாறு. மேலும் சமூக நியதிகளினால், தலித்துகள் தனி உடைமை கொள்வது வன்முறையாக கருதப்பட்டதால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொது உடைமையிலும் எந்த உரிமையும் இல்லை.

கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரம் பிரிட்டிஷாரி டமும், ஆதிக்கமும் பொருளாதார அதிகாரமும் சாதி இந்துக்களிடமும் இருந்தன. தனித்தொகுதி, இட ஒதுக் கீடு போன்றவை செயல்படுத்தப்பட்டு இருந்தும், ஆட்சி அதிகாரமும், பொருளாதார அதிகாரமும் இன் றும் தலித் அல்லாதவரிடம் மட்டுமே காணப்படுகின் றது. சுதந்திரம் கிடைத்து 57 ஆண்டுகள் ஆகியும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனிப் பஞ்சாயத்து குறித்த விவாதத்தை தொடங்க வேண்டிய நிலையில் இதற்கான முதல் சுழி எழுத்தாளர் திருமதி சிவகாமி அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

**கிராம பஞ்சாயத்து**

பஞ்சாயத்து "கிராம பஞ்சாயத்து", "ஒன்றிய பஞ் சாயத்து", "மாவட்ட பஞ்சாயத்து" என 3 அடுக்கு களைக் கொண்டதாக இருக்கிறது. கிராம பஞ்சாயத் தில் ஓட்டுப்போட தகுதியான அனைத்து வாக்காளர் களும் கிராம சபை உறுப்பினர்கள் ஆவர்.

கிராம பஞ்சாயத்து மக்கள் தொகை அடிப்படை யில் உருவாக்கப்படுகிறது. 500 முதல் 10000 வரைக்கும் ஜனத்தொகை கொண்ட கிராம பஞ்சாயத்துகள் உருவாக்கப்படுகின்றன. இந்த பஞ்சாயத்தில் 6 பேர் முதல் 15 பேர் வரை உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இந்த கிராம பஞ்சாயத்தில் கிராம சபை என்பது சேரியும், ஊரும் இணைந்துள்ளது. இதில் பெரும் பான்மையாக கலந்துகொள்பவர்கள் தலித் அல்லாத வர்களே.

**கிராம சபையில் உள்ள குறைபாடுகள்**

இந்த கிராம சபை வருடத்திற்கு 4 முறை ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கூட்டப்பட வேண்டுமென்ற கட்டாயம் இருந்தாலும் கிராமசபை நடைபெறும் நேரம், இடம், காலம் ஆகியவை தலித் மக்களுக்கு பெரும்பாலும் தெரிவிக் கப்படுவதில்லை.

கிராம சபையில் கடன் உதவித் திட்டங்களுக்கு நபர் களை தெரிவு செய்தல், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள நபர்களை தெரிவு செய்தல், தொகுப்பு வீடுகள், O.A.P., W.P போன்றவற்றிற்கு பயனாளிகள்



படிப்பகம்

www.padippakam.com

தெரிவு செய்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இத் தீர்மானம் நிறைவேற்ற மொத்த கிராம சபை உறுப் பினர்களில் 10-இல் ஒரு பங்கு மக்கள் இருந்தால் தீர் மானம் நிறை வேறியதாக கருதப்படும். ஆனால் இதில் தலித்துகளின் பங்கேற்பு குறித்து குறிப்பிட்டு சொல்ல வில்லை என்பதால் ஆதிக்கச்சாதியினரே பயனடை கின்றனர்.

கிராம சபையில் தலித் உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வரும்போது, கிராம சபையில் பெரும்பான் மையாக உள்ள தலித் அல்லாதவர்கள் அவற்றை நிறைவேற்ற தடையாக இருக்கின்றனர். ஏனெனில் சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்டோர் என்ற படிநிலை யில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் வெகு குறைவு.

அரசாணை (நிலை) எண் 170, ஊ.வ.(சி 1) துறை, நாள் 30.5.97-இன் படி ஊராட்சியில் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கென சாதாரணக் கூட்டம், சிறப்புக் வட்டம், அவசரக் கூட்டம், கோரிக்கைக் கூட்டம் என நான்கு வகையான கூட்டங்கள் நடைபெறுகிறது. இக்கூட்டங்களில் தலித் உறுப்பினர்கள் இல்லாம லேயே ஊராட்சி மன்ற கூட்டங்களை நடத்துகின்ற னர்.

ஆதிக்க சாதியை சேர்ந்த பெரும்பான்மையான கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள் கிராம சபைக் கூட்டத்தையோ அல்லது ஊராட்சி மன்ற கூட்டத் தையோ கூட்டி வைப்பது கிடையாது. மேலும் எவ்வித ஒப்புதலும் இன்றி தன்னிச்சையாக செயல்படுகின்றனர்.

தலித்துகள் தனி பஞ்சாயத்துக்கான பிரச்சினை களை கிராம சபையில் விவாதத்திற்கு கொண்டு வர முடியாமலும், கிராமத்திற்கான பொது விஷயங்களை பேசாமல் தங்கள் காரியத்தை பேசுகிறீர்கள் என்ற குற்றச்சாட்டினால், தலித்துகள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவே தயங்குகின்ற நிலை காணப்படு கின்றது.

ஆண்டான் - அடிமை என்ற பாகுபாடு உள்ளதன் காரணமாக கிராம சபைகளில் தலித்துகள் கிராம சபையின் உறுப்பினர்களாகவே மதிக்கப்படுவதில்லை. தலித்துகளுக்கான கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல் ஊர் (சாதி இந்துக்களின்) மக்களின் கோரிக்கைகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

தலித் மக்களின் அடிப்படைத் தேவைகளை விவா திக்க முனையும்போது ஒப்பந்தக்காரர்களின் தேவை களை நிறைவேற்றும் வகையில் திட்டம் தீட்டப்படு கின்றது. எடுத்துக்காட்டாக வறட்சி காணப்படும் காலங்களில் கூட கால்வாய் கட்டுதலுக்கு முன்னு ரிமை அளிக்கப்படுகிறது.

கிராம சபை கூட்டத்தில் தலித்துகளுக்கான பிரச் சினைகளை விவாதிக்க முனைகின்ற பொழுது, பார் வையாளர்களாக வருகின்ற அரசுப் பிரதிநிதிகள் (BDO, GS) முன்கூட்டியே அல்லது ஒரு நாளைக்கு முன்ன தாகவே தீர்மான நகலில் கையெழுத்து ஏன் வாங்க வில்லை என்றும் தீர்மான நகலை பஞ்சாயத்து ஆய் வாளருக்கு உடனே அனுப்பவேண்டும் போன்றதான கருத்துகள் வெளியிடுவதென்பது ஊழலுக்கு துணை போக அமைகிறது.

பெரும்பாலும் கிராம சபைக் கூட்டங்கள் ஊர்ப் பகுதியிலேயே நடத்தப்படுவதால் தலித்துகளால் சுதந்திரமாக கிராம சபையில் பங்கேற்பது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தீர்மான நகலில் வாக்காளர்களாகிய கிராம சபை உறுப்பினர்கள் யார் என்ற விவரம் தெளிவாக இல்லாத காரணத்தால், எண்ணிக்கையை கணக்குக் காட்ட வேண்டும் என்பதற்கு வாக்காளர்களாக இல்லாத, சாதி இந்துக்களிடம் கையெழுத்து வாங்கி தீர்மானம் நிறை வேறியதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மேல் வரப்பு - கீழ் வரப்பு, தாழ்த்தப்பட்டவர் - ஆதிக்க சாதியினர், ஆண்டான் - அடிமை, எஜமான் - கூலி போன்ற முறை இருந்துகொண்டே இருப்பதால் பொது சொத்துக்களில் சேரி வாழ் மக்கள் பங்கு கேட் டால் தலித்துகளின் பங்கு மறுக்கப்படுகிறது.

உள்ளாட்சித் தலைவர்களில் தலித்துகளுக்கும், பெண்களுக்கும் உரிய மரியாதையை அரசு அதிகாரி களோ சாதி இந்துக்களோ தருவதில்லை. இதனால் தலித்துகளின் சுய மரியாதை கேள்விக்குறியாக உள்ளது.

மத்திய அரசிலிருந்து மாநிலத்திற்கும், மாநிலத்தி லிருந்து மாவட்டத்திற்கும், ஒன்றியத்திற்கும், கிராமத் திற்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என குரல் எழுப்புகின்ற எவரும், கிராமத்திலிருந்து சேரிப் பகுதிக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்புவதில்லை. இந்நிலையில் தலித்து களுக்கான தனிப் பஞ்சாயத்து குறித்தான கோரிக்கை எழுப்பவேண்டிய சூழல் உள்ளது.

### தலித்துகளுக்கான தனி பஞ்சாயத்து

தலித்துகளுக்கான "நமது பஞ்சாயத்து" அல்லது "அப்னா பஞ்சாயத்து" என்று சிவகாமி அவர்கள் முன் வைக்கின்ற கோரிக்கை இச்சூழலில் மிக முக்கியத் துவம் பெறுகின்றது. அப்னா பஞ்சாயத்து என்றால் நமது பஞ்சாயத்து ஆகும். எனவே, நமது பஞ்சாயத்து சிறப்பாக செயல்பட வேண்டுமெனில் சேரிவாழ் மக்கள் சுயமாக, கௌரவத்துடன் இருக்கவேண்டு மெனில் சேரிகளை தனிப் பஞ்சாயத்தாக பிரித்தாக வேண்டும்.

### தனி பஞ்சாயத்து சாத்தியமாகுமா?

நமது நாட்டில் தனிச் சேரிகள் உண்டு. கிராமத்தில் தனி ரோடுகள் உண்டு. தனி சுடுகாடு உண்டு. டீக்கடை களில் தனித் தனி குவளைகள் உண்டு. இவ்வளவு ஏன்? தலித் தொகுதிகளும் உண்டு. இவையெல்லாம் உண் டெனில் தனிப் பஞ்சாயத்து இருக்க முடியாதா? சரா சரியாக ஒரு வருடத்திற்கு 30,000 பட்டாக்கள் கொடுத்து 3000 சேரிகளை உருவாக்குகின்ற இந்த அர சாங்கம், 3000 பஞ்சாயத்துகளை உருவாக்க முடியாதா என்ன? என்ற கிறித்துதாசு காந்தியின் கேள்வியை நினைவில் நிறுத்துவது அவசியமாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

**தனிப் பஞ்சாயத்து நடைமுறைக்கு சாத்தியமா?**

தனி பஞ்சாயத்து என்பது நடைமுறைக்க சாத்தியமா? என்ற கேள்வி பொதுவாக எழுவது இயல்பே. ஆனால் நடைமுறைக்கு சாத்தியமாகும் என்ற முறையில் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை.

குறைந்தபட்சம் 500 பேர் மக்கள் தொகை கொண்ட பகுதி ஒரு பஞ்சாயத்தாக செயல்பட முடியும் என்பதால் 500 பேர் மக்கள் தொகை கொண்ட தலித் மக்கள் பகுதிகள் ஒரு தனி பஞ்சாயத்தாக மாற்றப்பட வேண்டும்.

ஒவ்வொரு சேரியும் தனி பஞ்சாயத்தாக மாறும் போது, தற்பொழுது நடைமுறையில் உள்ள 29 துறைகளுக்கும் உரிய நிதி ஒதுக்கும்பட்சத்தில் அவை முழுமையாக சேரி மக்களை சென்றடையும். தேவைப்படுமெனில் 29 துறைகளில் தேவையற்றதை நீக்கி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளை இணைத்து ஒரு துறையாக மாற்றுவதன் மூலம், ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன்னிறைவு பெறுவதோடு நிர்வாகத் திறன் கொண்ட சிறப்பான அமைப்பாகவும் மாறுவதற்கான வாய்ப்பும் உள்ளது.

**தனி பஞ்சாயத்துக்கான நடைமுறைத் திட்டங்கள்**

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பறையர், பள்ளர், அருந்ததியர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களும், இருளர் போன்ற பழங்குடி மக்களும் வாழ்கின்ற வாழிடங்கள் சேரிகளாக அமைந்திருப்பதால் அவர்கள் மக்கள் தொகை 500-க்கும் அதிகமாகவே காணப்படுகிறது. எனவே ஒரு பஞ்சாயத்து உருவாக குறைந்தபட்ச மக்கள் தொகை 500 இருக்க வேண்டும் என்பதால் தலித் மற்றும் பழங்குடியினர் ஆகியோரை இணைத்து தனி பஞ்சாயத்தாக மாற்ற முடியும்.

பூகோள ரீதியாக பார்க்கின்றபொழுது ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பள்ளர், பறையர், அருந்ததியர் மற்றும் இருளர் ஆகியோர் தனித்தனி சேரிகளாக இருப்பதால் அவர்களை தனி பஞ்சாயத்தாக மாற்றி அமைப்பதில் நிர்வாக ரீதியாக எவ்வித சவால்களோ அல்லது இடையூறுகளோ இருக்காது என உறுதியாகக் கூறலாம். இவ்வாறு மாற்றப்படுகின்ற ஒவ்வொரு தனி பஞ்சாயத்துக்கும் ஏற்கனவே இருக்கின்ற பெயர்களை விடுத்து புதிய பெயர்களை சூட்டலாம்.

இவற்றிற்கான ஆரம்பகட்ட செயல்பாடாக தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற பஞ்சாயத்திலும், கிராம சபை கூட்டத்திலும் தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை மாவட்ட பஞ்சாயத்துத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம்.

தனிப் பஞ்சாயத்து அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான மேற்கண்ட செயல்திட்டங்களை விளக்கி கிராமங்களில் இருக்கின்ற சமூக குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தலித் இயக்கங்கள், அறிவு ஜீவிகள், களப்பணி செயல்பாட்டாளர்கள் ஆகியோர் மனுக்களாக எழுதி அவற்றை மாவட்ட பஞ்சாயத்து ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கலாம்.

அந்தந்த பஞ்சாயத்தில் தலித்துகளின் மக்கள் தொகை சதவிகிதத்திற்கு ஏற்ப தலித்துகளுக்கு பகிர்ந்து அளிக்கலாம். அவ்வாறு பகிர்ந்து அளிக்க முடியாத பட்சத்தில் அவற்றை ஈடுசெய்யும் வகையில், பொது நிதியில் இருந்து தலித்துகளுக்கான பொது சொத்தை உருவாக்கலாம்.

பொது சொத்துக்கள் உருவாக்க முடியாத பட்சத்தில் அந்த பஞ்சாயத்தை சேர்ந்த தலித்துகள் உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக் கலாம். குறிப்பிட்ட வட்ட / மாவட்ட அளவில் "ஒருங்கிணைந்த கல்லூரி" (Integrated College) துவங்கப்பட்டு Para legal, Para Medical, Para Engineering போன்ற பிரிவுகளில் கல்வி பெற வாய்ப்புகளை ஏற்படுத்தி தரலாம்.

தனிப் பஞ்சாயத்து என்பது கிராமப் பஞ்சாயத்து அளவில் செயல்படுத்துவதால் ஒன்றிய மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகள் தற்போது உள்ள முறையே சொல்லப்படலாம். ஒருவேளை எதிர்காலத்தில் இந்த ஒன்றிய மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளில் மாற்றங்கள் தேவைப்படுமெனில் அந்த சூழலுக்கேற்றவற்றை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

ஏழ்மையில் வாடுகின்ற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஏழ்மையை ஒழிக்கும் திட்டங்களின் மீது நம்பிக்கை வைக்கும் மனநிலையை துடைத்தெறிந்து பஞ்சாயத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் சுதந்திரமாகவும், முன்னுரிமையோடும் பங்குகொள்ள வேண்டும்.

**நிறைவாக**

தலித்துகளுக்கான தனி பஞ்சாயத்து என்று கேட்பது ஒற்றுமையை சிதைப்பதோ, கூட்டு வலுவை குறைப்பதோ அல்லது பிரிவினைவாதமோ அல்ல. பெண்ணுரிமை எனக் குரல் எழுப்புவது ஆண்களை தகர்க்க அல்ல. அது பெண்களுக்கான உரிமையை அங்கீகரிக்க. குழந்தைகளுக்கான உரிமை என்பது, பெற்றோர்களை புறக்கனிப்பதன்று, வருங்கால சமுதாயம் கருத்தியல் கொண்ட தொலைநோக்குப் பார்வை உடைய சமுதாயமாக உருப்பெறுவதற்குத்தான். மாணவர்களுக்கான உரிமை என்பது ஆசிரியர்களை அவமானப்படுத்த அல்ல, வளருகின்ற சமுதாயம் வளம் பெறவே. அதுபோலவே தனிப் பஞ்சாயத்து என்பது கிராமங்களில் பிளவையும், வெறுப்பையும் உருவாக்குவதற்கு அல்ல. ஆண்டான் - அடிமை பிளவின் கொழுப்பை குறைக்கவே.

தனிப் பஞ்சாயத்து என்பது தனி இனமாக வளர்வதற்கு அல்ல. உரிமைகள் மறுக்கப்படும் இடத்தில் சமத்துவம் பெறுவதற்கே. பெரு கிராம பஞ்சாயத்து எண்ணிக்கையில் தனிப்பஞ்சாயத்து அமைய கிராமங்கள்தோறும், இயக்கங்கள்தோறும், மக்கள் அமைப்புகள் தோறும் தனிபஞ்சாயத்தின் அவசியம் குறித்து பேசுவதெனில். தனிப் பஞ்சாயத்து என்பது நடைமுறையில் சாத்தியமே. ❑



படிப்பகம்

www.padippakam.com

■ M.P. நாகபாண்டியன் ■ M லீலாவதி



# பழனிமலை பலியர் இன மக்களின் வரலாற்றுத் தொகுப்பு

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா பழநி மலையில் ஆதிவாசிகள் அடர்ந்த காடுகளிலும், உயர்ந்த மலைகளிலும் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான கொடைக்கானலை உள்ளடக்கிய பழநி மலையில் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பு தோன்றியவர்கள்தான் பலியன், புலயன் இன பழங்குடி மக்கள். அந்த காலங்களில் அவர்களின் வாழ்வாதாரமாக வனங்களில் கிடைக்கும் தேன், கிழங்கு மற்றும் இறைச்சி, பழவகைகள் போன்றவைகள் இருந்து வந்தன. நாளடைவில் சாமை, திணை, கேப்பை போன்ற தானிய வகைகளை உணவாகக் கொள்ள ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் மலைகளில் உள்ள கரடு முரடான நிலங்களை வெட்டி பண்படுத்தி அவர்களின் கடின உழைப்பால் விவசாயம் செய்கிற வகையில் நிலங்களை சீர்படுத்தி அவர்களது உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து வாழத் தொடங்கினர். அப்படி வாழ்ந்து வந்த காலத்தில் ஆதிவாசிகளுக்கு எந்த விதமான நெருக்கடியான சூழ்நிலையும் ஏற்பட்டது கிடையாது. சுதந்திரமாக வனங்களில் சுற்றித் திரிந்தார்கள். தேவையான இடங்களில் சுதந்திரமாக குடிபெயர்ந்து உணவுத் தேவைகளுக்கான விவசாய நிலங்களை தேர்வு செய்து விவசாயம் செய்து வாழ்ந்து வந்தனர். இப்படி வனங்களிலேயே வாழ்ந்து பழக்கப்பட்ட ஆதிவாசிகள் நாளடைவில் இடம்விட்டு இடம் பெயரும் விவசாயத்தை கடைப்பிடித்தனர். இவ்வாறாக மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை என்ற கணக்கில் மலை விட்டு மலை சென்று விவசாயம் செய்யத் தொடங்கினர். அப்பொழுதுதான் சமவெளியில் வாழ்ந்த மக்களும் மலைகளில் குடியேறத் தொடங்கினர். அவர்கள் குடியேறத்தொடங்கிய வுடன் வியாபாரரீதியாகவும் தொழில் ரீதியாகவும் பல வெளி நாட்டினர் மலைகளுக்குள் வர ஆரம்பித்தனர்.

வெளி மக்கள் வருகையை ஏற்றுக்கொண்ட கள்ளம் கபடம் இல்லாத ஆதிவாசிகள் அவர்களின் எதார்த்த குணத்தால் வந்தவர்களை அன்போடு உபசரித்து அடைக்கலம் கொடுத்தனர். ஆனால் இவர்களால் நாம் மலையைவிட்டு விரட்டப்படுவோம், நசுக்கப்படுவோம் என்பதை ஆதிவாசிகள் புரிந்திருக்கவில்லை. அதன் விளைவு, ஆதிவாசிகள் கடின உழைப்பால் பண்படுத்தி சீர்படுத்தி மாபெரும் சோலைகளாக மாற்றிய விவசாய நிலங்களை எல்லாம் சமவெளியில் இருந்து வந்தவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு, ஆதிவாசிகளின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்கள் பண்படுத்திய நிலங்களில் அவர்களையே கொத்தடிமைகளாகவும், கூலியாட்களாகவும் மாற்றினர். இவ்வாறாக பலியன், புலயன் இன மக்கள் பண்படுத்தி விவசாயம் செய்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வெளிநபர்கள் அபகரித்துக் கொண்டனர். நாளடைவில் அந்த நிலங்கள் எல்லாம் அரசு மூலம் பட்டா என்ற பெயரில் ஆயிரமாயிரம் ஏக்கர் கணக்கில் தனியார்களுக்கு தாரை வார்த்தப்பட்டது. அப்பொழுதுகூட ஒருதனி நபருக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களை பட்டாபோட்டுக் கொடுத்த அரசு, ஆதிவாசிகளுக்கு விவசாய நிலங்களாக 30 செண்ட், 50 செண்ட் என்றுதான் பட்டா வழங்கியது. அதுவும் ஒரு சிலருக்கு மட்டுமேதான்.

வனத்திற்கே சொந்தக்காரர்களான பலியன், புலயன் இன ஆதிவாசிகள் தங்கள் சொந்த நிலங்களிலேயே கூலிக்கு வேலை செய்து கொண்டு சிறு சிறு குழுக்களாக குடிபெயர்ந்து வாழும் சூழல் ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தாரைவார்த்த அரசு, வனத்துறை என்ற அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் ஆதிவாசிகள் சிறுசிறு குழுக்களாககுடி அமர்ந்த இடங்களை மட்டும் கிராம இடமாகக் கொடுத்து விட்டு, பூர்வீக விவசாய நிலங்களை விட்டு அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து அது இன்றும் தொடர்கிறது.

இதன் விளைவாக ஆதிவாசிகள் கடந்த 15 வருடங்களாக வனத் துறையினரின் தாக்குதல்களாலும், அவர்களால் போடப்பட்ட வழக்குகளாலும் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். அவர்கள் வாழ்க்கையே இன்றையச் சூழ்நிலையில் போராட்டங்களமாக மாறியுள்ளது. ஒரு புறம் இப்படி இருக்க இன்னொரு புறம் ஆதிவாசிகளால் பண்படுத்தப்பட்டு மிகப்பெரிய சோலைகளாக உருவாக்கப்பட்ட விலையுயர்ந்த பலா, நெலுறை, குமுல், தேக்கு மற்றும் வேம்பு போன்ற ஜாதி மரங்களை அழித்து விட்டது.

அரசு கொண்டுவரும் திட்டங்களும் ஆதிவாசிகளுக்கு உபயோகமானதாக இல்லை. ஆதிவாசி கிராமங்களுக்கென்று கொண்டு வரப்படும் தொகுப்பு வீடுகள், குடிதண்ணீர், இலவச மின்சாரம், வீடு பராமரிப்பு, கழிவு நீர் அனைத்தும் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் தான் கொண்டு வரப்படுகிறது. ஒரு திட்டத்தில் 3-இல் 1 பங்கு மட்டுமே செலவிடப்பட்டு திட்டத்தை முழுமையாக மற்றும் பயனுள்ளதாக செயல்படுத்தாமல் இரண்டு பங்கு கொள்ளையர்களால் (அரசு அதிகாரிகள்) பங்கிடப்பட்டுக் கொள்ளப்படுகிறது. அது யூனியன் திட்டம் ஆனாலும் சரி, பஞ்சாயத்துத் திட்டமாக இருந்தாலும் சரி அரசியல்வாதி மற்றும் அரசு அதிகாரிகளால் கொள்ளையடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிலை மாறுமா? அடிப்படைத் தேவைகள் என்ற திட்டம் முழுமையாக நிறைவேறுமா? ஆதிவாசி மக்கள் பூர்வீகமாக விவசாயம் செய்த வாழ்வு ஆதார விளைநிலங்கள் பாதுகாக்கப்படுமா? என்ற கேள்விக் குறிகள் தான் பழனிமலை பழங்குடியின மக்களின் உள்ளங்களில் தொக்கி நிற்கின்றன. ●



படிப்பகம்

www.padippakam.com



# அரசியல், கலை இலக்கியத்துறையில் பெண்களின் பங்கு

■ பே. நாகேஸ்வரி

அரசியலில் பெண்களின் பங்கு என்ன என்ற கேள்வி இந்தியாவின் கிராம பஞ்சாயத்துக்களில் மட்டுமோ, சட்ட மன்றங்கள், பாராளுமன்றங்களில் மட்டுமோ இல்லை, ஐக்கிய நாடுகளின் சபையிலும் கூட கேட்க வேண்டியுள்ளது. ஏனெனில் அரசியலில் பெண்களின் பங்களிப்பு கிராம பஞ்சாயத்துக்களிலும் இல்லை, ஐக்கிய நாடுகள் சபையிலும் இல்லை.

அப்படியானால் பெண்கள் அரசியல் கட்சிகளில் சேர்வதையும் தேர்தல்களில் நிற்பதையும் யார் தடுக்கிறார்கள்? இந்திய அரசியலமைப்பு சட்டம் அனைத்து உரிமைகளையும் பெண்களுக்கும்தானே தருகிறது. பின்னர் ஏன் இந்த நிலை என்கிற கேள்வி நம் முன் தோன்றாமலில்லை. ஏனெனில் இந்தியாவைப் பொறுத்தவரை நகரம் முதல் கிராமம் வரையிலும், தெரிந்தோ, தெரியாமலோ மநுவின் சட்டமே பின்பற்றப்பட்டு வருகிறது. மநுவைப் பொறுத்தவரையில் பெண்கள் ஆண்களுக்கு அடங்கியவர்கள், ஆண்களுக்கு சேவகம் செய்யப் பிறந்தவர்கள், கணவன் இறந்த பின்னால் உயிர் வாழத் தகுதியற்றவர்கள், மறுமணம் போன்றவற்றை சிந்திக்கக் கூட முடியாதவர்களாக பல நூற்றாண்டு காலங்களாக கற்பிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இத்தகைய போலி சித்தாந்தங்கள் இன்றைக்கு திராவிட இயக்கங்களாலும் தற்சமயம் தலித் மக்களின் எழுச்சியாலும் உடைக்கப்பட்டிருக்கின்றது என்றாலும் கூட தலித் மக்களின் தனித்துவ அடையாளத்தின் அடிப்படையான அரசியலதிகாரம் என்பதை முக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் இன்று கடுமையாக எதிர்க்கின்றன. தலித் மக்களை வெறும் மக்கள் கூட்டமாக மட்டுமே உள்வாங்கிக் கொண்டுள்ளன. தலித்துகள் தங்களின் தனித்துவ அடையாளத்துடன் தலித் அரசியல் அதிகாரம் என்கிற கோரிக்கைகளோடு அரசியல் கட்சியாக திரளும்போது அதனை 'சாதி அரசியல்' என்றுகூறி ஒதுக்குவது நாம் அறிந்ததே. பொருளியல் மாற்றங்கள், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் விதிகள் போன்றவற்றிற்கான அரசின் கட்டுப்பாடுகள் குறைதல், பல்வேறு துறைகளும் தனியார் மயமாதல், அரசு ஒரு சமூக நலக்கருவி என்கிற நிலையிலிருந்து வெறும் சட்ட ஒழுங்கு நிறுவனமாக குறுகிப் போய் விட்டதையும் நாம் உணர வேண்டும்.

இந்நிலையில் தலித் பெண்களின் அரசியல் நிலை, அரசியல் பங்கெடுப்பு, அரசியல் முக்கியத்துவம் ஆகியவை குறித்த கேள்வி நம்முன் ஒருபெரும் சவாலாக இருக்கிறது.

ஏனெனில் ஒரு நூற்றாண்டு காலத்திற்கான அரசியல் திட்டம் ஒன்றை நம்மால் இப்போது உடைத்து விடவும் முடியாது. உருவாக்கிவிடவும் முடியாது. இருப்பினும் வரும் நூற்றாண்டின் துவக்கம் தலித் பெண்கள் அரசியலைப் பொறுத்தமட்டில் எப்படி இருக்கவேண்டும் என நாம் சிந்திக்கமுடியும்.

நேரடி அரசியலில் பெண்களின் பங்களிப்பு என்பது இந்தியாவில் மட்டுமல்ல உலகளவிலும் கூட அரசியல் பின்புலமுள்ளவர்களால் மட்டுமே முடிந்திருக்கிறது. இந்திரா காந்தி, பெனாசிர் பூட்டோ, சந்திரிகா பண்டார நாயகே, சந்திரிகா குமாரதுங்கே, சோனியா காந்தி ஆகியோரை உதாரணமாகக் கொள்ளலாம்.

மேலும் அரசியல், தொழில்நுட்ப வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, மின்னியல் வளர்ச்சி, பொருளாதாரம், அரசமைப்பு முதலியவற்றிலும் குறிப்பாக உலகமயமாதல், சந்தைப் பொருளாதாரம் போன்ற மாற்றங்களோடும் தலித் பெண்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

இன்றைக்கு தொலைக்காட்சி எல்லோரையும் கவரக்கூடிய ஒரு சாதனமாகிவிட்டது. சினிமா, விளம்பரம், வாங்கும் பழக்கத்தை ஊக்குவித்தல், கடன் வாங்குதலை ஊக்குவித்தல், கடன் வாங்கியாவது வீடெல்லாம் பொருட்களை வாங்கி அடைத்தல் போன்றவைகளில் சிந்தனைகள் மாறிவிட்ட பின்பு, இவற்றிலிருந்து மீட்டு அரசியல் குறித்து சிந்திக்க வைப்பதோ, அரசியலில் பெண்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களை அரசியலில் பங்கெடுக்க வைப்பதோ அவ்வளவு எளிதான வேலையல்ல. உதாரணமாக,

திரைப்படங்களும், விளம்பரங்களும், சுவரொட்டிகளும் பெண்களை மிகவும் கேவலமாக சித்தரிக்கின்றன என்று பெண்கள் இயக்கங்கள் கூடி திரையரங்குகள் முன் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடத்துகின்றன. ஆனால் நம்மால் தொலைக்காட்சியை என்ன செய்ய முடிகிறது. சாட்டிலைட் மூலமாக நம்முடைய பணத்திலேயே நம் வீட்டிற்குள்ளேயே வந்து உட்கார்ந்து கொண்டு உலகின் அசிங்கங்கள் அனைத்தையும் நம்முன் கடைவிரிப்பதோடு மட்டு



படிப்பகம்

www.padippakam.com

மல்லாமல், உலகின் ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டிருக்கின்ற இந்த சாட்டிலைட் இந்தியாவை விலை பேசிக் கொண்டிருக்கின்றது. இன்டர்நெட்டின் மூலம் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. இன்டர்நெட்டின் மூலமே முதலீடுகள் செய்யப்படுகின்றன. எவ்வித சட்ட விதிகளையும் இவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதில்லை. இவற்றை அரசியல்வாதிகளாலேயோ, சட்டத்தாலேயோ கட்டுப்படுத்த முடிவதில்லை. ஏனென்றால் சாட்டிலைட்டும் சரி, அரசியலும் சரி எதுவுமே நம்முடைய அரசியல்வாதிகளின் கையில் இல்லை. அரசியல்வாதிகளிடம் அதிகாரம் இல்லை. இருக்கின்ற சட்டங்களும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன.

ஒரு 20 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ளூர் எம்எல்ஏ-விடம் எதாவது வேலை விஷயமாக, சிறு சிறு உதவிகளுக்காக மக்கள் சென்றார்களென்றால் அந்த உதவியை அரசியல்வாதிகள் தட்டாமல் செய்து கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு அது மாதிரி எந்த ஒரு எம்எல்ஏ-விடமாவது எந்த ஒரு சிறு உதவியையும் கேட்க முடிகிறதா? அப்படியே கேட்டாலும் எம்எல்ஏ-க்களாலும்செய்ய முடிகிறதா? ஏனென்றால் அரசியல் அதிகாரம் அவர்கள் கையில் இல்லை. அரசியல்வாதிகள் தன்னிச்சையாக செயல்படக்கூடிய அதிகாரமற்றவர்களாக இருக்கிறார்கள். அரசியல்வாதிகளும், அரசியலும், அதிகாரமும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் பிரிந்து கிடக்கிறது. அரசியலுக்கும், அதிகாரத்திற்குமான தொடர்பு எங்கோ ஓர் இடத்தில் குவிந்து கிடக்கிறது. அதனால் மக்களுக்கும், அரசியல்வாதிகளுக்குமான இடைவெளி பெருகிக்கொண்டே இருக்கிறது.

மேலும் அரசியலுக்கு பெரிய, பெரிய முதலீட்டாளர்களும், தொழிலதிபர்களும்தான் தங்களை அரசியல்வாதிகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டு அரசியல் அதிகாரத்தை கையில் எடுப்பவர்களாக இருக்கிறார்கள். ராஜ்யசபா உறுப்பினர்கள் எத்தனை பேர் மக்களை, வறுமையை, சாதாரண மக்களின் அன்றாட தேவைகளை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள்? பெரும்பாலும் தங்களின் சொத்தையும், தொழிலையும் பாதுகாக்கும் அடியாளாகவே அரசியலை வைத்திருக்கிறார்கள்.

தடியெடுத்தவன் தண்டல்காரன் என்றுகொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும், திருடர்களும், பணமுதலைகளும், ரௌடிகளும் மட்டுமே அரசியல்வாதிகளாகத் தகுதியானவர்கள் என்ற நிலையில் நாம் பெண்களின் அரசியலைக் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.

நம்முன் இருக்கும் சவால்களை எதிர்க்க, அரசியலுக்கு ஒரு மறு பிறப்பு கொடுக்க, பெண்ணுரிமைகள் பலப்பட இனி பெண்கள் அரசியலில் பங்கெடுப்பதால் மட்டுமே முடியும். ஒடுக்கப்பட்டோருக்கான ஒரு அரசு அமைய பெண்களின் அரசியல் பங்களிப்பு பெரும்பான்மை வரும்போது மட்டுமே சாத்தியமாகும். அதற்கு பெண்கள் அனைவரும் இயக்கமாக்கப்பட வேண்டும். இனி வரும் காலங்களின் அரசியலுக்கு பெண்கள் இயக்கங்கள் மட்டுமே ஒரே நம்பிக்கை.

அரசியலில் தலித் பெண்களின் பங்கு கட்டாயமாக்கப்பட வேண்டும், அரசியல் உரிமைகளில் தலித் பெண்களும் பங்கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வட இந்தியாவில் 1980-களில் தலித் பகுஜன் என்கிற இயக்கம் தலித்துகள் அரசியலை கையிலெடுக்க மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டது. அத்தகைய முயற்சிகள் வாயிலாகவே செல்வி மாயாவதி போன்றவர்கள் அரசியலில் வெற்றி பெற முடிந்தது.

போராளி பூலான்தேவி, 'மல்லா' என்னும் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவர். ஆதிக்கசாதியின் மொத்த அட்டூழியங்களையும் கொடுமைகளையும் அனுபவித்த வேதனையில் வெகுண்டெழுந்து அரசியலில் தனக்கென தனியிடத்தைப் பிடித்தவர்.

ஆனால், தமிழக அரசியலில் பெண்களின் உரிமை குறித்த கண்ணோட்டத்தில் தமிழக அரசியல்வாதிகளின் குள்ளநரித்தனத்திற்கு உதாரணமாக என்கௌண்டரில் கொல்லப்பட்ட வீரமணியின் மனைவியை ஏன் எந்த அரசியல் கட்சியும் அங்கீகரிக்கவில்லை என்ற கேள்வி சிந்திக்கத் தெரிந்த அனைவருக்கும் தெரிந்ததே.

நிலைமை இப்படியிருக்க இந்தியா பெண்களுக்கெதிரான அனைத்துவகை பிரச்சினைகளையும், சாதி ஏற்றத்தாழ்வுகளையும், அதனால் ஏற்படும் சாதிய முரண்பாடுகளையும் எதிர்க்கும் ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. பெண்களுக்கு சம வாய்ப்பிற்கான உரிமையை இந்திய அரசியல் சட்டம் அங்கீகரிக்கிறது. அப்படியானால் மேற்கண்ட நிகழ்வின் அர்த்தமென்ன?

தமிழ்நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தல்களில் பெண்களுக்குத் தனி இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததால் பல ஆயிரம் பெண்கள் அரசியலுக்குவர முடிந்தது. ஆனால் அவர்களில் எத்தனை பேரை தன்னிச்சையாக செயல்பட இந்த ஆணாதிக்க சமூகம் அனுமதித்தது? மதச்சார்பின்மை, சமூகவுடைமை ஆகியவற்றின் மதிப்பீடுகள் சீரழிந்து மறைந்து வரும் இச்சமயத்தில் நமது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் மதத்தின் கலவை பிணைந்த தன்மை ஒரு நீண்ட போராட்டத்தின் தொடக்கமே. இதிலிருந்து தலித் பெண்கள் அரசியலை வென்றெடுக்க பல்வேறு பெண்கள் அமைப்புகள் மட்டுமல்லாமல் பெண்ணுரிமையை ஆதரிக்கிற அனைவரும் இணைந்து போராட வேண்டும்.

**கலை, இலக்கியத்துறையில் பெண்கள் பங்கு**

கலை இலக்கியத் துறையைப் பொறுத்த வரையிலும் தலித் பெண்களை பிற சாதிப் பெண்களோடு சேர்த்து ஒரு பொதுவான இனமாகப் பார்க்க முடியவில்லை. காரணம் இலக்கியத் துறையானாலும் சரி கலைத்துறையானாலும் சரி பிற சாதிப் பெண்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் வேறு, தலித் பெண்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரம் வேறு. தலித்துகளின் வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com

முறையும் தலித்துகள் தங்களை புரிந்துகொள்ளும் விதமும் வேறு. தலித்துகளின் மண்ணின் கலைகள் இம் மண்ணின் மைந்தர்களான தலித்துகளுக்கு மட்டுமே சொந்தமான உயிரோட்டமுள்ள கலைகள். இதில் பொதுவாக பெண்களின் பங்களிப்பு என்பது ஆண்களுக்கு நிகராக இருந்தாலும் கூட அக்கலைகளின் மீதான அங்கீகாரமும், உரிமையும் தலித் பெண்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதேபோல் தலித் பெண் கலைஞர்களையும் பிறஜாதிப் பெண் கலைஞர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கலை நிகழ்த்துதலில் தலித் பெண்களின் வீச்சும் கருத்தாழமும் அதிகமாக இருந்தாலுங்கூட அவர்களுக்கான அங்கீகாரம் என்பது இல்லை. இன்று வரையிலும் ஒரு தலித் பெண் கரகாட்டக் கலைஞர் கிராமப்புற கவர்ச்சி நடனக்காரராக மட்டுமே பார்க்கப்படுகிறார். அதே பிற சாதிப் பெண் டிஸ்கோ ஆடினால் கூட அது மரியாதைக்குரிய கலையாகப் பார்க்கப்படுகிறது.

தலித் பெண் சார்ந்த கலைகள் ஒப்பாரியாகவும், கும்மியாகவும், தாலாட்டாகவும், நடனமெனக் கொண்டால் கரகாட்டம், மயிலாட்டம், ராஜா ராஜியாட்டம் போன்றவைகளையும் இன்னும் பிற கலைகளையும் குறிப்பிடமுடியும். இத்தகைய வாழ்வியல் வெளிப்பாடுகளை தலித் பெண்ணின் வேதனையை உணர்ந்த, அவளின் வாழ்வியலை அறிந்த அதே நிலையில் இருக்கிற பெண்ணால் மட்டுமே ரசிக்க முடியும், அதற்குரிய விமர்சனங்களைக் கொடுக்க முடியும். எனவே இக்கட்டுரையில் கலை இலக்கியத்துறையில் தலித் பெண்களின் பங்களிப்பு என்றே விவரிக்க முயல்கிறேன்.

கலை இலக்கியத்துறையில் தலித்துகளின் பங்கு என்றால், தலித்துகள் கலையில் ஒரு அங்கமாக மட்டும்தான்இருந்தார்களா? இந்த உலகின் மொத்த கலைகளையும் உருவாக்கியவர்கள் தலித்துகள். மேலும் இவை குறித்தான விளக்கங்கள் வேண்டுமானால் பேரா. குருசாமி சித்தர் மள்ளர் மலரில் அள்ளி இரைப்பதை நாம் காணமுடியும்.

பேராசிரியர் காஞ்சா அய்லய்யா அவர்கள், தலித்துகளின் உருவாக்கம் பற்றி கூறும்போது முதன் முதலில் மிருகத்தின் தோலை எடுத்து பதப்படுத்தி அதனை ஒரு இசைக் கருவியாக்கி தட்டி ஒலி எழுப்பி அந்த ஒலியை உலகிற்கு இசை யென்று அறிமுகப்படுத்திய உலகின் முதல் விஞ்ஞானி தலித் என்று ஆதாரப்பூர்வமாக கூறியிருக்கிறார்.

இத்தகைய சிறப்புமிக்கதொரு தலித்துகளின் கலை இலக்கிய வரலாறு நவீனயுகத்தில் ஆரிய வந்தேரிகளால் காலூன்ற முடியாமல் ஒரு சமூகத்தின் தனிப்பட்ட கலையென்று ஒதுக்கப்பட்டது. இதனை பேரா. கே.ஏ. குணசேகரனின் தலித் அரங்கியல் என்ற நூலில் கூறியுள்ள 'அதன் தோற்றத்தினை தாழ்த்தப்பட்ட / பிற்படுத்தப்பட்ட மக்களிடம் காணும் நிலை இருந்ததால் அதை எழுதும் அக்கறை கொள்ளப்படவில்லை' என்ற கருத்தின் மூலம் அறியலாம்.

தலித் இலக்கியம் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு ஏற்றத் தாழ்வுகளுக்கு பலியாகிப் போன தலித் மக்களின் ஒரு பகுதியினரின் விடுதலைக்கான நம்பிக்கையோடு நெருங்கிய தொடர்புடையதாகும். எனவே தலித்துகள் இலக்கியம் என்பது இந்த சமூக அமைப்பிற்கு ஏதுவான கிளர்ச்சியான எதிர் மறுப்பு வாதமான அறிவியல் சார்ந்த அணுகுமுறையோடு பகுக்கப்படுகிறது.

1950-களில் தலித் படைப்பாளிகளின் பிரச்சினைகள் மற்றவர்களிடத்தினின்றும் வேறானவை. இவைகளை இலக்கியத்திற்குள் கொண்டு வர இயலுமா? அத்தகைய இலக்கியங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா?

1969-களில் இதற்கான விடை கிடைத்தது. 1969-க்குப் பின்னர் தலித் இலக்கியம் என்னும் சொல் பரவப்பட்டது. அன்றைய கால சூழலில் கலைத்துறையில் பெண்களின் பங்களிப்பு என்பது "தற்சமயம் சுனாமியால் பாதிக்கப்பட்டு தனது கணவன், குழந்தைகள், வீடு உடைமைகள் அனைத்தையும் இழந்த ஒரு மீனவப் பெண், கடல் அலைகள் ஓய்ந்த பின்பு கடற்கரையில் நின்று கடலை உற்றுப்பார்த்தால் அந்த பார்வையில் எவ்வளவு வெறுமை தெரியுமோ" அத்தகைய நிலையே கலை இலக்கியத் துறையில் தலித் பெண்களின் பங்களிப்பு இருந்தது.

ஆனால் 1970-களில் வட மாநிலங்களில் தலித் சிறுத்தைகள், தலித் இலக்கியம் ஆகியவை புகழ் பெற்ற ஆங்கிலமொழி அச்சகங்களால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. அவை ஆச்சரியப்படத்தக்க வகையில் அமெரிக்கன் கருப்புச் சிறுத்தைகள் மற்றும் கருப்பு இலக்கியம் என்ற கருப்பின இலக்கியங்களோடு ஒப்பிடப்பட்டன. இக்கால கட்டத்தில் வெளிவந்த இலக்கியங்கள் தனித்துவத்தோடும் தலித் அழகியலோடும் படைக்கப்படுவதற்கு சீரிய முயற்சிகளை மேற்கொண்டன. படைப்பாளிகளும் தன்முனைப்போடு வந்து தங்களது படைப்புகளை துணிச்சலோடு உருவாக்கினார்கள்.

இதற்குப் பின்னர் காலங்காலமாய் ஒரு குறிப்பிட்ட உயர் சாதிக்காரர்களின் எழுத்துக்களை மட்டுமே இலக்கியமாய் பதிவு செய்யப்பட்ட நிலையை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிலிருந்து ஒரு கட்டத்திற்குப் பிறகு தலித் இலக்கியம் என்பது ஒரு எழுச்சி போல் போர்க்குணத்தோடு வெளிவரத் தொடங்கியது. இந்த இலக்கியம் அனைத்திற்கும், கலைகள் அனைத்திற்கும் நாங்களே சொந்தம் என்ற கருத்துக்கள் தலித் மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டன.

இந்த காலகட்டத்தில்தான் தலித் கலைஞர்களுக்கு மத்தியில் பெண் கலைஞர்களும் வீறு கொண்டெழுந்து தங்களது படைப்புகளை வெளிக்கொணர்ந்து தங்களையும் தங்களைச் சார்ந்த சமூகத்தையும் இலக்கியமாக வகுத்துப் பெருமைப்படுத்தத் தொடங்கினார்கள். குறிப்பாக எழுத்தாளர்கள் சிவகாமி, பாமா, அரங்க மல்லிகா, சண்முகவள்ளி, ஆகியோரைக் குறிப்பிட முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

தலித் பெண்களே படைப்பாளிகளாகவும் மாறும்பொழுது அவர்களின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள், தாங்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் போராட்டங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், எதிர்ப்புகள் ஆகியவை தலித் பெண்களுக்கு பிற ஜாதியினரால் மட்டுமல்லாமல் தங்களது குடும்பத்தார்களாலேயும் கூட ஏற்படுகிறது. அத்தகைய நேரங்களில் தலித் பெண்ணின் இயலாமையே அவளின் இலக்கியத்தில் வெளிப்படுகிறது. மேலும் ஒட்டுமொத்த சமூக அமைப்பில் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாக சமூக விமர்சனம், சமூக மாற்றம் குறித்த அக்கறையோடு படைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இது எங்கள் வரலாறு என்ற பெருமையோடு இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன.

அதனாலேயே தலித் இலக்கியங்களும் இலக்கிய வரிசையில் அங்கீகரிக்கப்பட்டு பலராலும் வாசிக்கவும், கூர்ந்து நோக்கவும் படுகிறது.

கலைத்துறையில் தலித் பெண்களின் பங்களிப்பு தலித் விடுதலைக்கு கலைகளையும் கருவிகளாக்குவோம் என்ற கருத்துக்கு ஊக்கமளிக்கிறது. அந்த வகையில் தங்களது சிறந்த நடனத் திறமையாலும், பாட்டுகளினாலும் தலித்துகளின் வாழ்வியலை கலை வாயிலாக வெளிக்கொணர்ந்து, அப்பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக கரகாட்டக் கலைஞர் தேன்மொழி மற்றும் இசைத்துறையில் பாடகிகள் சின்னப்பொண்ணு, மல்லிகா, மகிழினி ஆகியோர் குறிப்பிடத்தக்கவகையில் தலித் கலை விடுதலைக்கு தங்களது பங்களிப்பை செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இசைத்துறையை எடுத்துக் கொண்டால் திரைப்படப் பாடகிகளை விட சமூக விடுதலைக்காக பாடும் தலித் கலைஞர்களின் குரல் வளமும் திறமையும் சொல் வீச்சும் எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. ஆனாலும் கூட தலித் கலைஞர்கள் இன்றைக்கும் வெறும் சாதிய கலைஞர்களாகவே பார்க்கப்படுகிறார்கள்.

ஆனால் பிற சாதியைச் சேர்ந்த கலைஞர்களில் எழுதுபவர் ஒருவராகவும் இசைப்பவர் ஒருவராகவும் பாடுபவரோ நடிப்பவரோ வேறு ஒருவராகவும் இருக்கிறார்கள். ஆனால் தலித் பெண்கள் தாங்களே கருத்துருக்களை இயற்றுபவர்களாகவும் அதில் பாடவும் நடிக்கவும் திறமையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இருந்தும் கூட தலித் பெண் கலைஞர்களின் பங்களிப்பு வெறும் சமூக எழுச்சிக்கான கலைஞர்களாக மட்டுமே பார்க்கப்படுகிறது.

இன்றைக்கும் தலித் கலைகள் என்பவை, பாடல்களாக இருந்தாலும் சரி, தப்பாட்டமாக இருந்தாலும் சரி, கரகாட்டம் போன்ற எந்தக் கலையாக இருந்தாலுமே அவை தலித்துக்களால் மட்டுமே ரசிக்கப் படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

நாட்டுப்புற இசைக்கலைஞரான மதுரையைச் சேர்ந்த அழகர்சாமி கலைமாமணி விருது பெற்றவர். இத்தகு பெருமை பெற்ற கலைஞரை எத்தனை பேருக்குத் தெரியும். ஆனால் அதே சமயம் பெரிய தொப்பையையும்,யானைக் காலையும், கையையும் மட்டுமே ஒரு கலைஞருக்கான தகுதியாகக் கொண்டு கலைமாமணி விருது வாங்கியுள்ளாரே, அந்த உசிலை மணியை எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கின்றனர் என்பதை நாம் அறியும் போது தலித் கலைஞர்களுக்கான அங்கீகாரம் குறித்த மதிப்பீட்டை உணரமுடிகிறது.

ஆக ஒரு கலை என்பது கலையில் இருக்கும் வாழ்வியல் உண்மைத் தன்மை அழகியல் இவை அனைத்தையும் விடுத்து அது எந்த சாதியில் கலையாக்கம் பெறுகிறது என்பதைப் பொறுத்தே அக்கலைக்கான அங்கீகாரமும் கிடைக்கிறது. இதே நிலைதான் தலித் பெண் கலைஞர்களின் அங்கீகாரமும். கரகாட்டத்திலிருந்து திருடப்பட்டு ஆடப்படும் பரத நாட்டியத்தை விட இந்த மண்ணின் கலையான கரகாட்டம் தரம் குறைந்ததாக மதிப்பிடப்படுவதற்குக் காரணம் அது தலித்துகளால் ஆடப்படுகிறது என்பது மட்டுமே.

இத்தகைய நிலையைப் போக்கி ஒரு தனித்துவம் வாய்ந்த கலையை அதே குணத்துடன் வடித்தெடுக்க துறை சார்ந்த கல்வியறிவை வளர்க்க வேண்டும். துறை சார்ந்த கல்வியறிவே அரசியலாக இருந்தாலும், கலை இலக்கியமாக இருந்தாலும் அவற்றிற்கான பகுப்பாய்வையும் தெளிவையும் உருவாக்கும் என்பதோடு, இன்னும் கூட தலித் பெண்களின் கலை பங்களிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு மிகப் பரந்த அளவில் துறை சார்ந்த கல்வி அறிவோடு கலைகள் நிகழ்த்தப்படும்போது தலித் பெண்கள் இன்னும் முக்கியத்துவம் பெற்று அனைவராலும் அங்கீகரிக்கப்படுவார்கள். கலை இலக்கியத் துறையிலும் தலித் பெண்களின் பங்களிப்பு என்பது முக்கியமானதொரு அம்சமாக இருக்கும்.

**பரிந்துரைகள்**

1. தலித் பெண்களை இயக்கமாக்கி அரசியல் பங்கெடுப்பை ஊக்கப்படுத்த வேண்டும்.

2. கலைத்துறையைப் பொறுத்தமட்டில் துறை சார்ந்த கல்வியறிவை வளர்க்க இலக்கியப் பள்ளிகள் மற்றும் நிரந்தர பயிற்சிப் பட்டறைகள் உருவாக்கப்பட்டு அவற்றின் மூலமாக தலித் கலைகள் இளையதலைமுறையினருக்கு கற்றுத்தரப்பட்டு பள்ளிகள் கல்லூரிகள் விழா மேடைகள் ஆகியவற்றில் நிகழ்த்தப்பட வேண்டும்.

இன்றைக்கு பார்ப்பனக் கலைகள் பார்ப்பனர்களால் கற்று முடித்ததும் எவ்வாறு அரங்கேற்றம் என்ற பெயரில் உலகிற்கு கலைஞர்களை அறிமுகப்படுத்துகிறார்களோ, அது போல தலித் கலைகளும் தலித் குழந்தைகளாலும், இளைஞர்களாலும் கற்றறியப்பட்டு அவை விழா மேடைகளில் பரப்பப்பட வேண்டும்.

அப்போதுதான் தலித் கலைகளை இன்னும் நாம் கூர் தீட்டி முழுவீச்சில் எடுத்துச் செல்ல முடியும். •



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் முகம்

புதிய கோடாங்கி பங்களிப்பாளர்கள் பற்றிய குறிப்புகள் அவர்களது சமூக அக்கறையைக் காட்டுகின்றது. உபகண டத்தின் சமூக அரசியல் சூழலில் கோடாங்கி போன்ற காத்திர மான வெளியீட்டைக் கொண்டுவருவதற்கு அக்கறை கொண டோரது பங்களிப்புகள் மிகவும் அவசியமானதே. எனது பங் களிப்பை கோடாங்கிக்கு வழங்குவதை ஓர் சமூகத்தேவை என்றே கருதுகின்றேன். புதிய கோடாங்கிக்கு சிறந்த சஞ்சி கைக்கான விருது கிடைத்தது மிகவும் சந்தோசமூட்டு கின்ற ஓர் செய்தி. பாரிய உழைப்பு இந்த விருதுக்குள் உள்ளது என்பது எனது அபிப்பிராயம். புதிய கோடாங்கி பங்காளிகள் யாவரும் இந்த உழைப்பின் விருட்சங்கள் என நான் கருதுகின்றேன். பேனா நடத்தும் இயக்கம் ஓர் போராட்ட இயக்கமாக இருப் பதால்தான் அசாத்தியம் உங்கள் மடியில் சாத்தியமாகின்றது.

க. கலாமோகன், பாரிஸ்

பேரன்புடையீர் வணக்கம். தங்களுக்கும், தங்கள் தலைமையில் இயங்கும் 'புதிய கோடாங்கி' ஆசிரியர் குழுவுக்கும், என் உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இன்று மாலை ஜனவரி 2005 புதிய கோடாங்கி இதழ் வந்தது; படித்துக்கொண்டிருக்கிறேன். தாங்கள் அண்மையில் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்திருப்பதை, வாஷிங் டனிலிருந்து மயிலாடுதுறை சிவா எழுதிய மடல் மூலம் அறிந் தேன்; மகிழ்ச்சி.

தங்களுக்கு ஒரு வேண்டுகோள். தங்களது அண்மைய அமெரிக்கப் பயணம் பற்றிய கருத்துக்களை, ஒரு தொடர் கட்டுரையாக எழுதுங்கள். மனித குலத்தின் ஒட்டுமொத்த விடுதலைக்கு, குறிப்பாக, இந்தியாவில் தலித் மக்கள் பழங்குடி மக்களின் விடுதலைக்கு, புஷ் அரசு வாஷிங்டன் ஆட்சி யாளர்கள் உதவும் வாய்ப்பு உள்ளதா என்பதைத் திட்ட வட்டமாக எழுதுங்கள்; புத்தாண்டில் இதுவே தங்களிடம் நான் எதிர்பார்க்கும் இதழியல் ஆக்கப் பணியாகும்.

தி. க. சிவசங்கரன், நெல்லை.

எல்லா மாநாடுகளிலும் 'நாம் அடிமையாக இருக்கிறோம். நமக்குள்ளேயே பார்ப்பனியம் இருக்கிறது. நாம் நம் தலித் விடுதலைக்கு போராட வேண்டும்' என கூறுவதையே கேட்டு கேட்டு சலித்து விடுகிறது.

பழங்கதை பேசி பயனில்லை; 'எழுவாய் புதிதாய் செயப்படு பொருளை சிந்தையில் நிறுத்து' என்பதற்கேற்ப, சாதியத்தை எதிர்த்து களத்தில் நிற்க அரசை எதிர்த்து சட்ட ரீதியாக போராடுவது எப்படி என ஒரு அரை நிமிடம் உங்களைப் போன்ற படித்தவர்கள் விளக்கினால் எங்களைப் போன்ற போராடத் துடிக்கும் இளைஞர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

இனிவரும் மாநாடுகளிலும் இந்த மாநாட்டிலும் செயல் படுத்துவீர்கள் என்ற நப்பாசையுடன்,

எம். சென்றாயன், பெரியகுளம்

புதிய கோடாங்கி அமைப்பினருக்கு, வணக்கம். தங்க ளுடைய அமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டில் கலந்து கொண்டது மிக்க மகிழ்ச்சி. நான் காலகாலமாக 'குடுகுடுப்பை' அடித்து குறி சொல்லும் பழங்குடி - நாடோடி (Tribal Nomads (or) Gypsies) இனத்தைச் சார்ந்தவன். தமிழ்நாட்டில் பல்வேறு வகையான நாடோடி இனங்கள் உள்ளன. நான் இவ் வினத்தில் பிறந்து வளர்ந்ததற்காக எமது நாடோடி மக்களுக் காக பணியாற்றி வருகிறேன்

வருகிற நாட்களில் குடுகுடுப்பைக்காரர்கள், சாட்டை யடிப் பவர்கள், பூம்... பூம்... மாட்டுக்காரர்கள், நரிக்குறவர்கள், பாம்பு பிடிப்பவர்கள், தோல் பாவைக் கூத்துக்காரர்கள், கலைக் கூத்தாடிகள் (சர்க்கஸ்காரர்கள்), தெருக்கூத்துக் கலைஞர்கள் (டான்சர்கள்), லம்பாடிகள், ஈயம் பூசுபவர்கள், கிளிஜோசியக் காரர்கள் மற்றும் பல எமது நாடோடி இன மக்களையும் தலித் தோடு சேர்த்துக்கொள்ளுமாறு தங்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இரா. ராஜாங்கம், மதுரை.

## அறிவிப்பு

புதிய கோடாங்கிக்கு சந்தா மற்றும் கடிதங் களை அனுப்புபவர்கள் தங்கள் முகவரி களை, முக்கியமாக ஊரின் பெயர் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண்ணை (PIN CODE) தெளிவாக எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# இனி வரும் சந்ததி எச்.ஐ.வி இன்றி மண்ணுலகில் நடைபோடட்டும்!




இதற்கான ஆலோசனையும், பரிசோதனையும்
ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும்,
மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும்
இலவசமாக செய்யப்படுகிறது. பயனடைவீர்.

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

**சென்னை 600 008.**

Published, Printed and owned by Audrey Jannet joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, 20, Big Street, Anakaputhur - 600 070. Editor : AUDREY JANNET JOSEPH

படிப்பகம்




Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05 Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926